என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

MANGAYAR MALAR ஜனவரி 2009 258 பக்கங்கள் ரூ.20/-



இணைப்பு: வண்ணக் கோலங்கள் 64!

3 புத்தகங்கள்

"வயது ஒரு தடையல்ல!"



Agrahara
pattu
Collection
துளசியும், தும்பையும் துளிர்க்கும்
ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸின்
அக்ரஹார
பட்டு கலெக்ஷன்
5 Maadi
Sri Kumaran Stores
61, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.



Upto 25% OFF on diamonds
அன்புள்ளவர்களுக்கு வெகுமதி அளிப்பது இப்போது 25% எளிது.
உங்கள் அன்பானவர்களுக்குப் பொருத்தமான வெகுமதி அளித்து அன்பில் அவர்களை உருகவையுங்கள். இச்சலுகை டாடா-வின் கோல்டுபிளஸில் மட்டுமே.
• அனைத்து வகையான வைர நகைகள் மீது 25% வரை தள்ளுபடி.
• மாணிக்கம் மற்றும் மரகதம் ஆபரணங்கள் மீது 20% வரை தள்ளுபடி.
கோல்டுபிளஸ்
GOLDPLUS
from TATA
ஜுவல்லரி ஷோரூம்
தமிழகத்தில் அதிக கிளைகள் கொண்ட ஒரே ஜுவெல்லரி ஸ்தாபனம்
• ஈரோடு: 0424-2260322 • விழுப்புரம்: 04146-222688 • திண்டுக்கல்: 0451-2440066 • நாகர்கோவில்: 04652-230043 • தஞ்சாவூர்: 04362-270885 • திருப்பூர்: 0421-6455330 • கரூர்: 04324-645454 • திருநெல்வேலி: 0462-6458555 • வேலூர்: 0416-2229265 • புதுக்கோட்டை: 04322-224567 • மார்த்தாண்டம்: 04651-271016 • சிவகாசி: 04562-233055 • கும்பகோணம்: 0435-2403063 • பட்டுக்கோட்டை: 04373-253924 • மயிலாடுதுறை: 04364-327666 • காரைக்குடி: 04565-233699 • காஞ்சிபுரம்: 044-27230630







வயசு ஒரு தடையல்ல!










ளிர் மாத இதழ்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

மலர் : 28 இதழ் : 12 ஜனவரி 2009


VALET CAR PARKING
HOUSE OF LKS
LKS GH
SINCE 1925
LGH 165
69 Grams
T.NAGAR LKS™
Since 1925
Usman Road, T.Nagar, Chennai - 17 Ph: (2434) 1111 / 5555



ஒரு வார்த்தை!

சிறுவன் வால்டருக்கு அப்போது ஏழு வயதிருக்கும். அவர்களது பண்ணை வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஆப்பிள் தோட்டத்தில் விளையாடுவதுதான் வால்டரின் ஒரே பொழுதுபோக்கு!

ஒரு நாள், தாழ்ந்த மரக்கிளை ஒன்றில் ஆந்தைக் குஞ்சு ஒன்று தூங்குவதைப் பார்த்து, அதனை எடுத்து வளர்க்க ஆசைப்பட்டான் வால்டர். மெள்ள மரத்தில் ஏறி, ஆந்தையைப் பிடிக்கவும், அது அலற ஆரம்பித்தது. ஆனால், வால்டர் விடுவதாயில்லை. பிடியை இறுக்கினான். ஆந்தை இறக்கைகளைப் படபடவென்று அடித்துப் பெருங்கூச்சல் போடவே, சிறுவனுக்கு நடுக்கமாகிவிட்டது. ஆத்திரம் தலைக்கேற, பறவையைத் தரையில் போட்டு, மிதித்துக் கொன்று விட்டான்.

வால்டரைத் தேடிக்கொண்டு வந்த அவனது அம்மா, மகனின் செய்கையைக் கண்டு திடுக்கிட்டாள்.

''பாவம் வால்டர்... அந்தப் பறவை! நீ மிதித்துக் கொன்றபோது அதற்கு ரொம்பவே வலித்திருக்கும். அதனுடைய தாய்ப் பறவையும் குஞ்சைத் தேடித் தேடி அழும்!'' என்றெல்லாம் சொல்லி, வருந்தினாள்.

தங்க நிறச் சிறகுகள் ரத்தம் தோய்ந்து கிடக்கும் காட்சி, வால்டரின் பிஞ்சு மனதைப் பிளந்தது. அவனும் தன்னுடைய செயலின் கொடுமையை உணர்ந்து வருந்தினான்.

''இனி நான் எல்லா உயிர்களையும் என் உயிர் போல நேசிப்பேன்... எனக்கு வலி என்றால் என்ன என்று தெரிந்துவிட்டது அம்மா!'' என்றான் வால்டர்.

தன்னால் சாகடிக்கப்பட்ட அந்த ஆந்தையின் நினைவாக, பற்பல பறவைகளையும் உயிரினங்களையும் வரைய ஆரம்பித்தான். அப்படி அவன் வரைந்த சித்திரங்கள்தான், வால்ட் டிஸ்னி கார்டூன்களாக அமரத்துவம் பெற்றுத் திகழ்கின்றன.

வால்டரைப் போலவே... காந்திஜி, சத்ரபதி சிவாஜி, கலீல் கிப்ரான், போன்றவர்கள் பலரும் தமது தாயரால் அன்பு போதனை செய்யப்பட்டு வளர்ந்தவர்கள். அந்த அன்பே அவர்களை வாழ்வில் மேன்மையுறச் செய்தது.

ஆனால், இன்றைய இளைஞர்கள்!

சென்னை, அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் மாணவர்களிடையே நடந்த மோதல், மும்பையில் நடந்த வெடிகுண்டு தாக்குதல், ஆந்திர மாணவர்கள் மூன்று பேர், சக மாணவிகள் மீது நடத்திய

கல்கி
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பொறுப்பாசிரியர் : **அனுராதா சேகர்**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி : **4343 8888**
சந்தா பிரிவு : **4343 8833**
தொலைநகல் : **044 - 4343 8899**

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. **250/-**
வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ. **2,200/-**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஆஸிட் வீச்சு, போன்ற அண்மைக்கால சம்பவங்களைப் பாருங்கள். எல்லாமே இளைஞர்கள் சம்பந்தப்பட்ட வன்முறைதான்!

நீதிக் கதைகளை போதிக்க வேண்டிய தாத்தா பாட்டி முதியோர் இல்லத்தில்... நல்லது சொல்லி நெறிபடுத்த வேண்டிய தாய், அலுவலகத்தில்... பள்ளிகளில் 'மாரல் சயின்ஸ்' என்ற போதனை வகுப்பே இல்லை! இளைஞர்களைக் கவர்ந்த டி.வி., சினிமா, பத்திரிகை போன்ற ஊடகத்திலோ ரவுடி, தாதாக்கள் தான் ஹீரோக்கள்! ரத்தக் களரியும், கொலை வெறியும்தான் ஹீரோயிஸம்! வன்முறையே ஒரே தீர்வு என சித்திரிக்கப்படுவதால், மனித நேயம், சகோதரத்துவம், சகிப்புத் தன்மை எல்லாம் குறைந்துகொண்டே வருகிறது.

பரபரப்பு வேட்டையாடி, பாய்ந்துப் பாய்ந்து கொடூரச் சம்பவங்களைப் படமெடுத்து, மீண்டும் மீண்டும் காட்டி, மக்களின் குறிப்பாக இளைய தலைமுறையின் மூளையை மரத்துப் போகச் செய்து, "இன்னுமோர் காட்சி! அவ்வளவு தானே!" என்ற அளவுக்கு நீர்த்துப் போகச் செய்துவிட்டன சேனல் போட்டா போட்டிகள்!


'இளைய தலைமுறையை ஆக்கப்பூர்வமாக வளர்க்கும் கடமை அனைவருக்குமே உண்டு என்றாலும், ஊடகம் இன்னும் சற்று பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்; அதற்காக நாம் என்ன செய்யலாம்' என்ற எண்ணம் எழுந்தபோது, தோன்றியதுதான் 'யூத் எடிஷன்' என்ற இளைஞர்களுக்கான புதிய பக்கங்கள்.

பிப்ரவரி 2009 இதழில் 29வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் மங்கையர் மலரில் இளைஞர்களுக்கான சில புதிய பகுதிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. உங்களுக்குத் தெரிந்த இளம் பிராயத்தினருக்கு மங்கையர் மலர் பற்றி எடுத்துச் சொல்லி, அவர்களை வாசிக்க வைத்து பங்கு பெற செய்யத் தூண்டி, 'யூத் எடிஷனை' மேலும் சிறக்க வைப்பது மூத்த வாசகியரான உங்கள் பொறுப்பு! அதற்காக உங்கள் ஒத்துழைப்பை இன்று போல் என்றும் நாடி நிற்கிறோம்.

அப்படித் தூண்டப்படும் வாசக இளைஞ(ஞி)ர்களில், யாரேனும் ஒருவர், வால்ட் டிஸ்னி போல ஆனால், நமக்கு வெற்றிதானே!

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

அனுஷா நடராஜன்


Himalaya
இளமைக்கு திரும்புங்கள்
ஹிமாலயா ஆன்ட்டி-ரிங்கில் கிரீம் உடன்.
Himalaya
Anti-Wrinkle Cream

நா.செண்பகம், சிவகாசி

ஒவ்வொரு மனிதனும் அவன் மரணப் படுக்கையில் இருக்கும்போது செய்யும் கடைசி தர்மம் எது?

டாக்டர் ஃபீஸ்?!

எஸ்.கலைவாணி, நாமக்கல்

புகுந்த வீட்டில் வாழப் போகும் மணப் பெண்ணுக்கு, தங்களுடைய புத்திமதி என்ன?

'புத்திமதி' என்பதெல்லாம் ரொம்பப் பெரிய வார்த்தை! சின்ன வேண்டுகோளாக வேண்டுமானால் முன் வைக்கலாம். ''அம்மாடி... அழகுப் பெண்ணே! கணவன் வீட்டில் இல்லற ஜோதியை 'ஏற்றி' வைக்கா விட்டால்கூட பரவாயில்லை! சின்ன விஷயத்துக்கெல்லாம் சிவிர்த்தெழுந்து கணவன் வீட்டினரை கோர்ட் கூண்டில் 'ஏற்றி' விடாதேம்மா!''

என்.கோமதி, நெல்லை - 7

கடவுள் இருக்கிறாரா அனுஷா?

நிச்சயம் இல்லை! உலகில் நடப்பதெல்லாம் தற்செயலானதே. வான்வெளியில் பல்லாயிரம் நட்சத்திரங்கள், சின்னப் பூவில் வாசனைத் தேன், முப்பதடி உயரத்தில் வளரும் ஓட்டுக்குள் சுவைமிக்க இளநீர், கடுகு சைஸ் விதையில் ஒளிந்திருக்கும் பெரிய ஆலமரம், பிறந்த மறு நிமிடமே மிகச் சரியாக தாயிடம் அமுது உறிஞ்சும் புதுக் குழந்தை... எல்லாமே சும்மாதான் நடக்கிறது... கடவுள் இல்லை.. இல்லவே இல்லை!

கே.பானுமதி ஈஸ்வரன், திருச்சி-7

மொட்டை மாடியில் நின்று கொண்டு ஆகாயத்தை ரசிப்பதுண்டா?

பஞ்சு மேகக் கூட்டங்கள் நகர்வதை ரசிப்பதுண்டு. அப்படியே கிழக்கிலோ, மேற்கிலோ ஓர் ஆரஞ்சுப் பந்தும் தென்பட்டுவிட்டால்,

மை பூசிய கண்ணா?



டபுள் குஷியாகிவிடும்!

வெண்ணிற மேகம் வெறுமே போகாமல் நல்லதொரு நம்பிக்கைச் செய்தியையும் சொல்வதாகத் தோன்றும்.

என்னைப் போல இலேசாக இரு...
எங்கே நகரவும் தயாராக இரு!
எந்த வடிவம் பெறவும் விரும்பு!
நீர் சுமந்து போ...
நிலத்தில் பெய்!
கடலில் கலந்தாலும் கவலைப்படாதே!
மீண்டும் மேகமாவாய்... என்னைப் போலவே!

ஜெயந்தினி வேணுகோபால், பட்டீஸ்வரம்

பாரதியின் பாடல்களில் அனுஷாவுக்குப் பிடித்தது எது?

'நெஞ்சுக்கு நீதியும்'- இது நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது, யார் பாடியது, என்ன அர்த்தம் என எதுவும் தெரியாமல் மேடையில் பாடி, ஒரு பிளாஸ்டிக் தட்டு பரிசு வாங்கினேன். இன்றைக்கு அர்த்தம் புரிந்து அதன் எழுச்சி புரிந்து ரசிக்கிறேன்.

ஐலைனர் கண்ணா?

'வெள்ளை நிறத்தொரு பூனை'... பல நிற பூனைக் குட்டிகள்... தாய்ப்பூனை ஒன்று. எத்தனை பேதங்களோடு மக்கள் இருந்தாலும், தேசம் ஒன்று, நேசம் ஒன்று என்று சொல்லும் இந்தப் பாடலும் எனக்குப் பிடித்தமானதுதான்.

உபரித் தகவல்: இந்த இரண்டு தேச பக்திப் பாடல்களும் 'கல்கி' சதாசிவம் ஐயாவுக்குப் பிடித்தமானவை என்பதால், எம்.எஸ். அம்மா பாடும் கச்சேரிகளில் கட்டாயம் பாடவேண்டும் என்பாராம்!

எஸ்.ஜி.வாசுதேவன், மும்பை

இந்தியாவின் 9/11?

வெட்கக்கேடு!



வள்ளி ராஜாராமன், மணக்காடு

ஜி.லக்ஷ்மி வாசுதேவன், வேளச்சேரி

மறைந்த நடிகர் எம்.என். நம்பியாரைச் சந்தித்ததுண்டா?

முதல் முறை பேட்டி எடுக்கப் போனபோது தாம்



ஆர்வத்துடன் சேகரித்து வந்த 'நேஷனல் ஜியோகிராபி' என்ற மிக விலை உயர்ந்த புத்தகங்களின் பெரும் கலெக்ஷனை, என்னிடம் ஒரு குழந்தைக்கே உரிய ஆர்வத் துடன் காட்டியதோடு, பல விஷயங்களை விளக்கிப் பேசிக் கொண்டிருந்தார். அதனால் போன காரியத்தை முடிக்க முடியாமல், இன்னொரு முறை பேட்டி எடுக்க நேர்ந்தது.

எஸ்.விஜயராணி, ஓசூர்-2

சமீபத்தில் ஆச்சரியப்பட்ட சம்பவம் என்ன?

காய்கறிக் கடைக்குப் போயிருந்தேன். என்னருகில் இருந்த பெண்ணுக்கு சுமார் முப்பது வயதிருக்கும். ''நீங்கதானே அனுஷா?'' என்று கேட்டவள்... பிறகு தன்னு டைய ஐந்து வயது மகளிடம் ''நான் உனக்கு சொல்ற கதையெல்லாம் இந்த ஆன்ட்டி சொன்னதுதான்!'' என்றவள், சில கதைகளின் பெயர்களைச் சொன்னாள். எனக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது.

'புதுமாப்பிள்ளையும் சேமியா பாயசமும்', 'சன் மவுன்டன்', 'காக்கடுடுல்டு!', 'கோழி குருமா ஜலஸா!' இவையெல்லாம் என்



''வாங்கி வச்சுட்டு போன தோசை மாவை காணோம்... நீ பார்த்தியா?''

''யாரோ 'சுட்டுட்டாங்க' போலி நக்கே!''

– எஸ்.மீனலோசினி, திருத்தங்கல்

கற்பனையில் உதித்த ஃபேன்டஸி கதைகள்!

''உங்க வீட்டு போர்டிகோவுல உங்க மகளுக்கு சாதம் ஊட்டிக்கிட்டே கதை சொல்லும்போது, அதைக் கேட்கறதுக்காக நாங்களும் வருவோம்!'' என்றாளே பார்க்க லாம்!

எப்படியோ, என் இலக்கியப் பணி தயவில்[!] சில, பல குழந்தைகள் படுத்தாமல் 'பப்பு மம்மு' 'தச்சி மம்மு' சாப்பிட்டால் சரி!

கஸ்தூரி அமுதகுமார், ஆதம்பாக்கம்

பல பெண்கள், நாள் முழுக்க ஒளிபரப் பாகும் மெகா சீரியல்களைத் தொடர்ந்து பார்க்கிறார்களே... அதில் அப்படி என்ன கிக்?

அவற்றைப் பார்க்கும்போது 'நம்முடைய குடும்பம் எவ்வளவோ தேவலை' என்ற சிறு ஆறுதல் கிடைக்கின்றதோ என்னவோ!

எஸ்.வெங்கட் சுப்ரமணியம், மதுரை –2

மை பூசிய கண்களை ரசிப்பீங்களா? ஐ லைனர் வரைந்த கண்களை ரசிப்பீங்களா?

இரண்டையும் ரசிப்பேன், அதில் கொஞ்சம் அறிவுச் சுடரும் தெரிந்தால்...

மதுரவல்லி பார்த்தசாரதி, சென்னை – 61

இரண்டு மூன்று பகுதிகளில் பங்கேற்கும் பட்சத்தில் ஒரே உறையில் படைப்புகளை வைத்து அனுப்பலாமா? தெளிவு படுத்தவும்.

இதே சந்தேகத்துக்கு பல முறை பதில் சொல்லியும், மீண்டும் மீண்டும் மீண்டும் வாசகியர் கேள்வி கேட்கிறார்கள்... அனுஷாவின் லாஸ்ட் அண்ட் ஃபைனல் பதில்: லாம்! லாம்! லாம்!

மு.மதிவாணன், அரூர்

தங்களைக் கவர்ந்த ஆங்கிலப் பழமொழி?

ஆங்கிலப் 'பழ' மொழி தானே? An apple a day, keeps the doctor away!


சமையலறை ஸ்பெஷல்
Prestige™
Issue 2 • 2008
உங்கள் சமையலறைக்கு ஏற்ற
டிசைனர் கிச்சன் ஹூட்ஸ்
A - Z வரை
ஸ்மார்ட் கிச்சன்கள்
ப்ளாக் ப்யூட்டி
அழகும் சிக்கனமும் உங்கள் சமையலறையில்
பெட்டர் டுகெதர்
ப்ரீத் ஈஸி
நீங்க இன்னும் ஸ்மார்ட்டான கிச்சனுக்கு தயாரா?
அழகான வடிவமைப்பு சிறப்பான செயல்பாடு ஒவ்வொரு இல்லத்தரசியின் கனவு. உங்கள் கனவு நிஜமாக்க உருவாக்கப்பட்டவைதான் பிரெஸ்டிஜ் கிச்சன் ஹூட்ஸ். இது உங்கள் சமையல் அறைக்கு அழகூட்டுவதுடன், இதன் சிறப்பு அம்சங்கள் சிறந்ததொரு சமையல் அனுபவத்தை அளிக்கிறது.
Prestige
Prestige SMART KITCHEN

வள்ளுவர் பயன்படுத்தாத தமிழ் எழுத்து!



திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றி அனைவரும் அறிவோம். ஆனால், நாம் அறியாத அரிய செய்திகள் சிலவற்றைத் தெரிந்து கொள்வோமா?

திருவள்ளுவர் ஆண்டு: இயேசு கிறிஸ்துவுக்கு 31 ஆண்டுகள் முற்பட்டவர் திருவள்ளுவர். எனவே நடப்பாண்டுடன் 31-ஐக் கூட்ட திருவள்ளுவர் ஆண்டு கிடைக்கும். 1971ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு திருவள்ளுவர் ஆண்டைப் பயன்படுத்த ஆணையிட்டது. 1981ஆம் ஆண்டு முதல் அனைத்து அலுவலகங்களிலும் திருவள்ளுவர் ஆண்டை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. திருவள்ளுவர் ஆண்டைப் பற்றிய ஆய்வை 1921-ம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரி ஆராய்ந்து அறிவித்தது.

தமிழ் இல்லை: திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் மணக்குடவர். திருக்குறள் மூலத்தை முதன்முதலில் அச்சிட்டவர் ஞானப் பிரகாசன். இவர் தஞ்சையைச் சேர்ந்தவர்.

தமிழில் எழுதப்பட்ட திருக்குறளில் எங்கும் தமிழ் என்ற வார்த்தை இல்லை. திருக்குறளை 45 பேர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர்.

குறளும் பெண்ணும்: திருவள்ளுவர் தம் குறள்களில் எண்களைப் பல தடவை பயன்படுத்தி உள்ளார். 1 என்ற எண் 11 இடங்களிலும், 2 என்ற எண் 10 இடங்களிலும், 4 என்ற எண் 11 இடங்களிலும், 5 என்ற எண் 14 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 6 என்ற எண் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 7 என்ற எண் 7 தடவை வருகிறது. 8, 10, 100, 1000 ஆகிய எண்கள் தலா 1 தடவை பயன்படுத்தப்பட்டுள்ளன. கோடியை திருவள்ளுவர் 7 இடங்களில் உபயோகப்படுத்தியுள்ளார்.

திருக்குறளில் 'ஔ' என்ற உயிரெழுத்தை வள்ளுவர் பயன்படுத்தவேயில்லை.

திருக்குறளில் 'குறிப்பறிதல்' என்ற அதிகாரம் மட்டும் பொருட்பாலிலும், காமத்துப் பாலிலும் ஆக, இருமுறை வருகிறது.

- அபர்ணா சுப்ரமணியம்,
சென்னை - 4



''பக்குவமாய் சமைக்கச் சொல்கிறாய்! பாத்திரத்தை துலக்கச் சொல்கிறாய்! நெருங்கி வந்தால் முறைத்து உதைக்கிறாய்! பெண்ணே, தோழியா இல்லை... காதலியா யாரடி நீ பெண்ணே?''

''ம்ம்ம்! உன் பொண்டாட்டி!''

- தீபா லக்ஷ்மிநாராயணன்,
சென்னை - 24


PARLE
இப்ப அதிக
சக்திக்கு
பழக்கப்படுத்திக்குங்க!
பாலின் சக்தி
தேனின் நற்குணம்
PARLE
MILK SHAKTI
Rs. 5
BISCUITS WITH THE GOODNESS OF
MILK &
everest/PP/803-08 tam



தெரிந்து கொள்ள

தங்கமே தங்கம்!

★ உலக அளவில் தங்கத்தின் தேவை 875 டன்.

★ அதிக அளவில் தங்கம் வாங்குபவர்கள் இந்தியர்கள்.

★ இந்திய வர்த்தகத்தில் தங்கத்துக்காக மட்டும் ஆண்டுக்கு ரூ.17,000/- கோடி வர்த்தகம் செய்யப்படுகிறது.

★ கே.டி.எம். என்பது தங்கத்தின் தூய்மையை நிர்ணயம் செய்யும் பொருள் அல்ல. அது தங்கத்தை இணைக்க மட்டுமே பயன்படுகிறது.

★ 22 காரட் தங்கத்தில் தங்கத்தின் அளவு 91.6%.

★ 24 காரட் தங்கம் நகை செய்ய பயன்படாது. ஆனால், தற்சமயம் அதிலும் நகை செய்ய முயற்சிகள் நடக்கின்றன.

★ நகைகளின் டிசைனை அடிக்கடி மாற்றிக் கொள்பவர்கள் இந்தியர்கள்.

★ தற்காலத்தில் நகை வடிவமைப்புப் பணியில் பெண்களும் அதிக அளவில் உள்ளனர்.

★ கோலார் தங்கச் சுரங்கம் மூலப்பொருட்கள் இல்லாததால் மூடப்பட்டுவிட்டது.

★ தங்கம் சுரங்கங்களில் சிறிய கற்கள் வடிவில் கிடைக்கின்றன.

★ இந்தக் கற்கள் அதிக வெப்பத்தைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்படுகின்றன.

★ ஒரு கிரிக்கெட் பந்து அளவு கல்லை சுத்தப்படுத்தினால், 0.2 கிராம் தங்கம் தான் கிடைக்கும்.

★ தங்கத்தின் விலை அதிகரிப்பதற்கு அதன் மூலப் பொருட்கள் குறைந்து வருவதும் ஒரு காரணம்.

★ தங்க நகைகளை ஒன்றுடன் ஒன்று உராயாமல் வைத்தால் நீண்ட நாட்களுக்குப் பொலிவுடன் இருக்கும்.

★ தற்காலத்தில் கலப்படம் அதிகம் வருவதால் பொது மக்கள் ஏமாற வாய்ப்பு அதிகமாக உள்ளது. அவர்கள் தரமானவற்றைப் பார்த்து வாங்குவது நல்லது.

– கு.லதா,
கும்பகோணம்


எஞ்சல்ஸ்®
அட்வான்ஸ்ட் கிளினிக் (பி) லிட்
Since 1991
ஹேர், ஸ்கின் & பாடி கேர்
Angels®
Since 1991
Advanced Clinic (P) Ltd
Hair, Skin & Body Care
COSMETIC CLINIC
SOLUTION FOR UNWANTED HAIR AT ANGELS
(Ex. UpperLip, Chin, Cheeks, Abdomen, Chest, Ears)
ND-YAG Long Pulsed லேசர் சிகிச்சை Advanced Technology மூலம் தேவையற்ற ரோமங்களை குறைந்த சிட்டிங்கில் நிரந்தரமாக நீக்கி விடலாம். இது பெண்களுக்கு மேல் தாடை - கீழ் தாடை - அக்குள் - வயிறு - மார்பகம் போன்ற பகுதிகளிலும் தேவையற்ற ரோமங்களை நீக்கிவிடலாம்.
WEIGHT LOSS TREATMENT AT ANGELS
உடல் எடையை குறைப்பதற்காக அக்வா தெர்ம் செல்லுலைட் தெரபி, பாடி பாலிஷ், புரோட்டீன் தெரபி மூலம் ஆண்கள் மற்றும் பெண்களின் உடல் எடையை குறைத்து விடலாம். இச்சிகிச்சையினால் உங்கள் உருவம் மேலும் மெருகேறும் மற்றும் முற்றிலும் பாதுகாப்பானது. சிலருக்கு வயிறு பகுதி சரியாக இருக்கும். ஆனால் காலின் தொடை பகுதி மிக பருமனாக இருக்கும். இவர்களுக்கு Figure Correction மூலம் அக்குறையை நிவர்த்தி செய்துவிடலாம்.
GOOD BYE TO BALD HEAD WITHIN ONE HOUR THRU SILICON SYSTEM®
பாதி வழுக்கை, பாரம்பரிய வழுக்கை, வியாதிகளால் உதிர்ந்த உங்கள் தலைமுடியை சிலிகான் சிஸ்டம் என்ற நவீன தொழில் நுட்பத்தின் மூலம் தலைமுடியை ஒழுங்கு படுத்திவிடலாம்.
HAIR FALL CONTROL & REGROWTH IS POSSIBLE FOR LADIES thru PHOTO LASER THERAPY
பெண்களுக்கு அடர்த்தி தன்மையற்ற தலைமுடிக்கு ஃபோட்டோ லேசர் தெரபி என்ற அதிநவீன சிகிச்சையின் மூலம் (HAIR REGROWTH) தலைமுடியை வளர செய்யலாம். இது 100% பாதுகாப்பான சிகிச்சை.
COLOUR IMPROVEMENT - PIGMENTATION thru IMPORTED INHIBITORS
BREAST DEVELOPMENT thru MUSCLE STIMULATION THERAPY
Chennai: 2B, 3rd Avenue, T-53/99, Rajeshwari Mansion, Anna Nagar, Chennai - 40. Cell: 98400 46599. Ph: 044-42176679 / 26212547 / 26213468
Coimbatore: RR Complex, V.O.C. Road, 117/B, West Sambandham Rd, R.S.Puram, Coimbatore. Ph: 0422 - 6547577, 2547889. Cell: 92444 15899
VIJAY TV - 10.30 முதல் 11.00 மணி வரை காணத்தவறாதீர்கள்.
Hyderabad - (040)23222111, 66368999
Bangalore - (080)41153995, 41153996, 09845566799
www.angelsgroup.in

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி



குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெஸிபிகளுக்கு தலா ரூ.250/- பரிசு!

குக்கரி க்வீன் சமையல் போட்டி (ஜனவரி)

கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள் :

கோதுமை மாவு + வெங்காயம்

பெயர் : ....

முகவரி : ....

....

....

கடைசித் தேதி : 25.1.2009

புதிதாக வாங்கியிருந்த காரில் குடும்பத்துடன் திருப்பதிக்குக் கிளம்பினோம். புது கார் என்பதால், ''ஓம்'' என்று போட்டு, ஒரு பெரிய டாலர் வாங்கி, அதைச் சங்கிலியில் கோர்த்து பரிசளித்தாள் என் மகள். அதையும் முன்னால் மாட்டிக்கொண்டு, கன ஜோராகக் கிளம்பியது வண்டி. வேகமெடுத்து ஓடி, பள்ளங்களில் இறங்கும்போது, 'ஓம்' டாலர், நானும் ஆடுவேன் என்று கண்ணாடியில் இடித்தது; கண்ணாடி உடைந்து விடப் போகிறதே என்ற பயத்தில், வண்டி ஓட்டிக்கொண்டிருந்த என் கணவர், 'ஓமப்புடி'. ('ஓம்'ஐப் பிடி என்ற அர்த்தத்தில்) என்று அலற, அரைத் தூக்கத்தில் இருந்த என் காதில் 'ஓமப்பொடி' என்று விழுந்தது.



''எனக்குத்தான் ஓமப்பொடி பிடிக்காதே! அதை ஏன் எடுத்து வந்தே?'' என்று இளைய மகள் கத்த, விவரம் புரியாத வாண்டு, ''இப்பவே ஓமப்பொடி வேணும்'' என்று அடம்பிடிக்க, சட்டென்று வண்டியை நிறுத்தி, என் கணவர் விவரம் சொல்ல, அனைவரும் கொல்லென்று சிரித்தோம்.

(பிறகு, அந்தச் சங்கிலியின் நீளத் தைக் குறைத்து, கட்டி, பிரயாணத்தைத் தொடர்ந்தது தனிக்கதை).

- ர.கிருஷ்ணவேணி, சென்னை - 17

வயசு

அறுநூற்றைம்பது சதுர அடிகள் கொண்ட சின்ன மும்பை ஃபிளாட் அது! ஆனால், அதுதான் என் தாயார் ராஜலக்ஷ்மியின் கலா சாம்ராஜ்யமாகவும் திகழ்ந்தது. அதை கலைமயமா, சங்கீத மயமா உருவாக்கினதுல, என் தந்தை சேதுராமனின் பங்கும் அதிகம்!



✱ பெற்றோருடன்

தரையில் சம்மணமிட்டு அமர்ந்து, தம்புரா மீட்டிய வாறே, ''காந்த மாம் கதிர்காமம் தனில்...'' என்ற பாடலை அம்மா பாடும் காட்சி அழகோவியமாக என் மனத்துள் இன்றைக்கும் நிலைத்திருக்கிறது.

விடியற்காலையில் எழுந்து, கை கால் அலம்பிக்கொண்டு, பாடினால்தான், சுடச்சுட பால் கிடைக்கும். அதட்டி மிரட்டி பாட வைப்பது எல்லாம் கிடையாது. அதற்காக, ''கண்ணில்லையோ... இந்தா சாக்லெட்... இப்பப் பாடு!'' என்ற கெஞ்சலும் கிடையாது. அந்த வீட்டில் நிலவி வந்த டிஸிப்ளினில் அருணாவும் சுலபமாக ஐக்கியமாகிவிட்டாள். பத்து வயசுக்குள்ள பற்பல வர்ணங்கள், கிருத்திகள், இருநூற்று ஐம்பது உருப்படிகள் மடைத் திறந்த வெள்ளமாகப் புரள்கின்றன...

'சங்கீத கலாநிதி, பத்மஸ்ரீ திருமதி டி.பிருந்தா அம்மா' என்னுடைய மதிப்புக்குரிய குரு! பெரிய பொட்டு, களையான கண்கள், கம்பீரமாக இருந்த அவர் எங்கள் வீட்டுக்குள் காலடி வைத்தபோது, கலைவாணியும் அவர் கூடவே வந்திருக்க வேண்டும். என்னுடைய இரண்டாம் கட்டம் ஆரம்பமானது அப்போதுதான்.

சென்னையின் பிரபல சங்கீத விதூஷி, மும்பை விஜயம் செய்தால், என்னென்ன பரபரப்புகள் நடக்குமோ அதெல்லாம் நடக்கும்! அலமேலு மணி (பாடகர் ஹரிஹரனின் தாயார்), கல்யாணி சர்மா போன்றவர்களுக்கு ஹைலெவல் பாடம் நடக்கும். அப்போது நான் அந்த அறையின் கதவோரமாக நின்றுகொண்டுகேட்டுக்கொண்டிருப்பேன். மறுமுறை பிருந்தாம்மா வந்தபோது, இன்னும் கொஞ்சம் முன்னேற்றம். இந்த முறை அறைக்குள்ளே போய் உட்கார முடிந்தது. அதற்கும் அடுத்த முறை விஜயத்தின்போது, அவரது அருகே உட்கார்ந்து இரண்டு வரி பாட முடிந்தது.

✱ கணவர் மற்றும் மாமனார் - மாமியாருடன்...



ஒரு தடையல்ல!

அருணா சாய்ராம்



இதற்கு நடுவே பம்பாய் எஸ்.ராமச்சந்திரனிடம் நான் தொடர்ந்து சங்கீதம் கற்றுக்கொண்டிருந்தாலும் பிருந்தாம்மாவின் பாணியை நான் பின்பற்றத் தொடங்கியதும், அவருடைய பாடாந்திரந்தான் வார்ப்பானது!

குரு என்றால் முன்னாலே உட்கார வெச்சு, தான் பாடி, கிளிப் பிள்ளை போல அப்படியே பாட வைப்பது எல்லாம் கிடையாது. பாடிக்காட்டுவார். சில நுணுக்கங்களைத் தொட்டுக் காண்பிப்பார். அவர் மைன்ட்ல என்ன இருக்கோ அதை நான் கண்டுபிடிச்சுப் பாடறேனான்னு பார்ப்பார். யோசனையைத் தூண்டுவார். மோடிவேட் பண்ணுவார். நானா புதுசா எதையாவது தேடிக்கொண்டு வரேனான்னு சோதனை வைப்பார்.

நல்லா பாடிட்டா... ''ம்'' என்ற கனைப்பு வெளிவரும்!

ரொம்பவே நல்லா பாடிட்டா... ''ம்..ம்...'' என்ற கனைப்பு கொஞ்சம் அழுத்தத்தோட வெளிவரும். அவ்வளவுதான்.

சரியில்லைன்னா, ''பைரவி ராகம் பாடினே... அதோட சாயலே இல்ல!'' என்று காமெண்ட் வந்துவிடும்.

நல்லா இருக்குன்னு சொல்லிட்டா, இவ அங்கேயே லயித்து நின்னு வளராமப் போயிடுவாளோன்னு அவங்க பயப்பட்டிருக்கலாம்!

அவங்க பயமும் நியாயமானதுதான்னு இப்ப நான் பக்குவப் பட்ட பிறகு புரியறது.

எனது சங்கீதத்

தேடல் அசாத்தியமானதாக இருந்தாலும், எனக்கு மாப்பிள்ளை தேடுவதையும் செய்யவே செய்தார்கள்! கல்லூரி படிக்கும் போதே திருமணமாகிவிட்டது. கணவர் சாய்ராமுக்கு பொதுத் துறையில் பணி!

கூட்டுக் குடும்பம். அதே மும்பை... முன்பிருந்ததைவிட கொஞ்சம் பெரிய ஃபிளாட்... என்னுடைய இரண்டாவது பெற்றோர்களான மணி - விமலா மணியுடன் கூட்டுக் குடும்பம். இந்த இடத்தில் என் மாமனார் - மாமியாரின் பங்கு சிறப்பானது.

நடுத்தர வர்க்கத்துக் கூட்டுக் குடும்பத்தில் மருமகப் பெண்களுக்கு என்றே சில கடமைகள் இருக்குமல்லவா? அவற்றை கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்று என் தாயார் போதித்தார்கள்.

''வீடாவது? சமையலாவது! அப்படியே கிடக்கட்டும் விடு! நீ ப்ராக்டிஸ் பண்ணு!'' என்று அம்மா சொன்னதேயில்லை!

அதேபோல, ''பாட்டுமாச்சு! கச்சேரியுமாச்சு! எல்லாத்தையும் மூட்டை கட்டி வை!'' என்று என் மாமியார் இரண்டொரு முறை முகத்தைக் காட்டியிருந்தால், இதெல்லாம் சாத்தியமாகியிருக்குமா?

என் மாமனார் - மாமியாருக்கு இசையின் மீது மிகப் பெரிய கௌரவம் இருந்தது. இதைவிட மருமகளின் மீது அன்பு இருந்தது. அதனால், நான் மெட்ராஸுக்கு வந்து கச்சேரிகள் செய்யத் துவங்கிபோது, ''கவலைப்படாத போயிட்டு வா... குழந்தைகளை நாங்கப் பார்த்துக்கறோம்!'' என்று தைரியம் சொல்லி அனுப்பினார்கள்.

தாத்தா - பாட்டியின் பாச அரவணைப்பில் என் குழந்தைகள் இருந்த தைரியத்தில்தான் என்னால், இரண்டு நாள் ரயில் பயணம் செய்து சென்னையில் வாய்ப்புகள் தேட முடிந்தது.

இன்றைக்கும் சரி, ஒவ்வொரு கச்சேரி முடிந்து நான் வீடு திரும்பியதும், வாசலில் நிற்க வைத்து திருஷ்டி சுற்றிப் போட்டு, ''போ... டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு சாப்பிடு!'' என்று அன்புக் கட்டளை இடுவதே என்



* குரு டிபிருந்தாம்மாவுடன்...

மாமியார்தான்!

சாய்ராம் ரொம்பவே அபூர்வமான மனிதர். எப்போதும் உற்சாகமாக இருப்பார். அவருக்கு சங்கீதத்தில் மிகப் பெரிய ஞானம் இருக்கு என்றெல்லாம் சொல்ல முடியாது. அவர் அப்படி இல்லாததும் நல்லதுதான்! என் வேலை எனக்கு, அவர் வேலை அவருக்கு... ஆனால், நல்லதொரு இசைக் காதலர். என்னுடைய சங்கீதம் என்றில்லை.. யார் நல்லா பாடினாலும் ரசிப்பார். பொறுப்பான கணவர்! அன்பான அப்பா! பாசமுள்ள பிள்ளை! இதோ இன்றைக்கு உங்கக் கூட பேசிக்கிட்டு இருக்கும்போதுகூட, எனக்குப் பதிலா தனது 88வயது தாயாரை கவனிச்சுக்கிட்டு வீட்டுல இருக்கார்.

பணி ஓய்வுக்குப் பிறகு, என்னுடைய எல்லா கச்சேரிகளிலும் முன் வரிசையில் என் மாமியாரோடு வந்து உட்கார்ந்து விடுகிறார்.

யாருக்குதான் கவலையில்லை? எந்த வீட்டில்தான் சிறு சிறு விவாதங்கள் இல்லை? ஆனால், அதையெல்லாம் பெருக பண்ணி, என் இசைத் தேடலுக்கு இடைஞ்சல் செய்யாமல், என் மைன்டை ஃப்ரியாக்கி விடும் கணவருக்கு நன்றி!

என் முதல் மகளுக்கு கல்யாணமா

ணதும், சற்று ரிலாக்ஸாகி விட்டேன். என் மனசுக்குள் கனன்று கொண்டிருந்த இசைத் தேடல் சற்று வேகமெடுத்தது. நிறைய கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தேன். மும்பையில் பிரபலமாக இருந்த நான் வெளி நாடுகளிலும் பிரபலமாகத் தொடங்கினேன். ஆனால், அந்த வளர்ச்சியும் மிக மிக மெள்ள தான் நடந்தது. சென்னைக்கு அடிக்கடி வர ஆரம்பித்தேன். அந்தச் சமயத்தில் எனக்கு கை கொடுத்து உதவிய நண்பர்களை காலத்துக்கும் மறவேன்.

என்னுடைய இசைக் கச்சேரியின் முதல்



❋ எம்.எஸ்.அம்மாவுடன்...

விமர்சனமே 'கல்கி' இதழில் வந்ததுதான்!

''நிறைவான பாரம்பரிய இசை! பிரகாசமான வாய்ப்பு இருக்கு!'' என்று பாராட்டியிருந்தார்கள்.

ஆனால், என்னுடைய சங்கீதத்தை, சங்கீதத்தால் நான் பெற்ற அனுபவத்தை, பரவலாக்க, எல்லாரும் பெறக் கூடிய வகையில் விரும்பத்தக்கதாக்க என்ன செய்ய வேண்டும் என்ற நுணுக்கம் மட்டும் எனக்குப் புரியவேயில்லை! தவித்துப் போன எனக்கு அதற்கும் விரைவில் விடை கிடைத்தது.

பத்திரிகையாளர்கள், குறிப்பாக சங்கீத விமர்சகர்கள் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தார்கள். நடிகர் ரஜினிகாந்த் நடிக்க வந்த புதிதில் வந்த விமர்சனங்கள் ஞாபகமிருக்கா?

ஆனால், இன்றைக்கு அதுவே அவரது தனி ஸ்டைலாக எல்லாரையும் கவர்ந்திழுக்க... சூப்பர் ஸ்டாராகத் திகழ்கிறார்..

அது மாதிரிதான் எனக்கும் நேர்ந்தது.

''கச்சேரி புரியலை! கற்பனைகள் Vague'ஆ இருக்கு. ரொம்ப டிஸ்கனெக்ஷன்ஸ் இருக்கு! சங்கதிகளைக் கையாளத் தெரியலை!'' என்று நிறைய கடுமையானத் தாக்குதல்கள்.

அதைப் படிக்கும்போது மனசு அப்படியே துவண்டு போயிடும். அழுகையா பொங்கும். ஆனால், அரை நிமிஷம்தான். உடனே விமர்சனங்களை சீர்தூக்கிப் பார்ப்பேன். தவறுகளைத் திருத்திப்பேன். மீண்டும் மீண்டும் இம்ப்ருவ் பண்ணிப் பண்ணிப் பார்ப்பேன்.

அடுத்த கச்சேரியிலேயே அதனுடைய ஃபீட்பேக் கிடைச்சுடும். புது விமர்சனங்கள் வரும்! புது பாராட்டுகள் வரும்! இரண்டையும் ஏற்றுக்கொள்கிற பொறுப்பான பக்குவம் வந்துடும். அதையும் விமர்சகர்கள் கவனித்துப் பாராட்டினார்கள்.

இதற்கிடையே, நல்லதும் கெட்டதும் எடுத்துச் சொல்ல எனக்கு நல்லதொரு நட்பு வளையம் ஏற்பட்டு விட்டது. அவர்களுடைய யோசனைகளின் அடிப்படையில், புதிய கற்பனைகள், புதிய வடிவங்களைப் புகுந்த முடிந்தது. அதாவது, குரு பிருந்தாம்மாவின் பாரம்பரிய இசைக் கோட்பாட்டுக்கு வெளியே வராமல், அதேபோல நவீன சங்கதிகளையும் உருவாக்கினேன். அது கொஞ்சம் ஹிட் ஆனதும், ''இதோ பார் உன்னோட அடையாளம்! நீயே இதுவரை பார்க்காத உன்னோட அடையாளம். அருணா, இதுதான் நீ!'' என்று கண்ணாடியை முகத்துக்கு எதிரே வைத்து காட்டுவது போல காட்டி விட்டார்கள்.

அதற்குப் பின் குறைகளைத் திருத்தி, நிறைகளைப் பெருக்குவது சுலபமானது! நீரோடை போல மெல்ல ஓடிக்கொண்டிருந்த என் வளர்ச்சியும் வேகமும் கங்கை வெள்ளம்

போல புதிய பாய்ச்சல் கண்டது. எனக்கு நானே ஒரு வரைமுறையை வைத்துக் கொண்டு, சுழற்சி முறையில் கச்சேரி செய்யும் அளவுக்கு டிமான்ட் அதிகமாகி விட்டது. இதை நான் கர்வத்தினால் சொல்வ தாக நினைக்கவேண்டாம்...

நாற்பது வயதாகி விட்டாலே, பெண் களுக்கு சலிப்பு வந்து விடுகிறது. ''போதும்... கலையாவது! படிப்பாவது!'' என்று கூட்டுக் குள் ஒடுங்கி விடுகிறார்கள். என் கதையைப் படிச்சீங்க இல்லையா?

ஆரம்பம் முதலே குடும்பம்தான் பிரதான மென இருந்தேன். வளர்ச்சியும் வெகு நிதானம். என் சங்கீத உணர்வைப் பரவ



* அமெரிக்கக் கொடியை அருணா சாய்ராமுக்கு சமர்ப்பித்து கௌரவித்த நிகழ்ச்சியில்...

லாக்கிப் பகிர்ந்துகொள்ள படாதபாடு பட வேண்டியதாகிவிட்டது. எனக்கு கலை மாமணி, சங்கீத சூடாமணி, சங்கீத கலாசாரதி போன்ற பட்டங்களை என் ரசிகர்கள் தந்துள் ளனர். எல்லாமே நாற்பது வயதுக்கு மேல் கிடைத்தவை. அதையும் மீறி நான் நல்ல தாயாக, அன்பான மனைவியாக, பொறுப் புள்ள மருமகளாக, இருப்பதால் மனசும் நிறைவாக உள்ளது. எனவே வயசு ஒரு தடை யில்லை! முயன்றால் முடியாததில்லை என் சகோதரிகளே!

நியூயார்க்கில் 'கார்னகி ஹால்' என்றொரு இசை அரங்கம் உள்ளது. அதில் ஒரு முறையாவது பாடிவிட வேண்டும் என்பது பல பாடகர்களின் கனவாக இருக் கும்! சமீபத்தில் கார்னகி ஹாலில் என் கச்சேரி நடந்தது. நல்ல கூட்டம்... வெகுவாக ரசித் தார்கள். கச்சேரி முடிந்ததும் ரசிகர்களுக்கு என்னுடைய சி.டி.களில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது அறுபது வயது மதிக்கத்தக்க அமெரிக்கப் பெண்மணி ஒருவர் வந்து, ''நான் என் மகனை இழந்து விட்டேன். அப்போது அழுது அழுது கதறியதில் என் கண்ணீரே வற்றிவிட்டது. என் மனசும் இறுகி விட்டது. இன்றைக்கு தற்செயலாக உன் இசையைக் கேட்டேன். கல்லாகிப் போயி ருந்த என் நெஞ்சம் இளகி விட்டது. என் கண்களில் நீரை வரவழைத்துவிட்டது உன் சங்கீதம்! நன்றி பெண்ணே!'' என்று தாரைத் தாரையாக கண்ணீர்விட்டு அழுதார்.

அப்போது என் மனசுக்குள் சின்ன ஃப்ளாஷ்!

மேடையில் இருந்தது என்னவோ நான்! ஆனால், என்னைப் பாட வைத்தது ஏதோ ஒரு ஆனந்த சக்தி! அபூர்வ சக்தி! நான் வெறும் காலி பாத்திரம் மட்டுமே! இசையால் அதை நான் நிரம்ப வைத்ததில், அது நிரம்பி எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்ற உண்மை புரிந்தது.

அதை ஆரம்பத்திலேயே புரிந்து வைத்தி ருந்தவர் எம்.எஸ். அம்மா! அவர் இசையை தெய்வீகத்தை அடைய உதவும் வாகனமாகப் பயன்படுத்தியவர். அதனால்தான் அப்படி யொரு தெய்வீக சக்தி வாய்ந்த சங்கீதத்தைத் தர முடிந்தது.

இந்த விஷயத்தில் எனக்கு வழி காட்டும் ஒரே நட்சத்திரம் எம்.எஸ்.அம்மாதான்!

சந்திப்பு: **மங்களேஸ்வரி**


Himalaya
HERBAL HEALTHCARE
உங்கள் சருமம் நாள் முழுவதும் பொலிவுடன் விளங்க வேண்டுமா?
ஹிமாலயா வழங்கும் நரிஷிங் ஸ்கின் கிரீமை உபயோகித்துப் பாருங்கள்.
பிசுபிசுப்பற்ற இந்த கிரீமில் உள்ளது அலோவெரா மற்றும் விண்டர் செரியின்
100% ஹெர்பல் ஆக்டிவ்ஸ். அவை உங்கள் சருமத்திற்கு நாள் முழுவதும் பாதுகாப்பு,
போஷாக்கு மற்றும் ஈரப்பதத்தை அளிக்கின்றன. உங்கள் சருமத்தை அன்புடன்
பராமரித்திடுங்கள், நாள் முழுவதும், ஒவ்வொரு நாளும்.
Available at all leading stores and at the following Himalaya exclusive stores. CHENNAI - Adyar - 044 42115243 - T. Nagar - 044 4260
- Triplicane - 044 28522493 - Anna Nagar - 044 42171112 - Purasawalkam - 044 43539148 - Mylapore - 044 42066575 - COIMBAT
- R.S.Puram - 0422 2478590 - Sai Baba Colony - 0422 2439547 - OOTY - 0423 2445805 - POLLACHI - 04259 227070 - PONDICHER
0413 2225294/2229192 - TIRUCHY - 0431 2760909 - MADURAI - 0452 3043331 - ERODE - 0424 4030802 - SALEM - 0427 404

கடவுளின் கருணை!

லண்டனிலிருந்து என் மகள் அனுப்பிய இ-மெயிலை உங்களுடன் பகிர்கிறேன். அதிக அளவு பெண்களின் மனதைக் கவர்ந்த இ-மெயில் ஆக தேர்வு பெற்றது இது.

ஓர் ஆண், தன் மனைவி நிம்மதியாக வீட்டிலிருக்கும்போது, தான் மட்டும் தினந்தோறும் அலுவலகம் செல்ல வேண்டியிருக்கிறதே என்ற சலிப்பில், தன் கடவுளிடம் வேண்டுகிறான்.

''என் பிரபுவே, நான் படும் பாட்டை அவளும் உணர வேண்டும்; கடவுளே! அதனால் ஒரு நாள் அவள் உடலில் என் உயிர் இயங்கட்டும்...'' என்று வேண்ட, இறைவனும் அவன் கோரிக்கைக்குச் செவி சாய்க்கிறார்.

அடுத்த நாள் காலை அவன் ஒரு பெண்ணாகக் கண் விழித்தானென்று சொல்லத் தேவையில்லை. அவளாகிய அவன், கணவனுக்குக் காலை உணவு தயாரித்து, பிள்ளைகளை எழுப்பி, உணவை ஊட்டி, பள்ளியில் அவர்களை விட்டுவிட்டு, வரும் வழியில் வங்கி வேலை முடித்து, அங்காடியில் வாங்க வேண்டியதை வாங்குகிறாள்.



வீடு வந்து, துணி தோய்த்து, வீட்டைப் பெருக்கி, பிள்ளைகளைக் கூட்டி வர பள்ளிக்கு ஓடி, அவர்களுக்கு சிற்றுண்டி கொடுத்து, ஹோம் ஒர்க் செய்ய சித்தப்படுத்தி, பின் துணிகளை இஸ்திரி செய்து கொண்டே தொலைகாட்சி நிகழ்ச்சிகளைக் காண்கிறாள்.

இரவு உணவு ஆனதும் சமையலறையை சுத்தம் செய்து, பாத்திரங்களைக் கழுவி, பிள்ளைகளைப் படுக்க வைத்தாள். மணி இரவு பத்து. முழுவதும் சோர்வடைந்து (இன்னும் தினப்படி வேலைகள் முடிந்த பாடில்லை) படுக்கைக்குப் போய் கணவனுக்குத் தேவைப்பட்டதால் எந்தப் புகாருமில்லாமல் அதையும் நிறைவேற்றித் தூங்குகிறாள்.

அடுத்த நாள் காலை எழுந்த அடுத்த நிமிடம் முழங்காலிட்டு, ''கடவுளே, என் மனைவி ஹாயாக இருக்கிறாள் என்றுப் பொறாமைப்பட்டேன். தயவு செய்து என்னை மறுபடியும் பழையபடி ஆணாகவே மாற்றிவிடு. ஆமென்'' என்று இறைஞ்சுகிறான்.

கடவுளோ தன்னுடைய எல்லையில்லா ஞானத்தினால், ''மகனே, நீ பாடம் கற்றுக் கொண்டாய் என உணர்கிறேன். உங்களிருவரையும் மறுபடி மாற்றுவதில் நானும் மகிழ்ச்சி அடைவேன்தான். ஆனாலும், நீ இன்னும் ஒரு ஒன்பதே ஒன்பது மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. ஏனென்றால், நேற்றிரவு நீ கர்ப்பம் தரித்து விட்டாய்'' என்றுரைக்கிறார்.

- பி.எஸ்.கமலா பார்த்தசாரதி, சென்னை - 33



அழகா

அழகுக் கலைஞர் நேச்சுரல்ஸ் வீணா பதிலளிக்கிறார்!

என் அம்மாவுக்கு கழுத்துப் பகுதி முழுவதும் பாலுண்ணி உள்ளது. மாங்கல்யசரடு பட்டு இழுத்தால் வலிக்கிறது என்கிறார். இதற்கு தீர்வு உண்டா?

- சரண்யா மணியன், மைலாப்பூர்

சரும சிகிச்சை மருத்துவர்கள் தங்கள் க்ளினிக்கில் இதற்கான லேசர் மற்றும் எலக்ட்ரிக் முறையில் பாலுண்ணிகளை தீய்த்து எடுத்து விடுகிறார்கள்.. வலியில்லாத நவீன சிகிச்சை இது. அழகு நிலையங்களிலும் சிறிய ஊசி கொண்டு மின் சக்தி மூலம் மருக்களை நீக்க முடியும். இருந்தாலும் சரும மருத்துவர் மூலம் செய்து கொள்வது தான் அதிக பாதுகாப்பானது.



கைமுட்டிகள், கால் முட்டிகளில் உள்ள வறட்சி, கருந்திட்டுகளை எப்படி நீக்கலாம்?

ஆர்.சோமசுந்தரம், திருவண்ணாமலை

கோதுமை ரவை (உடைச்ச கோதுமை) யில் சிறிது பால் ஏடு, எலுமிச்சம் சாறு கலந்து கறுப்பான இடங்களில் தடவி பத்து நிமிடம் ஊற வைத்து கழுவி விடவும். எலுமிச்சம் சாறு கறுப்பைப் போக்கும்... வறட்சியை நீக்க ஆலிவ் எண்ணெய் தடவி மசாஜ் செய்யலாம்.

புதிய பகுதி

கண்ணிற்கு கீழே கருப்பு

கேளுங்க!

வளையங்கள் உள்ளன. பல மருந்துகள் உபயோகித்தும் பயனில்லை. என்ன செய்யலாம்?

- எம்.அனுராதா, சேலம்

நீண்ட நேரம் உற்றுப்பார்த்து வேலை செய்வதாலும், தூக்கம் சரியானபடி இல்லாததாலும் கரு வளையங்கள் ஏற்படும். சில சமயம் பரம்பரைவாகாகவும் இருக்கலாம். உருளைக் கிழங்கு சாறு எடுத்து பாலில் (சமஅளவில்) கலந்து சிறிது நேரம் ஃப்ரிட்ஜில் வைத்திருந்து பின்னர் கண்களின் கீழே தடவி அரை மணி ஊற வைத்து பின் கழுவவும். தடவும் போது மேற்புறமாக நோக்கி, விரல்களால் தடவ வேண்டும். கன்னத்துப் பக்கம் கீழ் முகமாக தடவக் கூடாது. பாதாம் எண்ணெயும் எலுமிச்சை சாறு கலந்து தடவினாலும் கருவளையம் மறையும்.



வீட்டிலேயே செய்து கொள்ளக் கூடிய சிக்கனமான ஃபேஷியல் முறை எது?

- கவிதா, அந்தியூர்

நான்கு பாதாம் பருப்பைப் பாலில் அரைத்து 1 டீஸ்பூன் ஆரஞ்சு சாறு கலந்து, இந்தக் கலவையில் விட்டமின் 'ஏ' மாத்திரை ஒன்று உடைத்துப் போட்டு, முகத்தில் தடவி பத்து நிமிடம் ஊற வைக்கலாம். பப்பாளிப் பழத்தோடு, சிறிது தேன், பால் அல்லது பால் பவுடர் கலந்து, ஃப்ரூட் ஃபேஷியல் ஆக உபயோகிக்கலாம். ஒரு முட்டையை அடித்து, அத்தோடு தேன், ஆலிவ் எண்ணெய் கலந்து ஃபேஷியலாக உபயோகிக்கலாம். சருமத்துக்கு எலாஸ்டிக் தன்மை தரும் இந்த ஃபேஷியல்!

முடி நீக்கும் க்ரீம்களை பயன்படுத்துவது பக்க விளைவுகளைத் தருமா?

- கே.பி.புவஸ்ரீ, மதுரை

இப்போதெல்லாம் அழகு நிலையங்களில் வேக்ஸிங் செய்து கொள்பவர்கள் அதிகரித்து வருகிறார்கள். க்ரீம்களை உபயோகித்து முடி நீக்குவது குறைந்து வருகிறது. க்ரீம்களில் இருக்கும் சில ரசாயனங்கள் உங்களது சருமத்துக்கு ஒத்துக்கொள்கிறதா என்பதை சோதித்துப் பார்த்தபின் உபயோகிப்பது நல்லது.

தொகுப்பு : பத்மினி பட்டாபிராமன்



மருத்துவ முன்னேற்றம்

அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் காலேஜ் ஆப் அட்வான்ஸ் மெடிக்கல் அஸோசியேஷன் (ACAM) தனது 35ம் ஆண்டு நிறைவு விழாவை மிகப் பிரம்மாண்டமாக கொண்டாடியது. இதில் சென்னை – நந்தனத்தில் ஆக்ஸிமெட் மருத்தவமனையின் நிறுவனர் டாக்டர் அயாஸ் அக்பர் அழைப்பின் பெயரில் கலந்து கொண்டார் அங்கு தனது ஆய்வினை சமர்ப்பித்து, அதற்கான சிறப்பு விருதினையும், (Award of Excellence) பெற்றார். இந்த மாநாட்டில் மேலும் பல இருதய சிகிச்சை நிபுணர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கின் மிக முக்கிய பிரமுகரான துணை ஆய்வாளர் டாக்டர் கேரி F. கார்டன் (Dr. Garry, F. Gordon) பல மருத்துவ ஆராய்ச்சி நூல்களை எழுதி பிரசுரித்த பெருமை பெற்றவர். அவர் டாக்-

டர் அயாஸ் அக்பரின் கோரிக்கைக்கு இணங்கி, இந்தியாவில் டாக்டர் அயாஸ் அக்பரின் தலைமையில் நடக்க இருக்கும். மாபெரும் மருத்துவக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள ஒப்புதல் தெரிவித்துள்ளார். இந்த கருத்தரங்கில் பல மருத்துவ நிபுணர்களும் சந்தித்து. வளர்ந்து வரும் மருத்துவத்துறையில் அறுவைசிகிச்சையில்லாத, பல நோய்களுக்கு நிவாரணம் தரும் புதிய சிகிச்சைகளைப் பற்றியும் கலந்து ஆலோசிக்க உள்ளனர். மேலும் அமெரிக்காவில் தற்போது பிரபலமடைந்து வரும் மைக்ரோடோசிங் (Microdosing) என்ற மிகக் குறைந்த மருந்துகளின் உதவியுடன் பல நோய்களுக்கு நிவாரணம் தரும் சிகிச்சை முறையை பற்றியும் பேச உள்ளனர்.



ஏற்கனவே அறுவைசிகிச்சையின்றி இதயத்திற்கு இதமளிக்கும் சிகிச்சையை வெற்றிகரமாக ஆக்ஸிமெட் மருத்துவமனை. மூலம் செய்து வரும் நமது டாக்டர் அயாஸ் அக்பர் மக்களுக்கு சிறந்த பலனளிக்கும் இந்த Microdosing சிகிச்சையையும் நமது சென்னைக்கு மிக விரைவில் அறிமுகப்படுத்த உள்ளார். இது பற்றிய ஒரு பிரம்மாண்டமான மருத்துவ கருத்தரங்கிணையும் சென்னையில் தனது தலைமையில் மிக விரைவில் நடத்த உள்ளார்.

இந்த மாநாட்டிற்கு சென்னையில் உள்ள மேலும் பல மருத்துவ நிபுணர்களை அழைத்து, கத்தியின்றி, அறுவை சிகிச்சையை தவிர்த்து, பல இருதய சிகிச்சைகளை செய்யும் முறை பற்றி கலந்து ஆலோசித்து, மருத்துவ முன்னேற்றத்தை இத்துறையில் ஏற்படுத்த டாக்டர் அயாஸ் அக்பர் விரும்புகிறார்.

இதுபோன்றஎளியபுதியசிகிச்சைமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், நமது எதிர்கால இந்தியா பல நோய்களின் தீவிரத்திலிருந்து விடுபட்டு, மிகவும் ஆரோக்கியமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆக்ஸிமெட் மருத்துவமனை USA-வுடன் சேர்ந்து அறுவைசிகிச்சையின்றி, இருதய நோய்களுக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்து வருகிறது மேலும் இதன் நிறுவனரான டாக்டர் அயாஸ் அக்பர் EECP சிகிச்சைக்காக சிறப்பு விருதினை USA-வில் பெற்றுள்ளார்.

தற்போது மூட்டுவலிக்காக அறுவைசிகிச்சையின்றி குணப்படுத்தும் சிகிச்சை மூலம் வலியில்லாத கால்களைப் பெறலாம். இந்தியாவிற்கு இது ஒரு நல்ல செய்தி!



அன்னதான மகிமை!

புராணம்

கர்ணன் தர்ம தேவதையின் அருளைப் பெற்றவன். தான் செய்த தர்மங்களின் புண்ணியத்தில், வைகுண்டத்திலே, தனிச் சிறப்பான இடம் கிடைக்கப் பெற்றான். கர்ண மஹாராஜாவாகத்தான் வைகுண்டத்திலும் நடத்தினர். சுற்றிலும், தங்கமும், வைரமும் கொட்டிக்கிடந்தன. அவருக்கு அது எதுவும் திருப்தி அளிக்கவில்லை. உணவைத் தேடினார். சிறிதளவு உணவு கூட எங்கும் இல்லை. கர்ணன் அங்குள்ளவர்களிடம் உணவு வேண்டும் எனக் கேட்க, காதிலே யாருமே வாங்கவில்லை.

அப்போது அங்கே கிருஷ்ணன் வந்தார், ''கிருஷ்ணா, ரொம்பப் பசிக்கிறது. ஏதாவது சாப்பிடக் கொடு'' என்று கெஞ்சுகிறார்.

''கர்ணா, நீ கொடையாளி, தர்ம தேவதையே உன்னிடம் இருப்பவள், துரியோதனனைவிட தான தர்மத்திலே சிறந்தவன். ஆனால், என்றாவது அன்னதானம் செய்திருக்கிறாயா?'' என்று கேட்டார்.

''கண்ணா, நான் பிரமாதமாக ஏன், சாதாரணமாகக் கூடச் செய்யவில்லை. ஆனால், துரியோதனன், அன்னதானம் பண்ணிக்கொண்டிருந்தான்; ஒருவன் பசித்து வந்தான். என் விரலால் சுட்டிக் காண்பித்தேன்'' என்றான்.

''அதுபோதும் கர்ணா, அந்த விரலை, வாயிலே வைத்து சப்பு'' என்றார். உடனே பசி அடங்கியது.

இதேபோல, கிருஷ்ணர், சுதாமர், சாந்தினிபியிடம் குருகுலம் பயின்றனர். குருவின் மனைவி, சில கடலைகளைச் சுதாமரிடம் கொடுத்து கிருஷ்ணன், பலராமர் ஆகியோரிடம் கொடுக்கச் சொன்னார். மடியில் படுத்த கிருஷ்ணர், ''சுதாமா என்ன சாப்பிடுகிறாய், அம்மா, ஏதாவது கொடுத்தாளா?'' என்று கேட்க, ''ஒன்றுமில்லை... பல்லைக் கடிக்கிறேன்'' என்று விட்டார். அதனாலே, சுதாமர் பட்ட கஷ்டம் நாமறிந்ததே!

தினம் தினம் நம்மைப் போன்ற சாமானியர்கள் அன்னதானம் செய்ய முடியாது. பிறந்தநாள், கல்யாண நாள், அதுபோல மாளய அமாவாசை தினங்களிலே அன்னதானம் செய்ய வேண்டும். தினம், வீட்டில் வேலை செய்பவர்களுக்கு சிறிது ஆகாரம், கொடுக்கலாம். மீந்ததைக் குப்பையில் கொட்டாமல் தெரு நாய்களுக்கு அளிக்கவும்.

- சரோஜா வாஞ்சி, பெங்களூரு - 93



அவளும் அவனும்!

ஐந்து மணிக்கு எழுந்து
வாசல் தெளித்து
கோலம் போடுகிறாய்...

ஆறு மணிக்கு குளித்து முடித்து
நீர் சொட்டும் ஈரக் கூந்தலில்
துண்டைச் சுற்றிக் கொள்கிறாய்...

ஏழு மணிக்கு அடுக்களையில்
ஆவிகளுக்கு நடுவே
இட்லிக்கு உயிரூட்டுகிறாய்...

எட்டு மணிக்கு ட்யூஷன் போய்
ஒன்பது மணிக்கு
தோழியைச் சந்தித்து

பாதங்கள் வழியே
மலர்களைப் புஷ்பித்து
சிரிப்பின் வழியே
முத்துக்களைச் சிதறவிட்டு
கல்லூரியில் நுழைகிறாய்...

பத்து மணிக்கு நான்
வீடு திரும்புகையில்
அம்மா திட்டுகிறாள்
"இன்னும் பல்லு வெளக்கலையாடா
கழுதை!"

- அனார்கலி, தஞ்சாவூர்

சாதனை படைத்து வரும்

ஐஸ்வர்யா மகளிர் நலம் & கருத்தரித்தல் மையம்

(டெஸ்ட் டியூப் பேபி & ஆராய்ச்சி மையம்)



சென்னை - கோவை - பழனி

ISO - 9001 : 2000

உலகத்தரச் சான்று பெற்ற மருத்துவமனை

Joy of Parenting

வாழ்க்கை எனும் பயணத்தில் ஒரு பெண் தாய்மைஅடைவது முக்கியமான ஒன்று. எத்தனையோ செல்வங்கள் இருந்தாலும் மழலைச் செல்வம்தான் இன்று முக்கிய பங்கு வகிக்கிறது. வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் குழந்தை இல்லா தம்பதியர்களின் துயரைப் போக்க அதிநவீன சிகிச்சை முறைகளான லேப்ராஸ் கோப்பி, ஹிஸ்டிராஸ் கோப்பி, IUI, IVF, ICSI, லேசர் ஹேட்சிங், பிளாஸ் டோசிஸ்ட் கல்சர் முறைகள் கையாளப்பட்டு வருகிறது.



டாக்டர் எஸ்.சந்திரலேகா

சென்னை, கோவை, பழனியில் மழலை இன்பம் தழைக்கச் செய்து ஓர் இனிய சரித்திரம் படைத்து வருகிறது ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையம். கடந்த 16 ஆண்டுகளில் தமிழகம் மட்டுமல்லாது இந்திய மற்றும் வெளிநாட்டு தம்பதியினர் இம்மையத்தை நாடி வருகின்றனர். குழந்தையில்லா தம்பதியர்கள் முறையாக பரிசோதிக்கப்பட்டு குறைபாடுகள் கண்டறிந்து அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து மழலைச் சொல் கேட்டு மகிழும் தம்பதியர் ஆக்குகிறது ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையம்.


ஐஸ்வர்யா கருத்தரித்தல் மைய இயக்குனர் டாக்டர்.எஸ்.சந்திரலேகா எஸ்.எஸ்.எல்.சி.யில் மாநிலத்தின் முதல் மாணவி. பி.யூ.சி.யில் பல்கலைக்கழக முதல் மாணவி. எம்.பி.பி.எஸ்.சில் அனைத்து ஆண்டுகளிலும் அனைத்து பாடங்களிலும் தங்க பதக்கம் பெற்றவர். 1990-ம் ஆண்டு பழனியில் ஆரம்பித்த இவருடைய மருத்துவப் பயணம் கோவை மற்றும் தற்போது சென்னை அடையாறிலும் ஆரம்பமாகி அதிக வெற்றியை தந்து கொண்டு இருக்கிறது.

இதுவரை 20,000-க்கும் மேற்பட்ட குழந்தையில்லா தம்பதியர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், 10,000-க்கும் மேற்பட்ட தம்பதியர்களுக்கு வி.சி. மருத்துவ அறக்கட்டளை மூலமாக இலவச சிறப்பு ஆலோசனைகளும், 5000 தம்பதிகளுக்கு இலவசமாக ஸ்கேன் பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் தலைமையிலான டெஸ்ட் டியூப் சிகிச்சை முறையில் (IVF / ICSI) இது வரை 700-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்துள்ளது. IUI முறையில் 2000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்து சாதனை படைத்துள்ளது. 2 கர்ப்பப்பை கொண்ட பெண்ணிற்கு 2 கர்ப்ப பையிலும் டெஸ்ட் டியூப் பேபி முறையில் குழந்தை பிறக்க வைத்து மருத்துவ உலகில் ஒரு சாதனை படைத்துள்ளது. அமெரிக்கா, லண்டன், மலேசியா, சிங்கப்பூர், நைரோபி, துபாய் தம்பதியர்கள் குழந்தை செல்வம் பெற்றுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில் குழந்தையின்மைக்கான நவீன சிகிச்சை முறைகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலமாக அதிக அளவு வெற்றியை சிறந்த மருத்துவ குழு மற்றும் உலகத் தரமிக்க நவீன கருவிகளின் துணையுடன் அதிக வெற்றியை தந்து கொண்டு இருக்கிறது. ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையத்தின் தரத்திற்கு முத்திரையாக ISO- 9001:2000 உலகத் தரச்சான்றும் பெற்றுள்ளது. திறமையான எங்களுடைய சிகிச்சையினால் இனி எங்களுக்கும் ஒரு குழந்தை வெற்றி நிச்சயம் என்கிறார் புகழ் பெற்ற கருத்தரித்தல் நிபுணர் மற்றும் லேப்ரோஸ்கோப்பி நிபுணர் டாக்டர்.எஸ்.சந்திரலேகா.

- வயதுக்கு வராத பெண்ணுக்கு கருப்பை பெரிதாக்கி டெஸ்ட் டியூப் பேபி முறையில் குழந்தை பிறக்க வைத்து சாதனை.
- குடும்பக்கட்டுப்பாடு செய்த பெண்ணுக்கு சினைக்குழாய் இணைப்பு அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறக்க வைத்து சாதனை.
- சினை முட்டை தீர்ந்துபோன பெண்ணுக்கு டெஸ்ட் டியூப் சிகிச்சை மூலம் குழந்தை பிறக்க வைத்து சாதனை.



அடையார், சென்னை.
Ph : 044-24403714, 98420 71909.



காந்திபுரம், கோவை.
Ph : 0422-2241777, 98421 59009



திண்டுக்கல் ரோடு, பழனி.
Ph : 04545-240077, 98422 05194

புக் பேங்க்...

அதிசய ஆலயங்கள் ஜபல்பூர் ஏ.நாகராஜ சர்மா, வானதி பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ.100.00

போர்பந்தரில் உள்ள குசேலர் கோயில், வாரணாசியில் உள்ள பாரத மாதா கோயில், கோல் ஹாப்பூர் மகாலெக்ஷ்மி ஆலயம் - என்று அபூர்வமான இருபது திருக்கோயில்களைப் பற்றிய விரிவான வரலாறு. ஏராளமான படங்களோடு கூடிய அருமை யான நூல்.


எழுத்துலகச் சிற்பிகளுடன் இனிய சந்திப்பு- எஸ்.கதிரேசன், வானதி பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ.50.00


பதினைந்து எழுத்தாளர்களை குடும்பத் தாரை, நேரில் சந்தித்துப் பெற்ற விவரங்கள் அடங்கிய நூல். சுவையான பல செய்திகள் உண்டு.

மன அமைதி தரும் பாராயண தமிழ் மந்திரங்கள் - ஹரா.கி.வாலம், நர்மதா பதிப்பகம், சென்னை - 17. வலை ரூ.60.00

ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், ஆதித்ய ஹிருதயம் என்று மிகவும் பிரபலமான இருபது சம்ஸ்கிருத ஸ்தோத்திரப் பாடல்களை அழகிய தமிழில் எழுதியிருக்கிறார் அமரர் ஹரா.கி. வாலம் அம்மையார். தமிழில் பொருளுணர்ந்து பாராயணம் செய்வது சுகமான அனுபவம்.


படிக்க... பயன்பெற...











குழந்தைகள் சைக்காலஜி - ஜி.எஸ்.எஸ்., நலம் வெளியீடு, 33 / 15, எல்டாம்ஸ் சாலை, சென்னை - 18. விலை ரூ.70.00

எப்போதுமே பெற்றவர்கள் அதிகம் அலட்டிக் கொள்வது குழந்தைகள் வாங்கும் 'ராங்க்' பற்றித்தான். பள்ளிப் பாடம் முதல், பழகும் பாங்கு, பெற்றவர் கடமை என்று முப்பத்தைந்து அருமையான கட்டுரைகள். வீட்டுக்குள்ளேயே குழந்தை களோடு அமர்ந்து உற்சாகப்படுத்துகிற பிர மையை ஏற்படுத்துகிற நல்ல நூல்.

திருக்குறள் (தமிழ் ஆங்கில வடிவங்கள்) - ரெவ.ஜி.யூ.போப், ரெவ.டபிள்யூ.ஹெச் ட்ரியூ, ரெவ.ஜான் வாசரஸ், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, சென்னை - 17. விலை ரூ.100.00

திருக்குறள் மூலம் தமிழில் மூவரின் ஆங்கில உரைகள் என்று ஒழுங்காக்கப்பட்ட பயனுள்ள பதிப்பு.

- வாசகன்



"பாசம் காட்ட

'திருநங்கையர்' என அழைக்கப்படும் அரவாணிகள் இன்றும் சமூகத்தின் பல்வேறு தரப்பினராலும் ஒதுக்கப்பட்டு வருகின்றார்கள். அண்மையில் சென்னையில் நூற்றுக்கணக்கான அரவாணிகள் கூடி, இலங்கைத் தமிழர்களுக்காக ஒப்பாரிப் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் இந்த மாதம் 'எங்க வாழ்க்கை' பகுதிக்காக மனம் திறந்து பேசுகிறார்கள்.

❖ ரோட்டில் நடந்து போனால், பஸ் ஏறினால், அனைவரது கண்களும் எங்கள் மீதுதான் இருக்கும். பஸ்சில் நாங்கள் பெண்கள் சீட்டில் உட்கார்ந்தால், அடுத்து பஸ் ஏறும் பெண்கள் எங்கள் பக்கத்தில் வந்து உட்காருவதைத் தவிர்த்துவிட்டு, நின்றுகொண்டே பயணம் செய்வார்கள்.

❖ எங்களுக்கு யாரும் வீடு கொடுக்க மாட்டார்கள். பல அரவாணிகள் குடிசைப் பகுதிகளிலும், கால்வாய் ஓரப் பகுதி களிலும்தான் வசிக்கிறார்கள். நன்றாகப் படித்து, வேலை பார்க்கும் அரவாணியாக இருந்தால், சிலர் வீடு கொடுப்பார்கள். ஆனால், ஒன்றுக்கு இரண்டாக வாடகை கேட்பார்கள். அரசாங்கம் ஏற்படுத்திய சமத்துவபுரங்களில் எங்களுக்கும் ஓரிரு வீடுகள் ஒதுக்கித் தந்திருக்கலாமில்லையா?

❖ போலீஸ்காரர்கள் தொல்லை சொல்லிமாளாது. பல அரவாணிகளை சந்தேகத்தின்பேரில் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் வெளியில் சொல்லவே நாக்கூசும்படியாக பலவகை களிலும் சித்ரவதை செய்வார்கள். ஒரு அரவாணி வடசென்னை போலீஸ் நிலை யத்தில் செய்யப்பட்ட சித்ரவதை தாங்கா மல் தீக்குளித்து தற்கொலை செய்துகொண் டார். எங்கள் அமைப்பு, வக்கீல்களின் உதவியுடன் வழக்கு நடத்தியதில், சம்பந் தப்பட்ட போலீஸ்காரர்களை டிஸ்மிஸ் செய்தார்கள். இப்போது மேல் முறையீடு நடக்கிறது.

❖ அரவாணிகளில் பலரும் பள்ளிப் படிப்பை முடிப்பதே பெரிய விஷயம். ஆனாலும், அனைத்து பிரச்னைகளையும் சமாளித்து, ஆர்வம் காரணமாக மேலே படிக்கிறவர்களும் அபூர்வமாக இருக்கவே



ஆணில்லை!''

செய்கிறார்கள்.

படித்தவர்களுக்கே வேலை கிடைக்காத இன்றைய நிலையில் படிக்காத எங்களுக்கு என்ன வேலை கிடைக்கும்? எனவேதான், பல அரவாணிகளும், பிச்சை எடுக்கிறார்கள்; இல்லை பாலியல் தொழிலில் ஈடுபடும் துர்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

❖ அர்த்தநாரீஸ்வரர், ஐயப்பன் உருவாகக் காரணமான மோகினி அவதாரம் எடுத்த மகாவிஷ்ணு என்று புராணங்களில் பெரிய அந்தஸ்தைக் கொடுக்கிறார்கள். ஆனால், கோயிலுக்கு நாங்கள் போகிறபோது எங்களை சாமி கும்பிடவந்த சகமனிதர்களாக மதிப்பதில்லை. சர்ச்சுக்குப் போனாலும் இதே கேலிப்பார்வை, நமுட்டுச் சிரிப்புதான். அவர்களிடம், மத்தேயூ 19:12ல் எங்களை 'அன்னவர்கள்' என்று குறிப்பிட்டு, ''பரலோகத்தில் உங்களுக்கு ஆண்களையும் பெண்களையும் விட மேம்பட்ட ஓர் இடத்தைத் தருவேன்'' என்று பரமபிதா குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி வாயடைக்கச் செய்வோம்.

❖ சினிமாக்களில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ, உடல் ஊனமுற்றவரையோ கேலி செய்வதாக காட்சிகளோ, பாடலோ இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவர்கள் போர்க் கொடி தூக்குகிறார்களே! ஆனால், எங்களை எந்த அளவுக்கு மோசமாகக் கேவலப்படுத்துகிறார்கள்? சென்சார் போர்டுகூட இதைக் கண்டு கொள்வதில்லை. விரைவில் சினிமாக்களில் எங்களைக் கேவலப்படுத்துவதை வன்மையாகக் கண்டித்து குரல் கொடுக்கப் போகிறோம்.

❖ ஒரு ரேஷன் கார்டு வாங்க இரண்டரை வருடம் அலைந்த அவல நிலையும் உண்டு. சில அதிகாரிகள், உங்கள் பெயர், உங்கள் குடும்பத்துக்கான ரேஷன் கார்டில் இருக்குமில்லையா? அதை நீக்கம் செய்து சர்டிஃபிகேட் வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள்தான் சிறு வயதிலேயே வீட்டைவிட்டு விரட்டி அடிக்கப்பட்டு விட்டோமே! அப்புறம் எப்படி மறுபடி வீட்டுக்குப் போய், ரேஷன் கார்டில் பெயர் நீக்கம் செய்து சர்டிஃபிகேட் வாங்கிக் கொண்டு வர முடியும்? இப்போது நிலைமை பரவாயில்லை. தமிழக அர



சாங்கத்தின் உத்தரவின்பேரில் எங்களுக்குப் பிரச்னை ஏதுமில்லாமல் ரேஷன் கார்டு தர ஆரம்பித்திருக்கிறார்கள்.

❖ என்னுடைய மெக்கானிகல் எஞ்சினியரிங் சர்டிஃபிகேட்டை எடுத்துக் கொண்டு எத்தனை கம்பெனிகளுக்கு நான் வேலை கேட்டுப் போயிருக்கிறேன் தெரியுமா? 'உங்களை மாதிரி ஆளுங்களை நாங்க வேலைக்குச் சேர்த்துக்க முடியாது; மற்ற ஊழியர்கள் மத்தியில் பிரச்னைகள் ஏற்படும்; எங்க இமேஜ் பாதிக்கப்படும்' என்று முகத்திலடித்தாற்போல சொல்லி அனுப்பிவிட்டார்கள்' என்று ஆதங்கப் பட்டார் ஒரு பாலிடெக்னிக் முடித்த அரவாணி.

❖ வடக்கே பல குடும்பங்களில் குழந்தை பிறந்தாலோ, திருமணங்களிலோ எங்களிடம் ஆசிபெற்று, எங்களுக்குப் பரிசளித்து மகிழ்வதுண்டு. மரணம் சம்ப வித்தால், எங்களை ஒப்பாரி வைக்க அழைப்பார்கள். எங்களுக்குள் ஒரு நல்லது, கெட்டது என்றால், நாங்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி எங்கள் மன உணர்வு களைப் பகிர்ந்து கொள்ளும் தருணங்கள் எங்களுக்கு சின்னச் சின்ன சந்தோஷத் தருணங்கள்.



சமீபத்தில் லயன் மணிவண்ணன் என்ற சமூகத் தொண்டரது ஏற்பாட்டில் அரவாணிகளுக்கென்றே பிரத்யேகமாக 'சென்னை ஜெமினி திருநங்கை லயன்ஸ் கிளப்' துவக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அகில உலக அளவில் இதுவே அரவாணிகள் மட்டுமே கொண்ட முதல் லயன்ஸ் கிளப்.

❖ இன்று அரவாணிகளின் நலனுக் காகப் பாடுபடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அவர்கள் எங்களு டைய உரிமைகளுக்காவும், நலனுக்காகவும் போராடுவதுடன், சுயமாகத் தொழில் நடத்தி வேலை வாய்ப்புகளைப் பெருக்க கம்ப்யூட்டர் பயிற்சி உள்ளிட்ட பல்வகை பயிற்சிகள் அளிக்கிறார்கள். ஆனாலும், வேலை கிடைப்பது சுலபமாக இல்லை. அரவாணிகளுக்கான சுய உதவிக் குழுக்கள் துவங்கி, வேலை வாய்ப்புகள் அளிக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது. துப்புரவு பணியைக்கூட செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் அந்த வேலை எங்களுக்கு நிரந்தரமாக தரப்பட வேண்டும்.

❖ எங்கக் குடும்பத்தினர் பாசத்துக்குப் பதிலாக வெறுப்புதான் காட்டுகிறார்கள்; தாய்ப்பாசத்துக்கு ஏங்கும் எங்கள்மீது அன்பு காட்டவோ, ஆறுதலாக நாலு வார்த்தை பேசவோ யாரும் கிடையாது. அதனால், மூத்த அரவாணிகளை அம்மா வாகவும், புதியவர்களை எங்களுக்கு மகளாகவும் ஸ்வீகரித்துக்கொண்டு வாழ் நாளைக் கடத்துகிறோம்.

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

குழந்தை பேரின்மைக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு!

குழந்தை பேரில்லாத தம்பதிகள் கலந்துக் கொள்ளும் விழிப்புணர்வு கருத்தரங்கு சென்னை ஏ.கே.பி. ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சி மையம் ஏற்பாடு செய்துள்ளது. மருத்துவர்கள் கலந்துக் கொள்ளும் குழந்தை பேரின்மை கருத்தரங்கில் ஒரு பிரிவாக முதன் முதலாக இந்த கருத்தரங்கை நடத்துகிறது. இம்மாதம் 25.1.2009 **ஞாயிறு காலை 9 மணி முதல் 5 மணி வரை** சென்னை அண்ணா மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் புகழ் பெற்ற மருத்துவர்கள் கலந்துக் கொண்டு பேசுவார்கள். தம்பதிகளின் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார்கள்.

"பெரும்பாலும் குழந்தை பேரில்லாத தம்பதிகள் ஆப்ரேசன், ஐ.வி.எப். என்றும் நினைக்க ஆரம்பிக்கிறாங்க! பெரும்பாலான குறைகளை சிகிச்சையிலேயே சரி பண்ண முடியும்!" ஆண்களுக்கு இருக்கற விந்தனு பிரச்சனைகள், ஆண்மை கோளாருகளுக்கு நல்ல சிகிச்சை இருக்கு! ஆபரேசன் இல்லாம... வெரிகோசீல்ங்கிற இரத்த நாள புடைப்புகளில்ல கூட பலன் பெற்று இருக்காங்க.

பெண்களுக்கு இருக்கிற மலட்டு தன்மை பிரச்சனைகளில் PCOD, தைராய்டு கோளாறுகள் தான் அதிகம்! ஹார்மோன் கிசிக்சை இல்லாமலேயே நிறைய பேருக்கு சக்ஸஸ் பண்ணியிருக்கோம்! கருப்பை கட்டிகள், என்டோமெட்ரியோஸிஸ், அடினோமையோசிஸ், டியூப் பிளாக், இன்பெக்ஷன் தொந்தரவுலே கூட நல்ல சிகிச்சை ஹோமியோபதி மருத்துவத்துல இருக்கு!

"எல்லாத்துக்கு மேலே கவுன்சிலிங், தம்பதிகளுக்கு ரொம்ப ரொம்ப முக்கியம். மனப்பிரச்சனைகள், தாம்பத்திய உறவு பற்றிய சந்தேகங்களை தெளிவுபடுத்தின குழந்தை பேறுக்கு ஏதுவாவாங்க!" என்கிறார் பிரபல ஹோமியோபதி மருத்துவர் டாக்டர். ஆர். ஞானசம்பந்தம்.

மேலும் விபரங்களை பெற சென்னை, இராயபேட்டை, லாயிட்ஸ் ரோடு, ஹேமமாலினி மண்டபம் எதிரில் உள்ள ஏ.கே.பி. ஹோமியோபதி மருத்துவ ஆரோய்ச்சி மையத்தில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண். 044 - 2811 3300 www.homeomiracles.com என்ற இணைய தளத்தில் தெரிந்து கொண்டு பதிவு செய்யலாம். E-mail : gnanas@vsnl.com

ஸ்ரீ அனுமத் ஜெயந்தி: மார்கழி மாதத்தில், மூலநட்சத்திரம் அமாவாசை திதியில்தான் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்வாமி திருஅவதாரம் செய்தார். எனவே, ஆண்டு தோறும் மார்கழி அமாவாசை மூலநட்சத்திரம் கூடிய சுபதினத்தில் திருக்கோயில்களில், ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜயந்தி கொண்டாடப்படுகிறது.

மார்கழியில் திருவாதிரைத் திருநாள் - ஆருத்ரா தரிசனம்: ஆண்டு



தோறும், மார்கழியில் திருவாதிரை நட்சத்திரம் கூடிய, பௌர்ணமியன்று 'ஆதிரைத் திருநாள்' என்ற 'ஆருத்ரா தரிசனம்' கொண்டாடப்படுகிறது. இத்திருநாள், ஆடல் வல்லானாகிய ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு உகந்ததொரு நாளாகும். அன்று தில்லையில், ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆனந்தத் திருநடனத்தை ஆயிரக் கணக்கான பக்தர்கள் கண்டு ஆனந்திக்கின்றனர்.

மேலும், இத்திருவாதிரைத் திருநாள், திருப்பெருந்துறை, கோவை பேரூர், மதுரை, திருக்குற்றாலம் ஆகிய திருத்தலங்களில், 'ஆருத்ராதரிசனம்' அதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மார்கழிக்குத் 'தனுர்மாதம்' என்ற பெயர்:

பௌர்ணமியுடன், மிருகசீரிஷம் என்ற நட்சத்திரம் கலக்கும் நாளே 'மார்க்கசீரிஷம்' என்றும் மார்கழி என்றும் அழைக்கப்படுகிறது. சூரியன் தனுர் ராசியில் பிரவேசிப்பதால், தனுர் மாதம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஆண்டாள் கல்யாணம் :

மார்கழி மாதத்தின் கடைசி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ ஆண்டாள்,

மங்கள மார்கழி!

மார்கழி மாதத்தில், ஒவ்வொரு நாளும், ஒரு திருப்பாவைப் பாசுரம் வீதம், முப்பது நாட்களில் முப்பது பாசுரங்களாக 'திருப்பாவை' பாடி, பாவை நோன்பு நோற்று, 'போகி'யன்று திருவரங்கத் திருக்கோயிலில், விருப்பப்படியே ஸ்ரீ அரங்கநாதரைத் திருமணம் செய்து கொண்டு,

அவருடன் ஐக்கியமாகிவிட்டார்.

மார்கழியில் வீட்டு வாசலில் பெரிய கோலம்:

மார்கழி, தேவர்களுக்கு அருணோதயக் காலமாகும். எனவே தான், விடியற்காலையில், வீடுகள், மங்களகரமாக இருக்கவேண்டுமென்று, பெண்கள், விடியற் காலையிலேயே வீட்டு வாசலில் சாணநீர் தெளித்து, பெரிய பெரிய கோலங்கள் போட்டு, கோலத்தின் நடுவில் சாணத்தைப் பிடித்து வைத்து, அதன் மேல் பறங்கிப் பூவை அழகாக வைத்து, தேவர்களை வரவேற்பார்கள்.



ஸ்ரீ விஷ்ணு கோயில்களில் தனுர் மாத ஆராதனை:

மார்கழியில் ஸ்ரீ விஷ்ணு கோயில்களில், தனுர் மாதப் பூஜை செய்து திருப்பல்லாண்டு பாடி, நாளொன்றுக்கு ஒரு திருப்பாவை வீதம் முப்பது நாட்களும் பாடி வெண் பொங்கலை ஸ்ரீ பெருமாளுக்கு, 'திருவமுது' செய்வித்து, பக்தர்களுக்குப் பிரசாதம் கொடுப்பார்கள். 'கூடார வல்லி'யன்று சர்க்கரைப் பொங்கல் திருவமுது செய்விப்பார்கள்.

மார்கழியில் சிவாலயங்களில், மாணிக்க வாசகர் இயற்றிய திருவெம்பாவையை விடியற்காலையில்பாடுவார்கள்.

ஸ்ரீ பெருமாள் கோயிலில், மார்கழியில், வைகுண்ட ஏகாதசி யின் போது, 'பகல் பத்து' 'இராப் பத்து' என்று கொண்டாடி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைப் பாராயணம் செய்வார்கள்.

மார்கழியில், திருவரங்கத்தில், 'வைகுண்ட ஏகாதசி' நாள், அதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

- கே.ராஜலக்ஷ்மி,
சென்னை - 61



மஹாராஷ்டிராவில் மாட்டுப் பொங்கல்!

மஹாராஷ்டிரா மாநிலத்தில் மராட்டி மாதமான சிராவண (ஆவணி) மாதத்தின் அமாவாசையன்று வயலில் உதவி புரியும் காளை மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக 'போளா' கொண்டாடப்படுகிறது.

காளை மாடுகளை நன்றாக அலங்காரம் செய்து, அனைத்து காளைகளையும் நகரின் இரண்டு, மூன்று முக்கிய இடங்களில் ஒன்றாக ஒருங்கிணைத்து, பூஜைகள் செய்வர். பின்னர் வாத்திய முழக்கங்களுடன் ஊரில் உள்ள தெருக்கள் வழியாக தத்தம் வீட்டுக்கு அழைத்துச் செல்வர். அவ்வாறு அழைத்துச் செல்லும்போது அனைத்து வீடுகளிலும் காளை மாடுகளுக்குப் பூஜை செய்து, மராட்டிய உணவான 'பூரண போளி'யை மாடுகளுக்கு அளித்து மகிழ்வார்கள் காளை மாட்டின் எஜமானருக்கும் சன்மானம் அளிப்பர். இத்திருவிழா அமாவாசையன்று மாலை நடைபெறும்.

அமாவாசைக்கு அடுத்த நாள் சிறுவர்கள் பங்குபெறும் 'தான்ஹா போளா' மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. குழந்தைகள் தங்கள் வீடுகளில் இருக்கும் மரத்தாலான காளை மாட்டுப் பொம்மைகளை அலங்கரித்து, ஒன்று கூடி பூஜை செய்து மகிழ்வர். பின்னர் தங்கள் காலனியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் காளை பொம்மைகளை எடுத்துக்கொண்டு செல்வர். கூடவே சன்மானமும் பெறுவர். இந்த 'தான்ஹா போளா' குறிப்பாக 'விதர்பா' பகுதியில்தான் கொண்டாடப்படுகிறது.

இந்த இரண்டு நாள் திருவிழாவிலும் சிறந்த அலங்காரங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, இந்த 'தான்ஹா போளா'வினால் குழந்தைகள் விவசாயத்தில் காளை மாட்டின் பங்கினை அறிந்துகொள்ள முடிகிறது.

- ஜெயஸ்ரீ .எம்.சாரி,
வர்தா

சமீபத்தில் என்னுடைய மகள் இந்திரா, லண்டன் சென்றிருந்தாள். அப்போது அவளுக்கு அம்மா ஞாபகம் வந்துவிடவே கொஞ்சம் ஹோம்-சிக் ஆகிவிட்டாள். அன்று மாலை, எனது உறவினர்களுடன் ஏதோ ஒரு இந்தியன் சூப்பர் ஸ்டோர்ஸ் போயிருக்கிறாள். அங்கே இருந்த புத்தகப் பிரிவில் தற்செயலாக மங்கையர் மலரைப் பார்த்ததும், 'அம்மாவோட நினைவலைத் தொடர் வெளியாகிற பத்திரிகை போல இருக்கிறதே' என்று நினைத்துப் புரட்டிப் பார்த்திருக்கிறாள்.

அவளுக்குத் தமிழ் தெரியாது. இருந்தாலும் என் புகைப்படங்கள் அச்சான பக்கங்களை வைத்து அடையாளம் கண்டுபிடித்திருக்கிறாள்.

''மம்மி... உங்க படத்தோட டாடியோட படத்தையும் பார்த்துட்டு எனக்கு அழுகையே வந்திடுச்சு! ஐ மிஸ் யூ ஸோ மச்!'' என்று ஃபோன் செய்தாள். 'மங்கையர் மலர்' பத்திரிகையின் வீச்சுக்கு உதாரணம் காட்டவே இந்த சம்பவத்தைச் சொல்கிறேன். நன்றி மங்கையர் மலர்!

தொட்டால்



''என்ன, இவ்வளவு சீக்கிரமா முடிச்சுட்டீங்க?'' என்று நிறைய வாசகியர் வருத்தப்பட்டு எழுதுவதாக அறிகிறேன். என்னையும் பல பேர், ''இன்னும் சில அத்தியாயங்கள் எழுதலாமே!'' எனக் கேட்கிறார்கள். உங்கள் அன்புக்கு நன்றி! இந்தத் தொடரை ஆரம்பிக்கும்போதே பன்னிரண்டு மாதத் தொடர் என்று கட்டுரையாசிரியர் திட்டமிட்டிருந்ததால், அதற்குள் வரும்படியாக வடிமைத்திருக்கிறோம். இந்த அத்தியாயத்தில் என்னுடன் பழகிய சில நடிகைகளைப் பற்றிய சிறு குறிப்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பானுமதி அம்மா: நவரச நாயகி. அவருக்குத் தெரியாத வித்தையே கிடையாது. கதை, பாட்டு, இசை, டைரக்‌ஷன், நாட்டியம் என அமர்க்களப் படுத்திய சகலகலாவல்லி!

பி.சரோஜாதேவி

'நாடோடி மன்னன்', 'பத்துமாத பந்தம்' போன்ற படங்களில் இவருடன் நடித்திருக்கிறேன். ஸ்ட்ரெயிட் ஃபார்வர்ட் பெண்மணி!

அஞ்சலிதேவி: என்னுடைய சிறு வயதில், அவர் நடித்த 'அனார்கலி' தெலுங்குப் படத்தைப் பார்த்திருக்கிறேன். அன்றிலிருந்து என்னுடையே ஃபேவரிட் நடிகையாகிவிட்டார்! இன்றைக்கும் என் மீது

பூ மலரும்!



அளவு கடந்த அன்பு வைத்துள்ளார்! நானும் தான்!

சௌகார் ஜானகி: 'பாலும் பழமும்', 'கண்மலர்', 'புதிய பறவை', 'ஸ்கூல் மாஸ்டர்', 'பார்த்தால் பசி தீரும்' என நிறையப் படங்கள் இவருடன் நடித்திருக்கிறேன். எல்லாம் சூப்பர் ஹிட் தான்! ராசியான கைகளுக்குச் சொந்தக்காரர். ஒரு குச்சியை நட்டால்கூட அது அழகாய்ப் பூத்துக் குலுங்கிவிடும்!.

கிருஷ்ணகுமாரி: இவர் சௌகார் ஜானகியின் தங்கை, எனது உயிர்த் தோழியும் கூட! இருவரும் சேர்ந்து நிறைய தெலுங்குப் படங்களில் நடித்தபோது அடிக்கடி ஹைதராபாத் போக வேண்டியிருந்தது. இரண்டு பேரும் சென்னையில் ஏறி உட்கார்ந்தோம்னா, ஹைதராபாத் வரும் வரை லொட லொடனு பேசிக்கிட்டே இருப்போம். மறுபடி சென்னை வரும் வரை லொட லொட தொடரும்! இப்பவும் அதே மாதிரிதான்!

விஜயகுமாரி: விஜி, என்னுடைய





சிறந்த தோழி. மிக நல்ல மனைவி. கணவன் கிழித்த கோட்டைத் தாண்டாத பெண். இல்லத்தரசிக்கு இலக்கணமானவள். அவள் நல்லா இருக்கணும்னு நான் தினமும் வேண்டிக்குவேன். எங்களுக்குள் ஒளிவு மறைவே கிடையாது.

எம்.வி.ராஜம்மா: இவங்க ரொம்ப

தூண்டி விட்ட அலைகள்!



சரோஜா தேவி தனது திருமண நிகழ்வுகளைப் பற்றி எழுதும்போது 'அந்தர் பட்டா' சடங்கின்போது அவரது கணவர் ஸ்ரீஹர்ஷா 'தனது மனைவியே எப்பொழுதும் ஜெயிக்க வேண்டும்' என்று சொன்னது மனதுக்கு மிகவும் நெகிழ்வாக இருந்தது. நிச்சயமாக அவர் ஓர் அற்புதமான கணவர்தான்.

சுமார் 24 வருடங்களுக்கு முன்பு (1984) நான், என் கணவர், இரு மகள்கள் (10 வயது, 5 வயது) ஆகியோர் பெங்களூரு சுற்றிப் பார்க்கப் போனபோது நடந்த சம்பவம், இன்றும் பசுமையாக என் நினைவில் இருக்கிறது.

சரோஜா தேவியின் தீவிர ரசிகர்களாகிய

டிவிப்ளிண்ட் உமன்! நானும் அவரும் நிறைய படங்களில் நடிச்சோம். ரசிகர்கள் எல்லாம் நிஜமான தாயும் - மகளுமாவே எங்களை நினைச்சாங்க. அந்த அளவுக்கு முகஜாடை ஒத்துப் போகும். அவங்க வீட்டுல இருந்து சாப்பாடு வரும். நான் உடம்பு வெயிட் போட்டுடும்னு நெய் சாப்பிட மாட்டேன். ஆனால், அவங்க, ''சரோஜா... அங்க பார்!''னு சொல்லி என் கவனத்தை சட்னு திசை திருப்பி, ஒரு ஸ்பூன் நெய்யை ரசத்துல கலந்துடுவாங்க. ருசி மாறிடும். வாசனையும் காட்டிக் கொடுத்துடுமில்லையா? ''என்னம்மா...?'' என்றால், ''நீ சும்மா இரு... ஷூட்டிங்ல பெரிய பெரிய லைட்டுல நாள் முழுக்க நின்னு நடிக்கிறே! நெய் சாப்பிடாட்டி உடம்பு சூடாயிடும்!''என்பார்!

கண்ணாம்பா: தேவர் ஃபிலிம்ஸ் தயாரித்த பல படங்களில் சேர்ந்து நடித்திருக்கிறோம். ஒருமுறை மகாபலிபுரத்துல படப்பிடிப்பில் இருந்தபோது, கண்ணாம்பா இறந்துவிட்டதாகச் செய்தி பரவியது. அதை உண்மை என்று நம்பிய நான், அப்படியே பதறி அடித்துக்கொண்டு வேடிவெலிங்டன் மருத்துவமனைக்கு ஓடினேன். நல்லவேளை... அது வதந்தியாக இருக்கவே 'அப்பாடி!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். 'சட்டு சட்டு' என்று மாறும் முகபாவங்களிலும் வசனப்பிரயோகத்திலும் கண்ணாம்பாவுக்கு நிகர் அவரே!

ராஜஸ்ரீ: 'பூ கைலாசம்', 'பத்துமாத பந்தம்' போன்ற படங்களில் இணைந்து நடித்தோம். அவரது தாயார் இறந்தபோது, புழுவாய்த் துடித்துப் போனார். சாப்பிட மறுத்து அடம் பிடிக்கிறார் எனக் கேள்விப்

நாங்கள், எப்படியாவது அவரைப் பார்க்க வேண்டும் என்று வழி விசாரித்துக் கொண்டே அவர்கள் வீட்டுக்குப் போனோம். அப்போது வீட்டிலிருந்து ஒரு கார் புறப்பட்டு வெளியே வந்தது. சரோஜாதேவியும் அவரது கணவர் ஸ்ரீஹர்ஷாவும் காரில் இருந்தனர். அடடா... அருகில் பார்க்கவும், பேசவும் முடியாமல் போய்விட்டதே என்று வருந்தியதும் கார் நின்றுவிட்டது. என்ன ஆச்சரியம்! சரோஜாதேவியும், அவர் கணவரும் காரிலிருந்து இறங்கி எங்கள் அருகில் வந்தார்கள். எனது ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

''நாங்கள் சென்னையிலிருந்து உங்களைப் பார்க்க வந்தோம். ஆனால் நீங்கள் அவசரமாக வெளியே போகிறீர்களே. ஒரு ஃபோட்டோவாவது எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தேனே'' என்று நான் சொன்னதும், சரோஜாதேவி அவர்கள் ''அதற்கென்ன? தாராளமாக எடுக்கலாமே!'' என்று தனது கொஞ்சும் தமிழில் கூறினார். தனது கணவரையும் அருகில் அழைத்து இருவரும் எங்கள் குடும்பத்துடன் ஃபோட்டோ எடுத்துக்கொண்டனர்.

அப்போது 5ம் வகுப்பு படித்த எனது மகள் சித்ராவுக்கு, இப்போது 5ம் வகுப்பு படிக்கும் மகள் நிவேதித்யா இருக்கிறாள். நிவேதித்யா இப்போதும் இந்த ஃபோட்டோவைப் பார்த்து மகிழ்வாள்.

சரோஜாதேவியின் கணவர் எங்களோடு ஃபோட்டோவுக்கு வந்து நின்றதை எண்ணி வியந்தோம். ஸ்ரீஹர்ஷா உண்மையிலேயே உயர்ந்த மனிதர்தான். அவரைக் கணவராக அடைந்த சரோஜாதேவி பெரும் பாக்ய சாலி.

சரோஜாதேவியின் நினைவலைகள், எங்கள் நினைவலைகளைத் தூண்டி விட்டன.

- கவிஞர் கலைவாணி,
சென்னை - 40

பட்ட நான், அவரது வீட்டுக்குப் போய் ஆறுதல் சொல்லி பழச்சாறு சாப்பிட வைத்தேன்.

வைஜெயந்திமாலா: பப்பியம்மா ஒரு கண் என்றால், வைஜெயந்தி அக்கா இன்னொரு கண். எங்களை வெளி நபர்கள் யாராவது ஒரு சேரப் பார்த்தால், ''ட்ரையோவா?'' என்பார்கள். அந்த அளவுக்கு சாயல் தெரியும். நானும் வைஜெயந்தி அக்காவும் ஒரே நட்சத்திரம். (கிருத்திகை) இரண்டு பேரும் உப்புமா ப்ரியைகள்! அவர் நடித்த 'மதுமதி', 'தேனிலவு' படங்கள் வெகு ப்ரியம். கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பேன்.



பத்மினி: பப்பியம்மாவின் சாந்தமான போக்கும், பொறுமையான அணுகுமுறையும் என்னை வெகுவாகக் கவர்ந் தவை. 'தில்லானா மோகனாம்பாள்' படம் ஒன்று போதும், அவரது நாட்டியத் திறமையையும்,

நடிப்புத் திறமையையும் எடுத்துச் சொல்ல.

சச்சு: சென்னை வந்தால் கண்டிப்பாக சந்தித்துக்கொள்ளும் தோழியருள் இவரும் ஒருவர்! முன்பிருந்த அதே அழகு; அதே இளமை; அதே பாசம்! நான் எல்லாம் கூட நிறையவே ஊதிவிட்டேன். ஆனால் சச்சு மட்டும் எடை கூடாமல் அப்படியே இருக்கிறார். இந்த விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் பொறாமைதான்.

கே.ஆர்.வஜயா: வித்தியாசமான கேரக்டர் கொண்டவர். மிகச் சிறந்த இல்லத்தரசி. சென்னை போன்ற வெப்பப் பிரதேசத்தில் ரோஜாச் செடிகளை மிக அழகாக வளர்க்கிறார். மிகவும் பக்தியுள்ளவர்... கணவர் வேலாயுதத்துடன் அன்பான வாழ்க்கை வாழ்கிறார். அவர் நடித்த படங்கள் எல்லாமே பிடித்தவை என்றாலும் 'கற்பகம்', 'தீர்க்க சுமங்கலி'யில் பிரமாதமாக நடித்திருப்பார்.



குட்டி பத்மினி: குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானதால், அவர் விளையாட வேண்டிய பருவத்தில் விளையாடவில்லை. பள்ளிக்குப் போக வேண்டிய நேரத்தில் படிக்கவில்லை என்று பரிதாபப் படுவேன். ஆனால் இன்று தமது நிறுவனத்தில் பெரிய பொறுப்புகளை வகிக்கிறார். என்றாலும் என் கண்ணுக்குக் குழந்தை போல்தான் தெரிகிறார்.

ஜெயலலிதா: நாடறிந்த பெண்மணி! பள்ளிப் படிப்பில் தங்கப் பதக்கம் வென்றவர். அரசியலிலும் தங்கத் தாரகையாக மின்னுகிறார். பெண் இனமே பெருமைப்பட வேண்டியவர்.

சோனியா காந்தி: என் கணவர் இறந்த போது, நான் ரொம்பவே சோர்ந்து போய் விட்டேன். ஆனால், ராஜீவ் காந்தியை அநியாயமாக வெடிகுண்டுக்கு நாம் பலி கொடுத்தபோது சோனியா காந்தியின் நிலைமையை எண்ணி எண்ணிக் குமைந்து போனேன். அவரது மன உறுதியைப் பார்த்துப் பார்த்து நான் இப்போது தேறிவிட்டேன். வேற்று நாட்டினர் ஆனாலும், கல்யாணத்துக்குப் பிறகு, இந்தியப் பெண்மணியாகவே உடையாலும், உணர்வாலும் மாறிவிட்ட அவரை வாழ்த்துகிறேன்.

(முற்றும்)

சந்திப்பு: **அனுராதா சேகர்,**

படங்கள் : **யோகா, ஞானபிரகாசம், ஜெயபாபு**



‘வெப்’ விடு தூது...

விரதத்தின் முடிவில் உணவைக் கண்டதும்
உமிழ் நீர் சுரப்பது போல்...
நெடுநாளாய்க் காத்திருந்து உன்னைக் கண்டதும்
என் தாய்மை சுரக்கின்றது!
கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் பறவையானாய்...
உன் வருகைக்காகக் காத்திருக்கும்
வேடந்தாங்கல் ஆனேன் நான்!
உனக்கென ஓர் உலகம்
உன்னைச் சுற்றியே என் உலகம்
இரவும் பகலும் ஒன்றுதான்
நாம் இணையதளத்தில் இணைகையிலே!
ஆலமர விழுதாய்த் தாங்கி நிற்கச் சொல்லவில்லை...
முகத்தின் சுருக்கங்களில் முகவரியைத் தொலைத்து விட்டு...
ஆர்ப்பரிக்கும் அலைகள் போல் தத்தளிக்கும் மனதுக்கு
நித்தம் உன் முகம் காட்டு வெப் கேமிலே!
அதுபோதும்...
தவிக்கும் தாயுள்ளம் மலரும்!

- ரம்யாஷான், பெங்களூர்



இந்த தலைமுறைக்கான
மிகச் சிறந்த
சமையல் எண்ணெய்!
Contains Omega3
Supreme
RICEBRAN OIL
1 Litre
Supreme
Bio-ரிஃபைண்டு ரைஸ்ப்ரான் ஆயில்
* ரசாயன முறையின்றி சுத்திகரிக்கப்பட்டது
- ஓரிசனால் கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைக்கிறது.
- ஆன்டி-ஆக்ஸிடென்ட்கள் நோய்க்கிருமிகளை எதிர்க்கிறது.
- ஸ்குவாலீன் சருமத்திற்கு மெருகேற்றி சுருக்கம் ஏற்படுவதை தடுக்கிறது.
- டாக்கோ ட்ரைனல் புற்றுநோய் எதிர்ப்பு தன்மை வாய்ந்தது.
Free!
910 g +
90g
விழாக்கால சலுகை
அதிக அளவு! அதே விலையில்!



''கடவுளை வரம் தரும் இயந்திரமாக நினைக்காமல், இறையின் தாத்பரியத்தை உணர்ந்து, உங்கள் அன்பையும் செல்வத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டால், அவர்களது மகிழ்ச்சியில் இறைவனைப் பார்க்கலாம். இறைவனை அடைய அன்பும் சேவையுமே சிறந்த பாதைகள்'' என்று உறுதியாக நம்பும் எஸ்.எம்.சில்க்ஸ் உரிமையாளர் மனோஹரனின் அனுபவங்களைப் படியுங்கள்.

எஸ்.எம்.சில்க்ஸ் மனோஹரனின் செல்ஃபோனில் கூட ''ஓம் ஜெய் ஜகதீஷ ஹரே!'' என்ற பாடல் தான் ஒலிக்கிறது.

தி.நகர் கடையிலும் எங்கு பார்த்தாலும் ஸ்ரீபாபாவின் திருவுருவப் படங்கள்தான்!

''ஸ்ரீசத்யசாயிபாபாவைப் பற்றிய தொடரில், உங்க அனுபவங்களை எழுதணும்!'' என்றதும், ''அதைவிட பெரிய பேறு எனக்கு வேறு ஏதேனும் இருக்குமா?'' என்றவர், ''என்னை விட என் வீட்டுக்காரம்மா, மிகப்பெரிய சாயி பக்தை. அவளிடமும் பேசுங்க!'' என்ற சொல்லி உடனே ஒரு நேரத்தை ஒதுக்கித் தந்தார்.

''நான் பி.யூ.சி.வரை படித்து விட்டு, ஒரு ஜவுளி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அப்படியே அந்தத் தொழில் கொஞ்சம் பிடிபடவே, 1980களில் ஜவுளி கமிஷன் ஏஜென்டாக மாறினேன். இந்தியா முழுக்கச் சுற்றி அலைந்தேன். கணிசமான வருவாய் வந்தது. 1984ல் பார்வதியைக் கை பிடித்தேன். காஞ்சிபுரம் பஜாரில் ஓர் இடம்

பகவான்

பிடித்து, 'சண்முகம் கட்பீஸ்' என்றொரு சின்னக் கடை ஒன்றை வைத்தேன். சுமாராக வியாபாரம் நடந்து கொண்டிருந் தது.

1992ல் ஒரு சொந்த காரியமாக, நீதியரசர் கற்பக விநாயகம் அவர்களைச் சந்தித்தேன். எனக்கு 1979ல் இருந்தே அவருடன் நல்ல பழக்கம் உண்டு. அறவே இறை நம்பிக்கை இல்லாத அவர், ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் தீவிர பக்தராக மாறியிருந்தார்.

''என்ன சார்... இப்படி மாறிட்டீங் களே!'' என்று கேட்டேன்.

''ஸ்வாமியோட பாத தரிசனம் கிடைச்ச பிறகு, என்னோட வாழ்க்கையே மாறிடுச்சு மனோஹர்!'' என்று சொல்லி சுவாமியின் அவதார மகிமையைச் சொன்னார்.

அதற்கு முன்பே நான் ஸ்ரீ சத்யசாயி பாபாவைப் பற்றி ஏதோ அறிந்திருந்தேன். யாராவது அவரைப் பற்றி உயர்வாகச் சொன்னால், ''நீங்க அந்த சாமிக்கு ஏஜெண்டா?'' என்று கிண்டலாகக் கேட் பேன். 1980களில் ஜவுளி புக்கிங் செய்ய, அடிக்கடி தர்மாவரத்துக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது அங்கிருந்து புட்டபர்த்தி பஸ் போவதை அடிக்கடிப் பார்ப்பேன். ஆனாலும் ஒரு முறை கூட அங்கு போகணும் என்று தோன்றிய தில்லை.

ஆனால், இப்போது கற்பகவி நாயகத்தின் பேச்சைக் கேட்டதும், மனசுக்குள் சின்ன ஆர்வம் ஏற் பட்டது. மறுநாள் ஏதோ கல் யாணத்துக்குப் போனேன். அங்கே யாரோ ஒருவர், சத்ய சாயியின் சிறிய படத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதை கடையில் கொண்டுபோய் வைத்தேன். என்ன ஆச்சரியம்? அன்றைக்கு காண்பித் ததற்கெல்லாம் பில் போடறாங்க. இத்த னைக்கும் அன்றைக்கு எந்த விசேஷமும் இல்லாத சாதாரண நாள். பொங்கல், தீபாவளிக்கு நடக்கும் பிசினஸ் அன்னிக்கு நடந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது!''

''அப்ப எனக்கு புட்டபர்த்தி போகணுங்கற ஆர்வம் அதிகமாயிடுச்சு. மனைவிகிட்ட சொல்லிட்டு, பஸ் ஏறிட் டேன். புட்டபர்த்தியில் இறங்கி, வளாகத் துக்குள் நுழைந்தேன். என் மனசுக்குள் ஆயிரம் கேள்விகள். அங்கே எதிர்படற வங்க எல்லாருமே ரொம்ப பக்தியா பேசி னாங்க. ஒரே நெகடிவ் ஆசாமி நான்தான். பாபாவைப் புரியாத ஆளா நான் மட்டும் தான் அந்தக் கூட்டத்தில் இருந்தேன்.

இரவு தங்கினேன். நிறைய அற்புதங் களைக் கேள்விப்பட்டேன். ஆனாலும் எனக்கு எதிலும் நம்பிக்கை வரவில்லை. எப்போது படுத்தேனோ தெரியவில்லை. மறுநாள் காலை மிகச் சரியாக நான்கு மணிக்கு யாரோ எழுப்பிவிட்டது போல, விழிப்பு வந்துவிட்டது. நகர சங்கீர்த்தனம், தரிசனம், எல்லாம் நல்லபடியாக முடிந்தது. அன்று இரவே ஊருக்குத் திரும்பிவிட் டேன்.

''பஸ்ஸில் எனக்குப் பக்கத்தில் ஒருவர் அமர்ந்திருந்தார். தூய வெண்ணிற ஆடையில் மிகவும் மரியாதைக்குரிய வராகத் தெரிந்தார். அவர்தான்

எனக்கு எல்லாமே என் கணவர்தான்! என் கணவருக்கோ எல்லாமே ஸ்ரீபகவான்தான்! அதனால் எனக்கும் பகவான் என்றால் அப்படியொரு தீவிர பக்தி! சுவாமியின் தரிசனம் கிட்டும்போதெல்லாம், எனக்கு உலகமே மறந்து போகும். மனம் நிறைந்து மகிழ்ச்சியில் திளைக்கும்.

எங்கள் வீட்டுப் பிரதான ஹாலில், பெரிய பாபா படம் வைத்துப் பூஜிக்கிறோம். எனது அண்ணன் மகன் ஹரிக்கு, பத்து வயதாக இருந்தபோது, இரண்டாவது மாடியிலிருந்து தவறி விழுந்து விட்டான். அவன் விழுந்த இடமோ, கல்லும் முள்ளுமாக புதர் மண்டிக்கிடந்தது. அவன் ஸ்ரீ பாபா படத்துக்கு நேரே உள்ள ஜன்னல் வழியாக விழுந் ததாலோ என்னவோ அவன் உடம்பில் ஒரு சிராய்ப்புகூட இல்லை!

''அத்தை... பூ மாதிரி எலும்பே இல்லாத இரண்டு கைகள் என்னைத் தாங்கி பிடிச்சது... யாரோ என்னை 'கேச்' பிடிச்சுட்டாங்க!'' என்று அந்தச் சிறுவன் சொன்னபோது, மெய்ச்சிலிர்த்துப் போனேன்'' என்கிறார் பார்வதி மனோஹரன்.

முதலில் பேச்சு கொடுத்தார்.

''நீ என்னப்பா பண்றே?'' என்றார்.

''நான் காஞ்சிபுரம் காந்தி ரோடுல, எஸ்.டி.டி.பூத், மேட்சிங் கட்பீஸ் கடை வெச்சுருக்கேன்!'' என்றேன்.

''நல்ல இடமாச்சே! ஏம்பா, நீ பட்டுச்சேலை விக்கலாமே!'' என்றார்.

''விக்கலாம்தான். ஆனால் கேபிடல் கிடையாதே!'' என்றேன்.

''நான் ஏற்பாடு பண்றேன். நாளைக்கு பன்னிரண்டு மணிக்கு நம்ப ஆள் ஒருத்தன் உன்னைத் தேடி வரு வான்!'' என்றார்.

எனக்கு பெரிய நம்பிக்கை இருக்கவில்லை என்ப தால், ''சரிங்க!'' என்று சொல்லிவிட்டு, தூங்கி விட் டேன். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தபோது, வைட் அண்ட் வைட் ஆசாமி அருகில் இருக்கவில்லை.

''மறுநாள், சரியாக நண்பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு மனிதர் வந்து நின்றார். ஐந்து லட்ச ரூபாய்க்கு புடைவைகளை அடுக்கி வைத்துவிட்டுப் போய்விட்டார்.

அவற்றுக்கு ஒரு பைசா கொடுக்கவில்லை. ஏதாவது புடைவை விற்றால், அதற்குண்டான கமிஷனை மட்டும் எடுத்துக் கொள்ளலாம் என்று ஏற்பாடு. அந்தச் சமயத்தில் என் மனைவிக்கு திடீரென்று எட்டாவது மாதத்திலேயே பிரசவ வலி எடுத்தது. சென்னையில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தோம். சிக்கலான ஆபரேஷன். குறைப்பிரவசத்தில் எனக்கு மகள் பிறந்தாள்.

மருத்துவமனை செலவுக்குப்



* குடும்பத்துடன் மனோஹரன்

படங்கள் உதவி : கே.ஆர்.நாகராஜன்



பணம் வேண்டுமே. எனக்குக் கவலையாகி விட்டது. எதையாவது போட்டுப் புரட்டி, ஐம்பதாயிரம் ரூபாயைக் கொண்டு வரச் சொல்லி, என் மைத்துனருக்கு ஃபோன் செய்தேன்.

ஆனால், அவரோ, ''மாமா... எங்கேயும் புரட்ட வேண்டாம். நம்ப கடையிலேயே பிசினெஸ் ஆன பணம் கல்லாவுல இருக்கு!''என்றார்.

''அவ்வளவு பணமா? எப்படி?'' என்றேன்.

''எல்லா புடைவையும் வித்துப் போச்சு!'' என்றாரே பார்க்கலாம்!

என்னால் என் காதுகளையே நம்ப முடியவில்லை! இது எப்படி சாத்தியம்?

என்னையுமறியாமல் என் மனம், ஸ்ரீ சத்ய சாயி பாபாவை நோக்கி செல்ல ஆரம்பித்தது அந்தத் தருணத்தில்தான்!

''**கா**ஞ்சிபுரத்தில் சின்ன கட்பீஸ் கடை வைத்திருந்த உங்களுக்கு இப்போது, சென்னை, பெங்களூருவில் பெரிய பட்டுப் புடைவைக் கடைகள் உள்ளன. நீங்கள் பெரும் பணக்காரர் ஆகிவிட்டீர்கள். அதனால் ஸ்ரீ பாபாவை நம்புகிறீர்கள்... இல்லையா?'' என்று நீங்கள் என்னைக் கேட்கலாம்.

இது என்னுடைய லௌகீகமான ஆசைகளைப் பூர்த்தி செய்ய பகவான் செய்த அனுக்ரஹம். ஆனால், உள்முகமாக, என்னையும் என் குடும்பத்தாரையும் நிஜமான ஆனந்தம் கொள்ள வைத்ததைதான் என்னை பெருமிதம் கொள்ள வைக்கும் மாற்றமாக நான் கருதுகிறேன்.

காஞ்சிபுரத்தின் ஒரு பிரபல வங்கியின் மேலாளராக இருந்த வைத்தீஸ்வரன் எனக்கு நண்பரானார். அவரும் சாயி பக்தர்.

''ஸார்... எங்கள் அண்ணன் டாக்டர் சுந்தர்ராஜன் அண்ணா நகரில் இருக்கிறார். அவரது வீட்டில் நடக்கும் சாயி பஜன்ஸில் நீங்கள் அவசியம் கலந்து கொள்ளணும்!'' என்று அழைத்துச் சென்றார்.

சாயி நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட ஆரம்பித்த பிறகு, எனக்குள் சாந்தமும், இறைப்பூர்வமான அமைதியும் நிலவுவதை என்னால் உணர முடிந்தது.

1999-ல் எங்கள் வீட்டு கிரஹப் பிரவேசம் நடந்தது. ஆசி வழங்க வந்திருந்த காஞ்சிபுரம் மாவட்ட சாய் சமிதி தலைவர் திரு சாய் வரதனிடம், ''எங்க வீட்டில் பஜனை பண்ணணுமே!'' என்று கேட்டேன்.

''அதற்கென்ன... இந்த வாரமே செஞ்சுட்டா போச்சு!'' என்று ஏற்பாடு செய்து விட்டார்.

அதற்குப் பிறகு எந்நேரமும், சாய்நாமம் மனத்திலே ஓடிக்கொண்டிருக்க, உடலுக்கும் மனசுக்கும் தேவையான எனர்ஜி தானாகவே உருவாகி, நானே ஆனந்தமயமாகி விட்டேன்!

நல்லது வந்தாலும் பெரிதாக சந்தோஷப்படுவதில்லை. கெட்டது நடந்தாலும் கலங்குவதில்லை. என் வியாபாரத்தை, என் குடும்பத்தை பாபா கவனித்துக் கொள்கிறார். எனக்கு எந்த எதிர்பார்ப்புமில்லை. ஏழைகளுக்கும் கோயில்களுக்கும் என்னால் இயன்ற உதவிகளை செய்து நிறைவாக இருக்கிறேன்.

சென்னையில் உள்ள 'சுந்தர'த்துக்கு 'பை' போல ஏதாவது தேவை என்றால்,

அவற்றைத் தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள், காஞ்சி புரம் சாய் வரதனிடமிருந்து உடனே வைட்ஃபீல்டுக்கு வரச் சொல்லி ஒரு ஃபோன்.

என் மகள் பூப்படைந்த மூன்றாம் நாள் அது என்பதால் என் மனைவிக்குப் பெரும் தயக்கம். ஆனால் விடாமல் அழைப்பு வரவே, கிளம்பிவிட்டோம். காலையில் தரிசனம் முடிந்ததும் கிளம்பப் பார்த்தோம். காஞ்சி சாய் வரதன் விடவே இல்லை.

''சுவாமி, சாயங்கால ஆரத்திக்கு உங்களைக் கண்டிப்பாக இருக்கச் சொன்னார்'' என்று சொல்லிவிட்டார். மாலை நேர ஆர்த்தியின்போது, திடீரென்று என்னை அழைத்து என் கையில் மனோரஞ்சிதப் பூச் செண்டு ஒன்றைக் கொடுத்து, சுவாமியிடம் தரச் சொன்னார்கள்.

திக்குமுக்காடிப் போன நான், பூங்கொத்தை அவரிடம் நீட்ட, அவரோ அதை அன்புடன் வாங்கிக்கொண்டு, என் சட்டைப் பையிலே வைத்து என் தலை மீது கையை வைத்து ஆசி புரிந்தார். என்ன பாக்கியம்? எத்தனை பேறு? எங்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

2006ம் வருஷம் புட்டபர்த்தியில் வரலக்ஷ்மி பூஜையை எப்போதும் போல சிறப்பாக நடத்த ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. 2000 பட்டுப் புடைவைகளைத் தயாரித்துக் கொடுக்கும் பணி எனக்குத் தரப்பட்டிருந்தது. தறிகளில் புடைவைகளை நெய்து கொண்டிருந்த சமயம், ஊரெங்கும் சிக்குன் குனியா நோய் தாக்கியது. எவ்வளவு முயற்சி செய்தும் எங்களால் 1800 புடைவைகளை மட்டுமே நெய்ய முடிந்தது.



விடிந்தால் பூஜை. ஒருங்கிணைப்பாளருக்கோ ஒரே டென்ஷன். இருநூறு சேலைகள் குறைகின்றன என்ற தகவல் சுவாமிக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

''எல்லாம் வரும்; நிம்மதியாகத் தூங்கு!'' என்று பதில் சொல்லியிருக்கிறார் ஸ்ரீ பாபா.

இரவோடு இரவாகப் புடைவைகள் தயாராயின. விடியற்காலை நாலரை மணிக்கு பெங்களூர் அருகே இருக்கும் 'அத்திபெல்லே' செக் போஸ்டில் ஒப்பந்தக்காரர் கொண்டு வந்து கொடுத்த பார்சலுடன், நான் புட்டபர்த்திக்கு காரில் விரைந்தேன். எத்தனை வேகமாகப் பறந்தாலும் மூன்றரை மணி நேரத்துக்குக் குறையாமல் ஆகும். ஆனால், அன்று காலை ஆறுமணிக்கெல்லாம் புட்டபர்த்தி அடைந்துவிட்டேன். (கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரத்தில்). அதற்குப்பின் எத்தனையோ முறை நானும் என் டிரைவரும் அத்திபெல்லேயிலிருந்து எவ்வளவோ விரைவாக ஓட்டி புட்டபர்த்தி சென்றும் ஒருமுறைகூட ஒன்றரை மணி நேரத்துக்குள் போய்ச்சேர முடிந்ததில்லை.

என் ஆதங்கம் அறிந்து, பகவான் சாலையின் தூரத்தையே குறைத்துவிட்டாரா என்ன? இன்றும் விளங்காத ஆச்சரியம் தான்!

(அருள் பெருகும்)

அடுத்த இதழில்
டாக்டர் ஜி.சாய்ரமணனின்
அனுபவங்கள்



வாசகர் யோசனை

பயணிகளைப் பதற வைக்கலாமா?

அக்டோபர் 28ம் தேதி இரவு 9.40க்கு வரவேண்டிய மங்களூர் எக்ஸ்பிரஸ் முப்பது நிமிடங்கள் தாமதமாக 10.10க்கு (கோவை) போத்தனூர் ஸ்டேஷன் வந்தடைந்தது.

தீபாவளி கூட்டம் அலைமோதியது. ரயில் வந்ததும் பயணிகள் அவசர அவசரமாக ஒருவரையொருவர் முந்திக் கொண்டு ஏறவும் இறங்கவும் அதிக சிரமமாகிவிட்டது. இது இப்படியிருக்க, ஒரு தந்தையும் மகளும் இதில் மாட்டிக் கொண்டு, எப்படியோ மகள் வண்டியில் ஏறிவிட்டாள். தந்தை ஏறுவதற்குள் ரயில் புறப்பட்டுவிட்டது. ரயில் வந்து இரண்டே நிமிடத்தில் புறப்பட்டுவிட்டது. தடுமாறியபடி தந்தை பிளாட்பாரத்தில் விழுந்து விட்டார். இதைப் பார்த்த மகள் பதறியபடியே வீலென்று அலறிக் கொண்டு மயங்கி வண்டியினுள் விழுந்துவிட்டாள்.

எல்லோருக்கும் ஒரே பதற்றம். அங்குள்ள ஒரு பயணி அபாய சங்கிலியை இழுத்து வண்டியை நிறுத்திவிட்டார். அப்புறம் மகள் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிந்தது. தந்தையையும் வண்டியில் ஏற்றிவிட்டார்கள்.

இப்போது பத்து நிமிடங்கள் கழித்துதான் வண்டி புறப்பட்டது. இதையே முதலில் எல்லோரும் ஏறியபின் வண்டியை புறப்பட செய்திருக்கலாமல்லவா?

இதை இரயில்வே நிர்வாகம் கவனிக்குமா?

- கமலா ராஜசேகரன், பொள்ளாச்சி



விருந்தினருக்கு உணவு பரிமாறும்போது ஒரு ப்ளாஸ்டிக் கவரை முன்கூட்டியே கொடுத்துவிட்டால், ஸ்வீட், வாழைப்பழம் போன்றவற்றை வீணாக்காமல் எடுத்து கவரில் வைத்துக்கொள்ளலாமே!

- எ.வாராகி, திருவத்திபுரம்





தேவையானவை

கம்பி - 1 சிறியது 1 பெரியது
ப்ளாஸ்டிக் பூ - 3
பச்சை நிற பசையுள்ள டேப் - தேவைக்கு
நூல் - விருப்பமான கலர்
வெள்ளைப் பசை - தேவைக்கு ஏற்ப
மணி - 1 பெரியது
உல்லன் நூல் - கறுப்பு (சிறியது)


பொம்மை கீ செயின்!

செய்முறை

முதலில் நீளமான பெரிய கம்பியை இரண்டாக மடித்துக் கொள்ளவும். அதனுள் மற்றொரு கம்பியை நுழைத்து தலைபோல் செய்யவும். கீழே வரும் கம்பியை இடுப்புப் பாகம் போல் இரண்டு தடவை முறுக்கி விடவும்.

கீழ் பகுதியை கால் போல் சிறிது அகற்றி மடக்கி விடவும். அது பிரிந்து விடாமல் இருக்க பச்சை நிற டேப் கொண்டு நன்றாகச் சுற்றவும். கால் வழியாக ஒரு பூவை இடுப்பு போல் உள்ள பகுதிக்குக் கொண்டு வரவும்.

கை, இடுப்பு, கால் போன்ற இடங்களில் தேவையான விருப்பக் கலரில் நூலை சுற்றி ஒட்டி விடவும். மணியின் மீது கறுப்பு நிற பெயின்டால் கண், மூக்கு, உதடு வரைந்து காய விடவும். முகம் வரைந்த அந்த பெரிய மணியை தலைப் பகுதியில் பொருத்தவும்.





அதன் தலைப் பகுதியில் ஒரு ப்ளாஸ்டிக் பூவை, தொப்பி போல் வைக்க வேண்டும். முடி அலங்காரம் செய்ய வேண்டும். தலைப் பகுதியில் கம்பி முனை இருக்கும். அதனுடன் சாவிக் கொத்தின் வளையத்தை இணைக்கவும். இப்போது அழகான சாவிக் கொத்து தயார்.

- சி.ஷில்பா,
சென்னை

படங்கள் : **ஸ்ரீஹரி**

மாலையில் வீடு திரும்பும் பொழுது ஆச்சரியம் காத்திருந்தது. முத்துச் சுடர் போல ஒளி வீசிக்கொண்டு குட்டிக் குட்டியாக அகல் விளக்குகள், ஊதுபத்தி, சாம்பிராணி மணம்... தம்பிக்கும் செல்விக்கும் உடல் சிலிர்த்துப் போயிற்று. கிராமத்துக்கே போய்விட்ட மாதிரி இருந்தது.

கிராமத்தில் தாத்தா வீடு ஒரு கவிதை நரசிங்கபுரம் கிராமம் அழகா, வசிஷ்ட நதி அழகா, வால்மீகி குன்றழகா, பெரியாண்டவர் சிலையழகா, திப்புசுல்தான் கோட்டை அழகா என்று பட்டி மன்றம் ஸ்டைலில் கேட்டிருந்தால் தாத்தா பொக்கைவாய் சிரிப்பு அழகு, நரைமுடிப் பாட்டியின் மஞ்சள் முகச் சிரிப்பழகு என்று சொல்வான் தம்பி.

போன வருடம் தனது எண்பத்தி நாலாவது வயதில் தாத்தா இறந்து போனார். பாட்டி தனியேதான் இருந்தாள். அவள் ஜலதாரையில் விழுந்து அடி



பட்டுக்கொண்ட பொழுது ஊர்காரர்கள் பிடிபிடி என்று பிடித்துக்கொண்டார்கள். வேறுவழி இல்லாமல் அம்மாவை அழைத்து வந்துவிட்டான் வேலு. பாட்டிக்குப் பிடித்தது சனி. வேலு சாப்பிட மட்டும் தான் மனைவியின் முன்னால் வாயைத் திறப்பான்.

போன மாதம் வீட்டை விற்க கிராமத்துக்குப் போனார்கள் அம்மாவும் அப்பாவும். வந்ததும் வெடி குண்டைத் தூக்கிப் போட்டாள் அம்மா. ''மந்திரமூர்த்தி வீட்டிலே குழந்தை பிறந்திருக்கு. சீக்காளிக் குழந்தையாம். மரகதம்மாவைப் போல வங்க. ஆயிரம் காணி நிலத்தை அரைக் காணியாக்கின உங்களுக்கு அவங்களைப் பார்த்துப் பொறாமை. அவங்க வீட்டில் இருக்கும்பொழுதாவது கெட்டிக்காரத்தனத்தைக் கத்துக்கங்க.''

பாட்டி குன்றிப் போனாள். 'என் காது படவே அவுகளையும் நம்ப குலத்தையும் கேவலமாகப் பேசுவாங்க. ஊரிலேயும் கேவலம்' என்று வருத்தம்.

அம்மாவும் அப்பாவும் திருச்சிக்கு ஒரு திருமணத்துக்குப் போயிருக்கிறார்கள். நாளை ஞாயிறு. திங்கள் காலை வந்து விடுவார்கள். புதன் கிழமை ஆயாவைக் கொண்டு போய் நரசிங்கபுரத்தில் விடப்

ஜெயித்தவள்!

வர்மம் தட்றவங்க, குடல் ஏத்தம் சரி செய்யறவங்க, தோஷம் பார்க்கறவங்க யார் இருக்காங்க? அவங்க குளிப்பாட்டிக் குழந்தையை வளர்த்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்னு சொல்லிச் சொல்லிக் கேட்டாங்க அத்தை. உங்களை அனுப்பிவைப்பதாகச் சொல்லிவிட்டோம்.'

பாட்டி திகிலில் உறைந்து போனாள். ''அவங்க நம்ப வீட்டிலே சேவகம் செஞ்சவங்க. பண்ணையில் வேலை செய்து, அப்பாவை ஏமாத்தி ஏமாத்தியே நிலத்தையெல்லாம் ஆர்ஜிதம் செய்துக்கிட்டாங்க. நம்ப குடும்பத்தைப் பார்த்தாலே அவங்களுக்கு எக்காளம் வேலு.'' பாட்டி அழுதாள்.

அப்பா 'திருதிரு' என விழித்தார்.

''அவங்க பிழைக்கத் தெரிஞ்ச போகிறார்கள்.

வீடே மணத்துக் கொட்டியது. சுடச்சுட பஜ்ஜியும் சட்னியும், நெய் மணக்கக் கேசரியும் வந்தன. அம்மா இதையெல்லாம் செய்ய விட மாட்டாள். வயிறு வழியே நெஞ்சில் இடம் பிடித்து விடுவாள் என்ற அச்சம்.

''ஆயா, சூப்பர்'' என்று இருவரும் ஒரே குரலில் கத்தினார்கள்.

குக்கர் விசில் சப்தம் கேட்டது. ஆயா உள்ளே சென்றாள் அடுப்பை அணைக்க. ''இப்ப எதுக்குக் குக்கர் வைக்குது? நம்ம வீட்டிலே ராத்திரி டிஃபன் தானே?''

''செல்வி, தயவுசெய்து ஆயா என்ன செய்தாலும் தலையிடாதே. நாளை ஒரு நாள் எவ்வளவு முடியுமோ

சிறுகதை

அவ்வளவு சந்தோஷமாக வச்சுப்போம். சரியா... பாவம் அது.''

செல்வியும் தலையை ஆட்டினாள்.

இரவு சோறு போடவில்லை ஆயா. சுடச்சுட பூரி, கிழங்கு. சமையலறைக்குப் போன செல்வி, சோற்றில் ஆயா தண்ணீர் விட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்துக் குழம்பிப் போனாள். கிராமத்தைப் போல பழைய சோறு சாப்பிட ஆசை போலிருக்கிறது.

காலையில் கண் விழித்ததும் ஆயா தலை நிறைய நல்லெண்ணெய் வழிய வழிய வைத்துக்கொண்டு வளைய வந்ததைப் பார்த்து ஆச்சரியமாக இருந்தது. ஆயா மனத்தில் என்னென்ன சின்னச் சின்ன ஆசைகளோ என்னமோ!

ஆப்பமும் தேங்காய்ப்பாலும் வயிறும் மனமும் நிரம்பி வழிந்தன. ஆனால் ஆயா தட்டு நிறைய பழைய சோறும் நாரத்தை ஊறுகாயும் சாப்பிட்டது.

கடைக்குப் போய் இளநீரும், தர்பூஸ் பழமும், கிரிணிப் பழங்களும் வாங்கித் தானும் சாப்பிட்டு, குழந்தைகளுக்கும் கொடுத்தாள்.

வாசலில் அவள் இரண்டு மூன்று குச்சி ஐஸ்க்ரீம் வாங்கிச் சாப்பிடுவதைப் பார்த்து இரண்டு பேருக்கும் ஒரே சிரிப்பு. பாஸ்கின்ஸ் அண்ட் ராபின்சனிலிருந்து ஐஸ்க்ரீம் வாங்கித் தந்தான் தம்பி. ஆயா கண்களில் நீர் ததும்பியது.

மதியம், ''நான் சமைக்கிறேன் ஆயா. இல்லாவிட்டால் சாப்பாடு சாப்பிட ஹோட்டல் போகலாம்'' என்று கெஞ்சிப் பார்த்தாள் செல்வி. ஆயா பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

அயிரை மீன் குழம்பும், எண்ணெய்க் கத்திரிக்காய், ஜவ்வரிசிப் பாயசம். ''இப்படி சமைச்சுப் போட்டே, யானை மாதிரி ஆயிடுவோம்.''

''தம்பி, நமக்கு இவ்வளவு செய்து போட்டு விட்டுத் திரும்பவும் அது பழைய



சோறு சாப்பிடுது. இளநீரு, ஜவ்வரிசிப் பாயசம், ஐஸ் வாட்டர் குடிச்சுது.''

ஆயா களைத்திருந்தாள்.

''செல்வி... தாத்தாவுக்கு மிஸ்ஸியம்மா பிடிக்கும் என்று சொல்லிக் கொண்டே இருக்கும். நான் போய் டி.வி.டி.எடுத்து வருகிறேன்.'' கடையில் தோழன் நவீனைப் பார்த்தான். நவீனுக்கு ஆயாவைப் பற்றி எல்லாம் தெரியும். ''ஏய் தம்பி. எங்க தாத்தா எச்சூரிலிருந்து நுங்கு கொண்டு வந்து கொடுத்தார். ஆயாவுக்குக் கொடு. கிராமத்துக்காரங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்.''

தம்பி வந்து நுங்கைக் கொடுக்க ஆவலோடு வாங்கிப் பனை ஓலையைப் பிரித்து கண்களில் நீர் மல்க ஆவலோடு சாப்பிட்டாள்.

''ஆயா, சினிமா பார்க்க வந்து உட்காரு.''

''கொஞ்ச நேரத்திலே வந்து விடுகிறேன்'' என்றவள் சற்று நேரத்திற்குப் பிறகு இரண்டு தட்டுக்களைக் கொடுத்து விட்டு, சோர்வோடு அமர்ந்தாள்.

''என்ன இது?''

''பொரிவிளங்காய் உருண்டை. பனை ஓலைக் கொழுக்கட்டை. நீதான் நுங்கு கட்டி கிராமத்துப் பனை ஓலை கொண்டு வந்து தந்தாயே. உருண்டையைத் தூக்குச் சட்டியில் வைச்சிருக்கேன். ஓலைக் கொழுக்கட்டையை ஐஸ் பெட்டியில் வச்சிருக்கேன். உங்கப்பனுக்கு உசிரு.

மலர் போல மனம்

மலரைப்போல இருங்கள். ஒருவர் ஒரு மலரைப்போல மாற முயற்சி செய்ய வேண்டும். ஒளிவு மறைவின்றி, உண்மை யாக, சமநிலை கொண்டு தாராள மனதுடன், அன்புடன் இருக்க முயல வேண்டும்.

- ஸ்ரீ அன்னை

தகவல்: டி.பூபதிராவ்,
காஞ்சிபுரம்

நாளைக்குப் பாரு ஆசை ஆசையாய் தின்பான்.''

'கண்களைக் குத்தி விட்டாயே. உன் கை வலிக்கிறதா?' என்று கேட்கும் தாய்மையின் பேதமை. தம்பியின் கண்கள் கலங்கின. படத்தைப் போட்டான்.

சாரங்கபாணி, 'வெள்ளையப்பனைத் தள்ளு' என்று சொன்ன பொழுதெல்லாம் விழுந்து விழுந்து சிறு குழந்தையைப் போலச் சிரித்தாள். வெள்ளைத் தலைமுடி மின்ன அவள் வசீகரமாக இருந்தாள். அவள் பொக்கை வாய்ச் சிரிப்பை செல்வி தன் கேமராக் கண்களால் நிரந்தரமாகப் பதிவு செய்துகொண்டாள்.

''இந்தப் படம் பார்த்த பிறகு வெள்ளையப்பனைத் தள்ளு, வெள்ளையப்பனைத் தள்ளு என்று இடுப்பைக் கிள்ளுவாஹ'' என்று இனிய சொக்க வைக்கும் நினைவுகளில் மூழ்கி கன்னம் சிவக்கச் சிரித்தாள்.

''ஆமாம் ஆச்சி. இவ்வளவு நிலம் இருந்தது என்கிறார்கள்? ஊதாரித்தனமாக அழித்து விட்டாரா?''

''இல்ல தம்பி. அவரு வெகுளி. கேட்டவங்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்துடுவாரு. மந்திரமூர்த்தி போல ஆட்கள் அவரை ஏமாத்திட்டாங்க.''

''கவலைப்படாதே... எல்லாவற்றையும் நான் திருப்பிடறேன்.''

ஆச்சி பெருமையோடு பேரனைப் பார்த்தாள்.

''செல்வி, அந்த ஹிந்திப் படம் பேரு என்ன? ஹா கயாமத் சே கயாமத் தக். அமீர்கான் - ஜூஹி சாவ்லா நடித்தது. கிராமத்துக்குப் போய் நம் வீட்டில் இருப்போம். மந்திரமூர்த்திக்கு அழகான பொண்ணு இருக்குதாம். என்னைப் பார்த்து லவ்விடுமாம். அத, கண்ணாலம் கட்டிக்கிட்டு நம்ப சொத்தை எல்லாம் பிடுங்கிடறேன்.''

பாட்டி வருத்தத்தில் உறைந்து போனாள். ''வேண்டாம் தம்பி. பணம் இருக்கலாம். குணமில்லாத குடும்பம்.''

''அப்படிப்பட்ட குடும்பம் தான் தேவை. அம்மா அப்பாவுக்குப் பாடம் கற்பிக்க வேண்டாமா?''

''அப்படிச் சொல்லாதே தம்பி. வேலு அவங்கப்பாவைப் போல சூதுவாது அறியாப் பிள்ளை. அம்மாவுக்கு விவரம் கொஞ்சம் பத்தாது. அவ்வளவுதான். வயதாகிப் போனால் எல்லாம் நல்லபடியாக ஆகிவிடும். தம்பி... வயசான காலத்திலே எம் புள்ளைய நல்லாப் பாத்துக்கப்பா'' ஆயா கண்களில் நீர் வழிந்தது.

தம்பி அதிர்ந்து போனான். ''செல்வி, அப்பச்சியை கிராமத்துக்கு அனுப்பக் கூடாது'' திடமாகச் சொன்னான்.

''என்ன செய்வாய் நீ?''

''ஆச்சி கிராமத்துக்குப் போனால் நான் ஹாஸ்டலுக்குப் போறேன்னு பிடிவாதம் செய்யப் போறேன்.''

செல்வி பாட்டியைத் திரும்பிப் பார்த்தாள். அப்படியே தூங்கிப் போயிருந்தாள். செல்வி லேசாகத் தொட்டு எழுப்பினாள். ''வர்றேங்க வர்றேங்க'' என்று பதறிப் போய் எழுந்தாள். தாத்தாவின் நினைவிலேயே உறங்கி இருப்பாள் போலும்.

''பாட்டி... பாட்டி ஏன் உன் உடம்பு சுடுது?''

''ஒண்ணுமில்லே. என் உடம்பு எப்பொழுதுமே கதகதன்னு இருக்கும். தாத்தா சொல்லுவாங்க.'' முகத்தில்

செம்மை. பழைய இனிய சொக்க வைக்கும் நினைவுகளின் ஊர்கோலம்.

''எது எப்படியானாலும் சரி. ராவுக்கு நீ சமைக்காதே. மதியத்து மீன் குழம்பு இருக்குது. போதும்.''

இருந்தாலும் கண்ட வத்தல் பொரித்து வைத்தாள்.

''நீ எதுக்கு இந்தக் கார்த்திகை மாசக் குளிரிலே ராவுக்குத் தண்ணி விட்டு பழைய சோறு சாப்பிடறே?'' செல்வி சண்டை பிடித்தாள். சாப்பிட்ட பின் பால்கனியில் தாத்தாவின் சாய்வு நாற்காலியில் அயர்வோடு உட்கார்ந்து கொண்டாள்.

''சிலுசிலுன்னு காத்தடிக்குது. எதுக்கு அங்கே உட்கார்ந்திருக்கே?''

''இல்லை தம்பி... கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போய் படுத்துக்கறேன்.''

இருவரும் சற்று நேரம் இன்டர்நெட்டில் சாட்டிங் செய்யப் போனார்கள். பிறகு அப்படியே உறங்கிப் போனார்கள்.

காலையில் ஆச்சி போய்விட்டிருந்தாள். தாத்தா கூப்பிட்டிருக்க வேண்டும் தூக்கத்தில். ''வர்றேங்க... வர்றேங்க...'' என்று போயிருப்பாள் போலும். முகத்தில் குங்குமப்பூ எல்லையில்லா அழகோடு பூத்து உறைந்திருந்தது.

ரயிலிருந்து வந்த அப்பா அம்மா அதிர்ந்து போனார்கள். நவீன் வந்தான். ''நேற்று நல்லாயிருந்தது. நீ கொடுத்த நுங்கு முச்சூடும் சாப்பிட்டது.''

''என்ன அவ்வளவு நுங்கையுமா?'' நவீன் அதிர்ந்தான்.

''ஆமாம்.'' தம்பி முதல் நாள் நடந்ததை எல்லாம் விபரமாகச் சொன்னான்.

''ஐயோ தம்பி... ஏமாந்துட்டியே... கிராமங்களில், இழுத்துக்கிட்டுக் கிடக்கிற வயோதிகர்களுக்கு நல்லெண்ணை தேய்த்துப் பச்சைத் தண்ணீரில் குளிக்கவச்சு இளநீர் பழையது போட்டு இரவில் பனியில் படுக்க வைத்து விடுவார்கள். 'பொட்' என்று போய்விடும். கருணைக் கொலை. ஆயா அழகாக அதைத் தற்கொலையாகச் செய்து கொண்டிருக்கிறது. அது கவரிமான். அது போய் மூர்த்தி வீட்டில் வேலை செய்யுமா?''

தம்பி நொறுங்கிப் போனான். அப்பா ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

''அப்பா, உங்களுக்குப் பிடிக்குமேனு தூக்குச் சட்டியில் பொரிவிளங்காய் உருண்டையும், ஓலைக் கொழுக்கட்டையும் செய்து வைத்திருக்குது ஆயா. நல்லா சாப்பிடுங்க'' என்றான் வெறுப்புடன்.

அம்மா உள்ளேயிருந்து கவலையுடன் வந்தாள். ''என்னங்க மூர்த்திகிட்ட பதினைஞ்சு ஆயிரம் ரூபாய் வாங்கிட்டமே. இப்ப என்ன செய்யறது?''

''உங்கம்மா சும்மாத்தானே இருக்குது. அனுப்பி வை'' என்று நிதானமாகச் சொன்னான் வேலு.

பாட்டி புன்னகை செய்வது போல இருந்தது தம்பிக்கு.

''ஆயா, நீ ஜெயிச்சுட்டே!''



தலைமுடி கொட்டும் நிலையில் உள்ளவர்கள், குளிப்பதற்கு முன் தேங்காய்ப்பாலை நன்றாகத் தலையில் தேய்த்து, இரண்டு மணி நேரம் கழித்து முடியை அலசினால் தலைமுடி கொட்டாது.

- வி.லோகநாதன், கடலூர்



சொர்க்க வாசல் திறந்தாச்சு!

திருத்தல யாத்திரை என்றால் அங்கே நடைபெறும் திருவிழாவில் கலந்து கொள்ளவோ, அதைப் பற்றி விவரங்களைத் தெரிந்து கொள்ளவோ ஆவல் ஏற்படும். திருவிழாவைச் சொன்னா ஊரைக் கண்டுபிடிக்க முடியுமா - பாருங்களேன்.

எடுத்துக்காட்டு : அறுபத்தி மூவர் உற்சவம் என்றால் (சென்னை) திருமயிலை என்போம்.

1. மகர ஜோதி
2. ஆடி அமாவாசை
3. அழகர் ஆற்றில் இறங்குகிறார்
4. சூரசம்ஹாரம் நிகழ்கிறது
5. அம்பாள் ஆடித் தபசில் இருக்கிறாள்
6. மலை மீது தீபம் கண்கொள்ளாக் காட்சி
7. மார்கழிக் குளிரில் திருவாதிரைக் களி உண்ண வாருங்கள்
8. சொர்க்க வாசல் திறந்தாச்சு
9. சிவராத்திரி - பரமேஸ்வரன் நேரில் வருகிறார்
10. மாசி பௌர்ணமி எல்லா (சிவ-விஷ்ணு) ஆலயங்களிலும் தீர்த்தவாரி
11. துலா மாதம் இறைவன் காவிரியில் தீர்த்தவாரி
12. புரட்டாசி மாதம் சக்ரத்தாழ்வார் ஸ்நானம் புஷ்கரணியில்

தொகுத்தவர் : **எஸ். நாராயண சர்மா, வடபழனி.**

விடை :

1. சபரிமலை - ஐயப்பன் தரிசனம்
2. பாணதீர்த்தம்- பாபநாசம்
3. மதுரை - சித்திரா பௌர்ணமி
4. கந்தசஷ்டி - திருச்செந்தூர்
5. சங்கரன்கோவில் - கோமதி அம்மன்
6. திருவண்ணாமலை - திருக்கார்த்திகை
7. சிதம்பரம் - நடராஜர்
8. ஸ்ரீரங்கம் - வைகுண்ட ஏகாதசி
9. இராமேஸ்வரம் ராமநாத ஸ்வாமி திருத்தேர்
10. மாசி மகம் - கும்பகோணம்
11. மயிலாடுதுறை - மயூரநாதர் திருவிழா
12. திருப்பதி- திருமலை பிரம்மோற்சவம்



வினாடி வினா


Himalaya
Kajal
Himalaya

பாட்டி வைத்தியம்

தேவையான பொருட்கள்:

வெள்ளை கரிசலாங் கண்ணி இலைச் சாறு - 2 தம்ளர்

பசும்பால் - 2 தம்ளர்,

எண்ணெய் தேய்த்து குளிக்க மட்டும் உபயோகித்தால் நல்லெண்ணெய் - 2 தம்ளர்

தினமும் தேய்த்துக் கொள்வதென்றால் தேங்காய் எண்ணெய் - 2 தம்ளர்,

அரைத்த சந்தனம் - 100 கிராம்

சுக்கு - 50 கிராம்

செய்முறை: சுக்கை மட்டும் முதல் நாள் இரவே தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலை நன்கு அரைத்துக் கொள்ளவும். அடி கனமான வாணலியில் கரிசலாங்கண்ணி சாறு, பசும்பால், தேங்காய் எண்ணெய் (அ) நல்லெண்ணெய், அரைத்த சந்தனம், அரைத்த சுக்கு விழுது எல்லாவற்றையும் சேர்த்து கலந்துவிட்டு, அடுப்பை சிம்மில் வைத்துக் காய்ச்சவும். நன்கு கொதித்து எண்ணெய் பிரிந்து சத்தம் அடங்கும் வரை காய்ச்சவும்.

பயன்கள்: முடி உதிராது. கருமையாக வளரும். பொடுகு வராது. கண்களுக்கும் குளிர்ச்சியாக இருக்கும். சுக்கு சேர்த்திருப்பதால் எல்லாக் காலத்துக்கும் ஏற்றது. தலை வலி வரும் என்ற பயம் தேவையில்லை.

நிலவேம்பு கஷாயம்

தேவையான பொருட்கள்:

நிலவேம்பு, பேப்படல், சுக்கு, சித்தரத்தை, மிளகு (எல்லாம் சேர்ந்து ரூ.20/-க்கு)



100 வருட பாரம்பரிய தைலம்!



ஒவ்வொன்றாக தனித்தனியே வறுக்கவும். உப்பையும் வறுக்கவும். மிக்சியில் கரகரப்பாக அரைக்கவும். வேண்டும் என்றால் காய்ந்த மிளகாய் சேர்த்துக் கொள்ளலாம்.

கண்டத்திப்பிலி ரசம்

தேவையான பொருட்கள்:

கண்டத்திப்பிலி - 7
அரிசித் திப்பிலி - 6



செய்முறை: முதல் நாள் இரவு சுக்கு, சித்திரத்தை, மிளகு மூன்றையும் இலேசாக இடித்து நிலவேம்பு, பேப்படல் சேர்த்து தண்ணீரில் ஊற வைக்கவும். மறுநாள் காலையில் ஊறிய சாமான்களுடன் (ஊறிய நீருடனே) அடுப்பில் வைத்து கொதிக்க வைக்கவும். நன்கு கொதித்தவுடன் வடிகட்டி அந்தக் கஷாயத்துடன் சிறிது உப்பு சேர்த்து குடிக்கவும்.

பயன்கள்: தீராத ஜுரம் தீரும். சிலருக்கு மாதக் கணக்கில் ஜுரம் விடாது. அவர்களுக்கு கண்கண்ட மருந்து இந்தக் கஷாயம்.

அங்காயப் பொடி

தேவையான பொருட்கள்:

சுண்டைக்காய் வத்தல் - 200 கிராம்
வேப்பம் பூ - சிறிது
சுக்கு - சிறிது
மிளகு - 2 ஸ்பூன்
கட்டி பெருங்காயம் - சிறிது
உப்பு - தேவைக்கு

செய்முறை: வெறும் வாணலியில்

துவரம் பருப்பு - 2 ஸ்பூன்
பெருங்காயம் - சிறிது
புளி - எலுமிச்சம் பழ அளவு
பூண்டு (தேவை என்றால்) - 6 பல்
காய்ந்த மிளகாய் - 4
கறிவேப்பிலை - சிறிது

செய்முறை: சிறிது எண்ணெய் விட்டு எல்லாப் பொருட்களையும் ஒவ்வொன்றாக வறுக் கவும். மிக்சியில் கரகரப்பாக அரைக்கவும். புளி கரைத்து தக்காளி (தேவையென்றால்) உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து, புளி வாசனை போக கொதிக்க விடவும். கொதித்தவுடன் அரைத்த விழுது சேர்த்து ரசம் நன்கு நுரைத்துப் பொங்கி வந்ததும் நெய்யில் கடுகு தாளிக்கவும். வேண்டு மென்றால் சிறிது வெல்லம் சேர்க்கலாம்.

(பருப்பு ஜலம், சிறிது காரத்தைக் குறைக்க வேண்டுமென்றால் விடலாம்.)

கண்ணின் கருவளையம் நீங்க...

சோத்துக் கத்தாழையை எடுத்து

மேலே இருக்கும் முள்ளை சீவி எடுத்து விட்டு, உள்ளே இருக்கும் நுங்கு போன்ற வெள்ளையான பாகத்தை எடுத்து ஏழு முறை நீரில் அலம்பி, இரவு படுக்கப் போகும்முன் ஒரு வெள்ளைத் துணியில் வைத்து கண்ணில் கட்டிக்கொண்டு படுக்கவும். காலையில் கட்டிய துணியை அவிழ்த்து எடுத்தால் கண்கள் பளிச்சென்று இருக்கும். வாரம் ஒரு முறை இவ்வாறு செய்தால் கண்ணின் கருவளையம் மறையும்.

வயிற்றுப் பூச்சிக்குப் பாட்டி வைத்தியம்

தேவையான பொருட்கள்:

சுரத் அவரை, கடுக்காய், ரோஜா மொட்டு

செய்முறை: கடுக்காயை இடித்து மேல் தோலை எடுத்துக் கொள்ளவும். மீதமுள்ள சாமான் களுடன் சேர்த்து முதல் நாளே ஊற வைத்து மறுநாள் காலை ஊறிய அதே நீருடன் நன்கு கொதிக்கவிடவும். நன்கு கொதித் ததும் வடிகட்டி விளக்கெண்ணெய் சிறிது சேர்த்து வெறும் வயிற்றில் குடித்தால், வயிற்றில் உள்ள சிறு பூச்சிகள் கூட வெளியில் வந்து விடும். மாதம் ஒரு முறை செய்யலாம். குழந்தை முதல் பெரியவர் வரை அனைவருக்கும் நல்லது.

தீராத தலைவலிக்கு, ஒற்றைத் தலைவலிக்கு மருந்து!

தேவையான பொருட்கள்:

வேப்பங்கொட்டை

செய்முறை: வேப்பங்கொட்டையை உடைத்து அதில் உள்ள பருப்பை நைஸாக அரைத்து நெற்றியில் இரண்டு பக்க பொட்டில் பத்து போட்டுக் கொண்டால் தீராத தலை வலியும் தீரும். (வேப்பங் கொட்டை நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும்.)

★ குழந்தைகளுக்கு வயிற்றில் சிறுசிறு பூச்சிகள் இருந்தால், முதல் நாள் இரவு மோரில் கடுக்காயை உடைத்து மேல் தோலை மட்டும் ஊற விடவும். மறு நாள் காலை வெறும் வயிற்றில் அந்த மோரை (கடுக்காயை வடிகட்டிவிட்டு) குடிக்க வைக்க வேண்டும். சிறிது துவர்ப்பாக இருக்கும் இந்த மோர், வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றி விடும்.

★ வேப்பங்கொழுந்து, சீரகம், உப்பு மூன்றையும் நைஸாக அரைத்து வெறும் வயிற்றில் குழந்தைகளுக்குக் கொடுத் தாலும் சிறு பூச்சிகள் வெளியேறி விடும்.

- டி.என்.ஜானகி,
சென்னை - 78



அரிசி களைந்த இரண்டாவது நீரில் புளி ஊறவிட்டு, காய்களை வேக விட்டால் 'பி-காம்ப்ளக்ஸ்' அதிகம் உடலில் சேரும்.

- எ.வாராகி,
திருவத்திபுரம்

குக்கரி



மைதா டால்டா பரோட்டா

தேவையான பொருட்கள்:

மைதா - ½ கிலோ
டால்டா - ¼ கிலோ
பலகார சோடா - 1 சிட்டிகை
உப்பு - 1 சிட்டிகை
அரிசிமாவு - 2 ஸ்பூன்

செய்முறை: மைதா மாவில் சோடா மாவு, உப்பு, 50 கிராம் டால்டா சேர்த்து தண்ணீர் விட்டுத் தளர்வாகப் பிசைந்து 1 மணி நேரம் ஊற வைத்து, அதை ஆறு உருண்டைகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். மீதம் உள்ள டால்டாவில் அரிசிமாவைக் கலந்து தனியாக வைத்துக் கொள்ளவும். ஒவ்வொரு உருண்டையாக அப்பளம் போல் பெரியதாகத் தேய்த்து ஒன்றின்மேல் கொஞ்சம் டால்டா கலவையை அனைத்தையும் நீட்டமாகச் சுருட்ட வேண்டும். பிறகு ஒரு கத்தியால் சிறு சிறு துண்டுகளாக வெட்டித் தடிப்பாகத் தேய்த்து தோசைக் கல்லில் போட்டு 1 ஸ்பூன் எண்ணெய் விட்டு நன்றாக வெந்தவுடன் திருப்பிப் போட்டு, பொன்னிறமாக வெந்தவுடன் எடுத்துவிடவும். வெஜிடபிள் குருமா அல்லது தக்காளி சட்னி சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். எளிதாக செய்யகூடிய பரோட்டா.

- ஜி.நிர்மலா குணசீலன்,
தர்மபுரி

மைதா சிப்பி

தேவையான பொருட்கள்:

மைதா - 1 கிலோ
தேங்காய்ப் பால் - 1 பெரிய கிண்ணம்
டால்டா - 75 கிராம்
சர்க்கரை - ¼ கிலோ
எண்ணெய், உப்பு - தேவைக்கு

செய்முறை: மைதாவை நன்றாக சலித்துக் கொள்ளவும். அதில் தேங்காய்ப் பால், உப்பு, டால்டாவைப் போட்டு நன்றாக அடித்துப் பிசையவும். பூரிமாவை விட இறுக்கமாக இருக்கவேண்டும். அதனை அடித்துப் பிசையப் பிசைய இளகி ஒன்று சேர்ந்து மிருதுவாகிவிடும். பின்பு சீடை போல் சிறுசிறு உருண்டையாக உருட்டிக் கொண்டு, புது சீப்பில் வைத்து

கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள்:

க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி முடிவுகள்!



கட்டை விரலால் தேய்த்தால் கடல் சிப்பி போல் உருண்டு வரும். அனைத்தையும் தேய்த்து வைத்துக் கொண்டு, எண்ணெய் காய வைத்து பொன்னிறமாகப் பொரிக்கவும்.

அரைத் தம்ளர் தண்ணீரில் சீனி போட்டு கம்பி பதம் வரும் வரை காய்ச்சி, பொரித்து வைத்துள்ள சிப்பிகளின் மீது ஊற்றி சூடாகக் குலுக்க வேண்டும். வாசனை விரும்புபவர்கள் ஏலக்காயைப் பொடி செய்து பாகில் போடலாம். குழந்தைகள் மிகவும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- வி.மேகலா,
பேராவூரணி

குக்கரி க்வீன் போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த கலாவதி குலசேகரனுக்கு நன்றி!



மின்ட் ரோல்

தேவையான பொருட்கள்:

மைதா - ¼ கிலோ
டால்டா - 50 கிராம்
புதினா இலைகள் - சிறிது
கொப்பரைத் துருவல் - ஒரு மேஜைக் கரண்டி
காய்ந்த மிளகாய் - 4
உப்பு - சிறிதளவு
பொரித்தெடுக்க எண்ணெய் - தேவைக்கு

செய்முறை: சலித்த மைதாவுடன் உப்பும் டால்டாவும் சேர்த்துப் பிசைந்து அரை மணி நேரம் ஊறவிடவும். பின்னர் புதினா, கொப்பரைத் துருவல், வறுத்த மிளகாய் மூன்றும் சேர்த்து மிக்ஸியில் பொடித்துக்கொள்ளவும்.

மைதாவைச் சிறுசிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். பின்னர் மெல்லிய சப்பாத்திகளாக இட்டு அதில் புதினா பொடியினைத் தூவிச் சுருட்டவும். இதனை வட்ட

மைதா + டால்டா சமையல் போட்டி

வட்டமாக நறுக்கவும். ஓரங்களை அழுத்தி மூடி எண்ணெயில் பொரிக்கவும். புதினா வாசனையுடன் கரகரப்பாக மின்ட்ரோல் கிடைக்கும். ருசியான மின்ட்ரோல் தயார்.

- எ.சாந்தா, திருவண்ணாமலை

பால் அல்வா

தேவையான பொருட்கள்:
மைதா - 1 தம்ளர்
டால்டா - ¼ கிலோ



சர்க்கரை - 2 தம்ளர்
பால் - 2 தம்ளர்
ஏலக்காய், பச்சை கற்பூரம் - சிறிதளவு
கேசரி பவுடர், முந்திரி - சிறிதளவு

செய்முறை: அடி கனமான பாத்திரத்தில் பாலை விட்டு அடுப்பில் வைக்கவும். கேசரி பவுடரையும் சர்க்கரையையும் பாலில் போட்டு, நன்றாகக் கொதிக்க விடவும். தொட்டால் பிசுக்கு வர வேண்டும், அதுதான் சரியான பதம். மைதாவுடன் ஏலக்காய், பச்சைக் கற்பூரம் சேர்த்து பாகில் கொட்டி, நன்றாகக் கிளறவும். சிறிது கெட்டிப் பட்டதும் டால்டாவை சேர்த்துக் கிளறவும். ஒட்டாமல் சுருண்டு வரும்போது இறக்கவும். முந்திரி போடவும். ஆறிய பிறகு துண்டு போடவும். பால் சேர்ப்பதால் மிகவும் ருசியாக இருக்கும்.

- வி.வனஜா, வில்லிய நல்லூர்


மைதா உருண்டை கிரேவி

தேவையான பொருட்கள்:
மைதா - 100 கிராம்
டால்டா - 50 கிராம்
சமையல் சோடா - சிறிது
வெங்காயம் - 2
தக்காளி - 2
இஞ்சி பூண்டு - சிறிதளவு
மிளகாய்த்தூள் - 2 டீஸ்பூன்
மல்லித் தூள் - ¼ டீஸ்பூன்
எண்ணெய், உப்பு - தேவைக்கு
முந்திரி பருப்பு - 10
தேங்காய்த்துருவல் - ¼ கப்
கொத்துமல்லி - சிறிது

செய்முறை: மைதா, டால்டா, சமையல் சோடா, உப்பு சேர்த்து நன்கு பூரிமாவு பதத்துக்குப் பிசைந்து சிறுசிறு உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் பொரித்தெடுக்கவும். முந்திரிப் பருப்பு, தேங்காய், வெங்காயம், தக்காளி, இஞ்சி, பூண்டு ஆகியவற்றை மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.

ஒரு வாணலியில் எண்ணெய் 2 டீஸ்பூன் ஊற்றி காய்ந்ததும் கடுகு தாளித்து அதில் அரைத்துள்ள விழுதைப் போட்டு வதக்கவும். அதில் மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், சிறிது தண்ணீர், உப்பு சேர்த்து அடுப்பை சிம்மில் வைத்து 10 நிமிடம் கிளறவும். அதில் பொரித்து வைத்துள்ள உருண்டைகளைப் போட்டு கொத்துமல்லி தூவி பரிமாறவும்.

- ஜி.ராஜேந்திரபாய், மாதவரம், சென்னை - 60



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை. பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம். சென்னை - 63. போன் : 22760612, 22762299
City Office No.7, முதல் மாடி. வேலு தெரு. மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

புத்தாண்டு-பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற, மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள் தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம் மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

8



மனோகருக்கு போதையெல்லாம் உடனே இறங்கி விட்டது. தன்னை பளிச் பளிச்சென்று கேள்விகளைக் கேட்டுவிட்டு, பதிலை எதிர்நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும் அர்ச்சனாவின் முகத்தை நேருக்கு நேர்

பார்க்க முடியவில்லை.

''ஏய்.. என்ன ரொம்பத் தெரிஞ்ச மாதிரி இப்படில்லாம் கேக்கறே? அவன் எப்ப செக் குடுத்தான்?'' என்று மிக பலவீனமாக, குரல் மங்கி முனகினான்.

''நம்ம குழந்தை மேல அடிச்சு சத்தியம் செய்யுங்க போதும். அதுக்கப்பறம் நீங்க சொல்ற எதையும் எதிர்ப் பேச்சு பேசாம நான் கேட்டுக்கறேன். ம். செய்யுங்க. குணா செக் குடுக்கலை? நீங்க பேங்க்லேர்ந்து பணம் எடுக்கலை?''

''ஆனா எனக்கு வரவேண்டியது வெறும் பத்து லட்சம் இல்லை. மொத்தம் இருபத்தேழு லட்சம். மிச்சம் பதினேழுக்கு தான் போராடிக்கிட்டிருக்கேன்''

''ஓகோ. சரி, அந்தப் பத்து லட்சம் எங்க?''

பேர்ல எடுக்கக் கூடாதா?''

''எவ்வளவுதான் பொய் சொல்வீங்க நீங்க? சரி, வாங்க போகலாம். லாக்கர் சாவியை எடுத்துக்கிட்டுப் புறப் படுங்க. லாக்கர்லேர்ந்து டெபாசிட் ரசீது எடுத்து எங்கிட்ட காமிங்க''

சட்டென்று உச்சமான கோபத்தில் எழுந்தான் மனோகர்.

''என்னடி நானும் பார்த்துக்கிட்டிருக் கேன். கேள்வி மேல் கேள்வி கேட்டுட் டேபோறே? நீ பொண்டாட்டியா இல்ல, போலீசா? இதுக்கு மேல பேசினே, டென்ஷனாயிடுவேன், ஆமாம்.''

'ச்சீ' என்பது போல அவ



பூ பூக்கும் ஓசை!

''இருக்கு. அதை ஃபிக்சட் டெபாசிட்ல போட்டு வெச்சிருக்கேன்''

''அதே பேங்க்லயா?''

''இல்ல. வேற பேங்க்ல. அங்கதான் வட்டி அதிகம்.''

''சரி, ஃபிக்சட் டெபாசிட் போட்டா ரசீது குடுப்பாங்க இல்லையா? எங்க வெச்சிருக்கீங்க? காட்டுங்க பார்க்கலாம்''

''வெச்சிருக்கேன். இங்க நம்ம வீட்ல இருந்தா பத்திரமா இருக்காதுன்னு பேங்க் லாக்கர்ல வெச்சிருக்கேன்''

''பேங்க் லாக்கர் இனிமே தேவையில் லைன்னு மூணு மாசத்துக்கு முன்னாடி நாம ரெண்டு பேரும் கையெழுத்துப் போட்டுதானே க்ளோஸ் பண்ணோம்?''

''அப்புறம் புதுசா ஒரு லாக்கர் என்

னைப் பார்த்தாள் அர்ச்சனா. அப்பட்ட மாகத் தெரிகிறது அவன் சொல்கிற ஒவ்வொரு எழுத்தும் பொய் என்று. ரோஷம் வருகிறதே ஒழிய, உண்மை வரவில்லை. சொல்வதில்லை என்கிற பிடிவாதமான தீர்மானத்தில் இருப்பவனி டம் எத்தனை விதமாகக் கேட்டாலும் ஒழுங்கான பதில் வரப்போவதில்லை.

அந்தப் பத்து லட்சத்தை என்னதான் செய்தார் என்கிற முக்கியமான கேள்வி அவளுக்குள் ஆழமான கவலையை விதைத்தது. சீட்டாட்டமா? ரேஸா? பங்குச் சந்தை விளையாட்டா? ரியல் எஸ்டேட்டில் எவனிடமாவது தூக்கிக் கொடுத்து ஏமாந்து விட்டாரா?

என்ன ஆனாலும் சரி, என்னை இவர் அடித்தாலும் சரி, இந்த விஷயத்தில்

பட்டுக்கோட்டை பிரபாகர்

உண்மையைத் தெரிந்து கொண்டேயாக வேண்டும்.

''சரிங்க. நீங்க எனக்கு அந்த ரசிதைக் கண்ல காட்ட வேணாம். ஆக.. பத்து லட்சம் அப்படியே டெபாசிட்டா பத்திரமா இருக்கு. அப்படித்தானே?''

''ஆமாம்''

''அம்மா வீட்ல என்ன நிலைமைன்னு உங்களுக்குத் தெரியாது. அப்பாவுக்கு ஆபரேஷன் பண்றதுக்கு உடனடியா பணம் ஏற்பாடு பண்ண முடியாத சூழ்நிலை. தங்கச்சி வந்திருந்தா. இங்க நடக்கற கூத்தெல்லாம் எதுவும் சொல்லலை. பத்துல ஒரு மூணு லட்சம் மட்டும் எடுத்து கடனா குடுங்க. வீட்டை அடமானம் வைக்கப் போறாங்க. அந்தப் பணம் வந்ததும் திருப்பிக் குடுத்துடுவாங்க.''

''ஓ! இதுக்குதான் இப்படி என்னைப் போட்டு அரிக்கிறியா? இந்த பாரு, எனக்கு அம்மா இல்ல, அப்பா இல்ல, எல்லாமே நீங்கதான்னு எல்லாரையும் உதறிட்டுத்தானே என் பின்னாடி வந்தே? கல்யாணத்துக்கு முன்னாடி எதிர்த்தாங்க, சரி, கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போய் நிக்கிறோம். அங்க என்ன நடந்துச்சு? எனக்கு மறந்துடுமா? நாயைவிடக் கேவலமா நடத்தினாரு உங்கப்பா. அவர் மூஞ்சில ஜென்மத்துக்கும் முழிக்கிறதில்லைன்னு சொல்லிட்டுதானே உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தேன். இப்போ அந்தாளுக்கு ஆபரேஷன்னு நான் பணம் தரணுமா? மாப்பிள்ளை வேணாம், மாப்பிள்ளையோட காசு மட்டும் வேணுமா?''

''இப்படி எடுத்தெறிஞ்சு பேசாதீங்க. தங்கச்சிதான் வந்து பணம் கேட்டா. அப்பாவுக்கு உங்களைப் பணம் கேக்கப் போற விஷயமே தெரியாது. நாளைக்கு நம்ம பிள்ளை நம்ம விருப்பத்துக்கு எதிரா இதே மாதிரி ஒரு காரியம் பண்ணிட்டு வந்து நின்னா.. அப்ப நீங்களும் இப்படித்தான் கோபப்படுவீங்க. அதுக்காக அவர்

நமது வீட்டில் முன்னோர்களை வழிபடும் போது (அமாவாசை நினைவு நாள்) நமது குழந்தைகளுக்கு நமது தாத்தா, பாட்டியின் பெருமைகள் பற்றி அடிக்கடி கூறி வந்தால், அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் நாம் கூறிய மரியாதையைக் கடைப்பிடிப்பார்கள். காலப்போக்கில் முதியோர் இல்லங்கள் காணாமல் போய்விடும்.

- கே.மகாலெட்சுமி, திண்டுக்கல்

என் அப்பா இல்லைன்னு ஆயிடுமா? என்னைப் பெத்தவருங்க. என்னைப் படிக்க வெச்சவரு. என்னை வளர்த்து ஆளாக்கினவரு. இந்தச் சந்தர்ப்பத்துல நான் உதவலைன்னா நான் மனுஷியே இல்லை.''

''நீ நல்லா பேசக் கத்துக்கிட்டே. டி.வி சீரியலுக்கு வசனம் எழுதறதுக்குப் போகலாம். என் காசை உங்கப்பாவுக்காகத் தர முடியாது. அப்புறம்?''

மிகக் கூசிக் குறுகிப் போனாள். அவனைப் பார்க்கவே அருவெறுப்பாக இருந்தது. என்ன மனிதன் இவன்! வாயைத் திறந்தால் பொய்! கடுகளவுக்குக்கூட மனிதாபிமானம் இல்லை. இவருக்கு மட்டும்தான் கோபம், ஆத்திரம், தன்மானம் எல்லாம் உண்டா? அவனைப் பார்த்து அழுத்தமாகக் கேட்டாள்.

''குணா பத்து லட்சம் குடுத்ததை இத்தனை நாள் ஏன் எங்கிட்ட சொல்லலை?''

''அது..ஃபுல் செட்டில்மெண்ட் முடிஞ்சதும் சொல்லலாம்னு இருந்தேன்''

''ஆனா.. கணக்குப்படி அவர் தர வேண்டியது எட்டு லட்சம்தானாமே? ரெண்டு லட்சம் சேர்த்துப் போட்டு பத்து லட்சமாதானே குடுத்திருக்காரு?''

''ஏய், இதெல்லாம் உனக்கு எவன்டி சொன்னது?''

''எதிர் கேள்வி கேக்காதீங்க. நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க. உண்டா, இல்லையா?''

''கணக்குப்படி பார்த்தா மொத்தம்



இருபத்தி..''

''போதும். அவர்தான் அந்த ராஜஸ்தான் ஆர்டர் வேணாம்னு படிச்சுப் படிச்சு சொல்லிருக்காருல்ல, நான் ரிஸ்க் எடுத்துக்கறேன்னு அந்த ஆர்டருக்கு மட்டும் தனியா ஒரு அக்ரிமெண்ட் உங்களை யாரு போடச் சொன்னது? அதுபடி கம்பெனிக்கு நஷ்டம் வந்தா பார்ட்னர் கேக்க மாட்டானா?''

''அர்ச்சனா! அந்த ஆபீஸ்லேர்ந்து எவனாச்சும் வீட்டுக்கு வந்து உங்கிட்ட வத்திவெச்சிட்டுப் போனானா?''

''இல்ல. நான்தான் அந்த ஆபீசுக்குப் போனேன். குணாகிட்ட உங்களுக்காக நியாயம் பேசப் போனேன். ஆனா உண்மை தெரிஞ்சப்புறம் எதுவும் என்னால பேச முடியலை. ஏண்டா போனோம்னு ஆயிடுச்சி.''

''யாரைக் கேட்டு அந்தப் பொறுக்கி ராஸ்கலை நீ போய்ப் பார்த்தே? அவ்வளவு திமிர் ஏறிப் போச்சாடி உனக்கு?''

''சும்மா கத்தாதீங்க. நீங்க பாட்டுக்கு அடியாளைக் கூட்டிக்கிட்டுப் போய் அடிதடின்னு இறங்கப் போறதா சொன்னீங்க. எனக்கு அடிவயிறு கலங்கிடுச்சு. எதாச்சும் ஒண்ணு ஆயிடுச்சின்னா அப்புறம் அம்மான்னா வருமா, அப்பான்னா வருமா? சாட்சிக்காரன் கால்ல விழறதைவிட சண்டைக்காரன் கால்ல விழறது எவ்வளவோ நல்லதுன்னுதான் போனேன். இதப் பாருங்க... உங்க பக்கம் நியாயம் இல்லை.''

அவள் அருகில் வந்தான். முறைத்தான். அவள் கூந்தலை இறுக்கிப் பிடித்தான்.

''இத்தோட உன் பிரசங்கத்தை நிறுத்திக்கறியா? இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினே, பல்லெல்லாம் கழண்டுடும். எது நியாயம்னு எனக்குத் தெரியும். எதிர்த்துப் பேசறதை விட்டுட்டு அடக்க ஒடுக்கமா இருக்கறதுன்னா இரு... இல்லன்னா?''

ஆங்காரமாகப் பார்த்தாள்.

''இல்லன்னா? சொல்லி முடிங்க!''

''வெளில போ!'' என்றான் கத்தலாக.

''குடும்பத்தை எதிர்த்துக்கிட்டு நம்ம பின்னாடி வந்தவ, இவளுக்குப் போக்கிடம் என்ன இருக்கு, வெளில போகச் சொன்னா அடுத்த நிமிஷம் நடு ரோட்லதானே நிக்கணுங்கற நினைப்புலதானே இப்படி ஒரு வார்த்தை சொன்னீங்க? கையை எடுங்க. கையை எடுங்கன்னேன்!''

அவளின் கத்தலுக்கு அதிர்ந்த அவன், அவள் தலைமுடியிலிருந்து கையை எடுத்துக்கொண்டான். அர்ச்சனா வேகமாகச் சென்று ஒரு பேகை எடுத்து வைத்தாள். தன் உடைகள், குழந்தையின் துணிகள் என்று அவசரமாக அள்ளிப் போட்டாள்.

''ஏய்... ரொம்பதான் சீன் போடாதே! போயிடுவியா நீ?''

குழந்தையின் பால் பாட்டில், பால் டப்பா, துவித் துணி என்று அவசரமாக சேகரித்தாள்.

''அர்ச்சனா! இவ்வளவு ரோஷம் தப்பு அர்ச்சனா! வருத்தப்படுவே!''

பேகின் ஜிப்பை மூடினாள். தோளில் மாட்டிக்கொண்டாள். தரையில் விட்டிருந்த குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டாள்.

''எங்கடி போவே?''

அர்ச்சனா செருப்பு அணிந்தாள். விடுவிடுவென்று வெளியேறி வீதியில் நடந்தாள், எங்கே செல்வது என்கிற கேள்விக்கு விடை இல்லாமல்.

(தொடரும்)


29 வது ஆண்டு
அமர்க்களங்கள்!
ஸ்டார் எழுத்தாளர்கள்
எழுதும்
யூத் சிறுகதைகள்
போட்டிகளுடன் - ஆரம்பம்!
Strictly for Youth
யூத் எடிஷன்
டி-ஷர்ட்
வாசகப் போட்டி!
வெற்றிக்
கொடி கட்டு!
சுயஉதவிக் குழு
பெண்களின்
சாதனைக் கதைகள்
(வாசகர்கள் ஏற்கெனவே
எழுதிக் குவித்துள்ள
தகவல்களின் தொகுப்பு)
(பிப்ரவரி 09 - ஆண்டு மலர் மட்டும்)



உயர்ந்த மனிதர்கள்!

தீபாவளிக்கு துணிகள் வாங்க பெங்களூரில் 'கமர்ஷியல் ஸ்டிரீட்'க்கு போனோம்.

ஒரு கடையில் ரெடிமேட் ஆடைகள் எடுத்த பொழுது ''கையில் பணம் சற்று குறைவாக உள்ளது. உன் பர்ஸை எடு'' என்று என் கணவர் சொன்னவுடன் தான் என் பர்ஸ் காணாமல் போனதை உணர்ந்தேன். காரில்தான் இருக்கும் என்று நினைத்து 'கார்டில்' பணம் கொடுத்துவிட்டு வந்தோம்.

காரில் பார்த்தால் பர்ஸ் இல்லை. வீட்டில் வந்து பார்த்தால் அங்கேயும் இல்லை. பர்ஸில் நிறைய ரசீதுகளும், கிட்டத்தட்ட 2500 ரூபாய் பணமும் இருந்தது.

டிரைவர் எடுத்திருப்பாரோ என்று நினைத்து அவரிடம் கேட்டால், நான் பார்க்கவேயில்லை என்று சத்தியம் செய்தார்.

திடீரென்று அந்த ரெடிமேட் துணிக் கடையிலிருந்து என் பையனின் செல் நம்பருக்கு போன் வந்தது!

''உங்கள் பர்ஸ் ஏதாவது காணோமா?'' என்று கேட்க, என் பையன் எனக்கு போன் செய்து விவரத்தை சொன்னான்.

உடனே அந்த கடைக்கு போனோம். என்ன ஆச்சர்யம். ஒரு பைசா கூட குறையாமல் அந்த பர்ஸை கொடுத்தார்கள்.

பர்ஸில் சென்னை போன் நம்பர் ஒன்று இருந்திருக்கிறது. அதை வைத்து கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அட்ரஸ் எதுவும் இல்லாத பர்ஸை இவ்வளவு தூரம் முயற்சி செய்து எங்களை அழைத்து கொடுத்த கடை சிப்பந்திகளை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை.

நேரில் போய் நன்றி சொல்லி அவர்களுக்கு பணம் கொடுக்கலாம் என முயற்சி செய்தோம். எவ்வளவு சொல்லியும் அவர்கள் பணம் வாங்க மறுத்துவிட்டனர்!

அநாவசியமாக டிரைவரை சந்தேகப்பட்டேனே என்று எனக்கே மிகவும் வெட்கமாகிவிட்டது. எவ்வளவு உயர்ந்த மனிதர்கள். நமக்குதான் சின்ன புத்தி என்று நொந்து கொண்டேன்.

என் கணவர் நடந்த விஷயங்களை எழுதி அந்த சிப்பந்திகளின் பெயருடன் நன்றியை தெரிவித்து அந்தக் கடையின் முதலாளிக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். நல்ல காரியம் செய்தது எல்லோருக்குமாவது முக்கியமாக முதலாளிக்குத் தெரியட்டுமே!

பணம் பணம் என ஓடிக் கொண்டிருப்பவர்களின் நடுவில் இப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எந்தக் குறையும் இல்லாமல் இருக்க பிரார்த்திக்கிறேன்.

- என்.மாலதி,
பெங்களூரு - 8

ஷாப்பிங் அனுபவம்



சிவ! சிவ!

ஸ்ரீ அவ்வை ஹோம்

(ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்)

36, மாணிக்கவாசகர் சாலை, சேக்கிழார் நகர், குன்றத்தூர்
சென்னை-600 069. போன்: 044-3200 4200



வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்கி உதவலாம்!



புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்! வேதமாதா காயத்ரி தேவியின் பேரருளாலும் மஹா சுவாமிகளின் ஆசியுடனும் சமுதாயத்தினரால் நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். ஆதரவின்றித் தவிக்கும் வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து, தினசரி இறைவழி பாடு, தியானம், கூட்டு பிரார்த்தனையுடன் திருமுறை பாராயணம் செய்து பராமரித்து வருகிறோம். அன்னையர்களின் இந்த கூட்டுப் பிரார்த்தனையால் தங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் புத்தாண்டு, பொங்கலை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உங்கள் அன்பளிப்புகளை பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு இந்நாட்களில் தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும்.

ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.400/- அனுப்பும் அன்பர்களுக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.450/- அனுப்பும் அன்பர்களுக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.350/- அனுப்பும் அன்பர்களுக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் உணவுக்கு ரூ.1100/- அனுப்பும் அன்பர்களுக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்


10 நாட்கள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1300/- அனுப்பும் அன்பர்களுக்கு சந்தன மாலை அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்பும் அன்பர்களுக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், பண்டிகை நாட்கள், அமாவாசை மற்றும் பௌர்ணமி, கிருத்திகையில் வயதான அன்னையர்களுக்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எதுவாயினும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅவ்வை ஹோமில் அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமம் நடைபெறுகிறது. இதில் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ.300/-



காயத்ரி என்பதன் பொருள் தன்னை துதிப்பவரை, ஜபிப்பவரை காப்பாற்றுவது என்பது பொருள். காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுள், புகழ், செல்வம் மற்றும் புத்திர பாக்கியத்தை அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடுபொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. குடும்ப பிரச்னைகள், தோஷங்கள், வியாபார தடைகளை போக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இந்த காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணமாக ரூ.300/- அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், ஸ்ரீ காயத்ரி மகா மந்திரம், மகா மிருத்யஞ்சை மந்திரம் மற்றும் ஜெப மாலா அடங்கிய சிடியும், காயத்ரி வண்ணப்படமும், காயத்ரி தேவி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரம் அனைத்து இல்லங்களிலும் ஒலித்து ஐஸ்வர்யம் பெற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். வயதான அன்னையரை பாதுகாக்கவும் ஸ்ரீகாயத்ரி ஹோமத்தில் பங்கு பெறவும் தங்கள் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு **Cheque/DD/MO** மூலமாக **SRI AVVAI HOME, CHENNAI** என்ற பெயருக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளால் பூரண ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று, துன்பங்கள் நீங்கி, புகழ் மிகுந்த வாழ்க்கை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

புத்தாண்டில் அனாதைகளற்ற புதிய சமுதாயம் அமைய பிரார்த்திப்போம்!

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

அப்பன்

ஆர். சுமதி



ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி ரூ.2000 பரிசுக் கதை-2

சிறுகதை

"முத்துராசு. ஏ... முத்து ராசு... எந்திரி... அட எந்திரிப்பா" அசந்து தூங்கிக் கொண்டிருந்த முத்துராசு ஏழுமலையின் உலுக்கலில் புரண்டான்.

"அட... என்னப்பா நீ? அவன் நைட் டியூட்டி பார்த்துட்டு வந்து இப்பத்தான் தூங்கறான். அவனைப் போய் எழுப்பிக்கிட்டு. டீ வாங்கிட்டு வரச் சொன்னா கையில பேப்பரை வாங்கியாந்து வெச்சுக்கிட்டு அவனை எழுப்பிக்கிட்டிருக்கே?" காலை எழுந்தவுடன் புகைப்பிடிப்பு என்ற ரீதியில் பீடி குடித்துக் கொண்டிருந்த ஒருவன் எரிச்சலுடன் சொன்னான்.

"டீயா? இன்னைக்கு முத்துராசு செலவுல எல்லாருக்கும் பார்ட்டியே உண்டு. அட எந்திரிப்பா முத்துராசு. பேப்பரைப் பாரு முதல்ல."

முத்துராசு அலுப்புடன் எழுந்து உட்கார்ந்து அரைக் கண்களை மட்டும் திறந்து "என்னப்பா?" என்றான்.

"பேப்பரைப் பாரு முத்துராசு."

"அட... என்னன்னு படிச்சு சொல்லுப்பா?"

"ப்ளஸ் டூ தேர்வு முடிவுகள். மயிலாடுதுறையைச் சேர்ந்த மு.சுப்பிரமணி முதலிடம்."

'பக்'எனக் கண்களைத் திறந்த முத்துராசு, செய்தித்தாளை வாங்கிப் பார்த்தான்.

முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் செய்தி. சுப்பிரமணியின் புகைப்படம். அவன் மகன்!

ஒரு நிமிடம் இன்ப அதிர்ச்சியில் மூச்சு விடமுடியாமல் நெஞ்சடைத்தது.

"நிஜமா? இது நிஜமா?" தூக்கக் கலக்கம் குரலில் தெரிய நாக்குக் குழறியது!

ஆனந்தப் பரவசத்தில் கைகால்கள் நடுங்கின. அப்படியே ஓடிச் சென்று மகனை கட்டித் தழுவிக்கொண்டு முத்தமிட உடலும் மனமும் துடித்தன.

இன்றைக்கு பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வெளியாகும் என்ற நினைவுகூட அவனுக்கு இல்லை. இரவு முழுவதும் பனியன் கம்பெனியில் சரக்கு ஏற்றும் வேலை அதிகம் இருந்ததால், விடியற்காலையில்தான் இருப்பிடமே திரும்பினான். கை கால்களைப் பரப்பிக் கொண்டு படுத்தவன்தான்; பேய்த் தூக்கத்தில் கிடந்தான். இப்பொழுது தூக்கம் அசதி எதுவும் போன இடம் தெரியவில்லை.

'என் சுப்புக்குட்டியா? என் சுப்புக்குட்டியா முதலிடம்?' அவனால் நம்பவே முடியவில்லை.

ஆளாளுக்கு அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். உண்மையாகப் புகழ்ந்தவர்கள் பலர், ஒப்புக்காகப் பாராட்டியவர்கள் பலர். உள்ளே எரிச்சலில் மிதந்தவர்கள் சிலர்.

'தினக்கூலிக்கு வேலை செய்யும் இவனுக்கு இப்படி ஒரு பிள்ளையா? நம்ம வீட்டிலேயும்தான் இருக்குதுகளே! தத்திப் புண்ணாக்குங்க.' அடி மனதில் ஆதங்கப்பட்


டான் பீடி புகைத்தவன்.

''மச்சான் பெரிய பார்ட்டி கொடுக்கணும். பெத்தாலும் இப்படி ஒரு புள்ளையைப் பெத்துக்கணும்.''

''முழுசா படிக்க விடுங்கப்பா'' ஒருவன் செய்தித்தாளை வாங்கி உரக்கப்படித்தான். அதில் முத்துராசு வைப் பற்றியும் அவன் வேலை யைப் பற்றியும் இருந்தது.

படிக்கப் படிக்க முத்துராசுவுக்குப் பெருமை தாளமுடியவில்லை. பத்தாம் வகுப்பிலேயே சுப்புக்குட்டி நல்ல மதிப்பெண் வாங்கினான். ஆனால், ப்ளஸ் டூவில் இப்படி மாநிலத்திலேயே முதலாவதாக வருவான் என்று எதிர்பார்க்க வில்லை.

மனசு!



"இந்தாப்பா... முதல்ல உன் புள்ளை கிட்டப் பேசு" ஒருவன் அவன் உணர்வு களைப் புரிந்துகொண்டு தன் செல் ஃபோனை எடுத்து நீட்டினான்.

அதை வாங்கி பக்கத்து வீட்டுத் தொலைபேசிக்குத் தொடர்பு கொண்டான் முத்துராசு. சில நிமிடங்களில் தன் மனைவி யும், மகனும் ஓடி வருவது தெரிந்தது.

"என்னங்க... என்னங்க நம்ம புள்ள..." மனைவியால் மகிழ்ச்சியில் பேச முடிய வில்லை.

"பேப்பர்ல பார்த்தேன் மாலா. எனக்கு... எனக்கு..." அவனுக்கும் சந் தோஷத்திலும் பெருமையிலும் மூச்சடைத் தது.

"இந்தாங்க அவன்கிட்ட பேசுங்க" தொலைபேசி கைமாறி சுப்புக்குட்டியின் குரல் ஒலித்தது.

"அப்பா..."

"என் ராசா... பெருமையாயிருக்குடா" பேச முடியாமல் கண்ணீர் பொங்கிப் பொங்கி நெஞ்சடைத்தது.

சுப்புக்குட்டியாலும் பேச முடிய வில்லை. சந்தோஷ அதிர்ச்சியாயிருக்க வேண்டும்.

"அப்பா... நீங்க வர்றீங்களா?"

"உடனே புறப்பட்டு வர்றேம்ப்பா."

செல்லை அணைத்தான். உடலின் செல்கள் அவனைத் துரிதப்படுத்தின. இரவின் அசதி அலுப்பு இவற்றின் பாதிப்பு துளியும் இல்லாமல் போக, அவசர அவசரமாக குளித்து கிளம்பினான்.

மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் வந்து இறங்கியபோது, இதயம் சந்தோஷச் சிறகு முளைத்து பறக்கத் தொடங்கியது. எதிர் பட்டவர்களெல்லாம் தெரிந்தவர் களாகவேயிருந்ததால் அனைவரும் அவ னைப் பாராட்டினர்.

'அப்பா... எவ்வளவு பெருமையாக யிருக்கிறது. என் பிள்ளை என் பிள்ளை என நெஞ்சு கர்வத்தால் நிமிர்ந்தது. அரைக்கிலோ அல்வாவை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி அவசர அவசர மாக நடைபோட்டான்.

சர்ரென அவனருகே வெள்ளை நிற கார் ஒன்று நின்றது! காருக்கு வெளியே தலையை நீட்டியவர் ஒரு டாக்டர். மயிலாடுதுறையில் புகழ்பெற்ற மருத்துவர். அவனை நன்கு அறிந்தவர்.

"முத்து..."

"ஐயா..." அவன் பணிவாகக் காரை நோக்கிக் குனிய, இறங்கி வந்து அவன் கையைப் பற்றிக் கொண்டார்.

"உன் பையன் பெரிய ஆளுதான். முதல்



மாணவனா வந்திருக்கானே. நம்ம ஊர்ப் பையன், அதிலும் உன் பையன்னதும் ரொம்ப சந்தோஷமாயிருக்கு. என்னோட வாழ்த்துக்களை அவனுக்குச் சொல்லு. அவனை மெடிக்கலுக்கு அப்ளை பண்ணச் சொல்லு. கிடைக்கும். உனக்கு என்ன உதவி வேணுமின்னாலும் என்கிட்ட கேளு. செய்யறேன். அவனை அழைச்சுக் கிட்டு வீட்டுக்கு வா."

"சரிங்கய்யா."

அப்படியே பூரித்துப்போனான் முத்து ராசு. இவ்வளோ பெரிய டாக்டர் என்கிட்ட ரோட்ல காரை நிறுத்திப் பேசறார். யாரால்? என் புள்ளையால். என் புள்ளையும் இதேபோல் டாக்டராக வேண்டும். இப்படி

ஒரு நாள் காரில் செல்லவேண்டும். என் புள்ளை டாக்டர் என எல்லோரிடமும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பெருமையாகச் சொல்ல வேண்டும்.

என்ன வேண்டும் மனுஷனுக்கு... இப்படிப்பட்ட சந்தோஷம்தானே வேண்டும்.

உற்சாகமாக நடந்தான். நடை ஓட்டம் போலானது. மகனைக் கட்டித்தழுவி முத்தமிடும் நிமிடத்தை நோக்கி உடலின் அத்தனை இயக்கங்களும் துடித்தன.

தெருமுனையில் நுழையும் போது பக்கவாட்டு சந்திலிருந்து அவர் வெளிப்

காலையில் எழுந்தவுடன், முதலில் தேவைப்படும் பால் காய்ச்சி, கரண்டி, பில்டர், காஃபி கலக்கும் பாத்திரம் இவற்றை அடுப்படி மேடையில் கவிழ்த்து வைத்து விட்டால் காலையில் எழுந்தவுடன் சௌகரியமாக இருக்கும். பாத்திரங்களை சுத்தப்படுத்தி தூங்குபவர்களின் தூக்கத்தைக் கெடுக்காமல் இருக்கலாம்.

- மாயாசேகர், மும்பை

பட்டார்.

பெரிய குடையைப் பிடித்தபடி சற்றே தள்ளாட்டமாக வந்த அந்த பெரியவரைப் பார்த்ததும், முகம் மலர்ந்தான் முத்துராசு.

''வணக்கம் சார்'' கை கூப்பினான்.

''வணக்கம் முத்துராசு. உன் வீட்டுப் பக்கம்தான் வந்துக்கிட்டிருக்கேன். உன் புள்ளை ஊரையே கலக்கிப்புட்டானே. முதல்ல என்னால நம்பவே முடியலை. நம்மகிட்ட ரெண்டாங்ளாஸ் படிச்ச பய இப்ப மாநிலத்திலேயே முதலாவதா வந்திருக்கான்னதும், எனக்கு சந்தோஷம் தாங்க முடியலை. அதான் பொடி நடையா வந்து அவனைப் பாராட்டிட்டுப் போகலாம்னு கிளம்பிட்டேன்.''

''வாங்க சார்! உங்க ஆசீர்வாதம் இருக்கும்போது என் புள்ளை பெரிய ஆளா வருவான்.''

சொல்லிக் கொண்டிருக்கும்போது, இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவன்,

''ஏலே... முத்துராசு....இப்பத்தான் திருப்பூர்லேர்ந்து வர்றியா? உன் வூட்டுல பத்திரிகைக்காரங்க, டீ.வி.காரங்கன்னு ஒரே கூட்டம். ஒரே நாள்ல உன் பையன் ஹீரோவாயிட்டான். சீக்கிரம் போ'' என்று கூறிவிட்டுப் பறந்தான்.

இப்படி வீட்டை நெருங்குவதற்குள் ஏகப்பட்ட பாராட்டுதல்கள்... விசாரிப்புகள். பூரித்துப்போனான் முத்துராசு.

''ஐய்யா... என் புள்ளையால என் மனசு குளிர்ந்துபோச்சு. இப்படி ஒரு புள்ளையைப் பெத்தெடுக்க என்ன தவம் செய்தேனோ தெரியலை. இதைவிட வாழ்க்கையில மனுஷனுக்கு வேற என்னங்கய்யா சந்தோஷம் வேணும்? ரொம்பப் ரொம்பப் பெருமையாயிருக்குய்யா. இந்த சந்தோஷத்தோடயே செத்துடலாம் போலிருக்கு.''

அவன் சொல்லவும் அந்த வயதான வாத்தியார் தன் குடையை மடக்கினார். அவனைப் பார்த்து விரக்தியாகச் சிரித்தார். ''உண்மைதான் முத்துராசு. ஒவ்வொரு அப்பனும் கடைசிக் காலத்துல இப்படி ஒரு சந்தோஷத்துடன்தான் செத்துப் போக ஆசைப்படறான். ஆனா எத்தனை புள்ளைங்க அப்பனோட சாவுல இப்படி ஒரு சந்தோஷத்தைத் தர்றானுங்க. இப்படிப் பட்ட புள்ளையைப் பெத்தெடுக்க என்ன தவம் பண்ணினேனோன்னு பெருமையா பூரிச்சுப் போய் சொல்றியே. அப்படின்னா உன் அப்பன் பாவம் பண்ணினவனா?''

வாத்தியாரின் கேள்விக்கு, சம்மட்டியால் அடி வாங்கியதைப் போல் நின்றான் முத்துராசு.

''ஐய்யா...''

''உன் அப்பா உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டாரு... அதையெல்லாம் நீ



யோகா, தியானம் செய்தால் டிப்ரஷனை விரட்ட முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. தோட்ட வேலை செய்தாலும் மனச்சோர்வு அகலும். தோட்ட வேலை செய்ய வசதி இல்லாதவர் கள் துணிகளை அயர்ன் செய்யலாம். வீட்டிலேயே அயர்ன் செய்தால் டிப்ரஷனை குறைக்கலாம் என மருத்துவ ரீதியாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

- ஆனந்தவள்ளி,
சாலிகிராமம்

மறந்திருக்கலாம். அவரோட நண்பனான நான் மறப்பேனோ? படிக்கிற காலத்துல படிக்காம காடு பதுங்கறதும், காசு திருடி கயவாலித்தனம் பண்ணினதும் சிகரெட் பழகினதும், சினிமா சீட்டுக்கட்டுன்னு பொழுது போக்கினதும்...''

நிலைதடுமாறிய முத்துராசு முகம் வெளிறினான்.

''நீ சாதாரண கூலிக்காரன். உனக்கே உன் புள்ளை இப்படி முதலாவதா வந்ததும் இவ்வளவு பெருமையும் பூரிப்புமா யிருக்கே! உன் அப்பா ஒரு கவர்ன்மென்ட் சர்வன்ட். படிச்சவங்க மத்தியிலேயே பழகினவர். எவ்வளவு கனவு வெச்சி ருந்தார் தெரியுமா? நீ படிச்சு பெரிய ஆளா வரணும்னு எவ்வளவு ஆசை வளர்த்தார் தெரியுமா? நீ கெட்டுக் குட்டிச்சுவரான போது அவர் எப்படி உடைஞ்சு போனார் தெரியுமா? தன்னோட வேலை பார்த்த வங்களோட புள்ளைங்களெல்லாம் நல்லா படிச்சு நல்ல வேலைக்குப் போனபோது தன் ஆபீஸ் ப்யூனோட புள்ளைகூட பெரிய வேலைக்குப் போனபோது அவர் மனசால எவ்வளவு அவமானப்பட்டிருப்பார்? எவ்வளவு துடிச்சுப் போயிருப்பார்? இதெல்லாம் உனக்குத் தெரியாதது இல்லை. அவரை நீ சந்தோஷமா சாக விட்டியா? மனசால அவரை என்னைக்கோ கொன்னுட்டே! யானை மாலைபோட்டு பிச்சைக்காரன்கூட ராஜா ஆகலாம். ஆனா, ராஜாவோட பிள்ளை பிச்சைக்காரனா ஆகக்கூடாது. நீ அப்படித்தானே இன் னைக்கு இருக்கே. உன்னைப் பெரிய வேலையில வெச்சப் பார்க்க நினைச்ச அவருக்கு, நீ தினக்கூலியா மூட்டை தூக்கி சம்பாதிக்கறதை எப்படி தாங்கிக்க முடியும்? அந்த வலியையும் வேதனை யையும் அனுபவிச்சதான் தெரியும். இப்ப உன் மனசு எப்படி பூரிச்சுப் போகுது? அந்தப் பூரிப்பை உன்னபெத்தவனுக்கு நீ கொடுக்கலையே முத்துராசு?''

வாத்தியாரின் வார்த்தைகள் ஒவ் வொன்றும் அவனை சாட்டை கொண்டு விளாசின. இதுவரை இருந்த பூரிப்பு சுமந்த முகம், யாரோ காறித்துப்பிய நிலையை அடைந்தது. கால்கள் அனிச்சையாக வீட்டை அடைந்தன.

கூடம் முழுவதும் மகன் சுப்புக் குட்டியைச் சுற்றி ஃபோட்டோ கிராஃபர் களும், பத்திரிக்கை, டீ.வி. நிருபர்களும். எல்லார் முகத்திலும் சிரிப்பு. முத்துராசுவின் கண்கள் கூடத்துச் சுவரில் மாலை சுமந்து காட்சியளித்த அப்பாவின் முகத்தில் நிலைத்தன.

அவர் முகத்தில் சிரிப்பு இல்லை.

அவன் முகத்திலும்தான்.

சிலரால் மட்டும் சந்தோஷம் வந்தாலும் அனுபவிக்க முடிவதில்லை.

வாங்க, பத்திரிகையாளர் ஆகலாம்!



நீங்க துடிப்புமிக்க பெண்ணா?

வெரிகுட்!

வயசு 25லிருந்து 35க்குள்ளா?

தூள்!

என்னது? எழுத்துத் துறையில் ரொம்ப ஆர்வமா?

அடடே!

பொது அறிவும் பல்துறை நாட்டமும் மிக்கவரா?

பேஷ்... பேஷ்!

அப்ப... நீங்கதான் நாங்க தேடிக்கிட்டிருக்கும் பெண்! கல்கி நிறுவன 'மங்கையர் மலர்' பிரிவில் ஆசிரியர் குழுவில் சேர்ந்து பணியாற்ற அருமையான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. உடனே, உங்க முழு சுய குறிப்புகளை, புகைப்படத்துடன் இணைத்து, எங்களுக்கு அனுப்புங்க! ஏற்கெனவே, ஏதாவது படைப்புகள் பிரசுரமாகியிருந்தால் அதையும் நகலெடுத்து அனுப்புங்க... உறையின் மீது 'பணி விண்ணப்பம்' என்று மறக்காமல் குறிப்பிட்டு மங்கையர் மலர் முகவரிக்கு அனுப்புங்க! ஆல் தி பெஸ்ட்!

(ஆர்)

சமீபத்தில் உறவினர் ஒருவரின் நான்கு வயது குழந்தை கீழே விழுந்து பல்லை உடைத்துக் கொண்டது. பதற்றம் பரபரப்பு. அருகிலிருந்த பல் மருத்துவரிடம் ஓடி... அப்பப்பா! எல்லாம் சரியான பிறகு, பல் மருத்துவர் கூறியதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பல் மருத்துவம்

காப்பாத்துங்க

''எல்லா பற்களும், குழந்தைகள் பற்கள் உட்பட நன்றாக கவனிக்கப்பட வேண்டும். நிறைய பெற்றோர்கள் குழந்தைகளின் பற்கள், விழுந்து முளைக்க வேண்டியவைதானே என்று அதிக கவனம் செலுத்துவது இல்லை... அது தவறு. குழந்தைகளுக்கு பொதுவாக வரும் அவசரகால ஆபத்துகள் (Common Emergencies)

1. பல் வலி
2. உதடு, நாக்கு மற்றும் கன்னப் பகுதியின் உட்புறம் காயம் ஏற்படுதல்
3. கீழே விழுந்து அடிபடுவதால் உடையும் பற்கள்
4. எதிலாவது மோதி தெறித்து விடும் பற்கள்.

முதலில் பல் வலி:

குழந்தை பல் வலி என்று சொன்னால் அலட்சியப்படுத்தாதீர்கள். நல்ல சுத்தமான தண்ணீரில் நன்றாக வாயைக் கொப்பளிக்கச் சொல்லுங்கள். ஏதாவது உணவுப் பொருட்கள் சிக்கியிருக்கக் கூடும்... அதை மெதுவாக எடுத்து விடவும். பிறகு அருகிலுள்ள பல் மருத்துவரிடம் அழைத்துச் செல்லவும். கிராம்பு, ஆஸ்பிரின் மாத்திரைகளை பற்களின் மீது வைத்து அழுத்தாதீர்கள்.

அடுத்து உதடு, நாக்கு இவற்றைக் கடிப்பதால் வலி :

குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் தொந்தரவு இது. அவசரமாக, விருப்பப் பட்டப் பொருட்களை சாப்பிடும்போது ஏற்படுவது. பொதுவாக இவை வெகு சீக்கிரம் ஆறிவிடும். நாக்கிலோ, உதட்டிலோ ரத்தம் வந்தால் உடனடியா ஐஸ்கட்டி ஒத்தடம் கொடுத்துவிடலாம். அல்லது சுத்தமான சிறு பாண்டேஜ் துணியால் உங்கள் விரலை உபயோகித்து அழுத்தம் கொடுத்து விட்டால் ரத்தம் நின்றுவிடும். ஆனால், 10 முதல் 15 நிமிடம்தான். அதற்குள் ரத்தம் நிற்காவிட்டால் வேறு யோசனையே வேண்டாம். உடனே பல் மருத்துவரிடம் செல்லவும்.

பற்கள் உடைந்து போவது:

குழந்தைகள் விளையாடும் சமயம் கீழே விழுவதும் பல் உடைவதும் மிகவும் சகஜமானது. அப்படி நேர்ந்தால் முதலில் வெதுவெதுப்பான நீரில் வாயைக் கொப்பளிக்க வைத்து விட்டால், உடைந்த பற்களின் துண்டுகளும் வெளியே வந்து விடும். உடனடியாக ஐஸ் ஒத்தடம் கொடுத்தால் முகம் வீங்காது இருக்கும்.

ஆனால், துளியும் படபடப்பு இல்லாமல், அதே சமயம் வேகமாகச் செயல்பட்டால் கீழே விழுந்த பல்லையே பொருத்தி (நிரந்தரப் பற்களாக இருந்தால்) பற்களைக் காப்பாற்ற முடியும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

உடனடியாக பல் மருத்துவரை அணுகுங்கள். கீழே விழுந்தவுடன் பற்கள் தெறித்து விழுந்திருந்தால் அந்த பற்களை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். பற்களை எடுக்கும்போது மேற்புறமாக (கடிக்கும் பகுதியில்) கைகளை வைத்து பிடித்துக் கொள்ளுங்கள். அடி வேர் பகுதியை

கைகளால் அழுத்தாதீர்கள். குழாயைத் திருப்பி ஓடும் நீரில் பல்லை அலசுங்கள். அழுத்தி தேய்க்காமல் மிக மெதுவாக பிடித்துகொண்டு அலசுங்கள்.

பல் மருத்துவரிடம் செல்வதற்குமுன் அந்த பல்லை சுத்தமான பாலில் அல்லது

1) குத்துச் சண்டை, 2) மல்யுத்தம்
3) வலைப்பந்து, 4) கால்பந்து
5) ஸ்குவாஷ், 6) ஸ்கேட்டிங்
7) பேஸ் பால்

இந்த விளையாட்டுகளில் ஈடுபடும் குழந்தைகளுக்கு ''மௌத் கார்டு''கள் மிகவும் அவசியம்.

சிறிய குழந்தைகள் இருக்கும் வீடுகளில் கூரிய நுனிகொண்ட நாற்காலிகள்,

ப்ளீஸ்!



குழந்தையின் எச்சலிலேயே போட்டு எடுத்து செல்லவும்.

இவ்வாறு செய்து ஒரு மணி நேரத்திற்குள் பல் மருத்துவரை அணுகினால் அதே பற்களைப் பொருத்தி விடலாம். பொதுவாக விளையாடும் குழந்தைகளுக்கே இவ்வாறு அடிபடுவதால் பல் மருத்துவர்கள் தற்போது 'மௌத் கார்டு' (Mouth guard) என்ற சாதனத்தை வாயில் பொருத்திக் கொள்ள கூறுகிறார்கள்.

''மௌத் கார்டு'' என்றால் என்ன?

இது பிளாஸ்டிக்கினால் ஆன மிருதுவான பொருள். பற்களின் மேற்புறம் பொருத்தப்படுவதால் பற்கள், உதடுகள் மற்றும் பொதுவான வாய் பகுதியை பாதுகாக்கிறது.

சோபாக்கள், தடுக்கி விடுகின்ற தரை விரிப்புகள் / கார்ப்பெட்டுகள் இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

சில குழந்தைகள், சில பாட்டில் மூடிகளை பற்களால் நெம்பி திறக்க முயற்சிக்கும். அதைக் கண்டிப்பாக தவிர்க்க அறிவுரை கூற வேண்டும்.

அதுபோல கூரிய முனையுடைய போர்க் மற்றும் ஸ்பூன்களையும் தவிர்க்கவும்.

குழந்தைகளின் தன்னம்பிக்கைக்கு அழகிய பற்கள் மிகவும் கைகொடுப்பதால் கண்டிப்பாக பெற்றோர்கள் மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

- எல். புவனா,
திருப்பூர்

வெகு நாட்களாக எனக்கு ஓர் ஆசை. எல்லாரும் அமெரிக்காவைப் பற்றி மிகவும் சிலாகித்து எழுதுகிறார்கள். சொர்க்கபூமி போல சகல வசதிகள், சௌக்கியம், சுத்தம், சுகாதாரம் ஒன்றுக்கும் குறையேயில்லை, பெரிய பெரிய மால்கள், கடைகள், கண்கொள்ளாக் காட்சியாகக் கார்கள் அணிவகுத்துச் செல்வது



அது இல்லைன்னா...

போக்குவரத்து ஒழுங்கு முறைகள், சுத்தமான தண்ணீர், பால், காய்கறி, பழதினுசுகள், நெடுந்தூரம் செல்பவர்களுக்கு ஆங்காங்கே ரெஸ்ட் ஏரியா, வயதானவர்களுக்கு வசதிகள். குழந்தைகளுக்குப் படிப்பு சலுகைகள் இன்னும் என்னவெல்லாம் இருக்கின்றன.

அடேங்கப்பா! ஹாலோவீன் வேடிக்கைகள் என்ன... கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் என்ன... என நமக்கு ஆச்சரியத்தையும் மனதில் பூரிப்பையும் ஏற்படுத்துகின்றன. இன்னும் எத்தனையோ விஷயங்களை எல்லோரும் விவரித்து அழகாக எழுதி வருகின்றனர்.

ஆனால், ஒரு முக்கியமான விஷயம். இங்கே வருபவர்களுக்கு உடம்புக்கு என்று வந்து விட்டால் என்னவெல்லாம் கஷ்டம் என்பதைக் கண்டு, கேட்டு அனுபவித்தவர்களுக்குத் தான் உணர முடியும்.

நானும் என் கணவரும் முதன் முறையாக அமெரிக்காவில் நியூஜெர்சி வந்து இறங்கினோம். என் மகன் வேலை கிடைத்து யு.எஸ். வந்து மனைவி குழந்தையுடன் இரண்டு பெட்ரூம் அபார்ட்மெண்ட்டில் இருந்தான். நாங்கள் புதிதாக அங்கு சென்றதால் ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் பற்றி அவ்வளவாய்த் தெரியாது. என் மகனும் விரிவாக அதுபற்றிச் சிந்திக்கவில்லை. நியூஜெர்சி வந்து ஒரு வாரம் ஆயிற்று. என் கணவருக்கு திடீரென்று காது முறம் போல் வீங்கி விட்டது. கன்னம், கழுத்து வரையில் பெரிய பெரிய கொப்பு ளங்கள் வந்து பயங்கரவலி உண்டாகி மிகவும் அவஸ்தைப் பட்டார். டாக்டரிடம் போகலாமா என்று என் மகனிடம் கேட்டேன். அவன் பீதியடைந்து நடுங்கிப் போய்விட்டான்.

அவஸ்தைதான்!

"ஐயோ அம்மா, இங்க, இந்தியா மாதிரி நினைச்சா டாக்டரிடம் போக முடியாது... அப்படியே போனாலும் யாரும் பார்க்க மாட்டாங்க. இன்ஷ்யூரன்ஸ் இல்லாம டாக்டரிடம் போக முடியாது... உனக்கு கை வைத்தியம் ஏதாவது தெரிந்தால் முதல்ல அத பண்ணு?'' என்றான்.

''அடப்பாவமே! மருத்துவ இன்ஷ்யூரன்ஸ் பற்றி எங்களுக்குத் தெரியாம போயிடுச்சே! சரி இப்ப என்ன கை வைத்தியம் பண்றது?'' என அழுது புலம்பினேன். சிறிது சிறிதாக வலி அதிகமாகி அவரும் ரொம்பவும் கஷ்டப்பட்டார். அவர் முகத்தைப் பார்க்கவே மிகவும் கஷ்டமாக இருந்தது.

இது என்ன நோய் என்றே புரியாமல் என் மகன் ஏதேதோ படித்துப் பார்த்ததில் 'ஹெர்பெஸ்' (Herpes) எனும் கடுமையான நோய், நம் ஊரில் 'யானை அக்கி' என்று சொல்வோமே. யார் யாரையோ விசாரித்தும் ஒன்றும் பயனில்லை.

என் மகன் ஒரு நாள் லீவு போட்டு விட்டுக் காரில் 25 மைல் ஓட்டிச் சென்று இந்திய டாக்டரிடம் அழைத்துப் போனான். டாக்டர் மிகவும் நல்லவர், தெய்வம்போலக் கிடைத்தார். '' ஆயிரத்தில் ஒருவருக்குத் தான் வரும். பயங்கரத் தொற்று நோய். வீட்டில் உள்ள அனைவரும் ஜாக்கிரதையாய் இருங்கள். யு.எஸ். நியதிப்படி இன்ஷ்யூரன்ஸ் இல்லாம பார்க்கக் கூடாது. மனிதாபிமானத்தால் வைத்தியம் செய்கிறேன்'' என்று சொன்னார். பதினைந்து நாட்களில் நல்ல குணம் தெரிந்தது நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

ஒரு பர்த்டே பார்ட்டிக்கு நாங்கள் போயிருந்தோம். அங்கே சென்னையிலிருந்து உறவினர் ஒருவர் வந்திருந்தார். அவர் யாருடனும் பேசாமல், ஏதோ அவஸ்தையுடன் வாயைத் திறக்காமல் இருந்தார். அவரை விசாரித்ததில் அவருக்குப் பல்வலி வந்து ஒரு வாரமாகக் கஷ்டப்படுகிறார் என அறிந்தேன். இன்ஷ்யூரன்ஸ் இல்லை. டாக்டரிடம் போக முடியாது என்பதால் இண்டியன் ஸ்டோரில் கிராம்புத் தைலம், மெடிகல் ஷாப்பில் கிடைக்கும் மருந்துகள் வாங்கிப் போட்டு குணமாகாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார். பார்க்கவே ரொம்பப் பாவமாய் இருந்தது.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி தன் மகளின் பிரசவத்துக்கு ஒத்தாசை செய்ய டல்லஸ் வந்தார். வந்த நாலாவது நாளில் பூங்கா பக்கம் வாக்கிங் போனார். அமெரிக்கர் ஒருவர் அழைத்து வந்த நாய் ஒன்று, மாமியைக் கண்டதும் புடைவை அதிசயமாகப்படவே, தாவி வந்து காலைக் கடித்து விட்டது. அவ்வளவுதான். மருமகன் திண்டாடிப் போய் எமர்ஜென்சியில் அட்மிட் செய்ததில் லட்ச ரூபாய் மெடிகல் பில் வந்தது.

ஆகவே, பெண் பிள்ளைகளைப் பார்த்து அவர்களுடன் அமெரிக்கா வாழ்க்கையை என்ஜாய் பண்ண நினைத்தால் முறையான இன்ஷ்யூரன்ஸுடன் வாருங்கள். நீரிழிவு, இரத்த அழுத்தம் இருப்பவர்கள் வழக்கமாக எடுத்துக் கொள்ளும் மாத்திரைகளை எவ்வளவு நாள் இங்கே இருப்பீர்களோ அதைக் கணக்குப் பண்ணி கொண்டு வரவும். ஒரு மாத்திரை குறைந்தாலும் இங்கே வாங்க முடியாது. பல், கண், சோதனைகள் எல்லாம் செய்து கொண்டு வந்துவிடுவது நல்லது!

- தங்கம்ராமசாமி, யு.எஸ்.ஏ

இன்று மார்க்கெட்டில் பல வண்ண பாட்டில்களில் பல தரப்பட்ட க்ளீனர்கள் விற்பனை ஆகின்றன. அந்தக் கடுமையான ரசாயனங்கள் வீட்டை ஒரு நொடியில் பளபளப்பாக்கி விடுகின்றன. ஆனால், அவற்றில் எவ்வளவு விஷப்பொருட்கள் கலந்துள்ளன, அவற்றால் ஏற்படும் பாதிப்புகள், நோய்கள் அலர்ஜிகள் என்ன என்பதை எல்லாம் ஆராய யாருக்கும் நேரமில்லை. உங்கள் குடும்பத்தினரின் மேல் உண்மையான அக்கறை கொண்டவரென்றால், நீங்கள் உடனே மாற வேண்டிய தருணம் இது. இயற்கையான பொருட்களைக் கொண்டு சுத்தம் செய்வதுதான் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் இந்த பூமித் தாய்க்கும் நல்லது.



க்ளீனிங் ரசாயனங்களா?

1) பாதுகாப்பும் ஆரோக்கியமும்:

பெரும்பாலான க்ளீனிங் பொருட்களில் கொடூரமான விஷப் பொருட்களும், கேடு விளைவிக்கும் இரசாயனங்களுமே நிறைந்துள்ளன. இவை வாய் மூலமாகவும் உடம்புக்குள் எளிதாக நுழைந்து விடுகின்றன. பின் இதயம், மூளை, நுரையீரல், கிட்னி ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தி, பல அச்சுறுத்தும் நோய்களை உண்டாக்கின்றன.

இயற்கை பொருட்கள் தீங்கு விளைவிக்காதவை. மார்க்கெட்டில் விற்கும் க்ளீனர்களை விட நன்றாகவே வீட்டை சுத்தம் செய்யும்.

2) சுற்றுச் சுழலுக்கு ஏற்றது:

பெரும்பாலான க்ளீனர்கள் காற்றையும், நிலத்தையும் மாசுபடுத்துகின்றன. இயற்கைப் பொருட்களோ விஷமில்லாதவை; எளிதில் மக்கி விடுபவை; சுற்றுச் சூழலுக்கு உகந்தவை; பேக்கேஜிங் குப்பைகளும் வராது.

3) பணம் மிச்சம்:

ராக்கெட் போல் ஏறி வரும் விலைவாசியில் இயற்கையான பொருட்களால் சுத்தம் செய்தால், கணிசமான பணமும் மிச்சமாகும். விஷத்தன்மையிலிருந்தும் எல்லோரையும் காப்பாற்றலாம்.

வீட்டைச் சுத்தப்படுத்தும் விஷத்தன்மையற்ற பொருட்கள்

வினிகர்: பூஞ்சைக் காளான், கறை, க்ரீஸ், மெழுகு ஆகியவற்றை நீக்கும். எல்லாவிதப் பொருட்களையும் சுத்தம்



உஷார்!

செய்யும்.

எலுமிச்சை சாறு: துர்நாற்றம் போக்கும். கண்ணாடிப் பொருட்களை பளிச்சிடச் செய்யும். கறைகளை விரட்டும்.

நறுமணத் தைலங்கள்: (ட்ரீ ஆயில், லாவண்டர் ஆயில், லெமன் ஆயில் போன்றவை) சுகந்த மணம் பரப்பும், கிருமி நாசினி, பூஞ்சை தடுப்பான்.

பேக்கிங் சோடா: அமிலத்தைச் சமப் படுத்தும். துணிகளை மிருதுவாக்கும். கறைகளைப் போக்கும். துர்நாற்றத்தை விரட்டும். உலோகத்தை பாலிஷ் செய்யும். ப்ளாஸ்டிக்கைச் சுத்தப்படுத்தும்.

போராக்ஸ் : துர்நாற்றம் போக்கும். பூஞ்சைக் காளான்களை ஒழிக்கும். கறை நீக்கும்.

கார்ன் ஸ்டார்ச்: கறைகளை ஒழிக்கும்.

வாஷிங்சோடா: க்ரீஸ் நீக்கும். துணி களைச் சுத்தமாக்கும்.

வீட்டைச் சுத்தமாக்க சில பாட்டி குறிப்புகள்:

● ஏர் ஃப்ரெஷ்னர்: திரைச் சீலைகள், பல்புகளின் மேல் நறுமணத் தைலங்களைத் தடவ லாம்.

● ஆரஞ்சு பழத் தோலை பாத்ரூமின் மூலையில் போட்டு வைத்தால், சுகந்த மணம் வீசும்.

● குப்பை வாளியின் அடியில் கால் கப் போரக்ஸைத் தூவி விட்டால், பாக்டீரியா, பூஞ்சைக் காளானின் வளர்ச்சி தடுக்கப்பட்டு, துர்நாற்றம் ஓடிவிடும்.

● **ஆல்-பர்பஸ் க்ளீனர் :** நான்கு டேபிள் ஸ்பூன் பேக்கிங் சோடாவுடன் ஒரு லிட்டர் இளஞ்சூடான நீரைக் கலந்து நன்றாகக் குலுக்கி வைத்தால், எல்லா வகை தரை, டாய்லெட் ஆகிய வற்றைச் சுத்தம் செய்ய உபயோகிக்க லாம்.



சற்று முன் நடந்தது!



வீதியோர பிச்சைக்காரன் பசிக்
கொடுமையால்
மயங்கி, நட்ட நடுவீதியில் ஆடை
கலைந்து
அலங்கோலமாய் விழுந்தான் - வேகமாய்
நகரும் மனிதர் கூட்டம் நிற்க நேரமின்றி
அவனைக் கடந்து சென்றது -
அவனையே
சுற்றிச் சுற்றி வந்து ஊளையிட்டு
அழுகின்றது
அவனின் ஒரு கவளச் சோற்றை என்றோ
உண்ட நன்றியுள்ள நாய்!!

- பிரசன்னா வெங்கடேஷ், நவி மும்பை

● **கிருமிநாசினி:** அரை கப் போரக்ஸுடன் மூன்று லிட்டர் சுடு தண்ணீரை ஊற்றிக் கலந்தால், சிறந்த கிருமி நாசினி தயார்.

● **ட்ரெய்ன் க்ளீனர்:** அரை கப் பேகிங் சோடாவை கழிவுநீர்க் குழாயில் கொட்டவும். கூடவே அரை கப் வெள்ளை வினிகரை ஊற்றவும். குழாயை மூடி வைத்து, கால் மணி நேரம் கழிந்த பின், ஐந்து லிட்டர் சுடுதண்ணீரை ஊற்றி விடவும்.

● **உலோக பாலிஷ்:**

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்: தண்ணீர் கலக்காத வினிகரைப் பயன்படுத்தவும்.

செம்பு: ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை நிரப்பி, அதில் செம்பு, பித்தளைப் பொருட்களைப் போட்டு ஒரு கப் வெள்ளை வினிகர், ஒரு டேபிள் ஸ்பூன் உப்பு சேர்த்து கொதிக்க வைக்கவும். பின் எடுத்து தேய்த்துக் கழுவினால், செம்புப் பொருட்கள் பளிச் பளிச்.

● **ஓவன் க்ளீனர்:** ஓவனின் சுற்றுப்புறம், உள் பகுதியை இலேசாக ஈரப்படுத்தவும். அதன் மேல் பேகிங் சோடாவைத் தூவி விட்டு, சிறிது நேரம் கழித்து ப்ரெஷ்ஷால் தேய்த்து சுத்தம் செய்தபின், துணியால் துடைத்துவிடவும்.

● **டாய்லெட் க்ளீனர்:** கால் கப் பேக்கிங் சோடாவுடன் 1 கப் வினிகரைக் கலக்கவும். டாய்லெட் பவுலுக்குள் ஊற்றவும். ஐந்து நிமிடங்கள் கழித்து, ப்ரெஷ்ஷால் தேய்த்துக் கழுவவும்.

கறை நீக்கி: வீட்டில் கைவசம் ஒரு சின்ன பாட்டில் ஆல்கஹாலை வைத்திருக்கவும். டைனிங் டேபிள், மர சாமான்களில் ஏதாவது கறை ஏற்பட்டு விட்டால், ஒரு பஞ்சில் ஆல்கஹாலை நனைத்து, அதன் மேல் தேய்த்தால், கறை ஒரு நொடியில் காணாமல் போய்விடும். துணிகளில் ஏற்படும் இங்க் கறைகளை ஆல்கஹால் சுலபமாக நீக்கிவிடும்.

- தஸ்மிலா அஸ்கர், கீழக்கரை

யோசனை

பார்த்துப் பார்த்து செய்யணும்!

என் தோழி லக்ஷ்மியை அடிக்கடி கடைத் தெருவில் சந்திப்பேன். ஒவ்வொரு முறையும் பெரிய பையில் ஏதாவது எடுத்துக்கொண்டு அலைவாள்.

''என்ன?'' என்று கேட்டால், ''குக்கரின் கைப்பிடி கழன்றுவிட்டது, ஸேஃப்டி வால்வ் வேறே மாத்தணும்'' என்பாள். அடுத்து சில நாளில் ''மிக்ஸி ஸ்விட்ச் சரியில்லை'' என்பாள். ''காஸ் அடுப்பு வால்வ் வேலை செய்யவில்லை'' என்று சொல்வாள்.

ஒரு முறை நான் கேட்டேன், ''என்ன லக்ஷ்மி, அடிக்கடி இப்படி ரிப்பேர் பண்ண வரயே! உனக்கு மட்டும் என்ன ஆகிறது? செய்யறே?'' என்றேன்.

''இல்லை. எல்லாம் வேலைக்காரிதான் தேய்த்து சுத்தம் செய்வாள். சும்மாவா! 500 ரூபாய் சம்பளம் கொடுக்கிறேனே... என்றாள்.

அதற்கு நான், ''வேலைக்காரி பத்து வீட்டுக்கு வேலைக்குப் போகணுமே என்று அவசர அவசரமாக முரட்டுத்தனமாகத்தான் வேலை செய்வாள். குக்கர் மூடியை நாம் தான் பார்த்துத் தேய்க்கணும். ஸேஃப்டி வால்வ் பக்கம் அழுத்தித் தேய்க்கக்கூடாது. மிக்ஸி, கிரைண்டர், காஸ் அடுப்பு எல்லாமே ஸ்விட்ச் உள்ள இடங்களில் தண்ணீர் உள்ளே போகாமல் துடைக்கணும். இப்படியெல்லாம் பார்த்துப் பார்த்து செய்ய வேலைக்காரிக்கு நேரம் இருக்காது. சம்பளம் அதிகம் தரேன்னு சொல்றியே, ரிப்பேர் செலவு ஒவ்வொரு முறையும் எவ்வளவு ஆகிறது!'' என்று அவளுக்கு எடுத்துச் சொன்னேன்.

''இனி இதையெல்லாம் நானே செய்து கொள்கிறேன். நீ சொன்ன பிறகுதான் எனக்கு புரிந்தது! தேங்க்ஸ் உமா'' என்றாள் லக்ஷ்மி!

- உமா மணி, கரூர்



திருப்பாவையில் கண்ணனின் மனைவியான நப்பின்னை பிராட்டியை துயிலெழுப்பும் பாடலான 18-ஆம் பாடல் ராமானுஜருக்கு மிகவும் பிடிக்கும். அவரது ஆசாரியரான பெரிய நம்பியின் வீட்டுக்கு அவர் சென்றார். வாசலில் நின்று **'உந்துமத களிற்றன், ஓடாத தோள்வலியன்'** என்ற பாடலைப் பாடினார். கதவைத் தட்டியதும், வளைகுலுங்க நம்பியின் திருமகள் 'அத்துழாய்' கதவைத் திறந்தாள். அவளைப் பார்த்ததும் அப்படியே மயங்கி விழுந்து விட்டார் ராமானுஜர். பதறிப்போன அத்துழாய், தந்தையிடம் சேதி சொல்ல 'உந்துமதகளிறு அனுஸந்தானமாயிருக்கும்' என்றாராம்.

அதாவது, கதவைத் திறந்த பெண் மணியை நப்பின்னை பிராட்டியாகவே கருதி அவ்வாறு மயங்கிவிட்டாராம் ராமானுஜர். பெண்மையை தெய்வமாகப் போற்றிய அக்கால கலாசாரம் மீண்டும் வரவேண்டுமென மார்கழியில் கண்ண பரமாத்மாவை மனமுருகிப் பிரார்த்திப்போம்.

ராமானுஜருக்குப் பிடித்த பாடல்!





ஆங்கிலத்தில் திருவாசகம்!

'திருவாசத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி. இதற்கு வெளிநாட்டாரும் விதிவிலக்கல்ல. இங்கிலாந்திலிருந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப இந்தியா வந்த ஜி.யு.போப் என்ற அறிஞர் தமிழ் கற்றார். அப்போது அவருக்கு மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகத்தைப் படிக்கும் வாய்ப்பு கிட்டியது. அதன் நடையில் சொக்கிப்போன போப், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் தன்னை 'மாணிக்கவாசகரின் மறு பிறவி' என சொல்லிக்கொண்டார்.

சிறப்பு வாய்ந்த திருவாசகத்தை மார்கழி மாதத்தில் படித்து பயன் பெறுவோமாக.

- எஸ்.நிரஞ்சனி,
மௌலிவாக்கம்

பத்தே நெத்து... பளபள நெத்து!



பள்ளி விடுமுறை விட்டதும் சிறு பெண்கள் எல்லோரும் ஏழு கல் எடுத்து விளையாடுவோம். ஒவ்வொரு கல் எடுத்து விளையாடும்போதும் ஒவ்வொரு பாட்டுப்பாடித்தான் விளையாடுவோம்.

ஓரி உலகெல்லாம், உலகெல்லாம்
சூரியன்
சூரியன் தங்கைக்கு சுந்தரவல்லிக்கு
மாயக் கழிச்சிக்கு நாளை கலியாணம்

ஈரி இரண்டு மாதா இரண்டு
மல்லிகைப்பூச் செண்டு

மூணு முடிச்சு முடிச்சிட்ட கொப்பு
சிடுக்கு வாரி

நாலு வேதம் என்னடி நாகரிகம்
என்னடி
பெண்ணுக்கு சிங்காரம் என்னடி

ஐவக் கண்ணி காக்கா அரைச்ச
மஞ்சளைக் கேக்கா

ஆக்குறு குறுகுறு அள்ளிப்போட்ட
வேக்குறு

ஏழே எழுதி எழுதின புழுதி
தென்னக்காட்டு கலதி
தெருக்கலதி

எட்டாராயர் கூட்டமாம்
காந்திராயர் கூட்டமாம்
கள்ளனைக் கண்டால் ஓட்டமாம்

ஒன்பத்தி சம்பா
சம்பந்தி கும்பா
சமச்சுப் போட்டா திம்பா

பத்தே நெத்து பளபள நெத்து
தளதள நெத்து
கவோரி கொத்து
பத்தே பதிபதி பழத்தை நெறி
நெறி
கொக்கோ கொறி கொறி
சொக்க நாதருக்கு சோத்தை
வடிவடி.

- சி.சந்திரா, மடிப்பாக்கம்

கிராமிய விளையாட்டு

காய்கறிக் கடையோரம் ஸ்கூட்டரை நிறுத்தினாள் மீனா. கடை என்ன பெரீ.....ய கடை... விசாலமான அரசமரம். அதைச் சுற்றி அமைக்கப்பட்ட வட்ட வடிவமான மேடை. அதுதான் வேலுவின் கடை. இவளைப் பார்த்ததும் சுறுசுறுப்பாக மெல்லிய கோணிகளை மேடையில் விரித்து, அவற்றின் மீது தண்ணீர் தெளித்து, மூட்டைகளிலிருந்த காய்கறிகளைக் கொட்டி அவசர அவசர மாகப் பரப்பினான்.

''என்ன இவ்ளோ லேட்டா கடை பரப்பறே வேலு?''


''ஊட்ல சம்சாரத்துக்கு ஒடம்பு சரில்லம்மா... டாக்டராண்ட போய்ட்டு வரேன்... அதான் லேட்டு!''

சாய்த்து நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளின் இரு பக்கங்களிலும் தொங்கும் காய்கறி மூட்டைகளை அவனது பத்து வயது மகன் தூக்கமாட்டாமல் தூக்கி வந்து மேடை மீது வைத்தான். வழக்கமாக அவள் வரும்போது அவன் மரத்தடியிலமர்ந்து உடம்பை வளைத்து வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருப்பான்.

மரப்பொந்தில் கைவிட்டு துணிப்பை யொன்றிலிருந்து தராசையும் எடைக் கற்களையும் எடுத்தான் வேலு. தராசை உயர்த்திப் பிடித்து கண்களை மூடி இரண்டொரு நிமிடம் என்னவோ முணுமுணுத்தான். நல்லபடி வியாபாரம் அமைய, பிரார்த்தனை போலும்!

''ம்... போணி பண்ணும்மா, உங்கை யாலே!'' வீட்டு விவரங்களையும் நாட்டு நடப்புக்களையும் விமர்சித்தபடியே காய்களை அள்ளிப் போட்டான். வாய்தான் பேசியதே தவிர, கண்களும் கைகளும் மளமளவென்று இயங்கின.

''முப்பத்தியெட்டு ரூவா எழுபத்தஞ்சு



சுமதி சுப்ரமணியன்

பைசா... முப்பத் தஞ்சு ரூபா கொடு!'' என்றபடி, கமகமக்கும் கொத்தமல்லி, கறிவேப்பிலை, இஞ்சி - பச்சை மிளகாயை பையில் எஞ்சியிருந்த இடுக்கில் அடக்கினான், கொசுறு!

குட்டிப் பையன், படிப்பை சற்றே நிறுத்தி வைத்து இவளது காய்கறி பையை ஸ்கூட்டர் வரை தூக்கி வந்தான். இவள் சௌகரியமாக அமர்ந்துகொண்டு வண்டியைக் கிளப்பும்வரை பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்தான். பின்பு திரும்பி ஓடினான்.

மறுநாள் வழக்கம் போல வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் மீனா. அட, இங்கே என்ன கூட்டம்? 'பளிச்' என்ற குழல் விளக்குகளும் வண்ணமயமான பெயர் பலகையும் புது கடையின் வரவைப் பறைசாற்றிக்கொண்டிருந்தன. நுழைவாயிலில் சீருடை அணிந்த சிப்பந்திகள், கையேடுகளைப் பரபரப்பாக வினியோகித்தபடி... கடந்த சில நாட்களாகவே இங்கு கட்டட வேலைகள் நடந்து வருவதை அறிந்திருக்கிறாள்; ஆனால் கூர்ந்து கவனித்ததில்லை. ஆவல் உந்த, வண்டியை ஓர் ஓரத்தில் நிறுத்திப் பூட்டிவிட்டு மீனாவும் கடைக்குள் நுழைந்தாள்.

'சில்'லென்று குளிரூட்டப்பட்ட





பூர்ணாபிஷேகம்!

டி.எம்.சங்கரய்யர் (100)
ஜானகி சங்கரய்யர் (90)
-பவானி

பிரம்மாண்டமான கடை கண்முன் விரிந்தது. அடடா... எத்தனை எத்தனைப் பொருட்கள்! பசுமையின் பல்வேறு நிறங்களில் பலப்பல காய்- கனிகள்! அரிசி - பருப்பு வகைகள், அழகு சாதனங்களின் அணிவகுப்புகள்... வழவழ தரையில் வண்டியோட்டியின் லாகவத்துடன் ட்ராலி களை அங்குமிங்கும் செலுத்தி, கண்ணில் பட்டவற்றை அள்ளிப் போட்டு பைகளை நிரப்பும் மனிதர்கள்!

''இத வாங்கிப் போம்மா... 'பச்'சுன்னு இளசா இருக்கு பார்...!'' என்று பரிந்துரைப் பார் யாரும் இன்றியே, சுறுசுறுப்பாக நடக் கும் வியாபாரம்.

எடைபோட ஒரு வரிசை, பின்பு 'பில்' போட மற்றொரு வரிசை. சீருடை அணிந்த இளைஞிகள் சீரியஸான முகத்துடன் கம்ப்யூட்டரை தட்டிவிட்டு அது உமிழும் நீண்ட நாக்கு 'பில்'லை 'டர்ர்...' என்று கிழித்துக் கொடுக்க, விலையைச் சரிபார்க் காமல் பணம் தந்துவிட்டு நகர்ந்து கொண்டிருந்தது, மக்கள் கூட்டம்.

மீனாவும் பெரியதொரு ப்ளாஸ்ட்டிக் பையில் நிரப்பிய பொருட்களைத் தூக்கி வந்து ஸ்கூட்டரில் ஏறி, வீடு போய் சேர்ந்தாள். மனதில் ஏனோ மன உறுத்தல்... சரியா, தப்பா...?

ஒரு வாரம் ஓடியே விட்டது. மரத் தடியில் வழக்கம்போல கடை பரப்பிக் கொண்டிருந்த வேலு, ஸ்கூட்டரின் ஓசை கேட்டு தலை நிமிர்ந்தான்; முகம் மலர்ந் தது.

''எங்கம்மா, ஒரு வாரமா காய்வாங்க வரல?''

''ம்... ஊருக்குப் போயிருந்தேன்...!'' காய்களைப் பொறுக்கலானள் மீனா.

''பாரும்மா, பொறுக்கவே வாணாம்... அத்தினியும் பிஞ்சு... ஒரு கிலோ போடவா...?'' கையால் அள்ளி பையில் நிரப்பினான். வழக்கமான மனக்கணக்கு தான். அவள் மனத்தில் இப்போது உறுத் தல் இல்லை!

சிதைந்த கனவுகள் !



புகை வண்டிக்குள்
தரை துடைத்து
காசுக்காகக் கையேந்துபவன்

சில்லறைக்காக வாய்பிளந்து
தார்ச் சாலையில்
படம் வரைபவன்

குப்பைக்கூளம் கிளறி
பிளாஸ்டிக் பைகள்
பொறுக்குபவன் -

ஒரு பாக்கெட் சாராயத்துக்காக
பிணங்களுக்கு முன்
நடனமாடுபவன் -

உடல் முழுவதும் வெடிகுண்டு
பொருத்தி
நொடியில் வெடித்துச்
சிதறிப் போனவன் -

தலைவர் வாழ்கவென்று
சொல்லிக் கதறியபடி
தீயில் கருகியவன் -

தற்கொலைப் பாறையில்
ஏறிக் குதித்துக்
காணாமல் போனவன் -

இப்போது
என்ன செய்கிறார்கள்
பாவம்
ஆயிரம் கனவுகளுடன்
இவர்களைப் பெற்றெடுத்த
அம்மாக்கள்?

- அனார்கலி,
தஞ்சாவூர்

நிஜ சம்பவம்

13 பெண்களும் ஒரு வைர நெக்லஸும்!



ஒரு நகையை இரவல் வாங்கியதால், இரு சிநேகிதிகளுக்கிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் பற்றி, சிறு வயதில் ஓர் ஆங்கில கதையில் படித்திருக்கிறோம். ஆனால், ஒரு வைர நெக்லஸ், முன்பின் தெரிந்த, தெரியாத 13 பெண்களை, மிக ஆழமான நட்பு வட்டத்தில் இணைத்து, அவர்கள் வாழ்க்கையில் வரவேற்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது என்ற, மனதைத் தொட்ட உண்மைச் சம்பவத்தை, சமீபத்தில் இண்டர் நெட்டில் படித்தேன்.

ஐம்பத்தெட்டு வயதான ஜோனல், அமெரிக்காவில் கலிஃபோர்னியாவில் வசிக்கிறாள். அவளது கண்களை, பிரபல நகைக் கடையில், பார்வைக்கு வைத்திருந்த ஒரு வைர நெக்லஸ் பறிக்கிறது. உள்ளே நுழைந்து, அதன் விலையைக் கேட்டாள். 118 வைரக் கற்கள் பதித்த, 15.24 கேரட் மதிப்பிலான அந்த நெக்லஸின் விலை என்ன தெரியுமா? 37,000 அமெரிக்க டாலர்கள்! (சுமார் 15 லட்சம் ரூபாய்). ஜோனல் அசந்து போனாள். இவ்வளவு விலை கொடுத்து யார்தான் வாங்குவார்கள்? அவளால் நிச்சயம் முடியாது. பெருமூச்சு விட்டுக்கொண்டே திரும்பிவிட்டாள்.

ஆனாலும், அவள் மனதை, அந்த நெக்லஸ் முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டது. சில வாரங்களுக்குப் பிறகு அதே கடைப் பக்கம் போனபோது, 'பளிச்' என்று, ஓர் ஐடியா வந்தது. என்னால் இவ்வளவு விலை கொடுத்து வாங்க முடியாமல் போனாலும், இன்னும் 11 அல்லது 12 பெண்களுடன் சேர்ந்துகொண்டு, ஆளுக்கு 1000 டாலர்கள் போட்டு, பேரம் பேசி, வாங்கலாமே என்று யோசித்தாள்.

சில வாரங்களில், ஜோனலின், சிநேகிதிகள், அவர்களுடைய சிநேகிதிகள் என்று 12 பேர் ஒன்று சேர்ந்தனர். எல்லோரும் ஒன்றாகக் கடைக்குச் சென்றார்கள். கடையின் சொந்தக்காரர் டாம், அந்த 12 பெண்களைக் கண்டதும் அசந்துவிட்டார். கடைசியாக 15,000 டாலர்களுக்கு வாங்குவதாகச் சொன்னாள். உடனே, டாம் அவளிடம், தன்னுடைய மனைவி பிரிஸில்லாவையும், அவர்களுடன் சேர்த்துக் கொண்டால், விற்பனையை முடித்து விடலாம் என்றார். ஜோனலுக்கோ, ஒரே சந்தோஷம். இப்போது 13 பேர் ஆகிவிட்டார்கள். மீதி 2000 டாலர்களையும், எல்லோரும் பகிர்ந்து கொண்டு, நெக்லஸை வாங்கி விடலாமே!

ஒரு வழியாக, நெக்லஸ் வாங்கியாகி விட்டது. அது இப்போது 13 பெண்களுக்குச் சொந்தம். அவர்கள் வயது, 50 முதல் 62 வரை. சிலர் பட்டதாரிகள். சிலர் பள்ளிப் படிப்புதான் முடித்திருந்தனர். பார்க்கும் வேலைகளோ, வியாபாரம், விவசாயம், மருத்துவம், டீச்சிங், அலுவலக வேலைகள் என்று பலவிதம்.

எப்படி எல்லோரும் ஒரே நகையை அணிந்து கொள்வது? யோசித்து ஒரு முடிவு எடுத்தார்கள். அதாவது, அவரவர்கள் பிறந்த நாள் மாதத்தில் நெக்லஸ் அவர்களிடம் இருக்க வேண்டும். அடுத்தவரிடம் கொடுக்கும் போது, எல்லோரும் ஒரு முறை கூட வேண்டும். இன்ஷ்யூரன்ஸ் கட்டணத்தை எல்லோரும் பகிர்ந்து கொண்டனர்.

முதலில் அந்த நெக்லஸ், ஒரு மருத்துவமனையில் வேலை பார்க்கும் 56



வயதான பேட்டிசேனிடம் போய்ச் சேர்ந்தது. அவளால் நம்ப முடியவேயில்லை. எங்கு சென்றாலும் அணிந்துகொண்டே சென்றாள் காரணமே இல்லாமல், சும்மா, சும்மா சாமான்களை வாங்கிக் குவிக்கும் அவள், நெக்லஸ் வந்தபின், அறவே மாறிவிட்டாள். வேறு எந்தப் பொருளும் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. வாங்கவேண்டும் என்றும் அவளுக்குத் தோன்றவில்லை. மாறாக, தன்னிடம் தேவைக்கு அதிகமாக உள்ள, பலவற்றையும் தானம் செய்து விட்டாள்.

மேரி ஆஸ்பார்ன்னோ, ஓய்வு நேரத்தில் குடிப்பழக்கத்துக்கு அடிமை ஆகிவிட்டவர்களைத் திருத்தும் miracle house என்ற அமைப்புக்கு, தன்னால் ஆன உதவிகளைச் செய்வாள். நெக்லஸ் குரூப்பில் சேர்ந்த பிறகு, மற்ற 12 பெண்களுடன் சேர்ந்து, அந்த அமைப்புக்காக, நிதி உதவி நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, 7500 டாலர்கள் திரட்டிக் கொடுத்தாள். அது குடிப்பழக்கத்துக்கு அடிமையாகிவிட்ட பெண்களின் மருத்துவச் செலவுக்கு உதவியது.

59 வயதான, ராஸ்வார்னர் திருமணமாகி 5 வருடங்களில் கணவனை இழந்தபின், மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவர் ஆனவள். மருத்துவமனையில் எப் போதும்

ஆண்களுடன் வேலை செய்யும் அவளுக்கு, இந்தப் பெண்களின் சிநேகிதம் நல்ல மாறுதலைத் தந்தது. மற்ற பெண் கள், அவள் டாக்டர் என்பதால், நிறைய மரியாதை கொடுத்தனர். அவள், கலைஞர் களுக்காக, குறைந்த செலவில் வீடு கட்டு வதற்கு, ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து நிதி உதவி திரட்டிக் கொடுத்ததால், அந்த மரியாதை இன்னும் அதிகமாகியது.

இப்போது, எல்லோருமே, தங்களு டைய சக்தியைப் புரிந்துகொள்ள ஆரம் பித்தனர். ஒருவருக்கொருவர் ஊக்குவிப் பது, உதவி செய்வது மட்டும் அல்லாமல், 13 பேரும் ஒன்று சேர்ந்தால் சமுதாயத்துக் கும் நல்ல காரியங்களைச் செய்யும் சக்தி தங்களிடம் இருப்பதை உணர்ந்தனர்.

நான்ஸி ஹஃப் கணவனுக்கு, வீட்டுக்கு வந்தவுடன் டி.வி. பார்ப்பதற் குத்தான் நேரம். அவளுடன் வெளியில் செல்லவோ, பேசவோ நேரம் இல்லை. மற்ற பெண்கள் எல்லாம் தங்கள் கணவன் மார்களுடன் வெளியே செல்வதைப் பார்த்து பெருமூச்சு விடும் நான்ஸிக்கு இந்த நெக்லஸ் குரூப் ஒரு வரப்பிரசாத மாக அமைந்தது. அவளுடைய குறையும் நீங்கிவிட்டது. கணவனுடன் வெளியில் செல்லாவிட்டால் என்ன? புதிய சிநேகிதி கள், வெளியில் செல்ல வாய்ப்புகள் எல்லாம் கிடைத்துவிட்டனவே! நான்ஸி யின் வாழ்க்கையில் திரும்பவும் உற்சா கமும், சந்தோஷமும் பிறந்தன.

பிரிஸில்லாவுக்கோ, முதன் முறையாக அந்த 12 பெண்களுடன் பேசியவுடன் பல மாதங்களுக்குப் பிறகு, மனது லேசாகி விட்டதை உணர்ந்தாள். அவள் கணவன் டாமுக்கோ, தன் மனைவியின் முகத்தில் ரொம்ப நாட்களுக்குப் பிறகு புன்னகை மலர்ந்ததைக் கண்டு அளவற்ற சந்தோஷம்.

மொத்தத்தில் அந்த வைர நெக்லஸால், பேட்டிசானர் தன் படாடோபத்தை விட்டுவிட்டாள். மேரி ஓ'ட்டோ மற்றவர்களுடன் மனம் திறந்து பேச ஆரம்பித்தாள்.

நான்ஸிக்கு திரும்பவும் வாழ்க்கையில் உற்சாம் பிறந்தது. மேரி, கார், பணம் மட்டும் வாழ்க்கை இல்லை என்பதைப் புரிந்துகொண்டாள்.


ராஸ் வார்னரோ தான், தன் வேலை என்று எப்போதும் தன்னைப் பற்றியே நினைக்காமல் மற்றவர்களைப் பற்றியும் நினைக்க ஆரம்பித்தாள்.

டேல் ம்யூகன் பெர்க்கின் தடம் மாறிப் போன மண வாழ்க்கை, மறுபடியும் ஒழுங்கான பாதைக்கு வந்தது.

ஜோனலோ, 13 பெண்களையும் ஒன்று சேர்த்தாள். மேரி ஒகானரோ அந்த குரூப்பை, ஒரு குடும்பமாகவே ஆக்கி விட்டாள்.

என்ன வாசகிகளே! இப்படி 13 பெண்களை ஒன்று சேர்த்து, அவர்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை உண்டு பண்ணிய அந்த வைர நெக்லஸ் பாராட்டுக்குரியதுதானே!

- இந்திரா வெங்கடராமன், செகந்திராபாத்



எமர்ஜென்சி லைட்டை வாரம் இரண்டு முறை உபயோகிக்க வேண்டும். அதாவது எரிய விடவேண்டும். ஒரு முறையாவது கரண்ட் போனாலும் போகாவிட்டாலும் எரியவிடவேண்டும். அதேபோல் ரீ சார்ஜ் பண்ண வேண்டும். இப்படிச் செய்தால் வருடக் கணக்கில் உழைக்கும்.

- எஸ்.விஜயலெட்சுமி, சென்னை - 4



தாத்தா : எல்.ஜெ.சந்திரசேகர்
பாட்டி : சகுந்தலா
பேத்தி : ரியா நரேன்

ஆல்பம்



தாத்தா : கே.ஆர்.ரகுநாதன்
பாட்டி : வாசுகி
பேரன் : ஸ்ரேயஸ்



தாத்தா : எஸ்.நாராயணன்
பாட்டி : என்.மாலதி
பேரன் : எம்.அநிருத்தன்
பேத்தி : எம்.அருந்ததி



தாத்தா : எம்.ஆர்.வெங்கடராமன்
பாட்டி : வி.நாகலக்ஷ்மி
பேரன் : ஆர்.குரு ஸ்மரண்



தாத்தா : எம்.பத்மநாபன்
பாட்டி : ப.சத்யவதி
பேத்தி : பா.தீபசுருதி



தாத்தா : ஆர்.ஆராவமுதன்
பாட்டி : எ.ராஜலக்ஷ்மி
பேரன் : விஷ்வக் மாதவ்

என் செல்லமே!



கண்டோம்

ஆகஸ்ட் மாத மங்கையர் மலரில், பர்மாவிலிருந்து அகதிகளாக வந்தவர்கள், சென்னை நந்தம்பாக்கத்தில் பர்மா காலனியை அமைத்து, தங்கள் குல தெய்வமான 'அங்காள பரமேஸ்வரி'க்கு கோயில் கட்டி கும்பிடுவதாகப் படித்தவுடன் என் மனத்தில் சிறு பொறி தட்டியது.

ஏனெனில் எங்கள் முன்னோர்களும் அதுபோல் வந்து திருச்சியில் குடியேறினார்கள். ஆனால் அவர்களுக்கு குலதெய்வத்தைப் பற்றி தெரியாததாலோ என்னவோ, திருப்பதி வெங்கடசலபதியை குல தெய்வமாக வழிபட்டார்கள்.

இதே நேரத்தில், என் மாமனார் வீட்டில், அங்காள பரமேஸ்வரியையே குலதெய்வமாக வழிபடும் அவர்கள் வீட்டில் குல தெய்வத்தை வணங்குவதில் சிறிது குழப்பம் ஏற்பட்டது. மூத்த மாப்பிள்ளை என்ற முறையிலும், என் மாமனார் இறந்தபிறகு குடும்பத்தில் மூத்தவன் என்ற

உண்மைச் சம்பவம்

முறையிலும், என் வீட்டுக்கு வந்து இது பற்றி பேசினார்கள்.

முப்பது வருடமாக நாங்கள் பெங்களூரி லேயே இருந்துவிட்டதால், இதுபற்றி திருச்சியிலுள்ள என் தம்பிக்கு தொலை பேசி மூலம் விசாரித்தேன். ''ஆம், அண்ணா, அங்காள பரமேஸ்வரிதான் நம் குலதெய்வம்'' என்றார் என் தம்பி. தன் ஜாதகத்தை சமீபத்தில் ஒரு ஜோசியரிடம் காட்டி உள்ளார். அப்பொழுது அந்த ஜோசியர், ''வெங்கடாசலபதி உங்கள் குலதெய்வமல்ல; ஒரு பெண் தெய்வம் தான், அதுவும் அங்காள பரமேஸ்வரிதான் உங்கள் குலதெய்வம்'' என்று கூறியுள்ளார்.

சமீபத்தில் சென்னையிலுள்ள என் இரண்டாவது மகன் குமார் வீட்டுக்குச் சென்றேன். என்னை, தாங்கள் குறிப்பிட்ட அந்த அங்காள பரமேஸ்வரி கோயிலுக்கு அழைத்துச் செல்லும்படி கேட்டுக்கொண் டேன். என் மகனும் அழைத்துச் சென்றார். அங்கு சென்றவுடன்தான் தெரிந்தது; ஸ்தாபித தினம் நடைபெறுகிறது என்று. அதனால், யாகம் வளர்த்து, அங்கு உள்ள மிகப் பிரம்மாண்டமான ஐயனாருக்கு 1008 சங்காபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் நடந்து

கடவுள்!

கொண்டிருந்தன. நிறைய கூட்டம்.

கோயிலுக்குப் போகலாம் என்று திரும்பியபோது, ஒரு வயதானவர் எங்களுக்கு வழிகாட்டிபோல் வந்து, அங்காள பரமேஸ்வரி சன்னதிக்கு அழைத் துச் சென்று, அவ்வளவு கூட்டத்திலும், எங்களை அம்மன் அருகில் அழைத்துச் சென்று, அங்கிருந்த அர்ச்சகருக்கு கண் ணால் ஏதோ ஜாடை காட்டினார். அவரும், எங்களுக்காக தீபாரதனை காட்டினார். பின்னர் எனக்கு மாலை அணிவித்து, தேங்காய் 'பழம்' பூக்களும் என் மனைவிக் கும், மருமகளுக்கும் கைநிறைய பூக்களும் தந்தார். நாங்கள் அர்ச்சனைத் தட்டு எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் இந்த மரி யாதை நடந்தது எனக்கு மகிழ்ச்சியுடன் கூடிய இனிய அதிர்ச்சயாக இருந்தது.

மேலும் ஒவ்வொரு சன்னிதியாச அழைத்துச் சென்று, இதேபோல் தனி மரியாதை எங்களுக்குக் கிடைத்தது. கடைசியாக பிரம்மாண்டமான அய்யனார் சிலைக்கு தீபாரதனை, பழம், பூக்கள் கொடுக்கப்பட்டன.

நான் என் மகனிடம், ''இந்த வயதா னவர், ஏழை போல் உள்ளார். ஆகவே வீட்டுக்குப் போகும்போது, ஏதாவது பணம் கொடு'' என்றேன். ஐய்யனாரை வணங்கிவிட்டுத் திரும்பினால் பெரிய வரைக் காணவில்லை. என் மகனும் கோயில் பூராவும் சுற்றிப் பார்த்துவிட்டு இல்லையென்று வந்தார்.

ஐய்யனாரே வந்து எங்களுக்கு வழி காட்டியதாக எண்ணிக்கொண்டு, வீட்டுக்கு வந்தோம். எங்கள் குலதெய்வத்தைக் காட்டிக் கொடுத்ததற்கு மிக்க நன்றி.

சமீபத்தில் வந்த மாத மங்கையர் மலர் இதழ் ஒன்றில் ராசி பலனில், என் மனைவியின் ராசியான மீனத்திற்கு, பரி காரமாக அங்காள பரமேஸ்வரியை வணங் கச் சொல்லி வந்திருந்தது, இதற்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் இருந்தது.

- எஸ். வரதராஜன்,
ஹைதராபாத்

பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். இந்த ஜாலியான நேரத்தில், பொங்கல் பண்டிகையோடு சம்பந்தமுள்ள சில உதாரண மனிதர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது எனக்கு மட்டுமே தெரியும். ஏனென்றால் எல்லோருமே என் கற்பனையில் நடமாடுகிறவர்கள்!



வி!ரட்டு

பொங்கல் பானை: குஷ்பு ரசிகையான சரோஜா அக்கா, விதவிதமாக ஜாக்கெட் அணிவதில் குஷ்புவுக்குச் சளைத்தவரல்ல. பொங்கல் ஸ்பெஷலாக கட்டம், வட்டம், கோடு, புள்ளி என்று கட்டிங் டிசைனோடு கலர் கலர் பாசி, ஜம்கி வைத்து 'ஜாக்பாட்' ஜாக்கெட் அணிந்து, பொட்டு வைத்த 'பொங்கல் பாட்'டாக பவனி வருபவள்.

மஞ்சள் கொத்து: நாகலட்சுமி பாட்டி, ஆயிரம் பிறை கண்ட அண்ணாமலை தாத்தாவின் வாழ்க்கைத் துணைவி. மஞ்சள் பூசிக் குளித்த முகத்தோடு, மஞ்சள் பட்ட நரைத்த முடிகள் காலை வெயிலில் தங்கக் கம்பிகளாக ஜொலிக்க, வீதியில் நடந்தால், மஞ்சள் கொத்தே மங்களகரமாக நடந்து வருவதுபோல் காட்சியளிப்பார்.

சர்க்கரைப் பொங்'கல்': இனிக்க

மஞ்சு, விரட்டு!

தமாஷ் கற்பனை

இனிக்கப் பேசும் சுலோச்சு மாமிதான் சர்க்கரை தடவிய வார்த்தைகளில், சுவை படப் பேசி, கேட்பவர் மனசை நெய்யாக உருக வைக்கும் திறமைசாலி. முந்திரிக் கொட்டை மாதிரி எல்லார் வீட்டு நல்லது கெட்டதுக்கும் ஆஜராகி, உதவியும் செய்வார். ஆனால் ஒன்று. தனக்குப் பிடிக்காத யாராவது வந்து மாட்டினால் நறுக்கென்று நக்'கல்' வார்த்தை பேசி, சர்க்கரைப் பொங்கலில் அகப்பட்ட கல் மாதிரி பழிவாங்கி விடுவார்.

சூரியன்: இந்த உதாரண புருஷர் எங்கள் கிரகத்தில்தான் வாசம் செய்கிறார். உலகத்துக்கே சக்தி வழங்கும் சூரியன் மாதிரி, எங்கள் குடும்பம் இயங்க சக்தி தருபவர் - அதாவது தன் சம்பளக் கவரை அப்படியே என்னிடம் கொடுத்துவிடும் உதாரண புருஷனாகத் திகழ்பவர், சூரிய மூர்த்தி என்ற திருநாமம் கொண்ட என் துணைவர்தான்.

கரும்பு: 'பருப்பில்லாமல் கல்யாணமா?' என்பது போல் கரும்பில்லாமல் பொங்கலா? கட்டுக் கரும்பெல்லாம் இல்லை. ஒற்றைக் கரும்புதான். ஆனால், கட்டிக்கரும்பு என்று உறவினர்களால் போற்றப்படுபவள் நானேதானுங்க. ஏன் போற்ற மாட்டார்கள்? ஒட்டுமொத்தக் குடும்பமும் வேலை வாங்கியே என்னைச் சாறு பிழிந்து விடுவார்கள். இல்லத்தரசி என்ற சக்கை கிரீடத்தை, சிரம்மேல் சூடிக் கொள்வதில் எனக்கும் பெருமைதானுங்க!

மஞ்சு விரட்டு: மஞ்சு என்கிற மஞ்சுளா காலேஜுக்குப் புறப்பட்ட அடுத்த வினாடி, ஒரு இளைஞர் பட்டாளம், அவளை விரட்டிக்கொண்டு பின் தொடர்வார்கள். கிண்டல்தான், கேலிதான், சிரிப்புதான். அவள் தவறவிடும் கைக்குட்டையை ஓடிப்போய் எடுத்துக் கொடுப்பதில், நான் முந்தி, நீ முந்தி என்று போட்டிதான். ஆனால் அவளோ எதையும் லட்சியம் பண்ணாத ஜல்லிக்கட்டு மாடு மாதிரி, வேக நடை போடுவாள். அத்து மீறி, நெருங்கி வருபவனைப் பார்த்து, ஒரு சீறு சீறுவாள் பாருங்கள். பசங்கள் எடுப்பார்கள் ஓட்டம்; ஜல்லிக்கட்டு காளையே தோற்றுவிடும் வேகத்தில்.



- என். ரங்கநாயகி,
கோவை - 25



முன்னிலையில் உரக்கப் படித்தார்.

அந்தப் பட்டியலில் ஸ்ரீ ராமர் கொட்டாவி விடும்பொழுது சொடுக்கு அடிக்கும் பணி மட்டுமே விடப்பட்டிருந்தது. ஸ்ரீபகவான், அந்தப் பணியை ஸ்ரீ அனுமார் செய்யட்டும் என்று கூறினார்.

சபையோருக்கு ஆச்சர்யமும், சந்தேகமும் எல்லையில்லாமல் இருந்தன. எவ்வளவோ ஸ்ரேஷ்டமான சேவைகள் பகவானுக்கு செய்ய ஏன்

ஒரு கொட்டாவிக்கு ஒரு சொடுக்கு!

ஸ்ரீ ராமரின் பட்டாபிஷேகம் முடிந்து சிலநாட்கள் ஆகியிருந்தன. லக்ஷ்மணன், பரதன், சத்ருக்கனன் ஆகியோரோடு சீதாப்பிராட்டியார் ஒரு முக்கியமான விஷயத்தைப் பட்டியலிட்டுக் கொண்டிருந்தார்.

அதாவது ஸ்ரீ ராமருக்குச் செய்ய வேண்டிய சேவைகள் அனைத்தையும் ஸ்ரீ அனுமாரைத் தவிர தங்களுக்குள்ளேயே பகிர்ந்து, யார் யார் எந்தெந்த சேவையைச் ஸ்ரீ பகவானுக்குச் செய்யவேண்டும் என்பதை ஒரு பட்டியலாகத் தயார் செய்து, ஸ்ரீ ராமபிரானிடம் கொடுத்தார்கள்.

அதில் ஸ்ரீ அனுமாரின் பெயர் விடப்பட்டிருந்தது. காரணம், பட்டாபிஷேக சமயத்தில் அதிகப்படியான வேலையை ஸ்ரீ அனுமார் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்ததால் அவருக்கு ஓய்வு வேண்டும் என்கிற எண்ணத்தில் அவருக்கு பகவான் சேவை தரப்படவில்லை.

அந்தப் பட்டியலை, ஸ்ரீ ராமர், அரசவையில் ஸ்ரீ அனுமாரின்

அனுமார் அனுமதிக்கப்படவில்லை என்று முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

லக்ஷ்மணன் விவரித்தார்: ''ஒருவருக்கு எப்பொழுது கொட்டாவி வரும் என்று அனுமானம் செய்ய முடியாது. எப்பொழுதும் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். அவரை விட்டு நகரவும் முடியாது. அப்பேர்ப்பட்ட சேவையை அதாவது தன்னுடனேயே ஸ்ரீ அனுமரை இருக்கச் செய்யும்படியான ஒரு சேவையைத்தான் ஸ்ரீ பகவான் ஸ்ரீ அனுமாருக்குப் பணித்திருக்கிறார். இப்பொழுது புரிகிறதல்லவா?'' என்று கூறினார்.

ஸ்ரீ அனுமாரின் பக்தி பாவத்தைப் புரிந்துகொண்ட சபையினர், ஸ்ரீராமனுக்கு பக்தி சேவை செய்யத் தகுதியான நபர் ஸ்ரீ அனுமார்தான் என்பதை உணர்ந்தனர்.

- லீலா வினோதன்,
வேளச்சேரி

புராணம்





சங்கீதாவுக்குப் பத்து நாட்களாக ஒரே கவலை. கல்லூரியில் முடிந்த நேர்முகத் தேர்வில், தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து பேரில் அவளும் ஒருத்தி. அனைவரும் வாழ்த்து கூற, அவர்களுக்கெல்லாம் டீயும் சமோசாவும் வாங்கிக் கொடுத்ததுதான் அப்பாவிடம்தான் கேட்கும் கடைசிப் பணம் என்று பெருமை கொண்ட வளுக்கு தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் கண்ட செய்திகள் டென்ஷன் அளித்தன.

பங்குச் சந்தை வீழ்ச்சி, அமெரிக்காவின் முக்கிய வங்கிகள் மற்றும் ஆயுள் காப்பீடு கம்பெனிகளின் சறுக்கு முகம் தன்னையும் பாதிக்குமோ என்ற கவலை. ஆம்; சங்கீதா தேர்வு பெற்றது பி.பி.ஓ. கம்பெனியில்!

அமெரிக்க வியாபாரத்தின் செயல்களை இந்தியாவில், இலங்கையில், ஃபிலிஃபைன்ஸில் மற்றும் கீழ்த்திசை நாடுகளில் நடத்தும் கம்பெனிகளின் இலாபம் குறைந்து போனதால், புதிதாக ஆட்சேர்க்கையைக் குறைத்ததுதான் இந்நிலைக்கு முதல் காரணம்.

பி.பி.ஓ. என்றால் என்ன? வியாபாரச் செயல்பாடுகளில் மிக முக்கியமானதை மட்டும் தான் செய்துவிட்டு, மற்ற வேலைகளைப் பிறரிடம் கொடுப்பதுதான்.

உதாரணமாக, தொலைபேசி, காப்பீடு வங்கி போன்றவற்றில் மாதாமாதம் சந்தாதாரர் தர வேண்டிய பணத்துக்கு பில் அனுப்ப வேண்டும். மாதம் இரண்டு இலட்சம் பேருக்கு பில் அனுப்ப, பில்லுக்கு வந்த பணத்தை வரவு வைக்க, தாமதமானால், அதற்கு வட்டிபோட



கணக்குப் பரீட்சை எழுதாம ஏண்டா இப்படி டான்ஸ் ஆடற?

சார், நீங்கதானே சொன்னீங்க... கணக்கை தப்பா போட்டாக்கூட ஸ்டெப்ஸுக்கு மார்க் தர்றேன்னு!



என்று தீரும் BPO?

நிரந்தர ஊழியர்கள் என்றால் சுமார் 1500 பேர்களாவது தேவை.

கம்ப்யூட்டர் உதவியோடுகூட ஒரு ஊழியர் 75-100 பேர்களுக்கு மட்டுமே அனுப்ப முடியும். இதைச் செய்ய நிரந்தர ஊழியர் எனில் அதிகச் செலவாகும். இந்த வேலையை பி.பி.ஓ. கம்பெனிகள் முழுநேர வேலையாகச் செய்து முடிப்பதால் தொலைபேசி கம்பெனியின் பொறுப்புகள் பி.பி.ஓ. கம்பெனியால் சுமக்கப்படுகின்றன.

அமெரிக்க மேரிக்கு 2000 டாலர் கொடுத்தால் என்ன செய்வாரோ அதை இந்திய மேரி ரூ.25000/-ல் திறம்படச் செய்வார்.

இப்போது இந்தியர்களுக்கு போட்டியாக பல நாட்டினர் இது போன்ற வேலைகளை குறைவான கட்டணத்தில் செய்ய முன் வந்தாலும் நமக்குக் கவலை இல்லை. நமது ஆங்கில அறிவையும் பகுத்தாயும் தன்மையையும் அவர்கள் அடைய குறைந்தது ஐந்து வருடங்களாவது ஆகலாம்.

எனவே, பி.பி.ஓ.வின் மவுசு இன்னும் முப்பது ஆண்டுகளுக்கு ஏறுமுகமாகவே இருக்கும். நடுவில் வந்துள்ள சலசலப்புகளுக்கு இந்தியா அஞ்சத்தேவையில்லை.

- ராம்ஷங்கர் சிவகுமார், மூன்றாம் ஆண்டு ஈ.சி.ஈ., சாய்ராம் பொறியியல் கல்லூரி, தாம்பரம்

வாழ்க்கைன்னா ஆயிரம் மேடு பள்ளங்கள் இருக்கத்தான் செய்யும். ஆயிரம் கல்லு முள்ளு இருக்கத்தான் செய்யும்.

அதனால....? என்ன பண்ணப்போற...?

நல்ல செருப்பு வாங்கி போட்டுப்போயில்லவ!

- வி.அறிவரசு, பன்னிரண்டாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. மேனிலைப் பள்ளி, சூளைமேடு, சென்னை - 94



மங்கையர் மலர் பூஞ்சாரல்

பூஞ்சாரல் பக்கங்கள்

கவிதை

காத்துக்கிடக்குதடா!



பச்சிளம் குழந்தையின்
அழுகுரலைக் கூட
கருதாமல் சுட்டுக்கொன்ற
இரக்கமற்ற மனிதனே,
இப்போது புரிகிறது
உன் தாய் உமக்குப்
புகட்டியது கள்ளிப்பால் என்று!

இந்தியர்களுக்கு இருக்கிறது
பண்பில் தீவிரம்!
படிப்பில் தீவிரம்!
ஒற்றுமையில் தீவிரம்!
உழைப்பில் தீவிரம்!
முயற்சியில் தீவிரம்!
உதவுவதில் தீவிரம்!
சுய சிந்தனை இல்லாத
மனிதனே!
தீவிரம் என்னவென்று
இந்தியனைப் பார்த்து
தெரிந்து கொள்!

தீவிரவாதிகளை
உருவாக்கிய உம் நாட்டிற்குத்
தெரியாது
அப்துல்கலாமையும்,
பாரதிகளையும் உருவாக்கிக்
கொண்டிருக்கும் என் நாட்டின்
பலம் என்னவென்று!

பாடங்களைப் புகட்டாமல்,
தீவிரவாதங்களைப் புகட்டியது உம்நாடு,
உமக்குப் பாடங்களைப் புகட்டக்
காத்துக் கிடக்கிறதுடா எம்நாடு.

கல்வியைப் புகட்டாத
உன் நாடு,
தீவிரவாதத்தைப் புகட்டியது!
தீவிரவாதத்தைப் புகட்டாத
என்நாடு,
ஒற்றுமையைப் புகட்டியது!

- எஸ்.சுபா,
பி.ஈ.இரண்டாம் ஆண்டு,
செல்வம் பொறியியல் கல்லூரி,
நாமக்கல்



குறையை நிறையாய் மாற்று!

"சிலர் எப்பவுமே எனக்குக் கணக்கு சரியா வராது. எனக்கு அழகு இல்லை. ஆங்கிலம் தெரியாது. என்னால் முன்னேற முடியாது''னு வருந்தி தாழ்வு மனப்பான்மை யோட இருப்பாங்க.

'சாதனை புரிய வேண்டும்' என்ற ஆர்வம் இருந்தால், இந்த மாதிரியான எதிர்மறை எண்ணமெல்லாம் தோன்றாது.

சார்லி சாப்ளின் பெயரைக் கேட்டதும் உங்களுக்கு என்ன ஞாபகம் வருது?

அவரோட 'சவக், சவக்' நடைதானே? அவர் ரசிகர்களைச் சிரிக்க வைக்கிறதுக்காக, கேமரா முன்னாடி மட்டும்தான் இப்படி நடக்கிறார் என்றுதானே நினைக்கிறீங்க?

நீங்க நினைக்கிறது தப்பு. அவரோட இயல்பான நடையே இதுதான். சின்ன வயசுலேயே விஷ ஜுரம் தாக்கியதாலே அவரோட கால்கள் வளைஞ்சு போயிடுச்சு.

அதன் காரணமாக நாயகனாகவோ, வில்லனாகவோ நடிக்கத் தகுதி இல்லாதவராக கருதப்பட்ட சாப்ளின், தான் வீழ்ச்சி அடைந்ததா ஒரு நாளும் வருத்தப்படல.

தன்னுடைய குறையையே தகுதியாய் மாற்றி, சற்று மிகைப்படுத்தி வளைந்து நடந்து தனக்கென ஒரு பாணியையே உருவாக்கினார். அதற்குப்பின் உலகில் விரல்விட்டு எண்ணக் கூடிய தலை சிறந்த நகைச்சுவை நடிகர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

தன் வளைந்த கால்களையே நினைச்சு வருந்தி வீட்டின் ஒரு மூலையில் முடங்கிப் போயிருந்தால் உலக மக்களையெல்லாம் தன் ரசிகர்களாக மாற்றியிருக்க முடியுமா?



யோசியுங்க ஃப்ரெண்ட்ஸ்!

- அ.அனிதா, முதலாம் ஆண்டு, எம்.எஸ்.ஸி., ஐ.டி அண்ட் இ.காம், விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், குமரி மாவட்டம்

தத்துபித்துவம்

வாழ்க்கை என்பது பனைமரம் போல! ஏறினால் நுங்கு விழுந்தா சங்கு!

வி.அறிவரசு, 12ம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. மேனிலைப் பள்ளி, ஆனைமேடு, சென்னை-94



பூஞ்சாரல் பக்கங்கள்

டீனேஜ் - 16



இன்றைய நவநாகரிக மற்றும் கல்லூரி ஆண்கள் விரும்பும் 16 செல்வங்கள்.

1. லேட்டஸ்ட் ஐ பாட்!
2. கேட்கும் போதெல்லாம் பாக்கெட் மணி தரும் அப்பா
3. Play station (கிரிக்கெட் விளையாட)
4. விதவிதமான டிசைன்களில் டி-ஷர்ட்டுகள்
5. பலவிதமான வடிவங்களில் வாட்ச்சுகள்.
6. லேட்டஸ்ட் மொபைல்
7. சென்னா மசாலா, பேல்பூரி, பானி பூரி.
8. பிடித்த ஹீரோயின், ஸ்போர்ட்ஸ் ஸ்டார்களின் வண்ண வண்ண ப்ளோ அப்புகள்.
9. லேட்டஸ்ட் டிரண்டுக்கு ஏற்றாற்போல் மீசை, தாடி, ஹேர்ஸ்டைல்
10. புதுப்பட டிக்கெட்டுகள்
11. ஜிம், ஏரோபிக்ஸ் வகுப்புகள்
12. காஃபி ஷாப்பில் அரட்டை
13. செயினில் அணிந்து கொள்ள புதிது புதிதாய் டாலர்.
14. அல்ட்ரா மாடர்ன் பவர் பைக்
15. சிட்டி சென்டரில் ஜாலி ரவுண்ட்ஸ்!
16. அழகான கேர்ள் ஃப்ரெண்டுகள்.

- வி.சந்தியா, அண்ணா பல்கலைக் கழகம், சென்னை - 32.

(பெண்கள் விரும்பும் 16 செல்வங்களை பாய்ஸும் எழுதி அனுப்பலாமே)

மாநில அளவில் பிரம்மாண்டமாய்...
கல்லூரிகளுக்கிடையே
கலைத்திறமைப் போட்டிகள்!



அனைவரும் வருக...

நேரம் : காலை 10 மணி - மாலை 5 மணி

சோனா தொழில் நுட்பக் கல்லூரி. சேலம்-5 தேதி : 7.1.2009	ஆர்.வி.எஸ். பொறியியல் கல்லூரி. சூலூர். கோவை - 641 402. தேதி : 9.1.2009

வேலூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி. (VIT) வேலூர்.
தேதி : 21.1.2009



ரூ.3,000 பரிசு

நளபாகப் போட்டி-25

பல கிராமியப் பழமொழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் விடுபட்ட ஒரு வார்த்தை எது என்பதைக் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள்.

1. கடை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தானாம். ---------
2. பனை மரத்துக்குக் கீழே இருந்து குடிச்சாலும் உலகம் நம்புமா? ----------
3. கட்டுச்சோத்து மூட்டையிலே வைத்துக் கட்டியதுபோல் ------------
4. முழு சோற்றில் மறைக்க முடியுமா? ---------
5. கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தானாம்! -----
6. ருசின்னாலும் வேரோடு திங்க முடியுமா? ---------
7. என்றால் எண்ணெயாக நிற்பான் -------
8. வாய் சர்க்கரை. கைதான் ---------
9. கால் பணம், சுமைகூலி முக்காப் பணம் --------
10. எடுத்தவன் புறங்கையை நமக்காமல் இருப்பானா? -----------

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

இங்குள்ள புதிரை நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!

கடைசித் தேதி : 15.1.2009

உறையின் மீது நளபாகப் போட்டி - 25 என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....

மனோதத்துவம்

சமீபத்தில் என் சகோதரி யு.எஸ் லிருந்து வந்திருந்தாள். அவள் அங்கு ஸ்கூலில் நடந்த சம்பவத்தைச் சொல்லக் கேட்டு ஆச்சரியமடைந் தேன். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என் சகோதரியின் கணவர் புது அபார்ட்மெண்ட் பார்த்து குடியேற முடிவு செய்திருந்தார். ஒரு நாள் என் சகோதரி, கணவர் மற்றும் இரு குழந்தை களுடன் அந்த வீட்டைப் பார்க்க சென் றனர். என் சகோதரியின் பையனுக்கு வயது ஆறு. அவர்கள் மாடிப்படி ஏறி



வலதுபுறம் உள்ள தங்கள் அபார்ட் மெண்டுக்குத் திரும்ப யத்தனித்தபோது, இடது புறம் உள்ள வீட்டிலிருந்து ஒரு பெரியவர், தனது செல்ல நாயுடன் வெளியே வர கதவைத் திறந்தார். வெளியே நின்றிருந்த என் சகோதரி குடும்பத்தைப் பார்த்து பலமாகக் குரைத் தது அந்த நாய். சகோதரிக்கு தூக்கிவாரிப் போட்டது. அவள் பையனோ அலறி நடுங்கியே விட்டான். அந்தப் பெரியவர் மன்னிப்பு கேட்டுவிட்டு வெளியே சென்றார். பின் ஒருவழியாகச் சமாளித்து, வீட்டைப் பார்த்துவிட்டு வந்தார்கள்.

மறுநாள் சகோதரி பையன் பள்ளியின் ஆங்கில ஆசிரியை, 'The animal I like the most' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார்.

சகோதரி மகன் பூனையைப் பற்றி எழுதிவிட்டு கடைசி வாக்கியமாக 'I hate dogs' என்று எழுதினான். இதைப் படித்த அந்த ஆசிரியை என் சகோதரியை அழைத்து, ''ஏன் உங்கள் பையன் நாய் களை வெறுக்கிறான்?'' என்று கேட் டார். திடீரென்று இப்படி கேட்டவுடன் என் சகோதரிக்கு ஒன்றும் புரியவில்லை. பின் முந்தைய நாள் சம்பவத்தைக் கூறி ஒரு வேளை அதுதான் காரணமாக

"வெறுக்கிறாயா பையா?"

இருக்கலாம் என்றாள். மறுநாள் அந்த ஆசிரியை செய்த செயல் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

அந்த ஆசிரியை தன்னுடைய வளர்ப்பு நாயை பள்ளிக்குக் கூட்டி வந்து, என் சகோதரி மகனை அதனுடன் விளையாட வைத்தார். பள்ளி முடியும் வரை இந்த விளையாட்டு தொடர்ந்தது. அவன் வீட்டுக்குக் கிளம்பும் முன், 'இப்போது சொல்... நீ நாயை விரும்பு கிறாய்தானே?' என்று கேட்டாராம். அதற்கு அவன் என்ன சொல்லியிருப் பான் என்று சொல்லவும் வேண்டுமா?

- எஸ்.சிவசங்கரி,
சென்னை - 83

குட்டீஸ் லூட்டி

"அதான்"



திடீரென இரவு பவர் கட்டானபோது என் மூன்று வயது மகள் யாழினி பயத்தில் அலறினாள். நான் எமர்ஜென்சி லைட்டை ஆன் செய்துவிட்டு, ''பயப்படாதே யாழினி, இருட்டில் பயமாயிருந்தால் பிள்ளையாரப்பாவை வேண்டிக்கொள்'' என்று பிள்ளையார் படத்தை காட்டினேன். என் மகள் பிள்ளையார் படத்தைக் கூர்ந்து கவனித்து விட்டு சலிப்பாகச் சொன்னாள்- ''போம்மா, பிள்ளையாருக்குக் கீழே இருக்கிற ஸ்வீட் தட்டில், லட்டு திருடி ஒரு எலி சாப்பிடுகிறதே! அதைக் கூட கவனித்து விரட்டாத பிள்ளை யாரா என்னை வந்து காப்பாற்றப் போகிறார்!'' என்றாளே பார்க்கலாம்.

- அ.மல்லிகா,
சென்னை - 78

எங்கள் மகன் பாரத், வெளியில் சென்றால் எங்கு விளையாடுகிறான், யார் வீட்டில் இருக்கிறான் என்பதே தெரியாது. பிறகு தானாகவே வீட்டுக்கு வந்து விடுவான். ஒரு நாள் வீட்டுக்கு வர மிகவும் தாமதமாகிவிட்டதால், சற்றே கோபமாக 'ஏன்டா இப்படி செய்தால் என்ன செய்வது... எங்கு இருக்கிறாய் என்பதே தெரியாமல் தவித்துவிட்டோம்' என்று கூறினேன். உடனே அவன், 'மிருகங்கள், பறவைகளுக்கு வைப்பது போல் எனக்கும் ஒரு கம்ப்யூட்டர் சிப் வைத்து விடுங்கள். நான் எங்கு விளையாடுகிறேன் என்பது தெரிந்து விடும்'' என்று கூறினான். ''உனக்கு எப்படிடா இதெல்லாம் தெரியும்?'' என்று கேட்டதற்கு, ''டீ.வி.யில்தான் பார்க்கிறேனே'' என்றான்.



- டி.சாந்தி,
அம்மையப்பன்

அவனும் கூப்பிடலை!"

எங்கள் அத்தை வீட்டில் பூஜைக்காக நாங்கள் அனைவரும் 'செகந்திராபாத்'தி லிருந்து பெங்களூர் சென்றிருந்தோம். பூஜை முடிந்து ஏக பசியுடன் அனைவரும் சாப்பிட அமர்ந்தோம். என் பெண் மேக் னாவுக்கு கோதுமை மாவில் செய்த 'பேடா' ரொம்பப் பிடிக்கும்.

இரண்டாவது தடவையாக ஜாங்கிரி பரிமாறுபவர் மேக்னாவிடம் வந்தபோது 'பேகா-பேடாவா' எனக் கேட்க, மேக்னா, பேடா என நினைத்து 'பேடா' என்றவுடன் ஜாங்கிரி தட்டுக்காரர் போயே விட்டார். பக்கத்து இலையில் இரண்டாவது ஜாங்கிரி யைப் பார்த்த மேக்னா அழுதே விட்டாள். அத்தையிடம் நடந்ததைக் கூற, கன்ன டத்தில் 'பேடா' என்றால் வேண்டாம் என விளக்கினார். மேக்னா உள்பட அனை வரும் ஏகமாகச் சிரித்தோம்.

- கல்பனா லக்ஷ்மிநாராயணன், செகந்திராபாத்

ஒரு சமயம் என் வீட்டில் உறவினர்கள் வந்திருந்தார்கள். அப்போது என் இரண்டாவது பேத்தி ஆதர்ஷினி, 'கண்ணம்மா' என்ற என் தம்பி மனைவி யைப் பார்த்து ''கண்ணம்மா, கண்ணம்மா மீனு வாங்கப் போலாமா?'' என்று பாட் டைப் பாடியபடியே ஆடி னாள். எல்லோரும் 'கொல்' என்று சிரித்துவிட்டோம். அந்த கண்ணம்மா சுத்த சைவம்வேறு!

- எஸ்.ஜனா, பெங்களூர் - 8

என் மாமியாருக்கு 85 வயதாகிறது. என் இரண்டு பிள்ளைகள், பெண் எல்லோரும் வெளிநாட்டில் இருப்பதால் லீவுக்கு வரும்போது எப்போதும் வெளி யில் எங்காவது செல்ல விருப்பப்படு வார்கள். அவர்கள் பாட்டியைக் கூப்பிடும் போதெல்லாம் தன்னால் எங்கும் வெளி யில் வர முடியவில்லை என்று சொல் வார். ஒரு நாள் என் மாமியார் என் பெண்ணிடம், ''எப்போதுதான் என்னை எமன் அழைப்பானோ?'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். உடனே என் பேத்தி (8 வயது இருக்கும்) ''நீதான் எங்குமே வரமாட்டேன் என்கிறாயே அதான் அவனும் கூப்பிடவில்லை'' என்று சொல்லவும், என் மாமியாரே சிரித்து விட்டார்.

- பானு சுரேஷ், சென்னை - 88






காலி மது புட்டிகளில் விசித்திர வடிவங்களைக் காண முடிகிறது. புத்தகம், பியானோ, பறவைகள், விலங்குகள், பெண் உருவங்கள், கப்பல், ரயில், தட்டையான, உருண்டையான புட்டிகள் என பற்பல ரகங்கள். அதில் 1812-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சோடா பாட்டில் (சோடாவுடன்) உள்ளது!

வீட்டு வரவேற்பறையிலிருக்கும் சின்ன ஷோ-கேஸைத் துடைத்து, அதிலிருக்கும் பொம்மைகளை தூசி தட்டி வைக்கவே சலித்துக் கொள்பவர்களிடையே சாவித்திரி - நேரு தம்பதியர் ரொம்பவே வித்யாசமானவர்கள்! எழுபத்தைந்து ஆண்டு காலமாக தாங்கள் சேகரித்த அபூர்வ கலைப் பொருட்களுக்காக என்றே ஏலகிரியில் ஒரு பெரிய வீட்டைக் கட்டி, அதை 'நேரு விசித்திர அருங்காட்சியகம்' என்ற பெயரில் பராமரித்து வருகிறார்கள்.



"என்னுடைய கணவர் நேரு, சிறு பிள்ளையாக இருந்தபோது அஞ்சல் தலை, கோலி, தீப்பெட்டி லேபிள்கள் என்று விளையாட்டாகச் சேகரிக்க ஆரம்பித்ததுதான், இன்று மினி மியூஸியமாகி விட்டது'' என்று புன்முறுவலுடன் கூறிய

சித்திரக் கூடத்தில் விசித்திரத் தம்பதி!




களிமண், மரம், மெழுகு
இவற்றில் செய்யப்பட்ட பழங்கள்,
காய்கறிகளைப் பார்த்திருப்போம்!
செமி-ப்ரீஷியஸ் கற்களால்
உருவாக்கப்பட்ட திராட்சைக்
கொத்து, பளபளப்பாக,
சாறுடன் மின்னுகிறது.

பாட்டி காலத்து மினியேச்சர்
ருக்மணி குக்கர் முதல்
துவரம்பருப்பு சைஸ் கப்-அண்டு
சாஸர் வரை...

கட்டை விரல் விட சற்றே
பெரிதாக உள்ள பகவத் கீதை,
பைபிள், குரான், திருக்குறள்
புத்தகங்கள் பிரெஞ்சு
நாட்டில் அச்சிடப்பட்ட.
இவற்றை பூதக் கண்ணாடி
வைத்துப் படிக்கலாம்.

1835-ம் ஆண்டிலிருந்து இன்றைய
தேதி வரையான இந்திய ரூபாய்த்
தாள்கள், நாணயங்கள், உலக
நாடுகளின் பண நோட்டுக்கள்,
அதிலேயே சரியாக அச்சாகாதவை,
தலை கீழாக அச்சானவை என
பல விதங்கள். தோல் நாணயம்,
காகித நாணயம், பிளாஸ்டிக்
நாணயம் என தனி சேகரிப்பு!





படியே நேரு சென்டருக்குள் அழைத்துச் செல்கிறார் திருமதி சாவித்திரி.

மூன்றடுக்குக் கட்டடம்! சுவர்கள், கண்ணாடி அலமாரிகள், அடுக்குகள் எல்லாவற்றிலும் அபூர்வ கலைப் பொருள்களின் நேர்த்தியான அணிவகுப்பைக் காண முடிகிறது.

அரசு அருங்காட்சியகத்தில் பழைய செப்பேடுகள், நாணயங்கள், கற்சிலைகள் போன்றவற்றைதான் பார்வைக்கு வைத்திருப்பார்கள். ஆனால், இங்கே நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள்களின் பரிணாம வளர்ச்சியை, வருட வாரியாக வைத்திருக்கிறார்கள் என்பது தான் ஹைலைட்!

"நான் ரயில்வே துறையில் எலெக்ட்ரிக்கல் இன்ஜினியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவன். என் மனைவி எம்.ஏ.பி.எட். படித்த ஆசிரியை. இருவரும் உலகம் முழுக்கச் சுற்றிய போது, கண்ணில் பட்ட அபூர்வ பொருட்களையெல்லாம் ஆர்வத்துடன் சேகரிக்கத் தொடங்கினோம். என் மனைவியின் ஊக்கத்தால் என்னுடைய கலெக்ஷன்ஸ் பத்து மடங்கு உயர்ந்தது. விளைவு...? நான் பணியிலிருந்து ஓய்வு பெற்று சென்னை திரும்பியபோது, கலைப் பொருள்களையெல்லாம் கொண்டுவர ஆறு லாரிகள் தேவைப்பட்டன.

தி.நகரில் மூன்றடுக்கு வீடு ஒன்றை வாங்கி, கலைப்பொருட்களை வைத்தோம். ஆனால், நாங்கள் சேர்ந்து

சீட்டுக்கட்டு பார்த்திருப்பீர்கள்; வட்ட வடிவமான, ஸிக்-ஸாக் வடிவ, 'திமாடிக்' கார்ட்ஸ் என கிட்டத்தட்ட பத்தாயிரம் செட் சீட்டுக்கட்டுகளைச் சேகரித்துள்ளனர். அரக்கில் தயாரிக்கப்பட்டு வெஜிடபிள் டையிங் செய்யப் பட்ட முகலாய காலத்து, கஞ்சிஃப்பா கார்டுகளின் அழகு சொல்லி மாளாது.

'**நி**ஜாம் பாக்கு' என அச்சிடப்பட்ட தாத்தா காலத்து காகித விசிறி முதல், பறவைகளின் இறகுகளால் தயாரிக்கப்பட்ட ஜப்பான் விசிறி வரை...

மலைவாழ் மக்களின் அணிமணி, முகமூடிகள், பட்டங்கள், பென்சில், பேனாக்கள், அழிப்பான்கள், குங்குமச் சிமிழ்கள், சீப்புகள்...





அஞ்சல் தலை சேகரிப்புகளில் ஆராய்ச்சியே செய்து வருகிறார்கள் போல! 'கால்பந்தாட்டம்' என்ற தலைப்பை எடுத்துக்கொண்டால் அதிலேயே ஆயிரக் கணக்கான அஞ்சல் தலைகள் உள்ளன. 3டி ஸ்டாம்ப், ஸ்டீல் ஸ்டாம்ப், பிளாஸ்டிக் ஸ்டாம்ப் என எதையும் விட்டு வைக்க வில்லை!

ப்ரொஜக்டர்கள், ரேடியோக்கள், காபி பர்க்குலேட்டர்கள், கிராமஃபோன்கள், டெலஸ்கோப்புகள், பைனாக்குலர்கள், கார் மோட்டார் பைக்குகளின் மினியேச்சர் மாடல்கள், என ரசனையோடு அடுக்கி வைத்ததோடு... ஆங்காங்கே அவற்றைப் பற்றிய குறிப்புகளையும் அழகாக எழுதி வைத்திருக்கிறார்கள். அட்டவணை, விவரக்குறிப்பு, தயாரிப்பதிலிருந்து, தூசு துடைத்து வைப்பது வரை யாருடைய உதவியும் நாடுவதில்லை இந்தத் தம்பதியர்!

உருவாக்கியிருந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல், கலை சார்ட்டு களை வைக்க இடம் போதவில்லை.

ஏலகிரியில் மனை மலிவாகக் கிடைப்பதாக நண்பர் சொல்லவே, சென்னை வீட்டை விற்று, கையிலிருந்த சேமிப்பு அத்தனையையும் போட்டு, ஏலகிரியில் இடம் வாங்கி, வீடு கட்டி னோம். அருகிலேயே பதினைந்து லட்ச ரூபாய் செலவில் 'நேரு மையம்' அமைத் தோம்.''

அதை, சென்னை சயின்ஸ் சிட்டி தலைவர் ராமன் ஐ.ஏ.எஸ் வந்து திறந்தும் வைத்தார். இந்த மையத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு பார்க்க வருகின்றவர் களுக்கு, சுற்றிக் காண்பிக்கிறோம். நுழைவுக் கட்டணம் எதுவும் கிடையாது. ஆனால், எங்களுக்கு வயதாகிவிட்டதால், சரிவரப் பராமரிக்க முடியவில்லை'' என்று வருத்தப்படுகிறார் ஆர்.கே.நேரு.

தமக்கென சொத்து எதுவும் சேர்த்துக் கொள்ளாமல், கலைப் பொருட்களை, சேகரிப்பதிலும், கலை, விஞ்ஞான அறிவு அட்டைகளை உருவாக்குவதிலும் தமது வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் இந்த அபூர்வத் தம்பதியருக்கு, சில பல கசப்பான அனு பவங்களும் நேர்ந்திருக்கின்றன.

''எங்களைப் பற்றிக் கேள்விப்படும் பல பள்ளிகள், எங்களை அணுகி, தங் களுடைய கண்காட்சிக்காக, சார்ட்டு

களை, மாடல்களைக் கேட்டு வாங்கிச் செல்வார்கள். நாங்களும் பள்ளிக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றனவே என மனமுவந்து கொடுத்திருக்கிறோம். ஆனால், அவற்றில் உள்ள 'ஆர்.கே.நேரு யுனீக் ஆர்ட் சென்டர்' என்ற பெயரை அடித்தும், மறைத்தும், கிழித்தும் திரும்பத் தருவார்கள்.

இன்னொரு பிரபல பெண்மணி, ''உங்கள் கலைப் பொக்கிஷங்களை எல்லாம் என்னிடம் கொடுத்து விடுங்கள். என்னுடைய ஆர்ட் கேலரியில் நிரந்தரமாக வைத்துப் பராமரிக்கிறேன்'' என்று ஆசை காட்டினார்.

அருங்காட்சியகத்தின் பொறுப்பாளர் ஒருவர், எங்கள் கலைப் பொருட்களை எல்லாம் டிஸ்ப்ளே செய்து, காட்டி, வெளிநாட்டு மான்யத்தைப் பெற்றுவிட்டார்.

நண்பர்கள் போல நெருங்கிப் பழகி, அபூர்வப் பொருள்களைத் திருடிக் கொண்டு போனவர்கள் எத்தனையோ பேர்!'' என்று மனம் கசந்து பேசுகிறார் சாவித்ரி நேரு.

''நாங்கள் சிரமப்பட்டுச் சேர்த்த அறிவுச் செல்வத்தை, கலைப் பொக்கிஷத்தை முறையாகப் பராமரிக்க கலை ஆர்வலர்கள் முன் வருவார்களா? எங்கள் காலத்துக்குப் பிறகும் 'நேரு மையம்' துடிப்பாகச் செயல்பட்டால் எங்கள் நோக்கம் முழுமையடையும். யாராவது உதவிக்கரம் நீட்டுவார்கள் என நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். எங்கள் கனவு நிறைவேறுமா?'' என்று கம்மிய குரலில் கேட்கிறார் லிம்கா சாதனையாளர் ஆர்.கே.நேரு!

- வாணிஸ்ரீ

படங்கள் : **ஆர். சேகர்**



இந்திரக் கோபமும், இராம பாணமும் !

தெய்வங்களின் பெயர்களை முதற் சொல்லாகக் கொண்ட சில சொற்றொடர்களின் பொருளை அகராதிகளின் துணை கொண்டு கண்டறிந்தேன். அவை அறிவுக்கு விருந்தாகவும் மனத்துக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தன. இதோ ஒரு சில.

பிரமபத்திரம்	- புகையிலை
சிவ கூர்ச்சம்	- பால், தயிர், நெய், கோமியம், சாணம் என்னும் பஞ்ச கவ்வியம்
விஷ்ணுகரந்தை	- தரையில் படரும் ஒரு மூலிகை
சரஸ்வதி பண்டாரம்	- நூல் நிலையம்
நாராயணகௌளம்	- ஓர் இராகம்.
கணபதியணி	- அருகம்புல்
முருகனாடல்	- துடி, குடை என்னும் கூத்துவகை.
ஈஸ்வரி நாதம்	- கந்தகம்
இராம பாணம்	- புத்தகங்களை அரிக்கும், சிறு பூச்சி (வெள்ளி மீன் போன்றது)
இந்திரகோபம்	- தம்பலப்பூச்சி (வெல்வெட் பூச்சி)

- சி.பரமேஸ்வரி, திருச்சி

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

அறிவுப் போட்டி-12

ரூ. 5,000 பரிசு

சமீபத்தில் நடைபெற்ற செய்திகளை எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறீர்கள்? ஒவ்வொரு கேள்விக்கும் கீழே மூன்று பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து '✔' பண்ணி அனுப்புங்கள். குலுக்கல் முறையில் 20 பேருக்கு தலா ரூ. 250/- பரிசளிக்கப்படும். எங்கே, உங்க பொது அறிவை சோதிச்சுப் பாருங்க!

1. டெல்லியின் தற்போதைய முதல்வர் யார்?

   அ) மார்கரெட் ஆல்வா ☐ ஆ) சுஷ்மா ஸ்வராஜ் ☐ இ) ஷீலா தீட்சித் ☐

2. 2009லிருந்து 'குண்டு பல்பை' தடை செய்துள்ள அமைப்பு எது?

   அ) ஐரோப்பிய யூனியன் ☐ ஆ) இந்திய அரசு ☐ இ) ஐ.நா.சபை ☐

3. இந்தியாவின் தற்போதைய உள்துறை அமைச்சர் யார்?


   அ) சிவராஜ் பாடீல் ☐ ஆ) ப.சிதம்பரம் ☐ இ) பிரணாப் முகர்ஜி ☐

4. சமீபத்தில் எந்த இந்திய விஞ்ஞானியின் 150வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது?

   அ) ஜே.சி.போஸ் ☐ ஆ) ஜி.டி.நாயுடு ☐ இ) சி.வி.ராமன் ☐







5. மத்திய அமைச்சர் அன்புமணி எதிர்ப்பது எதை?

அ) புகைபிடிக்கத் தடை ☐ ஆ) கிராம மருத்துவர்கள் ☐ இ) மரபணு மாற்றப்பட்ட விதைகள் ☐

6. பக்ரீத் அன்று எந்த வகையைச் சேர்ந்த நூறு மிருகங்கள் தமிழகத்தில் கொல்லப்பட்டது சர்ச்சையைக் கிளப்பியது?

அ) ஆடு ☐ ஆ) ஒட்டகம் ☐ இ) மாடு ☐

7. இலங்கையின் ராணுவத் தலைவர் ஃபொன்சேகா சில தமிழகத் தலைவர்களை எப்படி வர்ணித்தது கடும் கண்டனத்துக்கு ஆளானது?

அ) ஏமாளிகள் ☐ ஆ) அப்பாவிகள் ☐ இ) கோமாளிகள் ☐

8. தனது நெருங்கிய நண்பர் என்று எந்த கிரிக்கெட் வீரரை நடிகை லட்சுமி ராய் குறிப்பிடுகிறார்?

அ) டோனி ☐ ஆ) சச்சின் ☐ இ) கும்ளே ☐



9. மைக்கேல் ஜாக்சன் எந்த மதத்துக்கு மாறியிருக்கிறார்?

அ) யூத மதம் ☐ ஆ) கிறிஸ்தவ மதம் ☐

இ) இஸ்லாம் ☐

10. சமீப மழை வெள்ளத்தின்போது சென்னையின் எந்த பகுதியில் படகுகள் விடப்பட்டன?

அ) தாம்பரம் ☐ ஆ) மயிலாப்பூர் ☐

இ) சாலிக்கிராமம் ☐

- **ஜி.எஸ்.எஸ்.**

போட்டி விதிகள் :

அறிவு விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கிழித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : அறிவுப் போட்டி - 12, மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

கடைசித் தேதி : 15.1.2009

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : .... ஈ-மெயில் :..

னபாகப் போட்டி-24
(முடிவு)

டிசம்பர் 2008ல் இடம்பெற்ற போட்டி விடைகள்

.. சரி 2.தவறு 3.தவறு (ஃப்ரக்டோஸ்)
. தவறு. (தக்காளியை)
. தவறு. (ஆந்திராவின்) 6. சரி
. தவறு. (தேன் மிக நீண்டகாலம் பாதுகாக்க
ற்றது.) 8.சரி 9. சரி 10. சரி. (35 அடி)

வந்து குவிந்த கூப்பன்களில் ரூ.150/- பரிசு பெறும் 20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வாழ்த்துகள்!

1.லக்ஷ்மி ராஜாமணி, கொல்கட்டா-29, 2. ஆர்.சீதா, கொல்கட்டா - 29, 3.எஸ்.ஜெயலக்ஷ்மி, சென்னை-20, 4.டி.வி.சரஸ்வதி, பெங்களூரு-64, 5. எஸ்.சுகுணா தங்கம், திருநெல்வேலி, 6.சுகுணா தினகர், சென்னை - 90, 7.வி.ராமா, பெங்களூரு - 55, 8.கே.கலாவாணி, பாண்டிசேரி, 9.கோ.கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 42, 10.எஸ்.டி.நவமணி தேவி, சூலூர், 11.ஜீவரேகா, ஒரிஸா-116, 12.எம்.எஸ்.லெக்ஷ்மி, திருச்சி-5, 13.சுபா மகாதேவன், சேலம்-7, 14.ஜெ.உமா தேவி, பெங்களூரு-16, 15.ஆர்.சந்திரா, திருச்சி-21, 16.எஸ்.நிர்மலா செல்வம், தர்மபுரி, 17.பி.கே.தனலக்ஷ்மி, பவானி - 638301, 18.டி.நாகராஜன், தஞ்சாவூர்-9, 19.ச.நித்யா குமாரி, சிதம்பரம், 20.எம்.காமாட்சி, பாண்டலம்.

“மறு ஜென்மம் எடுத்தேன்!”



● மேரி ஜோஸ்ஃபின்

அன்புள்ள மங்கையர் மலருக்கு,

எனக்கு வயது 44. எனக்கு கருப்பைக் கோளாறு இருந்ததால் 27.6.08 அன்று லேபரோஸ் கோபிக் முறையில் கருப்பை அகற்றப் பட்டது. இரண்டு வாரத்துக்குப் பிறகு என்னையும் அறியாமல் சிறுநீர் வடிய ஆரம்பித்தது. உடல் பலவீனத்தினால் இவ்வாறு இருக்கிறது என்று எனக்கு கருப்பை அகற்றிய மருத்துவர் கூற, நானும் சத்தான ஆகாரம் சாப்பிட ஆரம்பித்தேன். மூன்று மாதம் சென்றது தான் மிச்சம். பலன் ஏதும் கிட்டவில்லை. சிறுநீர் வடிந்த வண்ணமே இருந்தது. தாங்க முடியுமா? சாப்பிட முடியுமா? அலுவலகம்தான் போக முடியுமா? வீட்டிலேயும் இருக்க முடிய வில்லை. எந்நேரமும் கழிப் பறைக்குச் சென்று கொண்டிருப் பதுதான் வேலையாகிவிட்டது. பயங்கர மன உளைச்சலுக்கு ஆளானேன்.

பல மாதங்களுக்கு முன் 'பெண்களின் சிறுநீர் பிரச்னை' என்ற தலைப்பில் டாக்டர் கார்த்திக் குணசேகரனின் பேட்டியை மங்கை

மங்கையர் மலர் வாசகி மேரியிடமிருந்து மேற்படி கடிதம் வந்ததும், இது குறித்து டாக்டர் கார்த்திக் குணசேகரன் அவர்களை அணுகினோம்:

“திருமதி மேரி ஜோஸ்ஃபின் என்னிடம் வந்து, தமது உடல் உபாதையைச் சொன்னதுமே எனக்கு இது 'வி.வி.எஃப்' பிரச்னை தான் எனத் தெள்ளத்தெளிவாகிவிட்டது. இதுபோன்ற கேஸ் ஹிஸ்டரிகளை, பல்வேறு நிலைகளில் நிறையவே சந்தித்திருக்கிறேன். அதனால், முதலில் மேரி ஜோஸ்ஃபினுக்கு ஆறுதல் சொல்லி, குணமாகிவிடும் என்று நம்பிக்கை கொடுத்தேன்.

சரி, மேரிக்கு கருப்பை அறுவை சிகிச்சை நடந்தபோது என்னதான் ஆனது?

கருப்பையும், சிறுநீர்ப்பையும் அருகருகே ஒட்டியே அமைந்திருப்பதால், பொதுவாக கருப்பை அறுவை சிகிச்சையின்போது அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் சிறுநீர்ப் பையைச் சற்று தள்ளி விடுவார்கள். அப்படித் தள்ளிவிடும்போதோ, தளர்த்தும் போதோ, அல்லது ரத்தப் போக்கைக் கட்டுப் படுத்த பொசுக்கும்போதோ, சிறு நீர்ப்பையில் துளை விழ வாய்ப்பு உண்டு தான்! இதன் விளைவாக சிறுநீர் பையில் ஏற்படும் துளை வழியாக, சிறுநீர் கசிந்து, யோனிக் குழாய் வழியாக மேரிக்கு வடிந்திருக்கிறது. இதை மருத்துவமொழியில் 'recognised complication' என்போம்.

மேரியின் கேஸில் இதுதான் நடந்திருக்கிறது என்பதை பரிசோதனைகள் மூலம் உறுதி செய்து கொண்டேன். இதுபோன்ற பிரச்னைக்குரிய துளைகள், சிறுநீர் பையின் வாய்ப்பக்கம் இருந்தால், கீழ் வழியாக (யோனி) அறுவை சிகிச்சை செய்யலாம். ஆனால், மேரிக்கோ மேற்புறமாக ஓட்டை இருந்ததால், வயிற்றை அறுத்து, அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாகிவிட்டது.

முதலில் சிறுநீர்ப்பையும் வஜைனாவும்

“கால

யர் மலரில் படித்திருந்தேன். அவர்களை அணுகியபோது, பல மருத்துவப் பரிசோதனைகள் செய்துவிட்டு எனக்கு 'Vesico vaginal fistula' (VVF) என்று கூறினார். அதாவது கருப்பையை அகற்றும்போது சிறுநீர்ப்பையில் துவாரம் விழுந்ததால் தன்னிச்சையாக சிறுநீர் வடிவதாக டாக்டர் கூறினார். மீண்டும் ஒரு அறுவை சிகிச்சைக்குப் பின், சிறுநீர் வடிவது முற்றிலுமாக நின்றுவிட்டது. பூரண ஆரோக்கியமாகி அலுவலகம் செல்லவும் தயாராகிவிட்டேன். டாக்டர் கார்த்திக் குணசேகரன் செய்த அறுவை சிகிச்சையின் காரணமாக, நான் மறுஜென்மம் எடுத்தேன்.

அவரது மனித நேயம், முகமலர்ச்சியுடன் கூடிய சேவை, தன்னடக்கம், நோயாளிகளுக்கு தைரியம் சொல்வது, இளம் வயதில் பெரும் திறமை இவை அனைத்துமே என்னை விரைவில் குணமடையச் செய்தன. நன்றி டாக்டர்! நன்றி மங்கையர் மலர்!



அன்பு வாசகி,

மேரி ஜோஸ்ஃபின், சென்னை - 21

நவீன மருத்துவம்

தனித்தனியாக பிரிக்கப்பட்டன. பிறகு வஜைனாவை மூடி, அதன் பிறகு சிறுநீர்ப் பையை மூடி தைக்கப்பட்டது. மேரியின் வயிற்றுப் பகுதியிலிருந்தே சிறிதளவு ஜவ்வை எடுத்து, மீண்டும் சிறுநீர்ப்பையும், யோனிக் குழாயும் ஒட்டிக் கொள்ளாத வகையில் இரண்டுக்கும் இடையே வைத்துத் தைக்கப்பட்டது. கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. பதினான்கு நாட்கள் நான்கு விதமான டிரெயின் பைப்களுடன் படுக்கையில் இருந்தார். அவர் பரிபூரணமாக குணமாகும் வரை, எனக்கும் தூக்கம் போய்விட்டது.

நல்லவேளையாக, மேரியின் வயிற்று உள் தசைகள் தையல்களைத் தாங்கும் அளவுக்கு நல்ல நிலையில் இருந்தன. அதனால், அறுவை சிகிச்சை திருப்திகரமாக நடந்தது. சிறுநீர் வடிவதும் நின்றுவிட்டது.

அவருடைய தொடர்ந்த பிரார்த்தனையால் விரைவில் குணமாகிவிட்டார்.


எங்கள் குழுவின் சிறந்த மருத்துவக் கண்காணிப்பாலும், மேரியின் தொடர் பிரார்த்தனையாலும் அவர் விரைவில் குணமடைந்தார்.''

''மருத்துவ சிகிச்சையைப் பெற்று நிம்மதியாக புதிய வாழ்க்கை வாழும் மேரியின் மனத் துணிவுக்குப் பாராட்டு! அவருக்கு வழிகாட்டிய மங்கையர் மலருக்கு நன்றி!'' என்கிறார் டாக்டர் கார்த்திக் குணசேகரன்.

* டாக்டர் கார்த்திக் குணசேகரன்



ாழ்த்தாதீங்க!”



பெப்பர் பாப்கார்ன்

● **சியாமளா ராஜகோபால், சென்னை - 64**

ஹாய் அனு, நீங்கள் அடிக்கடி ஹம் செய்யும் பாடல் எது? (உங்க பாடல்களை நாங்க ஹம் செய்யறோம்!)

தாங்க்ஸ் சியாமளா... எனக்கு கபீர் பஜன்ஸ் ரொம்ப பிடிக்கும். 'நய்ஹர்வா' என்கிற பஜன் நான் அடிக்கடி ஹம் செய்யற பாடல்.

● **ஆர்.சரோஜா, மடிப்பாக்கம்**

இளம் இசை அமைப்பாளர் ஜீ.வி.பிரகாஷ் இசையில் பாடியிருக்கீங்களா மேடம்?

ஓ! இப்ப ரிலீஸாகியிருக்கே 'சேவல்'... அந்தப் படப் பாட்டு களைக் கேட்கலையா நீங்க...?

● **ஆர்.நித்யா, சிட்லபாக்கம்**

எங்களுக்கு உங்கக் குரல் ரொம்ப பிடிக்கும். உங்களுக்கு யாரோட குர ரொம்பப் பிடிக்கும்?

அதுக்கு ஒரு பெரிய லிஸ்ட்டே இருக்கே! இரு தாலும் முதல்லே என்னோட குரு ஸ்ரீமதி பிருந்தா மாவின் தேன் குரல் ரொம்பப் பிடிக்கும். அப்புற தஞ்சாவூர் எஸ்.கல்யாணராமன், எஸ்.ஜானகி அம்ம ஆஷா போன்ஸ்லே... குமார் கந்தவர்வாவோ ஹிந்துஸ்தானி இசையில் சொக்கிப் போயிடுவேன் அப்புறம் மஹதி ஹாசனின் அற்புத பஜன்கள். சொல்லிக்கிட்டே போகலாம்!

● **ஜே.சி.ஜெரினா காந்த், ஆலந்தூர்**

உங்களை, உங்களுக்கே அடையாளம் காட்டி பாடல் எது? உலகுக்கு அடையாளம் காட்டிய பாட எது?

என்னை எனக்கு அடையாளம் காட்டியது நிச் யமா கர்நாடக இசைதான். உலகுக்கு? உங்களுக்கே தெரிஞ்சிருக்குமே ஜெரினா... 'அன்பென்ற மழை யிலே' (மின்சாரக் கனவு), 'கறுப்புதான் எனக்கு பிடிச்ச கலரு' (பொற்காலம்) ஹிந்தியில் 'தால் படப்பாடல்கள்.

● **உமாதேவி பலராமன், திருவண்ணாமலை**

உங்களுக்கு ஜாதகம், ராசி பலன் இதுல எல்லாம் நம்பிக்கை உண்டா?

ஓரளவு உண்டு... அதுக்காக மூடநம்பிக்கைகள் கிடையாது. என்னைப் பொறுத்தவரை, நம்ம இந்து மதத்தில் சொல்லப்பட்டு இருக்கிற பல விஷயங் களுக்கு விஞ்ஞானப்பூர்வமான நோக்கங்கள் உள்ளன. அவற்றைக் கடைப்பிடிப்பதில் தப்பில்லை!

● **கௌரி ராமச்சந்திரன், அண்ணாநகர், சென்னை**

திரைப்படத்துக்கு இசை அமைத்திருக்கிறீர்களா?

என்ன இப்படிக் கேட்டுட்டீங்க கௌரி? 'ஃபைவ்

சொதப்பிய நடிகை யாரு?

ஸ்டார்'னு படம் வந்ததே, அதுல ஹிட்டான பாடல்களுக்கு நானும் என் கணவருமாகத்தான் இசை அமைத்திருக்கிறோம். தொடர்ந்து வாய்ப்பு தர முன் வந்த படங்கள் சரியாக அமையவில்லை. நல்ல வாய்ப்பு வந்தா மறுபடியும் இசை அமைப்போம். ஓ.கே.வா?



● **மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்**

இசை அரசி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி முன்பாகப் பாடிய அனுபவம் உண்டா...?

மூன்று வயசுக் குழந்தையாயிருந்தப்பவே 'பஜகோவிந்தம்' பாட்டை முழுசும் பாடுவேனாம்! அப்படி என் மனசில் ஆழப் பதிந்த எம்.எஸ். அம்மா என் கச்சேரிக்கும் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கிய பாக்கியசாலி நான்.

வாசகர்களின் 'பளீர்' கேள்விகளுக்கு
அனுராதா ஸ்ரீராம்
தந்த 'பளிச்' பதில்கள்!

● **கே.ராஜேஸ்வரி, வந்தவாசி**

உண்மையா சொல்லுங்க! உங்க குரலுக்குப் பொருத்தமா வாயசைத்துப் பாடிய நடிகை யாரு? சொதப்பிய நடிகை யாரு?

நடிகைகள் சௌந்தர்யா, மீனா இவங்கல்லாம் சொக்கத் தங்கம், பொற்காலம் போன்ற படங்கள்லே என் பாட்டுக்கு அழகா உதட்டசைவு கொடுத்திருக்காங்க. 'கருவேலங்காட்டுக்குள்ளே' பாட்டுக்கு மீனா அழகா நடிச்சாங்களே! சொதப்பிய நடிகைன்னு யாரும் இல்ல... ஆனா மொழி தெரியாம கஷ்டப்பட்டு வாயசைத்தவர்கள் உண்டு!

● **ரஜினி பாலசுப்ரமணியன், சென்னை - 91**

புதிதாக சங்கீதம் கற்பவர்களுக்கு உங்க அட்வைஸ்...?

சங்கீதத்தை சங்கீதத்துக்காகவே, முழு மனசோட அர்ப்பணிப்பு உணர்வோட கத்துக்குங்க... சினிமாவுல பாடணும், மேடைக் கச்சேரி செய்யணும்னு அவசரக் கோலத்துல கற்றுக்கொள்ள வேண்டாம்...!

● **ஜெ.சௌபர்ணிகா, மணச்ச நல்லூர்**

சின்ன வயசுல விளையாடிய விளையாட்டு ஞாபகம் இருக்கா? எந்த கேம் பிடிக்கும்?

ஏன் இல்லாம? பல்லாங்குழி ஆட ரொம்பப் பிடிக்கும்! குழி நிறைய சோழிகளை அள்ளும் போது, என்னவோ உலகப்

பொக்கிஷங்களையெல்லாம் அள்ளிய பெருமிதம் வந்து குதிக்க வைக்கும்! வெள்ளை மனம்கொண்ட பிள்ளைப் பருவம் அல்லவா?

• **புவியரசி, வந்தவாசி**

குரல்வளம் நல்லா இருக்கணும்னா எதையெல்லாம் சாப்பிடக் கூடாது...? உங்களுக்குப் பிடிச்ச உணவு ஐட்டம் எது?

பொதுவா சர்க்கரை, எண்ணெய், மசாலாப் பொருட்களை அதிகம் சேர்க்காம இருக்கறது பெட்டர். மத்தபடி அவங்க வங்க உடல் வாகைப் பொறுத்த விஷயம். எனக்கு பிடிச்ச அயிட்டமா? சுத்த சைவம். எல்லாமே ரசிச்சு... ஆனா அளவோட சாப்பிடுவேன். குறிப்பா எதுவும் இல்ல!

• **பொன்னி, காரைக்கால்**



ஆட்டம், பாடல் தவிர வேற என்ன கலைகள் தெரியும்?

ஆஹா! பிரமாதமா சமையல் செய்வேனே... அப்புறம்... வீட்டை சுத்தமா, அலங்காரமா வைக்கவும் ரொம்பப் பிடிக்கும்!

• **ஜானகி சுப்ரமணியன், திருப்பூர்**

பாடகர்கள், இப்பல்லாம் நடிகர்களாக வருவதில் அதிக ஆர்வம் காட்டுகிறமாதிரி இருக்கிறதே?

இதில் என்ன தவறு ஜானகி மேடம்? நிறைய புதிய திறமையாளர்கள் உருவாகும் போது சரியான நபர்களைத் தேர்வு செய்து அவர்களை ஊக்குவிப்பது நல்ல செயல் தானே?

• **சுந்தரி வஜ்ஜிரசேனன், அயன்புர**

உங்கள் முதல் பாடல், படம் எது?

ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் 'இந்திர படத்தில் 'அச்சமில்லை' என்ற பாடல்

• **ஜி.கீதா, சேலம்**

உங்க முதல் மேடைக் கச்சேரி பற்றி..

அதை ஏன் கேட்கறீங்க? என் 12 வயசு சென்னை கே.கே.நகர்ல இருக்கிற அம்ம கோயில்ல என் முதல் மேடைக்கச்சேரி. நான் அமிர்தவர்ஷினி ராகம் பாட, கோயி கூரையே பெயர்ந்து விழுகிற அளவுக் மழையோ மழை...

• **என்.ஸ்ரீநிவாசன், தாம்பரம்**

மேடைக் கச்சேரிகளில் எது பிடிக்கு கர்நாடக இசை... சினிமா பாடல்கள். மெல்லிசை...?

மக்களை வயப்படுத்துகிற எல்ல இசை வடிவிலுமே கச்சேரி செய்யப் பிடி

அடுத்த பெப்பர் பாப்கார்னில் பிரேமலதா விஜயகாந்த் பதிலளிக்கிறார். வாசகியர் ஜாலி கேள்விகளை அனுப்பலாம்

கும்தான். ஆனால், கர்நாடக இசையி நம் கற்பனை வளத்தைக் கொட்டலாம். மனசுக்கு ரொம்பத் திருப்தியாய் இருக்கு

• **சித்ரா சதாசிவம், நெல்லை சந்திப்**

சமீபத்தில் தங்கள் மனம் கவர்ந் திரைப் பாடல்?

'முன்பே வா' என்ற பாடல்... ஸ்ரேய பாடியது. இளம்தென்றலாய் நெஞ்சை வருடும் காதல் பாடல் அது! அதற்கேற் மிருதுவான குரல்! 'ரங்கோ... ரங்கோலி..' என்ற கோரஸுடன் ஸ்ரேயாவின் ஹம்மி கும் சேரும்போது கண்களை மூடி ரசிக்க தூண்டும்.


தொகுப்பு : **பத்மினி பட்டாபிராமன்**



ஐரோப்பா நாடுகளுக்குச் சுற்றுலா செல்வோருக்கு ஒரு முன்னெச்சரிக்கை.

எல்லா முழு கட்டணங்களையும் (சாப்பாடு, விமானப் போக்குவரத்து, தங்கும் வசதி உட்பட) அவர்கள் இங்கு வசூலித்தாலும், அங்கும் ஒவ்வொரு இடங்களிலும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பல இடங்களில் பாத்ரூம் செல்ல, கட்டணமாக 1 யூரோ அல்லது 2 யூரோ (ரூ.62 முதல் 124 வரை) வசூலிக்கப்படுகிறது. காஃபி அல்லது டீ சாப்பிட 2 யூரோ (ரூ.124) கொடுக்க வேண்டும். மேலும் மதிய உணவை பல டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ் கொடுப்பதில்லை. மதிய உணவு எப்படியும் ஒரு நபருக்கு 5 யூரோ அல்லது 6 யூரோ (ரூ.300 முதல் 400 வரை) செலவாகும்.

எனவே சுற்றுலாப் பயணிகள் முன்னெச்சரிக்கையாக, கூடுதலாகப் பணம் வைத்திருப்பது நல்லது. இல்லையென்றால், அவதிப்பட நேரிடும். நேரில் கண்ட உண்மை.

- ராதா வெங்கடேஷ், சென்னை



ரூ. 5,000 பரிசு அறிவுப் போட்டி-11 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!

குலுக்கல் முறையில் ரூ.250/- பரிசு பெறும் இருபது அதிர்ஷ்டசாலிகளின் பட்டியல் இதோ!

1.எம்.லதா, திருவாரூர், 2.அ.அழகப்பன், காளையார் கோயில், 3.ஆர்.ரஞ்சனி, பெங்களூரு, 4.பி.சூடாமணி, சென்னை - 26, 5.ஜி.வித்யா, ஒசூர், 6.குமாரி சுப்பிரமணியன், திருப்பத்தூர், 7.கில்பர்ட் ஜோபர், பாண்டிச்சேரி, 8.ஜானகி,மதுரை, 9.எஸ்.தர்மாம்மாள், கும்பகோணம், 10.உஷா ராமமூர்த்தி, கொல்கட்டா - 29, 11.கே.சாவித்திரி, பெங்களூரு, 12.கிரிஜா ராமசுவாமி, மும்பை-71, 13.கே.பவித்ரா, திருவெந்திபுரம், 14.அமுதா ஜெகன், சென்னை - 33, 15.கே.புஷ்பா, கொளத்தூர், 16.ஜெ.கைலேஷ்குமார், சேலம்-15, 17.எஸ். வனஜா, கும்பகோணம், 18.செனம்யா, பெங்களூரு, 19. கே.பிருந்தா, கோவை-20, 20.மாயா நடராஜன், பெங்களூரு-58

டிசம்பர் 2008ல் வெளியான அறிவுப் போட்டி-11 விடைகள்

1) கர்நாடகா 2) இன்வெர்ட்டர்கள்
3) கடமையைச் செய்; பலனை எதிர்பார்
4) சந்திராயான் - 1
5) அலைவரிசை 6)அத்வானி
7) அகல ரயில்பாதை
8) ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர்
9) ஜான் மெக்கெயின்
10) அபினவ் பிந்த்ரா

ஆடை வடிவமைப்புத் துறையில் பெரும் புகழ்பெற்ற பெண்மணி ரீதுகுமார். பல மும்பை நடிகைகளின் ஆடைகளை டிசைன் செய்து அசத்திய இவருக்கு பிரெஞ்சு நாட்டின் 'கலைகளுக்கான செவாலியே' (Chevalier dans l ordre des Arts etdes Lettres) விருது கிடைத்திருக்கிறது. தனிப்பட்ட சாதனை என்பதைவிட ஆடை வடிவமைப்புத் துறைக்கான விருது என்பதே இவருக்கு மிகவும் மகிழ்ச்சியாம்.



ஜப்பானின் புகழ்பெற்ற டொயோட்டா கார் நிறுவனம், இந்தியாவின் கிர்லோஸ்கர் குழுமத்துடன் இணைந்து, கார் உற்பத்தியைத் துவக்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக முதலில் 3200 கோடி ரூபாய் முதலீடு செய்யப் படுமாம்!

இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் மகேந்திர சிங் தோனிக்கு, அவர்களது ரசிகர்கள் ராஞ்சியில் கோயில் கட்ட திட்டமிட்டுள்ளார்கள். ''அமிதாப்பச்சன், ஷாருக்கான் போன்றோருக்கு லண்டனில் மெழுகிலான சிலை இருக்கும்போது, எங்கள் கடவுளுக்கு (தோனி) ஏன் சிலை வைக்கக் கூடாது?'' என்கிறார் தோனி ரசிகர்கள் சங்கத் தலைவர் ஜிதேந்திரகுமார். ஐந்தடி உயரத்தில் தோனியின் ஆக்ஷன் சிலையை வடிவமைக்க உள்ளனர். கிரிக்கெட் ரசிகர்கள் பலர், கோயில் கட்டுவதற்கு நன்கொடையை வாரி வழங்குகின்றனராம். குழந்தைப் பருவம் முதல் தோனியின் 200 புகைப்படங்களைச் சேகரித்து கேலரி அமைக்கவும் தோனி ரசிகர்கள் ஒளப் முடிவு செய்துள்ளது!





விலைவாசி உயர்வை எதிர்த்து விதவிதமான போராட்டங்கள்! முன்னாள் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஐதராபாத்தில் சட்டசபைக்கு வெளியே காய்கறிகளை விற்று, ஒரு போராட்டம் நடத்தினார்.



பிரபல பாலிவுட் நடிகர் ஜாக்கி ஷ்ராஃப் ஒரு தமிழ்ப்படத்தில் நடிக்கவிருக்கிறார். படத்தின் பெயர் 'ஆரண்ய காண்டம்.'

வயிற்றில் மோதிரம்!



எங்கும் பறவைக் காய்ச்சல் என்பதே பேச்சாய் இருக்கும் தற்சமயம், அஸாமில் உள்ள மிருகக்காட்சி சாலை அதிகாரிகளுக்குப் புதிய பிரச்னை! அங்கிருக்கும் சிறுத்தைகள், புலிகள், காட்டுப் பூனைகள் போன்றவை இதுவரை சிக்கன் சாப்பிட்டு வந்தன. பறவைக் காய்ச்சல் காரணமாக சிக்கன் கொடுக்க முடியாத நிலையில், வேறெந்த மாமிசத்தைக் கொடுத்தாலும் சாப்பிடாமல் படுத்துகின்றன. சிக்கன் சாப்பிட முடியாத கோபத்தில் விலங்குகள் உறுமுகின்றனவாம்!

நியூ(ஸ்)மார்ட்


இந்த வருடம் பிறந்த குழந்தைகள், அவர்களது வாழ்நாள் முடிவுக்கு வருமுன் இன்னொரு பயங்கர பூகம்பம் மற்றும் சுனாமியை எதிர்கொள்ள நேரிடும் என்று பருவ நிலை வல்லுநர்கள் கூறுகிறார்கள்.





நடிகர் ஷாருக் கானுக்கு மலேஷிய அரசின் தாதுக் (Datuk) பட்டம் வழங்கப்பட்டது. சாதனையாளருக்கான இந்த விருதை, மலேஷிய முறையில் உடையணிந்து பெற்றுக்கொண்டார் ஷாருக் கான்.

உலகப் புகழ் பெற்ற அர்ஜென்டினாவின் கால்பந்தாட்ட வீரர் மாரடோனா, அண்மையில் கொல்கத்தாவுக்கு வந்திருந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இடையே, அன்னை தெரசாவின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தி, அங்கு கூடியிருந்த குழந்தைகளையும் வாழ்த்தினார்.



சுற்றுச் சூழல் பிரச்னைகள் குறித்து ஹென்கல் இந்தியா நிறுவனம் தேசிய அளவில், பள்ளிகளுக்கு இடையேயான கட்டுரைப் போட்டியை நடத்தியது. ஐந்நூறு பள்ளிகளிலிருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆறு பேர் இறுதிச் சுற்றில் தகுதி பெற்றனர். அவர்களுக்குள் நடந்த இறுதிப் போட்டியில் பொள்ளாச்சியைச் சேர்ந்த மானசா பரமசிவம் என்ற மாணவி, இரண்டாம் பரிசு ரூ. 7500/- பெற்றார்.



சமீபத்தில் கோவாவில் நடந்த 39வது சர்வதேசத் திரைப்பட விழாவில் 'துல்பன்' (Tulpan) என்ற படத்துக்கு, சிறந்த திரைப்படத்துக்கான தங்கமயில் விருது அதன் இயக்குநரான, கசகஸ்தானைச் சேர்ந்த 'Sergei Dvortsevoy' (எப்படி சௌகரியமோ உச்சரித்துக் கொள்ளுங்கள்) என்பவருக்கு வழங்கப்பட்டது. கொடுத்தவர் கமலஹாசன். இவருக்குச் சிறந்த இயக்குநர் விருதும் கிடைத்துள்ளது.

சிம் கார்டு தொழில்நுட்பம் மூலம் தனியார் மொபைல் ஃபோன் நிறுவனம் ஒன்று தமிழக அரசின் பஸ்களில் திரைப்படங்கள் ஒளிபரப்ப முடிவு செய்துள்ளது. இடையே விளம்பரங்களும்கூட... இதற்காக பஸ்களில் எல்.சி.டி. மானிட்டர் பொருத்தப்படும். இந்த சிம் கார்டு மூலம் பஸ் எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பதையும் தெரிந்துகொள்ள முடியுமாம்!

அமெரிக்காவின் ஹூஸ்டன் மாகாணத்தில் இருந்து நூறு மைல்கள் தள்ளி இருக்கும் ஸாம்ரேபர்ன் ஏரியில் கடந்த நவம்பர் 28ம் தேதி ஒரு பெரிய மீனைப் பிடித்தார் ஒருவர். அதன் வயிற்றினுள் பெரிய நீல நிற மோதிரம் டாலடித்தது. மோதிரத்துக்குள் 'ஜோ ரிச்சர்ட்ஸன்' என்று பெயரும் பொறிக்கப் பட்டிருந்தது. மீன் பிடித்தவர் எப்படியோ இன்டர்நெட் மூலம் 'ஜோ'வைக் கண்டுபிடித்து, மோதிரத்தை அவரிடம் தந்தார். 21 வருடங்களுக்கு முன்பு தாம் தொலைத்த மோதிரத்தைத் திரும்ப பெற்றதில் வியப்பு தாங்கவில்லை ஜோவுக்கு! ராஜா ராணிக் கதைகளில் வருகிற மாதிரி இல்லை...?



தென் ஆப்ரிக்காவில் நடைபெற்ற 2008-ம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் ரஷ்யாவின் 'க்ஸென்யா சுகிநோவா' உலக அழகியாக தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்திய அழகி பார்வதி ஓமனக்குட்டன் இரண்டாவது இடம் பெற்றார்.

தொகுப்பு: **பத்மினி பட்டாபிராமன்**



பொங்கிய மனது!

தை முதல்தேதி என் அறுபதாவது பிறந்த நாள். ஒரு யோசனை வந்தது. அறுபது அஞ்சலட்டைகளை வாங்கினேன். மார்கழி 1ம் தேதியிலிருந்து திருப்பாவை ஒவ்வொரு பாசுரமாக, அர்த்தத்துடன் கைப்பட எழுதி, உறவினர்கள், நண்பர்கள் என்று அறுபது பேருக்கு அனுப்பினேன். அது தை 1ம் தேதியுடன் முடிந்ததோடு, புது வருடப் பொங்கல் வாழ்த்தாகவும் அமைந்தது.

'பாசுரத்தின் அர்த்தம் நன்றாக இருந்தது. கடிதம் எழுதவே உடம்பு வணங்காமல் இருக்கிறது. நீ எப்படி இந்த வயதில் எழுதுகிறாய்?' என்று பலரும் ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும் விசாரித்தார்கள்.

இது நாள் வரை புதுப் பானையில் பால் பொங்கியதைவிட, சென்ற வருடம் அதிகமாகவே பால் பொங்கி வழிந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. எத்தனை தான் தைத் திங்கள் வந்து சென்றாலும், 60ம் பிறந்த நாளுடன் வந்த அந்தத் தைத் திங்களை மறக்க இயலாது.

- ஆர்.ராஜலக்ஷ்மி, திருச்சி

உறைக்க வைத்த குடும்பம்!

எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாக காந்திஜி, அன்னை தெரஸா... போன்றவர்கள் நிறைய பேர் உள்ளனர். அதேபோல எப்படி வாழக்கூடாது என்பதற்கும் உதாரண புருஷர்கள் உண்டு. இவர்களில் ஒரு குடும்பமே, எங்கள் பகுதியில் குடும்பத் துடன் தற்கொலை செய்து கொண்ட நாயர் குடும்பம்.

பெரிய நிறுவனத்தில் டி.ஜி.எம்.ஆக இருந்து ஓய்வு பெற்ற அப்பா(81வயது), அம்மா (70 வயது) அதே நிறுவனத்தில் மேனேஜர் ஆக இருந்த பெண் சுசித்ரா (46), மற்றும் மகன் சுதீர் (42). சுசித்ராவுக்கும், சுதீருக்கும் திருமணமாகவில்லை. இருவருமே இன்ஜினியரிங் படித்தவர்கள்.



எவ்வளவோ புத்திசாலித்தனமாக, கௌரவமாக குடும்பம் நடத்தலாமில்லையா? ஆனால், இவர்கள்?

2 கார், 5 மொபைல்கள், 72க்கும் மேற்பட்ட க்ரெடிட் கார்டுகள், ஒரு லேப்டாப், 2 கம்ப்யூட்டர்கள் என ஆடம்பரம். இது தவிர லட்சக்கணக்கில் வங்கிகளில் கடன். தலை தூக்க முடியுமா?

அக்கம்பக்கம் ஒருவர்கூட பழக்கமில்லை. உறவினர்கள் யாரும் ஒட்டவில்லை. கேரளாவில் போலீஸார் உறவுக்காரர் ஒருவரை விசாரித்தபோது, ''25 வருடங்களாகத் தொடர்பே இல்லை'' என்று கூறியுள்ளார். வேலைக்காரி ''ஒருவருக்குள் ஒருவர்கூட அதிகம் பேசிக்கொள்ளமாட்டார்கள்'' என்று கூறுகிறாள்.

சம்பவம் நடந்த அன்று அப்பா, அம்மாவுக்கு விஷம் கொடுத்துவிட்டு, சுசித்ராவும், சுதீரும் தூக்கில் தொங்கியுள்ளனர். மறுநாள் வேலைக்காரி வந்து கதவு தட்டியபோது வீட்டுக்குள்ளிருந்து கெட்ட வாடை வீசவே, போலீஸ் வந்தது. கதவை உடைத்துப் பார்த்தால்... குடும்பமே அழுகிய உடலுடன் கோரமாய்...


கட்டுச் செட்டாக குடும்பம் நடத்தி இருந்தால், படித்த இவர்களால் வாழ முடியாதா? சுசித்ரா ராஜினாமா செய்த போது, கம்பெனி மறுபடியும் வேலை தருவதாகவும்கவும் கூறியுள்ளது. இவர்கள் இருவரும் வங்கியில் கடன் வாங்கி பிஸினஸ் செய்யப் போவதாகக் கூறியுள்ளனர். எங்கே ஏமாந்தார்களோ? எப்படிச் சறுக்கினார்களோ? கோழைகளாய் உயிரை விட்டு விட்டனர்.

ஊனமுற்றோர், ஏழைகள் என எவ்வளவு பேர் போராட்டங்களுக்கிடையே சாதனை செய்து வருகிறார்கள். படித்த இவர்களின் செயல் அனைவருக்கும் வருத்தத்துக்குரிய பாடம் இல்லையா? 'பணம்... பணம்...' என்று பறப்பவர்களுக்கு உறைக்குமா?

- சாந்தி குணசேகரன், மும்பை

விழிப்புணர்வுக் கட்டுரை

பிரசவ காலத்தில்...



சுரப்பதில் சந்தேகமா?

ஒரு பெண் மிகவும் விரும்புவது தாய்மைப்பேறு. அதிலும், இன்றைய காலகட்டத்தில் குழந்தை பிறந்த பின் அக்குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தால் இரட்டிப்பு மகிழ்ச்சிதான். ஆனால், நமது ஊர் மகப்பேறு மருத்துவர்கள் குழந்தை பிறந்தபின் அத்தாய்க்கு சரிவர பால் சுரக்கிறதா அல்லது ஏதேனும் பிரச்னை உள்ளதா என்பதைக் கவனத்தில் கொள்வதில்லை. வெளிநாடுகளில் உள்ளது போல் 'Lactation Consultant' இங்குள்ள மிகப் பிரபலமான மருத்துவமனைகளில்கூட இல்லை என்பது மிகவும் வருத்தமான விஷயம்.

குழந்தை பிறந்தபின் தாயின் மனத்தில் ஓடும் ஒரே கேள்வி, தன் குழந்தைக்கு தாய்ப்பால் போதுமானதாக உள்ளதா இல்லையா என்பதே. மருத்துவர்களின் கூற்றுப்படி பிறந்த குழந்தைக்கு 1 - 2 மணி நேர இடைவெளியில் 1 அவுன்ஸ் (2 மேஜைக்கரண்டி) பால் தேவைப்படும். சில குழந்தைகள் தாயிடம் வந்தவுடன் சிறிது நேரம் பால் குடித்துவிட்டு அடுத்த சில நிமிடங்களிலேயே உறங்கிவிடுவார்கள்.

இத்தகைய குழந்தைகளின் தாயின் மனத்தில்தான் எத்தனை எத்தனை சந்தேகங்கள்?

★ குழந்தை நன்றாகப் பால் குடித்ததா இல்லையா?

★ தங்களிடம் என்ன அளவு பால்

சுரக்கிறது?

★ நன்றாகப் பால் சுரப்பதற்கு ஏதேனும் உடனடி வழிகள் உள்ளனவா?

மேற்படி சந்தேகங்களுக்கு ஒரே தீர்வு எலெக்ட்ரிக் பிரெஸ்ட் பம்ப். ஆம், இக் கருவி பாலூட்டும் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இக் கருவியை, தாய் தன் மார்பகத்தில் பொருத்தி தாய்ப்பாலை பம்ப் செய்து எடுக்கலாம். எவ்வளவு மணி நேர இடைவெளியில் எத்தனை மில்லி பால் சுரக்கிறது என்பதை எல்லாம் துல்லியமாகப் பார்க்கலாம்.

இந்த எலெக்ட்ரிக் ப்ரெஸ்ட் பம்ப் தற்பொழுது நம் ஊரிலும் விற்கப்படுகிறது. இதன் விலையும் பால் பவுடர் செலவைக் காட்டிலும் குறைவுதான்.

இனி, தாய்ப்பால் நன்றாகச் சுரப்பதற்கும் / பம்ப் செய்வதற்கும் சில முக்கிய எளிய வழிகள்:

★ ஓய்வும் ரிலாக்ஸ்டாக இருப்பதும் மிகமிக அவசியம்.

★ ஒரு நாளைக்கு குறைந்தது 8 - 10 டம்ளர் தண்ணீர் குடியுங்கள். மற்ற பழரசங்கள், சூடான பானங்களையும் சேர்க்க ஒரு நாளைக்கு 3 லிட்டருக்கு மேல் வேண்டாம்.

★ குறைந்தது 2 - 3 மணி நேர இடைவெளியில் பம்ப் செய்து பால் எடுக்கவும்.

★ பம்ப் செய்வதற்கு 15 நிமிடங்களுக்கு முன் சூடான பாலில் Drinking Cocoa கலந்து பருகலாம்.

★ வெந்தயம் கேப்ஸ்யூல்ஸ் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 சாப்பிடலாம்.

★ சீரகம், சுரைக்காய், நெய், ராகி, வெல்லம், பூண்டு போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவும்.

★ மருந்துக் கடைகளில் விற்கும் Lactation Tablets / Powder போன்றவற்றையும் குழந்தை பிறந்தவுடன் எடுக்க ஆரம்பிக்கலாம்.

மேற்கூறிய அனைத்து வழிகளையும் குழந்தை பிறந்த முதல் வாரத்திலேயே தொடங்கிவிடவும். அப்பொழுதுதான், குழந்தைக்கு நன்றாகவும் தொடர்ச்சியாவும் பால் கொடுக்க இயலும்.

சிசேரியன் மூலம் குழந்தை பிறந்தால், அத்தாய்க்கு பால் சுரக்க குறைந்தது இரண்டு நாட்களாவது ஆகும். ஆகையால், மனம் தளர வேண்டாம்.

- சங்கீதா சதீஷ், புதுதில்லி



டீ.வி. சேனல்களில் முக்கியமான செய்தி ஃப்ளாஷ் நியூசாக ஓடிக் கொண்டிருக்கும் போது உள்ளூர் விளம்பரங்களை நிறுத்தி வைத்து பிறகு ஓட விடவேண்டும். அல்லது மேல் பக்கமாக வருமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டும் ஒன்றாக ஓடினால் நேயர்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது.

– என்.விஜயலெட்சுமி, தபோவனம்

திருமணங்களில் தாலி கட்டும் போது சொல்லப்படுவது மந்திரமல்ல! இது ஒரு ஸ்லோகமே ஆகும்.


"மாங்கல்யம் தந்து நாதேன
மமஜீவன ஹேதுனா
கண்டே பத்நாமி சுபகே
சஞ்சீவ சரதஸ் ஸதம்"

இதன் பொருள்:

"இது புனிதமான கயிறு. நான் நல்ல படியாக ஜீவித்திருக்க வலிமைப் பெற்றது. இதை நான் உன் கழுத்தில் அணிவிக்கிறேன். நீ சகல செளபாக்யவதியாய் நூறாண்டுகள் சுகபோகங்களுடன் வாழ்ந்திருப்பாயாக!"

- ஆதிரை வேணுகோபால்,
சென்னை - 94

மாங்கல்யம் தந்து நாதேன!



பெண்ணே, நீ வாழ்க!



தாய்மையைப் பற்றி நான் கேள்விப்பட்ட ஓர் அழகான கவிதை.

''மகனே,
உன்னைத் தூக்கி வைத்தால் என் கைவலிக்கிறது.
இறக்கிவிட்டால்
என் இதயம் வலிக்கிறது.''

இப்படி சிறப்பிக்கும் தாய்மையை வலிக்க வலிக்க காயப்படுத்துவது என் நோக்கமல்ல. ஒவ்வொரு தாயும் தியாகிதான். சாதாரணமாக மனிதன் தாங்கக் கூடிய வலியின் அளவு 46 யூனிட் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால், பிரசவ காலத்தில் அவள் எதிர்கொண்டு தாங்கும் வலியின் அளவு 57யூனிட் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். அப்படி தாங்கமுடியாத வலியைத் தாங்கிய தாய்மையை மேலும் வலிக்கச் செய்யவா நான் விரும்புவேன்.

என் நோக்கம் வேறு. உணர்ச்சிப் பிழம்பாக இருக்கும் தாய் அறிவுக் கொழுந்தாகவும் மாறினால் தான் அடுத்த அடுத்த தலைமுறை மேலும் மேலும் வளரும் என்பது என் தீர்மானம். பாசம் என்ற சொல்லுக்கு அன்பு என்று அர்த்தம் இருப்பது போலவே அழுக்கு என்றும் ஓர் அர்த்தம் இருக்கிறது. தாய்ப் பாசமும் அப்படித்தான். பசு கன்று ஈன்றதும் அக்கன்றின் மீதுள்ள கருப்பை அழுக்கைத் தாய்ப்பசு தன் நாவினால் நக்கிச் சுத்தம் செய்யும். பாசம்தான் பாசத்தை உருவாக்குகிறது. கன்றை நன்கு கழுவிக் குளிப்பாட்டி தாயின் அருகில் விட்டால், அந்தக் கன்றின் மீது தாய்ப் பசுவுக்குப் பாசம் வருவது குறைவு என்கிறார்கள். ஆனால், மனிதப் பிறவியில் பிறந்த குழந்தையைக் கழுவிக் குளிப்பாட்டிதான் தாயிடம் தருகிறார்கள். விலங்கின் பாசத்துக்கும் மனிதனின் பாசத்துக்கும் வேறுபாடு இருக்கட்டும் என்கிற எதிர்பார்ப்பு அதில் உள்ளது. தாயின் கண்மூடித்தனமான பாசம் குழந்தைக்கு நஞ்சாகிறது என்பதை உறுதிபடச் சொன்னதே சென்றமாதக் கட்டுரை.


கலீல் ஜிப்ரான் சொன்னதுபோல ஒவ்வொரு பெண்ணுக்கும் நான் சொல்ல விரும்புவது இதுதான்.

''குழந்தை உன்மூலம் வந்ததே ஒழிய அது உன்னுடையது அல்ல. அன்பு செலுத்து. ஆனால், உரிமை கொண்டா



ஒரு குழந்தையைப் பூமிக்குக் கொண்டு வருவது என்பது வெகு ஆபத்தான ஒரு காரியம். எனவே ஆபத்துகளைக் கையாளும் அறிவுத் திறனுடன் குழந்தை வளர்க்கப் பழகுங்கள். கர்ப்ப காலம் மிக முக்கிய கால கட்டம். அப்போது போதுமான கவனமின்றி இருந்துவிட்டு, பின் வாழ்நாள் முழுவதும் பிள்ளைகளைச் சாபமாகக் கருதும் முட்டாள்தனத்தை இனிவரும் பெண்கள் செய்யக்கூடாது.

மூன்று மாதத்தில் இருந்து தாயின் ஒவ்வொரு அதிர்வும் குழந்தையைப் பாதிக்கிறது. பெண்ணே! நீ கோபத்தில் இறுகும்போது உன் வயிறும் இறுகும்.




சுகிசிவம்

டாதே! குழந்தை தாயின் கைதி அல்ல. சுதந்திரமான உயிர். அதற்கான தற்காலிகமான தர்மகர்த்தாதான் தாய். ஒரு குழந்தையை அடிமை போல நடத்தாதே. ஒரு பெரிய நபரைப் போல நடத்து. குழந்தையிடம் மரியாதையாக நடந்துகொள்'' என்கிறேன்.

குழந்தை அதை உணரும். நீ வருத்தம் அடைந்தால் உன் குழந்தையும் மந்தமாகி மகிழ்ச்சி குறைந்துவிடும். என் மகளே! குழந்தை உன்னை முழுமையாகச் சார்ந் துள்ளது. உன் மனம்... குழந்தையின் மனம். ஆகவே சண்டை போடாதே. கோபம் அடையாதே. தாய் என்கிற, உலகின் உயர்ந்த பதவி வகிக்கிறாய் நீ.

உன்னை யாரும் அவமானப்படுத்தி னால் கோபமோ வருத்தமோ அடையாதே. ''நான் தாய்.. உன் மேல் கோபப்படு வதைவிட என் குழந்தையின் எதிர்காலம் எனக்கு முக்கியம்'' என்று மந்திரம் சொல். ''இந்த நிகழ்ச்சி சில நாட்களில் கடந்து போகும். யார் அவமதித்தார், நான் என்ன செய்தேன் என்பதெல்லாம் சின்ன விஷயங் மலேயே இருந்திருக்கலாம். ஒரு குழந் தையை நிரந்தரமான துன்பத்தில் தள்ள உனக்கு என்ன உரிமை இருக்கிறது? என் மகளே... யோசித்துப் பார். பொறுமையாக இரு.. எல்லோரையும் மன்னித்து விடு. ஆனந்தமாக இரு. கடவுளுக்கு அருகாமை யில் இரு. உன் கருவில் கடவுள் இருக் கிறார். அவரைச் சைத்தானாக ஆக்கி விடாதே. பேராசைப்படாதே. ஹிட்லரும் முசோலினியுமாக உன் பிள்ளைகள் பிறப் பது நல்லதல்ல மகளே! நல்லதல்ல!

மென்மையாய் இரு. பாட்டு கேள்.. பஜனை சங்கீதம் என்று காற்றில் மித. தியானம் செய். முடிந்தபோதெல்லாம் தியானம் செய். வேண்டாத குப்பைகளை வெளியே தள்ளுவது போல மனத்தின்



ஆணின் சுக்கிலத்தில் உயிர் தத்தால் அது விரிவடைகிறது. ரகசியத்தைத்தான் சாட்சி

கள். ஆனால் என் குழந்தை எழுபது எண்பது வருடங்கள் இதனால் பாதிக்கப் படும் முட்டாள்தனத்தை நான் செய்ய மாட்டேன்'' என்று ஞானம்பெறு. என் கண்ணே! நீ குழந்தை பெற்ற பிறகு வேண்டுமானால் பிறரைக் கோபித்துக் கொள். கர்ப்பத்தில் பொறுமையாய் இரு. அழாதே. வருத்தப்படாதே. வாடாதே. ஏங்காதே. கணவனை, மாமியாரை, நாத்த னாரை, உன் அப்பா அம்மாவை நினைத்து ஆத்திரப்படாதே. மன்னித்து விடு. அவர் கள் உன் தாய்மையின் முன்பு அல்பமான வர்கள். உன் கோபம் உன் பிள்ளைக்கு நரகத்தைச் சிருஷ்டிக்கிறது. என் மகளே, இதற்கு நீ பிள்ளை பெற்றுக் கொள்ளா குப்பைகளை உடனுக்குடன் வெளியேற்று. நீ தாயாகிறாய். கடவுள் குடியிருக்கும் கோயிலாகிறாய். நீ கோயிலாகாதவரை உனக்குள் இருப்பது கடவுள் ஆக முடியாது என் மகளே! புரிந்துகொள்.

தாய்ப்பாலை அன்பின் அருவியாக வழங்கு. அழும்போதெல்லாம் தாய்ப்பால் தந்து தாய்ப்பாலை ஒரு போதை மருந்தின் நிலைக்குத் தரம்தாழ்த்தி விடாதே. சில பெண்கள் குழந்தையை அலட்சியப்படுத்து வதன் மூலம் சீரழிக்கிறார்கள். வேறு சிலரோ அளவுக்கு அதிகமாக அக்கறை காட்டுவதன் மூலம் சீரழிக்கிறார்கள். நடுவில் நில். மையத்தில் நிற்கப் பழகு.

என் அன்பு மகளே! பிள்ளைகள் தனக்கு

வெகுவாகக் கடன்பட்டவர்கள் என்று அசட்டுத்தாய்மார்கள் நினைக்கிறார்கள். அந்தப் பிழையை ஒருபோதும் செய்யாதே. ஓர் உண்மைத்தாய் தான் குழந்தைக்குச் செய்தவை பற்றி ஒருபோதும் பேசமாட்டாள். ஏன் செய்தோம் என்று உணரக்கூட மாட்டாள். தன்னில் இருந்த பெண்மையைத் தாய்மையாக அந்தக் குழந்தை மலர்த்தியது என்று நன்றி உணர்வுடன் இருப்பாள். காரணம் குழந்தை பிறக்கும் அதே கணத்தில்தான் தாயும் பிறக்கிறாள். எனவே குழந்தையிடம் நன்றியாக இரு.

ஓர் இனிமையான இசைக் கருவியை இசைக்கும் லாகவத்துடன் குழந்தை வளர்க்கப் பழகு. என் பெண்ணே! உன் வாழ்வு முழுவதும் சந்தனம் மணக்க ஒரு மந்திரம் சொல்கிறேன்.

''யாரையும் அடிமைப்படுத்தாதே.
யாருக்கும் அடிமையாய் இராதே.''

இந்த மந்திரம் சித்தியானால் உன் சுவாசம் தாமரையின் வாசம் வீசும். பாஞ்சாலியை அசட்டுத் தருமன் பந்தயத்தில் அடிமையாக்கினான். குருட்டு திருதராட்டிரன் விடுவிக்கிறேன் என்றான். பாஞ்சாலியோ இரண்டு மூடர்களையும் பார்த்து, ''நான் அடிமையேயில்லை. தருமன் தோற்கவும் இல்லை. கிழவன் மீட்கவும் இல்லை'' என்று முழங்கினாள். பாஞ்சாலியின் நெஞ்சுறுதியைப் பழகிக் கொள் மகளே! பழகிக் கொள்!

கணவனோடு சண்டை இடுவதால் எந்தப் பயனும் இல்லை என்பதைத் தயவுசெய்து புரிந்துகொள். நீயும் கணவனும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வருவது கஷ்டம். காரணம் ஆண் எப்போதும் மூளையின் மூலமாகப் பேச முற்படுகிறான். பெண்ணோ எப்போதும் தன் இதயத்திலிருந்து பேசவே விரும்புகிறாள். எனவே இருவருக்கும் இடைவெளிகள் இருக்கத்தான் செய்யும் என்பதை ஏற்றுக் கொள். எதிர்த்துப் போராடாதே.

ஒரு வேடிக்கை கதை சொல்கிறேன். ஒரு காட்டுக்குப் பக்கத்தில் ஒரு குருட்டுப் பிச்சைக்காரனும் நொண்டிப் பிச்சைக் காரனும் தங்கியிருந்தார்கள். பரஸ்பரம் தொழில் போட்டியால் பகையாக இருந்தார்கள். ஒருநாள் காடு தீப்பிடித்துக் கொண்டது. நொண்டிக்கு தீ எங்கே... தீயில்லாத இடம் எது என்று தெரியும். ஆனால் ஓட முடியாது. குருடனால் ஓட முடியும். ஆனால் வழி தெரியாது. சட்டென்று பகை மறந்து குருடன் நொண்டியைத் தோளில் ஏற்றிக் கொண்டான். ''வழி சொல்... நான் ஓடுகிறேன்'' என்றான். இருவரும் தீயிலிருந்து தப்பி விட்டார்கள்.

கோபித்துக் கொள்ளாதே என் பெண்ணே! ஒவ்வொரு கணவனும் மனைவியும் இந்தக் குருடனும் நொண்டியும் போலத்தான். ஒருவர் குறையை மற்றவர் பெரிதுபடுத்தாமல் ஒருவர் திறமையை மற்றவர்க்குப் பயன்படுத்த முடிவு செய்தால் வாழ்வின் தீயிலிருந்து தப்பிக்கலாம்.

ஒடுங்கி இருக்கிறது. பெண்ணின் சுரோணி சக்தி வழிபாட்டின் ஸ்ரீசக்கரம் இந்த மாந்திரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.



ஆண்டாளும் பிரணவமும்!

'ஓம்' என்பது இது அ. உ, ம என்ற எழுத்துகளின் கூட்டு என்பது நாம் அறிந்ததே! ஆண்டவனான நாராயணனை 'அ' என்ற எழுத்தும், 'உ' என்பது பிராட்டியையும், 'ம' என்பது சேதனான நம்மையும் குறிக்கும். பிராட்டி சேதனனை நாராயணனுடன் இணைத்து வைக்கிறார். இதனை 'புருஷகாரம்' என்பர்.

திருவல்லிப்புத்தூரில் இதனை நாமெல்லாம் காணுமாறு ஸ்ரீ ரங்கமன்னாருடன் ஸ்ரீ ஆண்டாள் , கருடன் ஆகியோர் சேர்ந்தே ஒரு வரிசையில் உள்ளன். இவ்வூரின் ராஜ கோபுர அமைப்பும் ஓங்கார வடிவில் இருப்பது தனிச் சிறப்பு.

- வி.ஆர்.
வேளச்சேரி

பெண் என்பவள் பெருஞ்சக்தி. ஒன்றைப் பலவாக்கும் பேராற்றல். அதனால் தான் ஒரு விதையை நூறு விதையாக்கும் மண்ணைப் பெண்ணாக உவமிக்கிறோம். ஆண் ஒடுக்கம். பெண் விரிவு. ஆணின் சுக்கிலத்தில் உயிர் ஒடுங்கி இருக்கிறது. பெண்ணின் சுரோணிதத்தால் அது விரிவடைகிறது. சக்தி வழிபாட்டின் ஸ்ரீசக்கரம் இந்த ரகசியத்தைத்தான் சாட்சி மாத்திரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

எந்த வீட்டில் பெண் அதிகப் பெண்மையுடனும், ஆண் அதிக ஆண்மையுடனும் இருக்கிறார்களோ அவர்களிடையே காதலும் ஈர்ப்பும் அதிகம் இருக்கும். இப்போதோ ஆண்கள் அதிகம் பெண்மை அடைகிறார்கள். பெண்கள் அதிக ஆண்மையுறுகிறார்கள். இதனால் காதல் வாழ்வு கருகிப் போகிறது.

பெண்ணே! அதனால் எப்போதும் அழகாக இரு. அழகு என்றதும் அழகு சாதனங்களைத் தேடி ஓடாதே. அலாவுதீனின் அற்புத பூதம் அடைத்து வைக்கப்பட்ட விளக்கு ஒரு தற்காலப் பெண்ணுக்குக் கிடைத்தது. தேய்த்தாள்... பூதம் வெளிவந்தது. ''உங்களுக்கு என்ன வேண்டும்... உத்தரவு தாருங்கள் மேடம்'' என்று பூதம் பணிந்தது.


ஒரு விநாடி யோசித்த இளம்பெண், ''ஐஸ்வர்யாராய் கண்கள், சினேகாவின் சிரிப்பு, மீராஜாஸ்மினின் தாடை உடைய அழகியாக என்னை மாற்று'' என்று உத்தரவிட்டாள் அந்தப் பெண். நடுங்கியபடியே பூதம் சொன்னது, ''பேபி... தயவுசெய்து என்னை மீண்டும் திறக்கவே முடியாத பாட்டிலில் அடைத்துவிடு'' என்று கெஞ்சியது.

பெண்ணே! அன்பு ஒன்றுதான் பெண்ணின் ஒரே அழகு சாதனம். நீ ஜெயிக்கப் பிறந்தவள். உனக்கு வெற்றி உண்டாகட்டும். பெண்ணே! நீ வாழ்க.

(முற்றும்)

காணவில்லை பெண்மை!

–ச. சாய் சுதா



மண்ணும் புல் என்னும் மேலாடை
அணிய
புல்லும் பனித்துளி எனும் மேலாடை
அணிய
நிலவுப் பெண்ணும் நாணத்தால்
மேகத்துக்குள் ஒளிய
நாணத்தை மறந்த மகளிர் சிலரோ
மேலாடையையும் மறந்து
உலாவ,
உள்ளாடைகளே ஆடைகளாய் மாற
காணாமல் போகிறது பெண்மை!
பெண்மையை மறந்தவர்களுக்கு
பெண்ணென்ற பெயரெதற்கு?
உடைகளை மறந்தவரே புதுமைப்
பெண்ணென்று
உனக்குச் சொன்னவர் யாரோ?
உடைகளுக்கு விடுதலையளித்து
ஆண்களை இச்சை சிறையிலடைத்து
பெண்மையைக் கொன்றுவிட்டாய்
பெண்மையின் மேன்மையை
உணர்ந்திடுவாய்
மேலாடையின் நன்மையை
அறிந்திடுவாய்
தொலைந்திட்ட பெண்மையை
மீட்டெடுத்திடுவாய்!

செல்ல(ம்)மான அசத்தல்!

✉ டிசம்பர் மங்கையர் மலரில் இடம்பெற்ற கட்டுரைகள் அனைத்தும் ஜோர். பூஞ்சாரல் பக்கங்களில் வந்தவை எல்லாமே பொது அறிவை வளர்க்க உதவின. பாராட்டுகள்.

- எஸ். ரேணுகா, நீடாமங்கலம்

✉ அன்னமாச்சார்யா பக்திப் பாடல்களால் அமைந்த திருப்பதி ஏழுமலையானின் நாட்டிய நாடகம் பற்றி படித்தவுடன் மெய்சிலிர்த்தது. 'பொன் வைக்கிற இடத்தில் பூ வைத்திருக்கிறோம்' என்ற அனிதா குஹாவுக்குக் கிடைத்த வெற்றி இது! அன்னமாச்சார்யாவுக்குக் கிடைத்த அருள் நமக்கும் கிடைக்கட்டும்.

- எம்.சுபா முராரி, சேலம்

✉ கண்ணனுக்கு இடையன் என பெயர் வரக் கூறப்பட்ட காரணங்களைப் படித்தபோது சுவையாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

- து.சித்ராதேவி, மதுரை - 14

✉ 'பழைய கதை புதிய நீதி' நன்றாக இருந்தது. குழந்தைகளுக்கு எப்போதும் ஏமாற்றியது, பாஸிட்வ் எண்ணம், விட்டுக் கொடுப்பது போன்ற கதைகளை சொல்வது அவர்களது ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கும்.

- எஸ்.மங்கையர்க்கரசி, நெய்வேலி-3

✉ 'குட்டீஸ் ஜுட்டி' பகுதியில் ஒரு பெண் ஹேர் ரிமூவர் க்ரீம் வாங்கிக் கொடுக்கலாமே என்று கூறியதாகப் படித்தேன். இதுபோன்ற காமெண்ட் அடிக்கும் பெண் கண்டிப்பாக 'குட்டீஸ்'ஆக இருக்க முடியாது! வாசகி அப்பெண்ணின் வயதைக் கூறிப்பிடவில்லையே!

- விஜயா ராஜன், பெங்களூரு-34

✉ ஸ்ரீ ஆஞ்சநேயர், சங்கீதத்தில் கரை கண்டவர் என்ற தகவலும், 'குண்டக்கிரியா' என்ற ராகம் முதன் முதலில் ஆஞ்சநேயரால் இசைக்கப்பட்டது என்பதற்கான புராணக் கதையையும் முதன் முதலாக மங்கையர் மலர் வாயிலாக, அதுவும் ஹனுமன் ஜெயந்தி சமயம் அறிந்ததில் அளவற்ற ஆனந்தமடைந்தேன்.



- கலைச்செல்வி வளையாபதி, தோட்டக் குறிச்சி

✉ நளபாகப் போட்டி, அறிவுப் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்றும் பரிசு கிடைக்கவில்லை. மனம் தளர்ந்து போன நிலையில் சென்ற நளபாகப் போட்டி 23ல் எனக்கு பரிசு கிடைத்ததைப் பார்த்து பெரிய புதையல்



சொல்ல விரும்புகிறோம்



கிடைத்தது போல் மகிழ்ந்தேன்.

- என்.ஆர்.சிவசங்கரி, கோவை

✉ அன்புள்ள 'வெ.வே.வே' (வெட்டி வேலை வேங்கட சுப்பி) அவர்களுக்கு வணக்கம். கேள்வி பதில் பகுதி உண்மையிலேயே அருமையாக, சுவையாக அதையும் தாண்டி, உண்மையாக உள்ளது. உணர்ந்ததை எழுத்தில் வடிப்பது அதையும் அப்படியே எழுத்தில் வார்ப்பது ஒரு சிலருக்கே கைவந்த கலை. அந்தக் கலை தங்களுக்கு அருமையாக வருகின்றது. பயன்படுத்தவும்.

- நிஷாஜி, ஆதம்பாக்கம்

✉ மாடுலர் மாமிக்கு ஒரு யோசனை... பக்கத்திலேயே ஒரு வாடகை வீட்டில் குடியிருந்துகொண்டு, சொந்த வீட்டின் அழகு கெடாமல் பார்த்துப் பார்த்துப் பரவசப்படலாமே!

-ச.இல.சுந்தரி, அவினாசி

✉ 'ஆரோக்கியத்துக்கு ஓர் அட்டவணை' ஒவ்வொரு வீட்டிலும் சட்டம் போட்டு மாட்டி வைக்க வேண்டிய அற்புத வழிகாட்டி!

- என்.கே.சங்கமேஸ்வரன், கோவை

✉ 'காலம் செதுக்கிய சித்திரங்கள்' சிறுகதை பிரமாதம். கிராமத்து இளம் விதவையை ரகுராமன் ஆசை காட்டி ஏமாற்றி விடுவானோ என 'திக்திக்' என்றிருந்தது. ஆனால், ரகு வித்தியாசமான ஹீரோ என்பது தெரிந்ததும், மகிழ்ச்சியாக இருந்தது.

- பிரேமா ராவ், ஸ்ரீரங்கம்

✉ கிறிஸ்துமஸ் சமயத்தில் சிறப்பான 'கேக்ஸ் - குக்கீஸ் - சாக்லெட்ஸ்' என செல்ல(ம்)மா தந்து அசத்தி விட்டீர்கள்!

- சுகந்தி நாராயண், வியாசர் காலனி

✉ 'செருவாட்டு காசு', 'பொய் சொல்லலாகாது மம்மி', ஆகிய இரு கதைகளும் சூப்பர்ப். தாய் என்பவளின் தன்னலம் கருதாத குணம் வெகு அழகாக விளக்கப்பட்டது. பரிசுக்குரிய கதையின் தேர்வு சிறப்பானது.

- பிரேமா, தர்மபுரி

✉ பார்ப்பதற்கு சின்னப் பையன் போல் தோற்றமளித்தாலும், ஒவ்வொரு பதிலிலும் மெச்சூரிடி தெரிந்தது. அட சாந்தனுவின் 'பெப்பர் பாப்கார்ன்' பற்றித்தான் சொல்றேங்க!

- என். பாலகிருஷ்ணன், மதுரை

✉ குருப்பெயர்ச்சி பலனுடன், பரிகாரங்களையும் சொன்ன விதம் ரொம்பவே பயனுள்ளதாக இருந்தது.

- கவிஞர் அய்யாறு எஸ்.வாசுதேவன், சென்னை - 14

✉ எனக்கு சகோதரர்கள் இல்லாததால், கார்த்திகை சீர் வருவது இல்லை. இந்தக் கார்த்திகைக்கு எனது நீண்ட நாள் ஏக்கத்தை 'மங்கையர் மலர்' சன்மானம் அனுப்பி தீர்த்து வைத்துவிட்டது.

- உஷா சங்கரன், சென்னை - 78

மகிழ்ச்சி: நாலந்தாவில் நடைபெற்ற 'நிருத்யோத்ஸவா' விழாவில், 'நிருத்ய நிபுணா' என்ற பட்டம் கிடைத்தது மகிழ்ச்சி என்றால், இந்த டிசம்பர் சீசனில் பார்த்தசாரதி சுவாமி சபா, பாரத்கலாசார், பிரம்மகான சபா, கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ், தி இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, மீனாக்ஷி சுந்தரராஜன் ஃபைன் ஆர்ட்ஸ் அகாடமி என எல்லா முன்னணி சபாக்களிலும் மாலைநேர ப்ரைம் ஸ்லாட் வாய்ப்புகள் தாமாகவே வந்தது பெரும் மகிழ்ச்சி!

அற்புதம்: ஐந்து வயசுக் குழந்தையிலிருந்து முறைப்படி பரதம் கத்துக்கிட்டிருக்கேன். இருபது வயசுலேயிருந்து ஸோலோ பர்ஃபார்மன்ஸ் தர ஆரம்பித்துவிட்டேன். ஆனாலும், இன்றைக்கும் 'பரதாஞ்சலி' மாணவிதான் நான்! நட்டுவாங்கம், டான்ஸ் தியரி, கர்நாடக இசை, என கற்றுக் கொண்டேயிருக்கிறேன். பத்மா சுப்ரமணியம், ப்ரியதர்ஷிணி கோவிந்த் என்னுடைய ஃபேவரிட்ஸ். அவர்களுடைய நடனங்கள் எல்லாமே அற்புதம்!

கோபம்: கோபம் எனக்கு வராது! என்னோட டெய்லருக்கு வரும்! ''அண்ணா, புது டிரஸ் தைக்கணும்'' என்று போய் நின்றாலே, அவருக்கு டென்ஷன் அதிகமாகிவிடும். பின்னே... ''பெரிய விசிறியில் சின்னச் சின்ன மடிப்பு வைக்கணும். இந்த நீலத்துக்கும், பச்சைக்கும் நடுவே சின்ன ஆரஞ்சு பட்டை வைக்கணும். இடுப்பு விசிறி மடியணும். ஆனால், விரியக் கூடாது'' என்றெல்லாம் காஸ்ட்யூம் ஐடியாக்கள் கொடுத்து டார்ச்சர் செய்தால்...?



வீரம்: ஐந்தடி ஆறு அங்குலம், 53 கிலோ எடையுள்ள எம்.பி.ஏ. மாணவி நான்! ஆனால், 'பல பீமஹா மாருதி! என்ற ஹனுமானின் ராமபக்திக் கதையை மேடைகளில் ஆட ஆரம்பித்தால், வீர ஆஞ்சநேயராகவே மாறிவிடுவேன். ''சரியான தீம்தான் செலக்ட் பண்ணியிருக்கே!'' என்று என் தங்கை சரண்யா கிண்டலடிப்பாள்! ஜாலிப்பிசாசு!

ஹாஸ்யம்: மீனாட்சி கல்லூரி வளாகத்தில் எனது நாட்டிய நிகழ்ச்சி நடந்து முடிந்ததும், மூன்று வயது பெண் குழந்தை ஒன்று 'ஓ' என்று அழுது அடம் பிடித்தது. என்ன ஏது என்று விசாரித்தால், ''அந்த அக்கா ஏன் ஆடறதை நிறுத்திட்டா... மறுபடி ஆடச் சொல்லு!'' என்று ஒரே அடம். ரீப்பீட்டு ஆடியன்ஸ் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், ரீ டான்ஸ் கேட்கும் ரசிகை... அதுவும் நாற்காலி உயரத்தில்...! நினைத்தாலே சிரிக்க வைக்கும் சம்பவம்!

கருணை: கேரளாவில் உள்ள 'ஷோபா' என்ற முதியோர் இல்ல நிகழ்ச்சியில் எனது நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. 'மாடு மேய்க்கும் கண்ணா', 'தீராத விளையாட்டுப் பிள்ளை', 'சின்னச் சின்ன பதம் வைத்து' ... இப்படி துக்கடா பாடல்களையே வைத்து ஆடினேன். அங்கிருந்த தாத்தா - பாட்டிகள் எல்லாரும் ''இன்னிக்கு எங்க மனசு வலி, உடம்பு வலி எல்லாத்தையும் கொஞ்ச நேரம் மறக்க வெச்சுட்டே பாப்பா!''னு வாஞ்சையோடு சொன்னபோது, அழுகையும் கருணையும் கலந்த உணர்வில் திளைத்தேன்.

ஜாலி பேட்டி

ஆசை: சமீபத்தில் பிஜய்னி - சுருபா என்ற இளம் நாட்டியப் பெண்கள் ஆடிய ஒடிஸி நாட்டியத்தைப் பார்த்தேனே. 'த்ரிபங்கி' என்ற நிலையில் அவர்கள் சுழன்றாடியது பரவசமாக இருந்தது. பெங்களூரில் உள்ள 'நிருத்ய கிராமில்' முறைப்படி ஒடிஸி கற்க, துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன்.



பயம்: சில வெளிநாட்டு பெண்களுக்கு டான்ஸ் கிளாஸ் எடுக்கிறேன். திடீரென்று ராமாயணம், மகாபாரதம் என்று ஏதாவது சந்தேகம் கேட்கிறார்கள். அதனால் மூதறிஞர் ராஜாஜி எழுதிய ராமாயணம், மகாபாரதம் படித்துக் கொண்டிருக்கிறேன். வெளிநாட்டினர் முன்பு பாரதத்தின் இமேஜ் எப்போதும் உயர்வாகவே இருக்கணும் என்ற பயம் வந்தது நல்லதுக்குதானே!

ஐஸ்வர்யாவின் நவரசக் குறிப்புகள்!


சிருங்காரம்: என்னுடைய நிகழ்ச்சி முடிஞ்ச மறுநாளே, பழத் தட்டோடு பல பேர் வருவார்கள். ''ஆஹா! ஆட சான்ஸ் தரப் பேறாங்கன்னு எங்கம்மா வரவேற்ப்பாங்க. ''உங்க பெண்ணோட டான்ஸ் பார்த்தோம். ரொம்பப் பிடிச்சுப் போச்சு! எங்க பையனுக்கு சம்பந்தம் பேசலாம்னு!''னு அவங்க ஆரம்பிப்பதும், ''தப்பா நினைக்கக்காதீங்க... அவளுக்கு இப்ப கல்யாணம் பண்றதா இல்லை!''னு எங்கம்மா அனுப்பி வைப்பதும் அடிக்கடி நடக்கும் சிருங்காரக் கூத்து!

- ஆதர்ஷ்

சிறுகதை

மறந்துபோன

கம்ப்யூட்டரில் மூழ்கியிருந்த சாரதா, யாரோ வந்து நிற்பது போல் தோன்றவே நிமிர்ந்து பார்த்தாள். சுமித்ரா மாமி நின்றிருந்தார்... அந்த முதியோர் இல்லத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் சீனியர் என்று கூடச் சொல்லலாம். வயதின் காரணமாகவும், அனுபவத்தின் காரணமாகவும்... சாரதாவை பெயர் சொல்லிக் கூப்பிடுமளவு உரிமை பெற்றிருந்தார் சுமித்ரா!



''என்ன மாமி இன்னும் தூக்கம் வரலையா?''

''என்ன பண்றது சாரதா... வயசாக வயசாக தூக்கம் கொறைஞ்சு போயிடுமோ? சதா கம்ப்யூட்டர்ல மாத்தி மாத்தி பாத்துண்டே இருக்கியே... இன்டர்நெட் போட்டுண்டா எதை வேணா பாக்கலாமாமே... என் பையன் ராகிஷுங், எப்பப் பாரு இதே வேலையாதான் இருப்பான்.

''கம்ப்யூட்டர்தான் படிப்பேனு ஒத்தகால்ல நின்னு... படிச்சு... அமெரிக்கால வேலை தேடிட்டு போனான். பாவம்... அங்கேயெல்லாம் ரொம்ப வேலை இருக்குமாமே. உனக்கெல்லாம் அங்க ஒத்துபட்டு வராதுனு சொல்லிதான் என்னை பாதுகாப்பா உன்னிடம் ஒப்படைச்சுட்டுப் போனான்!''

அங்கே... இங்கே சுற்றி சுமித்ரா மாமிவந்து விடும் இடத்தை அறிந்தவளாயிற்றே சாரதா. சட்டென்று பேச்சை மாற்றினாள்.

''ஏன் மாமி... உங்களுக்கு என்ன ஏதானும் டென்ஷனா? அதனால கூட தூக்கம் கெடும்!''

''எனக்கா? எனக்கு ஒரே பிள்ளை. அமெரிக்காவுல பெரிய வேலைல இருக்கான். கை நிறைய சம்பளம். ம்... எனக்கென்ன கொறை...? சரி, எனக்குத் தூக்கம் வரணும்னா... இப்பவே போய் படுத்துக்கணும். அப்போதான் லேட்டாவானும் கண் அசத்தும்.''

பிள்ளை விட்டு விட்டுப் போன சமாசாரம் பேச்சில் வருமானால் சாரதா அந்தப் பேச்சை மாற்றி விடுவாள் என்பது தெரிந்து,

வரிகள்!

டாக்டர் ஸ்ரீரா

சுமித்ராவாகவே எழுந்து போய்விட்டார்.

மனதுக்குள் சிரித்தபடி சாரதா நினைத்தாள்... கை நிறைய சம்பாதிக்கும் மகனைப் பற்றி பல கவலைகள் இருக்கக் கூடும். ஆனால், சுமித்ரா மாமியை வருத்தும் கவலை என்னவாய் இருக்கும்? இங்கு இருக்கும் பலரின் பெரும்பான்மையான கவலை அவர்களோடு குடும்பமாய் வாழ முடியவில்லையே; இங்கே அனாதையாய் இருக்கிறோமே என்ற வருத்தமும், பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கமும்தான்!

சாரதாவுக்கு இன்னமும் நினைவில் ஞாபகம் இருப்பது, கோமாவில் இருந்த அவளதுதாய்... இறப்பதற்கு முதல் நாள் இரவு சரியாக... இவளது சகோதரன் வந்து பார்த்துவிட்டு போகும் நேரம்... பத்தரை மணிக்கு கண் விழித்து பார்த்து





ஜெனரேட்டர் அல்லது இயந்திரங்கள் அருகில் பணியாற்றும் பெண்கள் தலை முடியைத் தொங்க விடாமல் சுருட்டி வைத்துக்கொள்ள வேண்டும். புடைவைத் தலைப்பை இழுத்துக் கட்டிக்கொள்ள வேண்டும். இல்லையெனில் தலைமுடி அல்லது புடவைத் தலைப்பு எந்திரத்தில் சிக்கி உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

- எஸ்.உஷா சுதர்சன், திருச்செங்கோடு

அவனோடு மட்டும் பேசியது. மறுநாள் மதியமே முடிந்து போனது.

''ம்...'' பெருமூச்சு விட்டபடி... கம்ப்யூட்டரை ஷட் டவுன் பண்ணிவிட்டு உறங்க... தன் அறையை நோக்கி நடந்தாள். திறந்திருந்த ஜன்னல்களை நோட்டமிட்ட படி, வராண்டாவில் நடந்தபோது, படுக் கையில் அமர்ந்தபடி யோசனையில் ஆழ்ந் திருந்த சுமித்ரா மாமி தெரிந்தார்.

சுமித்ரா மாமியைப் பார்க்கும்போது சாரதாவுக்கு ரூபி லடைம் எட்வர்ஸ் எழுதிய கவிதைதான் ஞாபகம் வந்தது. எப்போதோ... ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தது. பெயர் 'தி ஃபார்காட்டன் மதர்'

A gray woman sits all alone
Unloved unchershed and unknown
Sitting beside her broken door.
Dreaming of days past long ago
But now they have gone, each to their life
A girl to her husband, a boy to their wife

...ரும் வந்து விட்டது. அடடா.. ஞாபகம் வைத்திருந்த அந்தக் கடைசி நாலு வரிகள்... ம் ஹூம் ஞாபகம் வரவே யில்லை. எத்தனை அனுபவித்து எழுதிய பாட்டு. பெரிய பாட்டானாலும்... இவளைக் கவர்ந்த வரிகளை மட்டும் மனனம் செய்து வைத்திருந்தாள். 'சரி... நாளைக்குப் பார்ப்போம்' என்றபடி தூங்கிப் போனாள் சாரதா.

அன்று காலையிலிருந்தே பல வேலைகள். வெளியே சென்றுவிட்டு வந்தவள்... காரை பார்க் பண்ணிவிட்டு ஆபீஸ் அறைக்கு வந்தாள். உதவியாளரைக் கூப்பிட்டு அன்றைக்கு ஆஸ்பிட்டல் செக்-அப்புக்கு போக வேண்டியவர்கள் போய்விட்டு வந்தார்களா வேலைக்குச் சாப்பிட்டார்களா, என்ன மாற்றம் என்பதை மறுபடி சீட்டுகளைப் பார்த்து விளக்கி னாள்.

எல்லோரையும் அனுப்பிவிட்டு கம்ப் யூட்டரைப் பார்க்கத் தொடங்கினாள்.

''அட.... யாரது? சுமித்ராமாமியா, என்ன விஷயம் மாமி?''

''உன்னைத்தான் பார்த்துண்டே இருந் தேன். உன் கிட்டதான் மொதல்ல சொல் லணும்னு யார்கிட்டேயும் மூச்சுகூட விடலடி சாரதா...''

''ஒ...ஐ...சீ... சஸ்பென்ஸ் தாங்கல. என்ன அமெரிக்கா பிரயாணம் இருக்கா?''

''அது இல்ல சுமித்ரா... மாமியார் ஆகப் போறேன்'' என்று பெருமிதப்பட்டாள் சுமித்ரா மாமி.

''ஓ...இட் இஸ்... ரொம்ப சந்தோஷம் மாமி...''

''லெட்டர் வந்தது இன்னைக்கு... படியேன்'' லெட்டரை நீட்டினாள்.

''வேணாம் மாமி... நீங்க படிச்சு சொன்னதே போறும்''... என நாசுக்காய்த் தவிர்த்து மாமியைப் பார்த்தாள் சாரதா.

என்றைக்கேனும் தான் திருமணம் செய்து கொண்டால், தன் தாயைத் தன்னோடு அழைத்துக்கொண்டு போய் விடுவேன் என்றானே சுமித்ரா மாமியின் பையன். இப்போ என்ன சொல்லி இருப் பான்?

வேலைக்குப் போகும் மனைவி கர்ப்ப மானால்... பிள்ளைக்குத் தாயிடம் திடீர் பரிவு வரும். காரியமானதும்... வேறென்ன? பழைய குருடி கதவை திறடி என்று அசடு வழிய 'அம்மா இங்கே இருக்குற சௌகரியம் அங்கே இல்லேங் கறாங்க மேடம்... அதான்' என்று மென்று விழுங்குபவர்கள் உண்டு.

''டோண்ட் வொர்ரி அபௌட் தி மணி. ஐ வில் ஆல்ஸோ பே ஃபார் தி மன்த்ஸ் ஷீ வாஸ் ஸ்டேயிங் வித் அஸ்'' என்று அடாவடியாய் முதியோர் இல்லத்தின் நோக்கத்தை விலை பேசுபவர்களும் உண்டு.

''என் பிள்ளை ஒருவழியா கல்யாணம் பண்ணிக்கப் போறான். எனக்கிருந்த என்னோட ஒரே கவலை அதுதான். கல்யா ணம் பண்ணிக்காம இருக்கானே? வயசாகி கையைக் காலை வலிச்சா, ஒரு வெந்நீர் வச்சு மாத்திரைக் குடுக்கக் கூட அந்த அமெரிக்கால யாரும் வர மாட்டாங் களேன்னு. என்னை விடு... நான் தனியா சமாளிச்சுப்பேன். அவன் தனியா இருக்கா னேனுதான். என்னடா.... என்னை அங் கேயே கூட்டிட்டு போடாம்பேன். இப்ப அதுக்கு அவசியமில்ல.

''இனிமே நான் நல்லா தூங்குவேன். பாரு... இப்பவே கண்ணைச் சுத்துது... நீ வந்து ஒன்கிட்ட சொல்லிட்டுதான் தூங்க போகணும்னு உட்கார்ந்திருந்தேன். ஸோ... குட் நைட் சாரதா... நான் தூங்கப் போறேன்'' என்று சொல்லிவிட்டு ரூமை நோக்கி நடந்தாள்.

சாரதா ஜன்னல் வழியே பார்த்தபோது சுமத்ரா மாமி... அசந்து குறட்டை ஒலி யோடு தூங்குவதைக் கண்டு சாரதா மகிழ்ந்து போனாள்.

அறைக்குள் நுழைந்துகூட இருக்க மாட்டாள். அதற்குள் ஆபீஸ் பையன் சுகுமார் ஓடி வந்து மேடம்... ஃபோன்... என்றான்.

''ஹலோ... சாரதா ஸ்பீக்கிங்''

''மேடம்... நான் சுமித்ராம்மாவோட



வெந்தயப் பொங்கல்

சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் தெரியும்; வெந்தயப் பொங்கல் தெரியுமா உங்களுக்கு?

இதோ செய்முறை :

கால்படி அரிசியுடன் ஒரு டீஸ்பூன் வெந்தயம் போட்டு, அதைக் கழுவி, அத்துடன் 2 கப் தேங்காய்ப்பால், மிளகு, சீரகப்பொடி போட்டு, உப்பு சேர்த்து குக்கரில் வேக வைத்து, வெந்ததும் இறக்கி, நெய்யில் முந்திரி பருப்பு வறுத் துப் போட்டு கறிவேப்பிலை தாளித்து, சூடாகச் சாப்பிடவும். ருசியான, உடம்புக் குக் குளிர்ச்சியான வெந்தயப் பொங்கல் ரெடி. தேங்காய்ப்பாலுக்கு பதிலாக தண்ணீர் பாதி, பால் பாதி சேர்த்தும் செய்ய லாம்.

– எஸ். சுகந்தி, கீவளூர்

கோமதி எங்கே போகிறாள்?



ஆச்சு, இரவு 8 மணி அடித்துவிட்டது. கிளம்ப வேண்டும். டிபன் பண்ணி வைத்தாயிற்று. இந்த ஒரு மாதம் அவரவர்களே எடுத்துப் போட்டு சாப்பிடச் சொல்லியாயிற்று. சால்வை எடுத்துப் போர்த்திக்கொண்டு, தலைக்கு மஃப்ளர் கட்டிக்கொண்டு, கையில் தற்காப்புக்கு தடி கம்பு, டார்ச் லைட் எல்லாம் எடுத்தாகிவிட்டது. கதவை மெதுவாக மூடிக்கொண்டு தெரு வாசலில் இறங்கினாள் கோமதி. இந்த இரவு வேளையில் எந்த வேட்டைக்குப் புறப்பட இத்தனை ஆயத்தம் என்று பார்க்கிறீர்களா? மார்கழி மாதக் கோலத்துக்குத்தான் இத்தனை முன்னேற்பாடுகள்!

- பானு சுரேஷ்,
சென்னை - 88

பையன் ஷங்கர் பேசறேன்.''

''சாரி.. நாளைக்குக் காலைல பேசுங்க.''

''மேடம்... இரண்டு நிமிடங்கள். ப்ளீஸ்.''

''மிஸ்டர்... அமெரிக்கால பகல் பொழுது... எங்களுக்கு இங்கே ராத்திரி.''

''தெரியும் மேடம்... வந்து...ம்... எங்கம்மாகிட்ட... ஒரு நிமிஷம்.''

சரி போகிறது. பாவம், சுமித்ரா மாமி. பையன் குரலைக் கேட்டால் இன்னும் நிம்மதியாய்த் தூங்கக் கூடும்.

ஃபோன் ரிசீவரை வைத்துவிட்டு போனவள் சில நிமிடங்கள் கழித்து... அதிர்ச்சியிலிருந்து கலையாமல்... ரிசீவரை எடுத்தாள். பையனோ... தன் தாய்தான் என நினைத்து... ''அம்மா... லெட்டர் படிச்சியா? என்னால உன்னை இங்கே என்னோட கூட்டிட்டு வர முடியாதும்மா... இயர்லி ஒன்ஸ் வரோம்மா... ஹலோ... ஹலோ...''

''மிஸ்டர் ஷங்கர்... இந்த ஒரு முறை உடனடியாக புறப்பட்டு வாங்க... இனி எப்பவுமே உங்கம்மா உங்களோட எங்கேயும் வரமாட்டாங்க. நீங்க வந்துதான் அனுப்பணும்.''

மேற்கொண்டு கூறிய வார்த்தைகள்... என்னவென்று தெரியாது. சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டாளா? தெரியாது... வார்த்தைகள்... மனதிலிருந்து வந்தனவா...

அவள் மறந்துவிட்ட பாட்டின் கடைசி நாலுவரிகள் ஞாபகம் வந்தன.

But does she upbraid them in word or
in mind
Nor does their neglect to her, seem
unkind
She will forgive and forget all unkind
ness they have shown
This poor old mother who sits alone.●


Agrahara
pattu
Collection
தூரிகையின் கலைநயம்.
ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸின்
அக்ரஹார
பட்டு கலெக்ஷன்
5 Maadi
Sri Kumaran Stores
61, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.


VBJ
SINCE 1900
விழாக்கால ஸ்பரிசம்
விழாக்காலத்தைக் கொண்டாடி மகிழ,
பேரழகாய் வடிவமைக்கப்பட்ட
உள்ளங்கவர் வைர நகைகள்.
DEF Colour
IF-VVS1 Clarity

என்றும் உங்களுடன் ஜனவரி 2009

மங்கையர் மலர்

திருமண மலர்

புத்தகம் 2



ராசி பலன்கள் உள்ளே...



பயனடைந்தவர்களின் பாராட்டு!

எனது தூரத்து உறவினர் ஒருவரின் பையனுக்காக வரன் தேடியபோது, மங்கையர் மலர் நவம்பர் மாத இதழில் வெளிவந்த ஒரு பெண்ணின் விளம்பரம் பொருந்தவே, தொடர்புகொண்டு பேசினோம். இருவரின் ஜாதகமும் பொருந்தியது போலவே, இருவர் மனமும் பொருந்திட, போர்க்கால நடவடிக்கையைப்போல், திருமண ஏற்பாடுகளைச் செய்தோம். நவம்பரில் விளம்பரம் பார்த்து, பிப்ரவரியில் (அதாவது நான்கே மாதங்களில்) கல்யாணத்தை கோலாகலமாக நடத்தினோம். இதுபோன்ற ஒரு நல்ல வரனை எங்களுக்குக் கிடைக்கச் செய்த மங்கையர் மலருக்கு எத்தனை நன்றி சொன்னாலும் போதாது!

மங்கையர் மலரின் தொண்டு மேன்மேலும் வளரட்டும்! மணமாகாதவர்கள் நல்ல பயனடையட்டும்!!

நன்றியுடன்

லக்ஷ்மி அருணாசலம்
சின்மயாநகர்,
சென்னை - 92

❋ கிருத்திகா - வெங்கடேஷ்

இதேபோல் மங்கையர் மலரின் திருமண விளம்பரம் மூலம் இணைந்த மணமக்களின் புகைப்படங்களை வரவேற்கிறோம்.

கூடவே, 2008ம் ஆண்டில் விளம்பரம் வெளிவந்த மாதம், விவரங்களுடன், திருமணமலர் பற்றிய தங்களின் கருத்துக்களையும் எழுதி அனுப்பலாம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள தொலைபேசி எண்கள்:
4343 8866 / 4343 8888

வரவேற்கிறோம்!

வாசகர் ஆதங்கம்

கண்ணியம் காக்கக் கூடாதா?

கடந்த செப்டம்பர் மாதம், நானும் என் கணவரும் சென்னையிலிருந்து குருவாயூர் எக்ஸிரஸில் புறப்பட்டோம். எங்கள் பெட்டியில் இரண்டு இளம் ஜோடிகள். ஒரு ஜோடி கேரளாவைச் சேர்ந்தவர்கள். மற்றொரு ஜோடி புதிதாகத் திருமணம் புரிந்து தேன்நிலவு செல்லும் ஜோடி. இவர்களைத் தவிர இரண்டு ஆண்கள் - எங்களைப் போல் சற்று வயதானவர்கள்.

தேன்நிலவுத் தம்பதிகளை வழியனுப்புவதற்கு,



பெண்ணின் தந்தை மற்றும் பையனின் அண்ணா, மன்னி, குழந்தை வந்திருந்தார்கள். வண்டி புறப்பட்ட பின் நாங்கள் அடைந்த தர்ம சங்கடம் சொல்லிமாளாது.

தேன் நிலவு ஜோடியின் நாகரிகமற்ற நடவடிக்கைகள் எங்களைக் கூனிக் குறுக வைத்தன. கேரள ஜோடியும் இளம் வயதினர்தான். ஆனாலும் என்ன ஒரு கண்ணியம்!

இரவு ஒன்பது மணிக்கு மனைவி ஜன்னலோரமாக உட்கார, கணவன் அவளது மடியில் தலை வைத்துப் படுத்து கொஞ்சிக் கொஞ்சி பேசிக்கொண்டிருந்தார்கள். ஜன்னல் வெளியே முகத்தைத் திருப்பி வேடிக்கை பார்க்கலாமென்றால் ஏ.ஸி. கம்பார்ட்மென்டின் கண்ணாடியிலும் இவர்கள் உருவம்!!

நாங்கள் எல்லோரும் படுத்த பின்னரும் இரவு பன்னிரண்டரை வரையிலும் பேச்சு. எங்களுடன் பயணம் செய்த பாலக்காட்டுப் பயணியின் சம்பாஷணையை கேலி செய்து அது போல மிமிக்ரி செய்தது அநாகரிகத்தின் உச்சம்.

மறுநாளும் இதே காதல் கொஞ்சல்தான். அந்தரங்கம் புனிதமானது. அதை பொது இடத்தில் காட்டுவது அசிங்கம். வெளி நாட்டவர்கூட நமது ரயில்களிலோ, விமானங்களிலோ பயணம் செய்யும்போது இப்படி நடந்து கொள்வது இல்லை.

இதைப் படித்து இளம் பெண்கள் ஏதோ கற்றுக் கொண்டால் சரி! இல்லையா, தாய்மார்கள் இவர்களுக்கு புத்திமதி சொல்லட்டும்!

- எஸ்.உஷா,
சென்னை



வலது கால் பெருமை!

திருமணம் முடிந்து, புகுந்த வீட்டுக்கு வரும் மணமகளை, 'வலது காலை எடுத்து வைத்து வா' என்று பெரியவர்கள் கூறுவார்கள். இதற்கு விஞ்ஞான ரீதியாகவும் ஒரு விளக்கம் உள்ளது. அதாவது, பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, இடம் இருந்து வலமாக சூரியனையும் சுற்றுகிறது.

திருமணம் செய்துகொண்ட பெண்ணும், பூமியாகிய நிலமகளைப் போல் எல்லோரையும் அனுசரித்து, தனது வாழ்க்கையைச் சுற்றிவர வேண்டும் என்பதற்காகத்தான் வலது காலை எடுத்து வைத்து வரச் சொல்கிறார்கள்.

- பி.சீதாலக்ஷ்மி, சென்னை - 64

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்துக்கு அருகே உள்ளது திருநல்லூர் திருமணத் திருத்தலம். இத்தலத்தில் பெருமான் கல்யாணசுந்தரேஸ்வரர், பதினான்கு அடி உயர மேற்பரப்பில் மிக உயர்ந்த விமானத்துடன் கிழக்கு திசை நோக்கி லிங்க வடிவில் பக்தர்களுக்கு திருமண வரங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். அம்மையார் கல்யாண சுந்தரி. இத்தலத்து இறைவன் மூலலிங்கமூர்த்தி, பெரியாண்டேஸ்வரர், சௌந்தர நாயகர், சுந்தரநாதர் பஞ்சவர்ணேஸ்வரர், அமிர்தலிங்கர், என்ற திருப் பெயர்களுடனும் அழைக்கப்படுகிறார். மூலவரின் பாணம் எந்த பொருளால் உருவாக்கப்பட்டது என்று கூற முடியாத நிலையில் தாமிர நிறத்தில் விளங்குகிறது.

இன்றும் தினம் பகல் நேரத்தில் ஆறு நாழிகைக்கு ஒரு தடவை சிவலிங்கத் திருமேனி ஐந்து முறை நிறம் மாறுவதால் தான் இறைவனுக்கு 'பஞ்சவர்ணேஸ்வரர்' என்ற பெயர் வழங்கப்படுகின்றது. முதல் ஆறு நாழிகையில் தாமிர நிறமும் அடுத்த 6-12 நாழிகையில் இளஞ்சிவப்பு, அடுத்த 12-18களில் உருக்கிய தங்கத்தின் நிறமும், அடுத்த 18 - 24 நாழிகைகளில் நவரத்தினப் பச்சை நிறமும், அடுத்த 24-30 நாழிகையில் இன்ன நிறமென்று கூற இல்லாத நிலையிலும் நிறம் மாறி காட்சி தருகிறார். இது வேறு எந்தத் திருத்தலத்திலும் காண முடியாத ஒரு சிறப்பு.

அகத்திய முனிவருக்கு தன் திருமணக் கோலம் காட்டியருளியபடியால் இவர் கல்யாண சுந்தரர் வடிவில் சிவலிங்கத்தின் பின்னால் சுதை வடிவில் அம்மையுடன் கல்யாணக் கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இரு பக்கங்களிலும் திருமாலும் பிரம்மனும் காட்சி தர, அகத்தியர் வணங்கி வழிபடும் நிலையில் உள்ளார். மூலவருக்கு அருகில் அகத்தியர் ஸ்தாபித்த அகத்தியலிங்கம் உள்ளது.

நீண்ட நாட்கள் திருமணம் நடை பெறா





தடை நீக்கும் திருநல்லூர்!

மல் இருப்பவர்கள், இத்திருமணத் திருத் தலத்திற்கு வந்து இறைவன் - இறைவிக்கு மலர் மாலை சூட்டி அதில் ஒரு மாலையை வாங்கி அணிந்து செல்கின்றனர். இதனால் தடைப்பட்டிருக்கும் திருமணம் விரைவில் நடைபெறும் என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே உள்ளது. பெண்கள் கல்யாண சுந்தரரை பலமுறை வலம் வந்து தரிசித்து வேண்டிச் செல்கின்றனர்.

இத்தல நாயகரான கல்யாண சுந்தரப் பெருமாள் வைகாசி விசாகம், கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகள் மார்கழித் திருவாதிரை, மாசி மகம் ஆகிய நன்னாட் களில் ஆலயத்தின் முன்புறம் உள்ள சப்தசாகரம் (எழுகடல்) என்னும் தீர்த் தத்தில் அருளுகின்றார். இத்திருக்குளம் கும்பகோணம் மகாமகக் குளத்திற்கு இணையாக விளங்குகின்றது. ''மகம் பிறந் தது நல்லூரில். மகாமகம் பிறந்தது கும்ப கோணத்தில்'' என்று கூறி மாசி மக நன்னாளில் மக்கள் இங்கு வந்து அதிக அளவில் நீராடுகின்றனர்.

கோச் செங்கட் சோழனால் கட்டப்பட்ட இம்மாடக் கோயிலுக்கு ஐந்து நிலைகளு டன் கூடிய அழகிய ராஜ கோபுரமும் உள் ளது. கல்யாண வரம் வேண்டுவோர் திருநல்லூர் வந்து வழிபட்டு பலன் பெற லாமே!

- விஜயலட்சுமி சுப்ரமணியம், கோவை - 5

மங்கையர் மலரின்

திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ 15/-)



வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க **Profile** விளம்பரம் ரூ. 2500/-



வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, மங்கையர் மலர் என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

தொலைபேசி: 4343 8888 Fax: 044 - 4343 8899

email: marketing@kalkiweekly.com

மணமகள் தேவை

VIJAY



◆ Iyer, Vadamal, Kousikam, Poosam 2nd padam, 35, B.E. Working in a private concern in Bangalore drawing 2.5 lakhs per annum. Seeks Good looking Graduate girl around 30 years. Contact: Mrs.Rajini Jayabarathy, Ph:080-23431899. Box No.15423

SHYAM

◆ Bharadwaja, Uthirattadi, Vadama, Subsect no bar. 165cm, D.O.B.10.4.75, Insulin dependent type 2, MBA, Newzealand resident, Canada Employed Editor Legal Publication Toronto-well to do, Seeks bride healthy cultured Educated willing to go Abroad born not later than 1981. Horoscope optional simple marriage Ph:044-243 63439 response from professionals Qualified Nurses and Teachers welcome. Boy will be in Chennai by Feb'09. Box No.15462





E.N.RAVI

◆ Iyengar, Vadakalai, Srivatsam, Moolam, 174cms, 16.08.75, Employed Sundaram Finance, Chennai 1.80 lakhs p.a. seeks suitable bride. Contact: Jayalakshmi, B-2, 24, South Street, Radha Nagar, Chromepet, Chennai - 600 044. Ph:044-22655986, 22654157, 9843556557

◆ Thirunelveli Iyer, Vadamal, Kousikam, Ashwini, Mesha Rasi, 20.6.1979 / 5.6' / BBA, Own Catering Business (Mount Catering) Rs.8 lakhs per annum, having own house, two cars, very charming boy seeks unemployed girl. Ph:044-24320699 / 9941342269 Box No.15390

◆ Iyer, Vadamal, Haritha, Pooradam II (Rahu in Lagnam / Kethu 7th place), 1970, 5.9', fair, DEE, Own Textile Business (Reputed) at Kumbakonam, 5 lakhs p.a. well settled affluent family seeks suitable brahmin girl. Box No.15392

◆ Iyer, Vadamal, Bharatwajam, Hastham (3rd padham) 1980 / 5.11', fair, B.E.M.S(BITS Pilani) C.T.S. Senior Associate seeks good looking qualified with good family back ground. Ph:044-28140392 / 98402 18833 Box No.15393

◆ மாத்வா தேசஸ்தா, ஹரிச்ச, கிருத்திகை, ரிஷபம், பி.எஸ்ஸி., கம்ப்யூட்டர் படிப்பு, 33, 5.7', பெங்களூரில் வேலை. சொந்த அபார்ட்மெண்ட். மாத வருமானம் 20,000/- மாத்வா தேசஸ்தா, ஸ்மார்த்தா தேசஸ்தா, நடுத்தர குடும்பத்து பெண் தேவை. வேலை அவசியமில்லை. போன்: 2474 2032, 9980570261, 9840963643. பெட்டி எண்:15394

◆ Iyer, Kousigam, Avittam-IV, 26/ 6.2', V.Fair., C.A., IIM, Research Analyst in MNC seeks homely girl with a degree and Height above 5.3'. Ph:23644934 / cell:9444023934 Box No.15397

◆ கல்யாணம் ஆகாத, பொருளாதார வசதிமிக்க, டாக்டரேட் முடித்த, பேராசிரியரான ஐயர், 45 வயது வரனுக்கு, குடும்பப்பாங்கான பிராமணப் பெண் மணி தேவை. (விதவையானவர்களும் விண்ணப்பிக்கலாம்). Email:arjun 4777@yahoo.co.in Box No.15398

◆ ஐயர், வடமாள், ஆத்ரேயம், உத்திரட்டாதி - 3ம் பாதம், 34, 165 செ.மீ., மாநிறம் B.Tech (IGNOU)L&T Group, Rs.40,000/-p.m. பொறியாளருக்கு டிகிரி படித்த பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். போன்:04142- 269900 செல்: 0-94424 70592 பெட்டி எண்:15399

◆ Iyer, Brahacharanam, Vathoolam, Uthradam, 34 / 5.10', MA Journalism & Mass Communication, Senior Editor, Two A Media (p) Ltd., N.Delhi, Annual Income Rs.4,80,000/- seeks fair graduate girl. Contact: 91-94432 63515 Box No.15400

◆ Palghat Iyer, Brahacharanam, Bharadwajam, Ayilyam, 36/180/2.4 Lakhs, owning 2BHK Flat working in State Bank of India Financially well placed seeks bride 34 and Below. Box No.15401

◆ Iyer, Ashtasahasram, Bharadwajam, Thiruvathira, 10.2.1968, 155cm Ht, B.Com, PGDCA, Kovida (Sanskrit), Rs.15,000/-p.m. Employed in a private company, seeks suitable alliance. Contact: 044-26563596 / 9444471939 Box No.15402

◆ Palghat Iyer, Vadamal, Kausikam, August 1953, Bachelor, 155 wheatish no bad habits, State Govt.15,000/- Requires Educated employed / unemployed homely girl. No demands. Reply with Horoscope + Photo. Early Marriage. Box No.15403

◆ Tamil Iyer, Vadamal, Srivatsam, Revathi I, Age 33, Suddha Jadagam. B.Sc (Comp.Sc) M.B.A (Systems), Software professional, Employed at Chennai, Salary 35,000/- p.m. seeks good looking Graduate girl preferably from middle class brahmin Iyer Family. Contact (0422)2446406 / 9962401869 Box No.15404

◆ Alliance for bride groom, Avittam, 30years, 5.5feet height, B.E.(Mech), Employed in Singapore in good company. Box No.15405

◆ Non Athreya / Koundinya, Suddha Jathagam, Alliance Invited for only son, B.Tech, Gold Medalist, PGSEM (IIM-B)Pooradam, Brahacharanam, Fair Handsome 28, 5.6' Well placed Bangalore. 0452-6531285, dees_46@yahoo.com Box No.15406

◆ Kerala Iyer, Kousikam, 40 years, Uthiratadhi, TVS Group, Legal divorcee without encumbrance seeks suitable bride. Widow / divorcee without encumbrance are also welcome Box No.15407

◆ Iyer Brothers, Brahacharanam, Veetahavya, 49, Swathi, Govt employed, 47, Poosam, Bank Manager, Both Looking Young, Clean Habits, seek Brides - Decent, Orthodox, Educated, Employed / Un employed. Contact:09440905257 Box No.15408

◆ Iyer Brahacharanam, Koundinya, Purattadi - Kumbum Lagnam - Kanya - 33 / 170cm / 70KG., B.Com CA(Final) Rs.60,000/- MNC Chennai, Clean habits, seeks home loving graduate girl. Contact : 044-24828193. Subsect no bar. Reply Box No.15409

◆ ஐயர், வடமாள், கௌசிகம், ஹஸ்தம், 5.10.1964, பி.எஸ்ஸி, 5.6' சென்னையில் சாஃப்ட்வேர் MNCயில் சீனியர் எக்ஸிக்யூடிவாக நிரந்தர வேலை. வருமானம் 4.25 லட்சம் P.A., எந்த கெட்டப் பழக்கமும் இல்லாத பையனுக்கு ஏதாவது டிகிரி படித்த பெண் தேவை. போன்:044-23772928 செல்: 98402 45196. பெட்டி எண்:15410

◆ ஐயர், ஸ்மார்த்த கன்னடம், விசாகம்-1, 29/165, சிவப்பு, எம்.எஸ்ஸி, தனியார் துறை, 15,000/- p.m., UG/PG/ படித்த கன்னடம் / தெலுங்கு / தமிழ்/ பிராமினில் தகுந்த மணப்பெண் தேவை. பெட்டி எண்:15411

◆ ஐயர், வடமாள், காஸ்யப கோத்ரம், கிருத்திகை-2, 7.8.1977, 5.10', B.E. Computer Science நல்ல கம்பெனி



திருமண மலர் - விளம்பரக் கட்டண அறிவிப்பு

திருமண மலர் விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ. 500/-
அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/-
வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய ரூ. 100/- கூடுதலாக அனுப்பவும்.
வண்ணப் புகைப்படத்துடன் (1" X 1") வெளியிட ரூ. 800/-

யில் நல்ல சம்பளத்தில் Software Consultantஆக சென்னையில் பணி புரியும் பையனுக்கு நல்ல குடும்பப் பாங்கான, படித்த மணமகள் தேவை. தொடர்புகொள்ள: போன்: 04142 242024/ 9445343954. பெட்டி எண்:15412

